JAMAL MOHAMED COLLEGE LIBRARY
19 AUG 1971
TIRUCHY-1.

53

மதுரைக் கலம்பகம்

மூலமும் உரையும்

Madurai Kalampagam
Mulamum
Uraiyum
By
Punnaivanatha
Mudaliar

கழக வெளியீடு, ௧௧

குமரகுருபர அடிகள்

அருளிய

மதுரைக் கலம்பகம்

மூலமும் உரையும்

JAMAL MOHAMED COLLEGE LIBRARY
19 AUG 1971
TIRUCHY-1.

உரையாசிரியர் :

பெருநாவ

திரு பு சி புன்

Maduraik Kalambakam: Moolamum
00025884
RT16 KUM1

A - 25884

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
சென்னை-1. மதுரை-1. திருநெல்வேலி-6.
1969

புலவரகம் சிதம்பரநாத புன்னைவனநாத முதலியார் (1889)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 June 1961

Reprints : Dec 1963 ; Nov 1966 ; Feb : 1969

O31, 1L53.3
K9

MATHURAIK KALAMBAKAM

Appar Achakam, Madras-1. (II - 2)

பதிப்புரை

செந்தமிழ் மொழியிற் சிற்றிலக்கியங்களாகப் புலவராற் பாடப்படுவன பல. அவை பிள்ளைத்தமிழ், உலா, மடல், கோவை, அந்தாதி, பரணி, கலம்பகம், தூது முதலிய தொண்ணூற்றுறு வகைப்படும் எனச் சொல்வர். சொல்லப்படும் தொண்ணூற்றுறுங் காணக் கிடைப்பனவல்ல. சிலவே காணக் கிடைப்பன. 'கலம்பகம்' என்ற நூல்கள் பல வழங்குகின்றன. கலம்பகம் என்ற பெயர்க்காரணம் சிலர் பொருத்தமின்றிக் கூறுகின்றனர். 'கலம்' என்பது 12 என்ற எண்ணைக் குறிக்கும் என்றும், 'பகம்' என்பது அதனின்றும் பகுத்த பாதியாகிய 6 என்ற எண்ணைக் குறிக்கும் என்றும் இவ்விரண்டு எண்ணுங் கூட்டிற் பதினெட்டு ஆம் என்றும் எனவே, பதினெட்டு உறுப்புக்களையுடையது 'கலம்பகம்' என்றும் காட்டுகின்றனர். இவ்வாறு பகுத்தலும் பொருள் கூறுவதும் பொருந்தாது.

இது, கலப்பு + அகம் = கலம்பகம் என்ருயிற்று எனவும், பலவகையான பொருளும் பலவகையான பாவும் இனமும் கலப்பதற்கு இடமாகிய நூல் ஆதலால் இப்பெயர் பெற்றது எனவும் கூறுவர் அறிஞர். இதுவே மிகவும் பொருத்த முடையதாம். கலம்பகம் கற்ருற் பலவகைப் பாவும் பாவினமும் பாடும் இயல்பும், அகத்துறை புறத்துறை பலவற்றின் பொருளமைக்கும் பண்பும் நன்கு விளங்கும். மொழிப்புலமை விழையும் நம் நாட்டு மக்களுக்கு இந்நூல் வழித்துணையாம் என்பது தேற்றம். அரசியலார், வித்துவான் வகுப்புக்குக் கலம்பகம் என்ற நூலைப் பாடமாக வைப்பதும் இந்நூலி னுயர்வு கருதியேயாம். கலம்பகம் பலவற்றுள் **மதுரைக் கலம்பகமே** மிகவும் சிறப்புடையதாம். அழகர் கலம்பகம், அரங்கர் கலம்பகம் முதலியவை அடுத்து எடுத்துக் கூறப் படுவனவாம்.

மதுரைக் கலம்பகம் என்பது **குமரகுருபரர்** என்னும் ஆசிரியராற் பாடப்பட்டது. மதுரையிற் கோயில் கொண்டு

வீற்றிருக்கும் சொக்கநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது. சொற்சுவை, பொருட்சுவை யமையப் பெற்றது. வீர முதலிய எண்சுவைகளும் இந்நூலி லுள்ள பாக்களில் அமைந்திருப்பன காணலாம். பண்ணும் தாளமும் அமையப் பாடியுள்ள வண்ணப் பாக்களும் இந்நூலில் உள்ளன. மதுரைத் தமிழ்ச்சங்கம் தொடங்கி நடத்தும்போதும் இந்நூல் பிரவேச பண்டிதத் தேர்வுக்குப் பாடமாக வைக்கப்பட்டிருந்தது. பின்னர் வித்துவான் வகுப்புக்கும் பாடமாக வைத்து வருவது வழக்கமாயிற்று. இச்சிறப்பை யறிந்து அருஞ்சொற்பொருள் விளக்கக் குறிப்புரையுடன் 1923 இல் அச்சிற் பதித்து வெளி யிட்டோம். முன்னும் பின்னும் பலர் இந்நூலை விளக்கவுரை வரைந்து வெளியிட்டு வரினும் எமது கழக வெளியீடு போலக் கற்பார்க்கு நற்பயன் விளைப்பது ஒன்று மின்றெனப் பல ஆசிரியர்கள் கூறக் கேட்டோம். தெளிவாகப் பொருள் விளங்கும்படி விளக்கவுரை வரைந்து வெளியிடக் கருதி னேம். பெருநாவலர், பேராசிரியர் எனப் புகழ்பெற்ற பு. சி. புன்னைவனநாதர் அவர்கள்பாற் கூறினேம். நல்லுரை வரைந்து நல்கினுர் அவரும். கழகப் புலவர்களும் ஆய்ந்து கண்டனர் சிறந்த உரையென. செய்யுட்களும் சீர் பிரித்து இன்ன இன்ன செய்யுள் எனப் பெயர் குறித்து நன்முறையில் அவ் விளக்கவுரையுடன் வெளியிடுகின்றேம். முன்னைய உரைகள் யாவும் ஒவ்வொரு மொழியாகப் பிரித்துத் தனித்தனி பொருள் எழுதப்பட்டுள்ளன. பொருணிலையறிந்து சொற்றொடர்களைப் பிரித்துத் தொடர்பாகப் பொருள் வரையப்பட்டுள்ளதே இவ் வுரைக்குரிய தனிச்சிறப்பாகும். குறிப்பும் விளக்கமும் மேற் கோளும் வேண்டுமிடங்களில் விள்க்கியும் செல்கின்றது. ஆதலால், இது கற்பார்க்கு எளிதிற் பொருள் விளங்கும் என்பது ஒருதலை.

செந்தமிழ் விழைவுடையோர் எவரும் இந்நூலை வாங்கியும் வாங்குவித்தும் கற்றும் கற்பித்தும் நாட்டுக்கு நற்பயன் விளைக்கக் கருதுக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

நூன்முகம்

"மதுரைக் கலம்பகம்" என்னும் இந்நூல், காசிமடம் திருப் பெருந்திரு குமரகுருபர அடிகள் அவர்கள் அருளியது. இற்றைக்கு முந்நூறு ஆண்டுகட்கு முன் மதுரையிலிருந்து பாடப்பெற்றது. இவர் "காசிக் கலம்பகம்" என்று மற்ெறாரு கலம்பகமும் பாடியுள்ளார். மதுரைக் கலம்பகம் பொருட்சுவை, சொற்சுவை, தொடைநயம் முதலிய பல நயங்கள் பொருந்தியது. திருவிளையாடற் புராணச் செய்திகள் பல ஆங்காங்குச் செய்யுட்களில் அமைந்து திகழ்கின்றன. பெருந்திணை அகப்புறப் பகுதிகள் அழகாக எடுத்தாளப்பட்டுள்ளன. இச்செய்யுள் நூல் முச்சங்கங்களுக்குப் பின் தமிழை வளர்க்க முன்வந்த பாலவநத்தம் சமீன்தார் உயர்திரு. பாண்டித்துரைத்தேவர் அவர்கள் 1901 இல் நிறுவிய மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதத் தேர்வுகளில் பிரவேச பண்டிதத் தேர்வுக்குப் பாடமாக முதலில் அமைக்கப்பெற்றது. இதற்கொத்த சிறப்பில் அமைந்த வைணவக்கலம்பகம் "அழகர் கலம்பகமாம்." இவ்விரு கலம்பகங்களையும் 51 ஆண்டுகட்கு முன் பயின்ற யான் அந்நூற்களில் கண்ட அருங்கருத்தமைந்த செய்யுட்கள் இன்றும் எவ்வவையோரும் கேட்டுவக்கும் முறையில் இயம்பப்பெறுகின்றன.

இத்தகைய கலம்பகம் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் முதனிலைத் தேர்வுக்கும் பாடப்புத்தகமாக அமைந்த சிறப்புடையது. இந்நூலுரை எழுதுங்காலத்து வைத்த மாநிதி முடும்பை, சடகோபராமாநுசாச்சாரியவர்கள் இயற்றிய உரை நூலும், பின் காசிமட வெளியீடாக மகா மகோபாத்தியாய தாட்சிணாத்ய கலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்கள் வரைந்த குறிப்புரையுடன் கூடிய நூலும், 1939 இல்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தமும் பார்க்கப் பெறுவன வாயின.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 1923 இல் மதுரைக் கலம்பகம் மூலத்தை அரும் பொருள் விளக்கத்துடன் வெளியிட்டுள்ளார்கள். இதுவரை வெளியான உரை நூல் பதம் பதமாகப் பிரித்து உரை விளக் கத்துடன் கூடியிருப்பதால் தொடர் முறையில் பொருள் எழுதிச் செல்வதே சிறப்புடையதாம் என்று இக்கழக ஆட்சிப் பொறுப்பாளர் அவர்கள் கூறி அங்ஙனமே என்னை எழுதி உதவவேண்டினார்கள். யானும் என் ஆசிரிய அழுந்திய அறிவு நுட்பங்கொண்டும், பழைய பாடப்பொருள் நினைவுகொண்டும் இயன்றவரை விளக்கமான விரிவுரை எழுதி முடித்துள்ளேன். இத்துடன் வித்துவான் தேர்வுக்குரிய பாடநூல்களை ஆறிரண்டு ஆண்டுகளாகக் கற்பித்துவரும் பயிற்சி இவ்வுரை எழுதும் முயற் சிக்கு நல்ல துணை புரிந்தது. வேண்டும் வரலாற்றுக் குறிப்புக் களும், இலக்கண நயங்களும், துறை, பாவிளக்கங்களும் அமைய முடித்துள்ளேன். பாடல்களும் படித்து அறியும் முறையில் சந்தி பிரிக்கப்பட்டுள்ளன.

இதனை வெளியிட முன்வந்த கழக ஆட்சிப் பொறுப்பாளர் திருவாளர். வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். தமிழன்பர்களும் தமிழ் மாண வர்களும், நற்றமிழ் நூற்பொருள்களை நன்குணர்ந்து தெரிந்து இன்புற இறைவனடி இறைஞ்சுகின்றேன்.

திருநெல்வேலி.
9—1—59.

பு. சி. புன்னைவனநாதன்.

ஆராய்ச்சி முன்னுரை

———

"மதுரைக் கலம்பகம்" என்பது மதுரையைக் குறித்த கலம்பகம் என இரண்டனுருபும் பொருளும் உடன்றொக்க தொகையாம். மதுரை என்பது அந்நகரிற் கோயில் கொண்டுறையும் சொக்கநாதரைக் குறிக்கும். இஃது இடவாகுபெயர். சொக்கநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது இந்நூல். புலவர் பாடுஞ் சிற்றிலக்கிய நூல்களிற் கலம்பகம் என்பது ஒரு சிறந்த நூல். புயவகுப்பு, தவம், வண்டுவிடு தூது, அம்மானை, பாண், மதங்கியார், கைக்கிளை, சித்து, ஊசல், களி, மடக்கு, ஊர், மறம், காலம், தழைவிருப்புரைத்தல், தலைவி யிரங்கல், சம்பிரதம், மேகவிடுதூது என்ற பதினெட்டு உறுப்புக்களை யமைத்துப் பாடுவது என்றும், முதலில் ஒரு மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவும், வெண்பாவும், கலித்துறையும் வந்து, பின்னர் அகவல் விருத்தம், அகவல், வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம், அகவற்றுறை, வெண்பா, மருட்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலி விருத்தம் முதலிய பாவும் பாவினமுங் கலந்து வரப் பாடுவது என்றும், இக்கவிகள் அந்தாதியாக நூறு கவி அமையவேண்டும் எனவும் கூறுவர். இந்நூற்கு இலக்கணம், கலப்பு + அகம்—கலம்பகம் என்றாயிற்று. பாவும் பாவினங்களும், பலவகையான அகப்பொருள் புறப்பொருட்டுறைகளும் கலந்து வரப் பாடுவதால் இப்பெயர் வந்ததென நாம் உய்த்துணரலாம். கலம்பகத்திற்கு இலக்கணம் வச்சணந்தி மாலையில்,

"வைக்கும் புயந்தவம்வண் டம்மனை பாண்மதங்கு
கைக்கிளைசித் தூசல் களிமடக்கூர்—மிக்கமறம்
காலந் தழையிரங்கல் சம்பிரதங் கார்தூது
கோலுங் கலம்பகத்தின் கூறு"

எனவும்,

"கூறு மொருபோகு வெண்பா கலித்துறைகள்
மாறின் முதலுறுப்பா மன்விருத்தம்—வேறகவல்
வஞ்சித் துறைவிருத்தம் வான்றுறைவெண் பாமருட்பா
எஞ்சாக் கலியினங்கொண் டீட்டு"

எனவும் கூறுவதால் அறியலாம்.

இவ்வுறுப்புக்கள் அன்றியும் பிற்காலத்தார், மடல், கொற்றி யார், பிச்சியார், வலைச்சியார், இடைச்சியார் என்ற பொருள் களையும் அமைத்துப் பாடியிருக்கின்றனர். கலம்பகத்திற் பெரும் பாலும் கைக்கிளையும் பெருந்திணையும் அமைந்திருப்பன காணலாம். வண்டுவிடு தூது, மேகவிடு தூது, பாண், தழை விருப்புரைத்தல், தலைவியிரங்கல் இவ்வைந்துமே அகப் பொருட்டுறைகள். மற்றுள்ளன வெல்லாம் புறப்பொருட்டுறை களே. இவ்வுறுப்புக்களன்றிக் கலம்பகத்தில் வேறு பொருள் களமைத்துப் பாடுவோர்களும் பெருந்திணயமைத்தே பாடுவது இயற்கையெனத் தெரிகிறது.

குமரகுருபரரும் இம்மதுரைக் கலம்பகத்தில் பாட்டுடைத் தலைவன்மீது காதல்கொண்டு வருந்துகின்றாள் இக்காரிகை: இவளை யணைய வரவேண்டும்: இவளுக்கு மாலை தரவேண்டும்; இவள் இறந்தாற் பழி சொக்கரைத்தான் சேரும்: என்று பாங்கி, செவிலி கூறுவதாகவும், தலைவியே தன் காமநோய் கூறி வருந் துவதாகவும் பொருள் அமைத்திருக்கும் செய்யுட்கள் பல. அம்மானை என்னும் உறுப்பு அமைப்பது அரிய செயலாம். இரு பொருள்பட இறுதியடி நிற்கவேண்டும். 13 ஆவது செய்யு ளில் 'விருது கட்டி யங்கம் வெட்டி வென்றனர்' என்று அம்மனையாடு மகளிரில் ஒருத்தி கூற, மற்றொருத்தி 'வென்றன ராயின் அவருக்கு அருமையுடம் பிரு கூறுவதேன்?' என்று வினவ, இவ்விரு கூற்றுக்கும் விடையாக 'ஆனாலும் காயமில்லை யையரவர்க் கம்மானை' என்று முடித்திருப்பது நோக்குக. 'ஐயரவர்க்குக் காயமில்லை' என்ற தொடர் புண் இவர் உடம்பில் இல்லை என்றும், இவருக்கு உடம்பேயில்லை எவ்வாறு இரு கூறுகும் என்றும் இரண்டுக்கும் பொருத்தமான விடையாவது காண்க.

மடக்குப் பாடுவதும் எளிதன்று. ஒரு சொற்ருடரே மடங்கி மடங்கி வந்து பல பொருள் தரும்படி அமையவேண்டும். "தொடுத்தணிந்தது மம்பு தரங்கமே சுமந்திருந்தது மம்புத ரங்கமே"-இதில் 'அம்புதரங்கமே' என்ற சொற்ருடர் பின்னும் வந்தது. அம் புதர் அங்கமே எனவும் அம்பு தரங்கமே எனவும் பிரிக்கப்பட்டு முறையே சிவபெருமான் (மாலையாகத்) தொடுத்து (தலையில்) அணிந்திருப்பது அழகிய தேவர்கள் உறுப்பாகிய தலையே எனவும், அவர் சுமந்திருந்தது நீரும் அலையும் எனவும் இரு பொருள் படுவது காண்க. இந்நூலிற் குமரகுருபரர் சொல்லின்பமும் பொருளின்பமும் அமையும்படி பாடியிருப்பது புலவரனைவரும் போற்றத்தக்கதே. பாண் என்ற துறையமைந்த கவி (74) யில் தலைவி பாணனை நோக்கி "மதியில் பாணு" என்று விளித்துப் "பொன்னை ஆற்றிலிட்டுக் குளத்திற் றேடி யெடுத்தவூர்" பழமலை; முதுகுன்றம் என்ற பெயரையுடையது: இது மதுரைநகர். இந்நகரில் தலைவரைப் பரத்தையர் மனையில் தங்குவித்து என் மனையில் அவரைத் தேடிக் காண வருகிருயே; உனக்கு அறிவு சிறிதும் இல்லையோ என்று இழிவாகக் கூறுவது மிகையான நகைச்சுவை விளக்கின்றது. இதுபோல நகைச்சுவை தோன்றும் பாடல் பல இந்நூலிற் காணலாம்.

மறம் என்ற துறைச்செய்யுளில் மறவர் வீரவுரையைக் காணலாம். மன்னவன் தூதுவனெருவன் திருமுகங்கொண்டு போய் நீட்டுகிறன். மறவன் என்ன திருமுகம்; யாருடைய திருமுகம் என்று வினவி, உன்னை விடுத்த மன்னன் எவன் என்றும் வினவுகிறன். தூதன் மன்னவன் பெயர் கூறி நும்மகளை மணம் பேசி வருமாறு திருமுகம் வரைந்து தந்தனன் என விடை கூறினன். உடனே மறவன் சினந்து எம்மோடு எதிர்த்துப் போர் புரிந்து புறங்காட்டி யோடியும் மடிந்தும் ஒழிந்த மன்னர் எண்ணிறந்தவர் என்பது நும் மன்னனுக்குத் தெரியாது போலும். அன்னவனை யிங்கழைத்துக் கொண்டுவா, அவன் தலையெழுத்தும் நாம் காண்போம், திருமுகத் தெழுத்திதுவென்ருல் அதுவும் தொலையெழுத்தாகத்தான் இருக்கும் என்று சிறிதும் மன்னன் திருமுகத்தை மதியாது மறம் பேசுவது வீரச்சுவையை விளக்குவது காண்க. இன்னும் காமச்சுவை யென்பது நிரம்பிய

தென்பது கூருமலே விளங்கும். இறைவனருள் வேண்டிய பாக்களும் இடையிடையே அமைந்திருக்கின்றன. அறுசுவை யமைந்த உணவுபோல எண்வகைச் சுவையும் கலந்த நூலே கலம்பகமாகும். 'கலம்பகம் பாடிக் காவியம் பாடு' என்ற பழ மொழி காவியத்திலுள்ள பொருள்கள் பெரும்பாலும் கலம்பக நூலிற் காணலாம் என்ற கருத்துக்காட்ட எழுந்ததேயாம். புலமை நிரம்புவதற்குக் கலம்பகம் என்ற சிற்றிலக்கியம் கற்பது சிறந்ததே. இது குறித்தே வித்துவான் வகுப்பிற்குக் கலம்பக நூலொன்று பாடமாக அமைக்கப்படும் என்றும் அறிக.

கலம்பகத்துட் சிறந்தது இதுவாதலின், இதனையே அடிக்கடி பாடமாக அரசியலார் அமைக்கின்றனர். அரங்கக் கலம்பகம், அழகர் கலம்பகம் முதலிய கலம்பகங்களும் பாடமாக வைக்கப் படுவதும் உண்டு. ஏதேனும் ஒரு கலம்பக நூலைக் கற்றுற் போதும். பின்னர் எக்கலம்பக நூலுக்கும் பொருள் கூறு மாற்றல் அவர்பால் அமையும் என்பது ஒருதலை.

ஆசிரியர் குமரகுருபரர் வரலாறு

செந்தமிழ் நாட்டில் தலைசிறந்த தென்பாண்டி நாட்டில் நெல்லைமாவட்டத்திலுள்ள தென்கைலாயம் எனப் பெயர் பெற்ற திருவைகுண்டம் (ஸ்ரீ வைகுண்டம்) என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் சண்முக சிகாமணிக் கவிராயர்க்கும் சிவ காமியம்மையார்க்கும் புதல்வராகப் பிறந்தனர் ஆசிரியர் குமர குருபரர். பிறந்து ஐந்தாண்டளவும் மூங்கைப் பிள்ளையாய் ஆங்கு வளர்ந்தனர். குழந்தை பேசாதிருப்பது கண்ட பெற்றோர் வருந்தித் திருச்செந்தூர் சென்று செவ்வேளை வழிபட்டுத் திருக் கோயில் வாயிலிற் குழந்தையைக் கிடத்தி மூங்கை நீங்கத் திரு வருள் செய்கவெனப் பன்னாட் பாடுகிடந்தனர். முருகன் திரு வருளாற் பேசு மியல்பு பெற்றது. அன்றியும் ஓதாதே கல்வி யுணர்வும் உள்ளத்தின்கண் நிறைந்தது. உடனே **கந்தர்கலி வெண்பா** என்னும் நூல் பாடியது அக் குழந்தை. அன்றுமுதல் முருகன் றிருவருள் வாய்ந்த குழவி இதுவெனப் பெற்றோரும் மற்றோரும் கண்டு வியந்து போற்றிப் புகழுமாறு அச்செந்தில்நகரில் அமர்ந் திருந்தார். ஒரு நாட் கனவில் முருகப்பெருமான் வந்து தோன்றி "நீ குருபரன் ஆகுக" என்று திருவாய்மலர்ந்து மறைந்தார். அன்றுமுதல் 'குமரகுருபரன்' என அழைக்கப்பட்டார். முருகன் திருவருளான் மூங்கை நீங்கியது கண்டபின் அவனருளாணை வழியே நடக்கும் அமைவுடையராயினர்.

இல்லறத்தை வெறுத்துத் துறவுநிலை நின்றார் நம் குமரகுரு பரர். அதற்குத் துணைபுரியும் ஞானாசிரியர் ஒருவர் தமக்குக் கிடைக்கவேண்டும் என்று கருதி முருகன் றிருவருளை வேண் டினர்; "வடநாடு செல்க; செல்லும் இடத்தில் எவர் முன் னிலையில் உன் வாக்குத் தடைப்படுமோ அவரைக் குருவாகக் கொண்டு வழி படுக" என உருவிலாத் திருவாக்கு எழுந்தது.

அதனைச் செவியேற்று வடநாடு செல்லத் துணிந்தார். புறப்பட்டுத் திருப்பரங்குன்றம் கண்டு செவ்வேளை வழிபட்டுச் சிலநாளமர்ந்தனர்; மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் என்ற நூல் பாடினர். அதனையறிந்த அங்கயற் கண்ணம்மையார் அக்காலம் மதுரையை யாண்ட மன்னர் திருமலை நாயக்கருக்குக் கனவில் வந்து கூறி அந் நூலினை அரங்கேற்றுவிக்குமாறு ஆணையருளினர். அவ்வாறே திருமலை நாயக்கர் தம் குடை கொடி முதலியவற்றோடு சென்று அழைத்து வந்து அம்மையார் திருமுன் அரங்கேற்றினர். அரங்கேற்றும் அமையம் வருகைப் பருவத்தில் *"தொடுக்குங்கடவுள்" என்று தொடங்கும் பாடலைப் பாடிப் பொருள் கூறும்போது, அம்மையார் ஒரு சிறு பெண்பிள்ளையாக வந்து திருமலைநாயக்கர் மடிமீதமர்ந்து கேட்டு மன்னர் கழுத்திற் கிடந்த முத்து மாலையைக் கழற்றி ஆசிரியர் கழுத்திலிட்டு மறைந்தருளினர் என்ப. மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம் இந் நூல்களும் மதுரையில் தங்கிய காலத்தே அவராலியற்றப்பட்டன. மன்னர் திருமலை நாயக்கர் குமரகுருபரரைப் போற்றிப் பல பரிசில் வழங்கிப் பன்னுள்

---

*தொடுக்குங் கடவுட் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக எழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

ஆங்கமருமாறு வேண்டினர். சின்னுள் மதுரைப் பதியிலமர்ந்து பின்னர்த் திருவாரூர் சென்று திருவாரூர் நான்மணிமாலை என்ற நூல் பாடித் தங்கினர். அதன் பின் தருமபுரமடம் சென்ருர். அக்காலம் பண்டார சந்நிதியாய் வீற்றிருந்த மாசிலாமணித்தேசிகர் திருமுன் எய்தி மேலாடையுடன் ஆசனத்தமர்ந்து திண்டு தலையணைமேற் சாய்ந்து பேசத் தொடங்கினுர். தேசிகர் கூறும் வினுக்கட்கெல்லாம் விடை கூறிச் சிறப்பாக அமர்ந்திருந்தார். தேசிகர் இறுதியாகப் பெரிய புராணத்துள் ஒரு திருவிருத்தத்திற்குப் பொருள் வினவியபோது வாக்குத் தடைப்பட்டது. முருகன் அருளிய மொழியும் நினைவிற் கெட்டியது. உடனே எழுந்து மேலாடையை யிடையிற் கட்டி ஆசன முதலிய எல்லாவற்றையும் புறத்தேயகற்றித் திருவடியில் விழ்ந்து "ஞானகுரவராக என்னை யாட்கொள்ள வேண்டும்; அறுமுகன் ஆணையிது" என்று கூறி வேண்டினர். அதற்கு இயைந்து தேசிகர் அவர்க்கு ஞானவுபதேசஞ் செய்து நன்கு வாழ்த்தி யிருத்தினர். பின்னர் ஆசிரியர் ஆணைபெற்றுச் சில இடங்கட்குச் சென்ருர். புள்ளிருக்கு வேளூர் சென்று முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் பாடினர். அங்கிருந்து சிதம்பரம் எய்தினர். ஆண்டுச் சின்னுளுறைந்து சிவகாமியம்மை யிரட்டை மணிமாலை, சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை என்ற நூல்கள் பாடி அரங்கேற்றினர். மீண்டுந் தருமபுரவாதினம் வந்தடைந்தார். தம் ஞானகுரவராகிய மாசிலா மணித் தேசிகர்மீது பண்டார மும்மணிக்கோவை பாடி யரங்கேற்றினர். தமக்குப் பல்வேறிடங்களிற் கிடைத்த பரிசில்களையும் விருதுகளையும் அத்தேசிகர் திருமுன் காணிக்கையாக வைத்து ஏற்றுக்கொள்ளுமாறு விண்ணப்பித்தார். "இப்பொருள்கள் எமக்கும் வேண்டுவனவல்ல, இப்பொருள்களைக் கொண்டுபோய்க் காசியிற் பலவறம் புரிக" என ஆணை தந்தனர். அவ்வாணையைச் சிரமேற்கொண்டு காசிசென்று பலவகை யறம் புரிந்து தங்கினர். அவ்வமயம் காசிக் கலம்பகம் என்ற நூல் காசிவிசுவநாதர் மீது பாடி யரங்கேற்றினர்.

அங்கு வதிந்தபோது காசியில் ஒரு மடம் அமைக்கவேண்டுமென்ற கருத்துத் தோன்றியது. அதன் பொருட்டு டில்லிக்குப் போய்ப் பாதுஷாவைக் கண்டார். அம்மன்னருக்குத் தமிழ்மொழி

யில் கூறிற்றுக் கருத்து விளங்காதென்று பலர் கூறினர். அது குறித்து இந்துஸ்தான் மொழி கற்க எண்ணினர். அம்மொழி யறிவு விரைவிற் பெறுவதற்கு அருள்புரியுமாறு கலைமகளை வேண்டிச் சகலகலாவல்லி மாலை என்று பத்துக் கவிகள் பாடினார். கலைமகளருளால் இந்துஸ்தான் மொழியறிவு பெற்றுப் பாதுஷா மன்னரிடம் அம்மொழியால் தம் கருத்தை யறிவித்து மடத்திற்கு வேண்டும் இடம் பெற்றார்; மடம் அமைத்தார். "குமாரசாமி மடம்" என இப்பொழுதும் அது பெயர் பெற்று விளங்குகிறது. திருக்கேதாரம் என்ற தலத்தில் ஒரு திருக்கோயில் அமைத்துப் பூசித்து வந்தார். தருமபுரவாதீனத்திற்கு மூன்று முறை வந்து மீண்டுங் காசி சென்றார். காசியில் வதியும்போது வைகாசித் திங்கள் தேய்பிறை மூன்றும் நாளிற் சிவபதம் பெற்றனர். இவர் காலம் திருமலை நாயக்கர் காலம் என நன்கு விளங்குவதால் இற்றைக்குச் சற்றேறத்தாழ முந்நூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் குமரகுருபரர் என்று கூறலாம்.

திருச்சிற்றம்பலம்

மதுரைக் கலம்பகம்

மதுரைக் கலம்பகம் என்பது மதுரையைக் குறித்த கலம்பகம் என விரியும். இஃது இரண்டனுருபும் பயனும் தொக்க தொகையாம். மதுரை என்பது பாண்டியநாட்டின் தலைநகர். மீனாட்சியும் சொக்கநாதரும் திருக்கோயில்கொண்டு வீற்றிருக்கும் சிறந்த தலம். பெயர் கேட்டவர்க்கே முத்தி நல்குந் தன்மையது. பாண்டியன் காடு கெடுத்து நாடாக்கி இவ்வூரைச் சாந்திசெய்ய முற்பட்டபோது சோமசுந்தரக்கடவுள் தம் சடையில் இருந்த சந்திரனின் நிலவாகிய அமுதத்தை விடுக்க அவ்வமுதம் சென்று பரந்து இனிமையாகச் சாந்தி செய்தது. மதுரமயம் ஆக்கியதால் அதற்கு மதுரை யெனப் பெயர் அமைந்தது. கூடல், திருவாலவாய் என்பனவும் அதன் பெயர்களாம். இந்நகரில் அங்கயற்கண்ணியோடு சோமசுந்தரக் கடவுள் வீற்றிருந்து மக்கட்கு வேண்டிய இன்பப்பயனை யருள்கின்றனர் என்ப.

அத்தகைய சொக்கநாதரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டது மதுரைக் கலம்பகம் என்னும் இந்நூல். 'கலம்பகம்' என்பது 'கலப்பு+அகம்' எனப் பிரிக்கப்பட்டுக், கலப்பதற்கு உரிய இடமுடையது எனப் பொருள்படும். அகம்புறம் என்னும் பலவகைப் பொருள்களும், வெண்பா முதலிய பலவகைப் பாவும், தாழிசை முதலிய பாவினங்களும் இந்நூலிற் கலப்பதால் இப்பெயர் பெற்றது போலும். (க) புயவகுப்பு, (உ) தவம், (ங) வண்டுவிடு தூது, (ச) அம்மானை, (ரு) பாண், (சு) மதங்கியார், (எ) கைக்கிளை, (அ) சித்து, (கூ) ஊசல், (க0) களி, (கக) மடக்கு, (கஉ) ஊர், (கங) மறம், (கச) காலம், (கரு) தழைவிருப்புரைத்தல், (கசு) இரங்கல், (கஎ) சம்பிரதம், (கஅ) மேகவிடு தூது ஆகிய பதினெட்டு உறுப்புக்களும், பிற்காலத்தில் மருவிய பிச்சியார், கொற்றியார்,

இடைச்சியார், வலைச்சியார் முதலிய பொருள்களும் பிற பொருளும் கலந்து வரும்.

முதலில் ஒரு போகு, வெண்பா, கலித்துறை என்ற பாடல்களை வைத்துப் பின்னர் அகவல் விருத்தம், அகவல், வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம், வெண்பா, கலித்துறை, கலிவிருத்தம், மருட்பா முதலிய எல்லாம் விரவி வரப் பாடப்பெறும். அந்தாதித் தொடையாக நூல் முழுவதும் அமைந்திருக்கும். தேவர்க்கு நூறும், மறையோர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சர்க்கு எழுபதும் வணிகர்க்கு ஐம்பதும், வேளாளர்க்கு முப்பதும் பாடுவது மரபு. இக்கலம்பக நூலின் இலக்கணத்தைப் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கண விளக்கம் முதலிய நூல்களிற் காண்க.

காப்பு

கட்டளைக்கலித்துறை

**புந்தித் தடத்துப் புலக்களி றோடப் பிளிறு தொந்தித்
தந்திக்குத் தந்தை தமிழ்க்குத வென்பதென் றண்ணளிதூய்
வந்திப் பதுந்தனி வாழ்த்துவ தும்முடி தாழ்த்துநின்று
சிந்திப் பதுமன்றிச் சித்தி விநாயகன் சேவடியே.**

(இதன் பொருள்) சித்திவிநாயகன் சேஅடி - சித்திவிநாயகக் கடவுளின் திருவடிகளை, தண் அளி தூய் முடி தாழ்த்து நின்று வந்திப்பதும் தனி வாழ்த்துவதும் சிந்திப்பதும் அன்றி - குளிர்ச்சியான மலர்களைத் தூவித் தலைகுனிந்து நின்று வணங்குதலும், சிறப்பாக வாழ்த்துதலும் நினைத்தலும் அல்லாமல், புந்தித் தடத்து புலக்களிறு ஓட பிளிறு தொந்தி தந்திக்கு - மனமாகிய இடத்தில் உள்ள (ஐந்து) புலன்களாகிய ஆண்யானைகள் அவ்விடம் விட்டு ஓடும்படி முழங்குகின்ற பெருவயிற்றையுடைய யானைமுகக் கடவுளிடத்தில், தந்தை தமிழ்க்கு உதவு என்பது என்?-நின் தந்தையாகிய சிவபெருமான்மீது நான் பாடும் தமிழ்க் கலம்பக நூலுக்கு வேண்டும் உதவி நீ புரிக என்று வேண்டுவது என்ன பயன் தரும்? (சிறப்பன்று).

(விரிவுரை) புந்தி - புத்தி, அறிவு, மனம். இங்கு மனத்தைக் குறித்தது. தடம் - இடம், குளம், மலை என்னும் பொருளது. இங்கு இடமெனப்பட்டது. தடத்து = தடம் + அத்து - அத்து: சாரியை. புலக்களிறு - புலமாகிய களிறு:

உருவகம். புலம் - புலன்; ஈண்டுச் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்க. களிறு - ஆண் யானை; புலன்களை அடக்குதல் அருமையாதலின் களிறு என்றார். ஓட - புலன்வழிச் செல்லும் விருப்பம் மனத்தைவிட்டு நீங்கி ஒழியும்படி. பிளிறு - முழங்கு கின்ற. தந்தி - தந்தத்தையுடையது, யானை. இங்கு யானை முகக் கடவுளை யுணர்த்தியது: தேவர் மக்கள் நரகர் விலங்கு முதலிய எவ்வகைப் பகைவராலும் அழிவுறாத வரம் பெற்ற கயமுகா சுரன் என்பவனைக் கொன்று, அடியார்களிடர்களையப் பூதவடிவ மும் யானை முகமும் ஆகிய கலப்புருவம் பெற்றவர் மூத்தபிள்ளை யார் என்னும் விநாயகக்கடவுள், இக்கோலம் மாதவச் சிவஞான முனிவர் பெருமானால் உயர்திணை அஃறிணை என்று துணியப் படாத நிலையினதென்று வியக்கப்பட்டுள்ளது. தொந்தி - பெரு வயிறு. தந்திக்கு: ஏழனுருபு மயக்கம்; தந்தியிடத்தில். "தந்தை தமிழ்க்கு உதவு என்பது என்" - தந்தையாகிய பரமசிவன்மீது பாடப்படும் இக்கலம்பக நூலுக்குச் சிறந்த முறையில் தமிழ் மொழி தந்து அருள்க என்று மூத்த புதல்வனிடத்தில் கேட்பது பொருத்தமற்றதும் வேண்டப் பெறாததுமாம் என்றபடி. "தண் அலர் தூய்" என்று பாடங்கொள்வாரு முளர். தூய் - தூவி என்னும் வினையெச்சப் பொருளது. தனி - ஒப்பற்றது, சிறப்பு. வந்திப்பது, வாழ்த்துவது, சிந்திப்பது என்பவை தொழிற் பெயர்கள். வந்தி, வாழ்த்து, சிந்தி என்பவை பகுதிகள். முடி தாழ்த்து நின்று வந்திப்பது என்று பொருள் கொள்ளப்பட்டது. வந்தித்தல் மெய்யாலும், வாழ்த்தல் வாயாலும், சிந்தித்தல் உளத்தாலும் ஆவன. இம்மூன்று முறையும் ஒன்றுபட்ட வழிபாடே உண்மை வழிபாடாம்.

திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணக் காப்பியக் கவிஞர் சேக்கிழார் பெருமான், "கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்," எனவும், கந்தபுராணம் அருளிய கச்சி யப்பர், "பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்" எனவும், உளம், உரை, உடல்களால் வழிபடுதலை ஆன்றோர் மரபைப் போற்று முறையில் காப்பிற் குறித்தமை காண்க.

அன்றி: வினையெச்சம், அல்லாமல் என்ற பொருளது. சித்திவிநாயகன் - வேண்டுவார் வேண்டுவனவெல்லாம் வெற்றி பெற அருளும் முதல்வன். இப்பெருமான், மதுரை அங்கயற் கண் அம்மை கோயிற் பொற்றாமரைக் குளத்தின் மேல்பால் அமர்ந்துள்ளார்.

செம்மை + அடி = சேவடி: பண்புத்தொகை. அடி - அடிகளை எனப் பொருள் கொள்ளப்பட்டது. ஏ: ஈற்றசை. இச் செய்யுள் நேரசை முதலாக வந்த கட்டளைக் கலித்துறை.

நூல்

தரவு

மணிகொண்ட திரையாழி சுரிநிமிர மருங்கசைஇப்
பணிகொண்ட முடிச்சென்னி யரங்காடும் பைந்தொடியும்
பூந்தொத்துக் கொத்தவிழ்ந்த புனத்துழாய் நீழல்வளர்
தேந்தத்து நறைக்கஞ்சத் தஞ்சாயற் றிருந்திழையு
மனைக்கிழவன் றிருமார்பு மணிக்குறங்கும் வறிதெய்தத்
தனக்குரிமைப் பணிபூண்டு முதற் கற்பின் றலைநிற்ப
அம்பொன்முடி முடிசூடு மபிடேக வல்லியொடுஞ்
செம்பொன்மதிற் றமிழ்க்கூடற் றிருநகரம் பொலிந்தோய்கேள்.

தாழிசை

௧. விண்ணரசும் பிறவரசுஞ் சிலரெய்த விடுத்தொருநீ
பெண்ணரசு தரக்கொண்ட பேரரசு செலுத்தினையே.

௨. தேம்பழுத்த கற்பகத்தி னறுந்தெரியல் சிலர்க்கமைத்து
வேம்பழுத்து நறைக்கண்ணி முடிச்சென்னி மிலைச்சினையே.

௩. வானேறுஞ் சிலபுள்ளும் பலரங்கு வலனுயர்த்த
மீனேறே வானேறும் விடுத்தடிக ளெடுப்பதே.

௪. மனவட்ட மிடுஞ்சுருதி வயப்பரிக்கு மாறன்றே
கனவட்டந் தினவட்ட மிடக்கண்டு களிப்பதே.

௫. விண்ணாறு தலைமடுப்ப நனையாநீ விரைப்பொருநைத்
தண்ணாறு குடைந்துவைகைத் தண்டுறையும் படிந்தனையே.

௬. பொழிந்தொழுகு முதுமறையின் சுவைகண்டும் புத்தமுதம்
வழிந்தொழுகுந் தீந்தமிழின் மழலைசெவி மடுத்தனையே..

அராகம்

௧. அவனவ ளதுவெனு மவைகளி லொருபொரு
ளிவனென வுணர்வுகொ டெழுதரு முருவினை.

௨. இலதென வுளதென விலதுள தெனுமவை
யலதென வளவிட வரியதொ ரளவினே.

௩. குறியில னலதொரு குணமில னெனநினை
யறிபவ ரறிவினு மறிவரு நெறியினே.

௪. இருமையு முதவுவ தெவனவ னெனநின
தருமையை யுணர்வுறி னமிழ்தினு மினிமையை.

தாழிசை

௧. வைகைக்கோ புனற்கங்கை வானதிக்கோ சொரிந்துகரை
செய்கைக்கென் றறியேமாற் றிருமுடிமண் சுமந்ததே.

௨. அரும்பிட்டுப் பச்சிலையிட் டாட்செய்யு மன்னையவ
டரும்பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே.

௩. முலைகொண்டு குழைத்திட்ட மொய்வளைகை வளையன்றே
மலைகொண்ட புயத்தென்னீ வளைகொண்டு சுமந்ததே.

௪. ஊன்வலையி லகப்பட்டார்க் குட்படாய் நின்புயத்தோர்
மீன்வலைகொண் டதுமொருத்தி விழிவலையிற் பட்டன்றே.

அம்போதரங்கம்

முச்சீர்

௧. போகமாய் விளைந்தோய் நீ
௨. புவனமாய்ப் பொலிந்தோய் நீ
௩. ஏகமா யிருந்தோய் நீ
௪. யெண்ணிறந்து நின்றோய் நீ

இருசீர்

௧. வானு நீ
௨. நிலனு நீ
௩. மதியுநீ
௪. கதிரு நீ
௫. ஊனு நீ
௬. யுயிரு நீ
௭. யுளது நீ
௮. யிலது நீ

தனிச்சொல்

எனவாங்கு,

சுரிதகம்

பொன்பூத் தலர்ந்த கொன்றைபீர் பூப்பக்
கருஞ்சினை வேம்பு பொன்முடிச் சூடி
அண்ணலா னேறு மண்ணுண்டு கிடப்பக்
கண்போற் பிறழுங் கெண்டைவல னுயர்த்து

வரியுடற் கட்செவி பெருமுச் செறியப்
பொன்புனைந் தியன்ற பைம்பூண் டாங்கி
முடங்குளைக் குடுமி மடங்கலந் தவிசிற்
பசும்பொ னசும்பிருந்த பைம்பொன்முடி கவித்தாங்
கிருநிலங் குளிர்தூங் கொருகுடை நிழற்கீ

ழரசுவீற் றிருந்த வாதியங் கடவுணின்
பொன்மலர் பொதுளிய சின்மலர் பழிச்சுது
மைம்புல வழக்கி னருஞ்சுவை யறியாச்
செம்பொருட் செல்வநின் சீரடித் தொழும்புக்
கொண்பொருள் கிடையா தொழியினு மொழிக

பிறிதொரு கடவுட்குப் பெரும்பயன் றரூஉ
மிறைமையுண் டாயினு மாக குறுகிநின்
சிற்றடி யவர்க்கே குற்றேவ றலைக்கொண்
டம்மா கிடைத்தவா வென்று
செம்மாப் புறூஉந் திறம்பெறற் பொருட்டே.

மணிகொண்ட..........................பொலிந்தோய்கேள்.

(இதன் பொருள்.) *மணி கொண்ட திரை ஆழி சுரி நிமிர மருங்கு அசைஇ* - பலவகை மணிகளை உள்ளே கொண்டுள்ள அலைகளையுடைய கடலாகிய ஆடையை மடிப்பு உலையும்படி இடையைச் சுற்றி உடுத்து, *பணிகொண்ட முடி சென்னி அரங்கு ஆடும் பைந்தொடியும்* - ஆதிசேடனாகிய பாம்பினது தலையுச்சி யாகிய அரங்கில் ஆடுகின்ற பெண்ணாகிய பூதேவியும், *பூ தொத்து கொத்து அவிழ்ந்த புனம் துழாய் நீழல் வளர் தேம் தத்தும் நறைக்கஞ்சத்து அம் சாயல் திருந்து இழையும்* - அழகிய பூங் கொத்துக்கள் கட்டு அவிழப்பெற்ற கொல்லையில் வளர்ந்த துளசிமாலையின் நிழலில் தங்கியிருக்கும் தேன் துளிக்கின்ற

மணமுள்ள தாமரை மலரில் வாழ்கின்ற அழகையும் மென்மையையும் உடைய திருமகளும், மணிகிழவன் திருமார்பும் மணிக் குறங்கும் வறிது எய்த-தங்கள் நாயகனுகிய திருமாலின் அழகிய மார்பும் அழகிய தொடையும் வறுமையடையும்படி, தனக்கு உரிமைப் பணிபூண்டு முதல் கற்பின் தலைநிற்ப - (அவ்விடங்களை விட்டு வந்து) தமக்குரிய அடிமைத் தொழிலை மேற்கொண்டு முதன்மையாகிய கற்பொழுக்கத்தில் நிற்கும்படி, அம்பொன்முடி முடி சூடும் அபிடேகவல்லியொடும் செம்பொன் மதில் தமிழ்க் கூடல் திருநகரம் பொலிந்தோய்! கேள் - அழகிய பொன்னுற் செய்த கிரீடத்தைத் தலையிற் சூடிய அபிடேகவல்லி என்ற திருப்பெயர் பெற்ற அங்கயற்கண் அம்மையுடன் சிவந்த பொன் மயமான மதில் சூழ்ந்த செந்தமிழ் வழங்கும் மதுரை என்னும் அழகிய நகரத்திலே விளக்கமாக வீற்றிருப்பவனே! (அடியேன் கூறும் வேண்டுகோளைக்) கேட்டருள்வாயாக.

விண்ணரசும்....................மடுத்தனையே.

(இ - ள்.) விண் அரசும் பிற அரசும் சிலர் எய்த விடுத்து ஒரு நீ பெண்அரசு தரக்கொண்ட பேர் அரசு செலுத்தினையே-பொன்னுலக அரசாட்சியினையும் மற்றை அரசாட்சிகளையும் இந்திரன் முதலிய சிலர் அடையும்படி ஆணை தந்து ஒப்பற்ற நீ பெண்களுட் சிறந்தவளாகிய தடாதகையாற் கொடுக்கப்பட்ட பெரிய அரசாட்சியை நடத்தினையே (இஃது உன் பெருமைக்குத் தகுமோ?)

தேம்பழுத்த கற்பகத்தின் நறும் தெரியல் சிலர்க்கு அமைத்து - தேன் மிகுந்துள்ள கற்பக மரத்தின் இனிய மாலையைச் சில தேவர் சூடுமாறு தந்து, வேம்பு அழுத்தும் நறைக்கண்ணி முடிச்சென்னி மிலைச்சினையே - வேப்பமலர்களால் தொடுக்கப்பட்ட மணமுடைய மாலையை முடியணிந்த தலையில் சூடினையே! (இது தகுமோ?)

வான் ஏறும் சில புள்ளும் பலர் அங்கு வலன் உயர்த்த - விண்ணிற் பறக்கும்படியான கருடன் அன்னம் முதலிய சில பறவைகளைத் திருமால் நான்முகன் முதலிய பலபேர் அவ்விடங்களில் வெற்றிக்கொடியில் உயர்த்தி எடுக்க, அடிகள்! ஆன் ஏறும் விடுத்து மீன் ஏறு எடுப்பது - தெய்வமாகிய நீ இடபக் கொடியையும் விட்டு அப்பறவைகட்கு அஞ்சும்படியான மீனையோ கொடியாக உயர்த்துவது! (இது தகுமோ?)

மனவட்டம் இடும் சுருதி வயப்பரிக்கு மாறு அன்றே - அறிஞர் மனத்திற் சுற்றுகின்ற வேதமாகிய சிறப்புடைய

குதிரைக்கு ஒப்பாகாதே, கனவட்டம் தினம் வட்டம் இடக் கண்டு களிப்பதே - கனவட்டம் எனும் குதிரை நாள்தோறும் வலசாரியும் இடசாரியும் ஆக மண்டலகதியைப் பயில அதனைப் பார்த்துமகிழ்வது என்ன காரணத்தினுலோ ?

விண் ஆறு தலை மடுப்ப நனையா நீ - ஆகாய கங்கை உன் தலையில் நிறைந்திருப்ப அதனுற் சிறிதும் நனையாத நீ, விரை பொருநை தண் ஆறு குடைந்து - விரைந்து வருதலையுடைய தாம்பிரபர்ணி என்னும் குளிர்ந்த ஆற்றில் நீராடி, வைகைத் தண் துறையும் படிந்தனை - வையை ஆற்றின் குளிர்ந்த நீர்த் துறையினும் நீராடியுள்ளாய் ! இது வியப்பன்றோ !)

முதுமறையின் பொழிந்து ஒழுகு சுவை கண்டும் - பழைமை யான மறைகளின் வழிந்து ஓடுகின்ற மிக்க இன்பத்தை நுகர்ந்து பார்த்திருந்தும், புது அமுதம் வழிந்து ஒழுகும் திம் தமிழின் மழலை செவி மடுத்தனை - (அதனை விட்டுப்) புதிய அமிழ்தத்தின் இனிமை பெருகுகின்ற இனிப்பான தமிழ்மொழியின் இளஞ் சொல்லைத் திருச்செவி சார்த்தியருளினை நீ (இது வியப்பன்றோ!)

அவனவ ளதுவெனு..................மினிமையை

(இ - ள்.) அவன் அவள் அது எனும் அவைகளில் - ஆண் பெண் புல் மர முதலிய அஃறிணைப் பொருள்கள் எனப்படும் அவைகளில், இவன் ஒரு பொருள் என உணர்வுகொடு எழுதரும் உருவினை - இவன் ஒரு பொருள் என்று அறிவைக்கொண்டு எழுதுவதற்கு அரிய வடிவத்தை உடையவனுயிருக்கின்றுய் ;

இலது என உளது என இலது உளது எனும் அவை அலது என - இல்லாத பொருள் என்றும் உள்ள பொருள் என்றும் இல்லாததும் உள்ளதும் என்று கூறப்படு பொருளும் அன்றென்றும், அளவு இடல் அரியது ஓர் அளவினை - (ஆகமம் முதலிய மேற்கோள்களைக் கொண்டு) அளவு கூறுதற்கு அருமையான ஒப்பற்ற தன்மையுடையவனு யிருக்கின்றுய் ;

குறி இலன் அலது ஒரு குணம் இலன் என நினை அறிபவர் - உருவில்லாதவன் அது வல்லாமலும் ஒரு குணமும் இல்லாதவன் என்று நின்னை அறிபவர்களது, அறிவினும் அறிவு அரு நெறி யினை - அறிவினுலும் அறிவதற்கு அரிய தன்மையை உடையவ னுய் இருக்கின்றுய் ;

இருமையும் உதவுவது எவன் அவன் என - இம்மை மறுமை என்னும் இரண்டு பயன்களையும் உயிர்களுக்கு அருளுபவன்

எவனோ அவனே இவனுவன் என்று, நினது அருமையை உணர்வுறின் அமிழ்தினும் இனிமையை - உன்னுடைய அரிய தன்மையை ஆராய்ந்து அறியுமிடத்துத் தெய்வாமிழ்தத்தினும் இனிமையுடையவனுய் இருக்கின்ருய் ;

வைகைக்கோ..................பட்டன்றே.

(இ - ள்.) திருமுடி மண் சுமந்தது-உனது அழகிய தலையிலே நீ மண்ணைச் சுமந்தது, வைகைக்கோ புனற் கங்கை வான் நதிக்கோ சொரிந்து கரை செய்கைக்கு என்று அறியேம்-வையை ஆற்றுக்கோ நீர்மயமான ஆகாய கங்கையாற்றுக்கோ கொட்டிக் கரையிடுவதற்குத்தான் என்று அறியாமல் மயங்குகின்ருேம் ;

அரும்பு இட்டு பச்சிலை இட்டு ஆள்செய்யும் அன்னை அவள்- கொன்றைப்பூ முதலிய அரும்புகளைக் கொண்டு அருச்சித்தும் (வில்வ இலை முதலிய) பசிய இலைகளையிட்டு அருச்சித்தும் அடிமைத் தொழில் புரிந்த தாய்போன்ற அன்புடைய வந்தியென்னும் கிழவியின், தலை அன்பின் கட்டு உண்டு தரும் பிட்டு பிட்டு உண்டாய் - முதன்மையான அன்பினுற் கட்டுப்பட்டு அவள் தந்த பிட்டினை உதிர்த்து உண்டனை.

முலை கொண்டு குழைத்திட்ட மொய்வளை கைவளை அன்றே- தன் முலைகளால் உனது திருமேனி இளகும்படி செய்த உமாதேவியின் கைகளில் அணிந்துள்ள வளையல்கள் அல்லவே, நீ மலை கொண்ட புயத்து வளை கொண்டு சுமந்தது என் - (அங்ஙனமிருக்க) நீ மலையை உவமையாகக்கொண்ட தோளில் வேறு வளையல்களை எடுத்துச் சுமந்தது என்ன காரணம்?

ஊன் வலையில் அகப்பட்டார்க்கு உட்படாய்! நின் புயத்து ஓர் மீன் வலை கொண்டதும் - உடம்பாகிய வலையிலே அகப்பட்டு வருந்துகின்ற உயிர்களால் அறியப்படாதவனே! ஒரு மீன் பிடிக்கும் வலையை உனது புயத்தில் ஏற்றுக்கொண்டதும், ஒருத்தி விழி வலையிற்பட்டு அன்றே - (உமையாகிய) ஒருத்தியின் கண்களாகிய வலையில் அகப்பட்டன்ருே?

போகமாய்.........................நின்ருேய் நீ

(இ - ள்.) போகம்ஆய் விளைந்தோய் நீ - உயிர்கட்கெல்லாம் அனுபவிக்கும் எல்லா அனுபவங்களின் வடிவமாய்ப் பெருகி விளங்குகின்றவன் நீயே ;

புவனம் ஆய் பொலிந்தோய் நீ-எல்லா உலகங்களின் வடிவ மாய் விளங்குபவனும் நீயே ;

ஏகம் ஆய் இருந்தோய் நீ - ஒப்பற்ற ஒரு பொருளாய் நின்றவன் நீயே ;

என் இறந்து நின்றோய் நீ - அளவில்லாமற் பல பொருள் களாய் நின்றவனும் நீயே ;

வானு நீ............................யிலது நீ

(இ - ள்.) வானும் நீ - ஆகாயமும் நீயே : நிலனும் நீ - பூமியும் நீயே ; மதியும் நீ-சந்திரனும் (திங்களும்) நீயே; கதிரும் நீ - சூரியனும் (பகலவனும்) நீயே ; ஊனும் நீ - உடம்பும் நீயே ; உயிரும் நீ - உயிரும் (ஆன்மாவும்) நீயே ; உளதும் நீ - உள்ள பொருளும் நீயே ; இலதும் நீ-இல்லாத பொருளும் நீயே ; என ஆங்கு - தனிச்சொல்.

பொன்பூத் தலர்ந்த....................பெறற் பொருட்டே.

(இ - ள்.) பொன் பூத்து அலர்ந்த கொன்றை பீர் பூப்ப - பொன்னை ஒத்து மலர்ந்த மலர் பசலை நிறத்தை அடையும்படி, கரும் சினை வேம்பு பொன் முடி சூடி - கருமையான கிளைகளை யுடைய வேப்பமரத்தின் மலர்களை (சோமசுந்தர பாண்டியனான பொழுது) அழகிய திருமுடியின்மேற் சூடிக்கொண்டு, அண்ணல் ஆன் ஏறு மண் உண்டு கிடப்ப கண்போல் பிறழும் கெண்டை வலன் உயர்த்து - பெருந்தன்மையை உடைய இடபம் (காளை) மண்ணையுண்டு கிடக்கும்படி மகளிர் கண்போற் பிறழுகின்ற மீனை வெற்றிக்கொடியில் உயர்த்திக்கட்டி, வரி உடல் கட்செவி பெருமூச்சு எறிய பொன் புனைந்து இயன்ற பைம்பூண் தாங்கி - கோடுகள் அமைந்த உடம்பையுடைய பாம்பு பெருமூச்சு விடும்படி பொன்னால் அணிபெறச் செய்யப்பட்ட பசிய நகை களை அணிந்து, முடங்கு உளைக் குடுமி மடங்கல் அம் தவிசில் - மடங்குகின்ற பிடரி மயிரையும் தலை மயிரையும் உடைய சிங்கத் தின் வடிவமாகச் செய்யப்பட்ட அழகிய இருக்கையில், பசும் பொன் அசும்பு இருந்த பைம்பொன் முடி கவித்து - பசுமை யான பொன் நெகிழ்ந்திருக்கப்பெற்ற பசும்பொன் மயமான கிரீடத்தைத் தரித்து (பூண்டு), ஆங்கு இரு நிலம் குளிர் தூங்கு ஒரு குடை நிழல் கீழ் - அம்மதுரையில் இப்பெரிய நிலவுலக முழுவதும் குளிர்ச்சி யடைதற்குக் காரணமான ஒற்றை வெண்

கொற்றக் குடையின் நீழலில், அரசு வீற்றிருந்த ஆதி அம் கடவுள்! - அரசனாகி வீற்றிருந்த முதன்மையான அழகிய கடவுளே!, ஐம்புல வழக்கின் அருஞ்சுவை அறியா செம்பொருட் செல்வ! - ஐந்து புலன்களினது இயக்கத்தின் அருமையாகிய சுவையை அறியாத செம்மையான பரம்பொருளாகிய எல்லாச் செல்வமும் உடையவனே!, நின் சீர் அடித் தொழும்புக்கு ஒண் பொருள் கிடையாது ஒழியினும் ஒழிக - உனது சிறந்த திரு அடிகட்குச் செய்கின்ற அடிமைத் தொழிலுக்கு ஏற்ற சிறந்த செல்வம் கிடைக்காமல் ஒழிந்தாலும் ஒழியட்டும், பிறிது ஒரு கடவுட்குப் பெரும்பயன் தரூஉம் இறைமை உண்டாயினும் ஆக - வேறொரு தெய்வத்துக்குப் பெரிய பயனைக் கொடுக்கத் தலைமை உண்டானாலும் உண்டாகட்டும், நின் சிறு அடியவர்க்கே குறுகி குற்றேவல் தலைகொண்டு கிடைத்த ஆ அம்மா என்று செம்மாப்பு உறாஉம் திறம் பெறற் பொருட்டு - உனது சிறிய அடிமைத்தொழில் புரியும் தொண்டர்கள் உள்ள இடத்தே சென்று நெருங்கி அவர்களுக்குச் செய்யும் அடிமைத் தொண்டுகளை மேற்கொண்டு இப்பேறு கிடைத்தது வியப்புக்கிடமானது என்றெண்ணி இறுமாப்பு அடைகின்ற தன்மையை அடையும் பொருட்டு, நின் பொன் மலர் பொதுளிய சில் மலர் பழிச்சுது — உன் பொன்மயமான பூக்கள் நிரம்பிய குளிர்ந்த தாமரைமலர்கள் போன்ற திருவடிகளை ஏத்துவோம்; (எ - று.)

(வி - ரை.) நூல்கள் எல்லாம் முதலில் மங்கலமொழி முதற்கண் அமைத்துக் கூறுவது மரபாதலால், முதலில் 'மணி' என்று தொடங்கினர். கடலைப் பூமிக்கு ஆடையாகக் கூறுவது இலக்கிய மரபு. சுரி: முதனிலைத் தொழிற்பெயர். அசைத்து என்பது அசைஇ என அளபெடுத்தது; சொல்லிசை யளபெடை. கிழவன் - கிழமையை உடையவன்; கிழமை - உரிமை. இதனை யுடையவள் கிழத்தி, முதுமையைக் குறிக்குமிடத்துக் கிழம்: பகுதி. திருமாலின் துடையில் நிலமகள் வீற்றிருக்கின்றாள் என வராக புராணம் கூறும். தம் கணவனைத் தொழுதல் மகளிர்க்குக் கற்பாம். அக்கணவனுக்கு வழிபடு கடவுளாகிய தெய்வத்தை அக்கணவனது நன்மையின் பொருட்டு வழிபடுதலும் கற்பு என்பது தோன்ற "முதற்கற்பின் தலைநிற்ப" என்றார். "பைந்தொடி குறங்கு வறிதெய்தவும் திருந்திழை மார்பு வறிதெய்தவும் பணிபூண்டு" என இயைத்துப் பொருள் கொள்ளுதலால், எதிர்நிரனிறைப் பொருள் கோள். 'திருமாலின் மனைவியர் இருவரும் அபிடேகவல்லியாகிய தடாதகைப் பிராட்டிக்கு வழிபாடு புரிகின்றார்' என்பதனால், திருமால் அபிடேகச் சொக்கருக்குப் பணிபூண்டு நிற்கின்றார் என்பதும் கூறியவாறும்.

அம்பொன் முடி சூடும் அபிடேகவல்லி : மீனுட்சியம்மை. இவள் மலயத்துவச பாண்டியன் மகளாய்த் தோன்றி மகுடம் சூடி அரசியாகப் பாண்டியநாட்டை ஆண்டு வந்தமையால் அபிடேகவல்லி என்று சிறப்பிக்கப்பட்டாள். தமிழ்க்கூடல் - பாண்டியர்களாலும் சங்கப் புலவர்களாலும் வளர்க்கப் பெற்ற தமிழ் வழங்கும் இடமாதலின் மதுரை "தமிழ்க் கூடல்" எனப் பேர்பெற்றது. சோமசுந்தரக் கடவுளின் ஆற்றலை மதியாத வருணன் ஏழு மேகங்களையும் அளவிறந்த மழையைப் பொழிந்து மதுரையை அழிக்கும்படி ஏவினன். இதனைத் தடுக்க விரும்பிய இறைவன் தன் சடைமுடியிலுள்ள நான்கு மேகங்களையும் ஏவ அவை மேலுயர்ந்து நான்கு மாடங்களாகக் கூடின. நான்கு மாடங்கள் போல மேகங்கள் கூடியதனுல் "கூடல்" என்றும், "நான் மாடக் கூடல்" என்றும் வழங்கப்பட்டது.

மீனுட்சியம்மை தான் ஆண்டுவந்த அரசுரிமையைத் தன்னை மணந்த சுந்தரபாண்டியனுக்கு அளிக்க அவர் அதனை ஏற்று அரசராக ஆண்டுவந்தார். விண் அரசு-இந்திரபதவி. பிற அரசு - பிரமன் திருமால் பதவிகள், திக்குப்பாலகர் முதலியவர்களின் பதவிகள். தேம் பழுத்த - தேன் பழுத்த, தேன் என்னும் மொழி வலிவர இறுதியழிந்து இன மென்மை தோன்றப் பெற்றது. தெரியல்-விளங்குவது. மாலைக்குத் தொழிலாகு பெயர். கண்ணி-தலைமாலை: முடி - மயிர் முடியுமாம். வான்ஏறு - ஆகாயத்திற் பறக்கும்படியான சில் புள். அவை கருடன், அன்னங்கள். வான் ஏறு - இடியுமாம். இஃது இந்திரன் கொடியாகும். புள்ளும், உம்: உயர்வு சிறப்பு. 'கடல்வாழ் சுறவும் ஏறு எனப் படுமே' என்றதனுல் மீன் ஏறு எனப்பட்டது. அடிகள் : முன்னிலையிற் படர்க்கை வந்த இடவழுவமைதி. கனவட்டம் என்பது பாண்டியமன்னர் ஏறும் பட்டக் குதிரையின் பேர். 'மனவட்டம் இடும் சுருதி' - அறிந்தவரால் மனத்தில் ஆராயப்படுவதாகிய வேதம். முப்புரம் எரிபட்ட காலத்தில் பிரமன் சாரதியாகவும் வேதம் குதிரையாகவும் பூமி தேராகவும் அமைந்தன. கங்கை பரமசிவனது சடைமுடியில் அறுகம்புல் நுனியிற் பனிபோலத் தங்கியதென்றும் புராணங் கூறுவதால் 'விண் ஆறு தலைமடுப்ப நனையா நீ' என்ருர். பொருநையும் வையையும் பாண்டி நாட்டு ஆறுகள். தமிழ் - இனிமையானது. தமிழ் நூல்களைக் கேட்டு அதற்கு மனம் மிகக் கனிதல் பாண்டியர்க்கு இயல்பு.

'ஒரு பொருள் இது என' என்னுமல் 'ஒரு பொருள் இவன் என' என்று உயர்திணை ஆண்பால் ஈற்ருற் கூறியது தானே யாவரினும் நன்கு சிறந்தவனென்று காட்டாநின்றது என்க.

அன்றியும், அவன் அவள் அது எனப் பால் பகுக்கப்படுபவை உயிர்களாதலால், அவ்வுயிர்களில் ஒருவன் இவன் என்று அறிவினுல் அறியப்படாத உருவம் உடையாய் என்றும் கருத்துக் கொள்ளலாம்.

சிவம் சத்தி நாதம் விந்து என நான்கு அருவாகியும், மகேசுரன் உருத்திரன் திருமால் அயன் என நான்கு உருவாகியும், சதாசிவமாகிய அருவுருவம்ஆகியும் நின்று நவபேதமும் தோற்றுவித்தல் முதலியவற்றிற்கு ஏதுவாய் நாடகமாத்திரையாய் நடிக்கும் இறைவனுதலின் இங்ஙனம் கூறியது. ஒருகால் தன்னை அறிபவர்கட்குப் பின் அறிதற்குக் கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலால், மீட்டும் அறிவராயின் என்றதென்க. 'உணர்ந்துணார்க் குணர்வரி யோன்றில்லைச் சிற்றம்பலத் தொருத்தன்' என்று கூறப்படுவதும் காண்க. குறி-அடையாளம். 'குறியிலன் அலதொரு குணமிலன்' என்றது நிட்கள சிவத்தை. குணம் - முக்குணம். குறி - ஆண், பெண், அலி என்ற அடையாளம். மறுமையில் விடும் அடங்கும்.

கங்கைநதி முழுவதையும் ஒரு துளியாயினும் வெளியிற் செல்லாதபடி எளிதில் முடியில் அடக்கிவைத்த உனக்கு அக் கங்கையின் அமிசமாகிய வையையை அடக்குவது அரியதொரு காரியமன்று என்பதாம்.

வான் நதி - சிறந்த ஆறுமாம். அரும்பு இட்டு - அரும்பு இலை முதலியவற்றைக் கொண்டு பூசை செய்தல். பிட்டு - உணவு: பெயர்ச்சொல்: பிட்டு-பிளந்து: வினையெச்சம்; பிள்: பகுதி. தலை அன்பு - முதிர்ந்த பக்தி. கட்டுண்டு - உண்டு; செயப்பாட்டுப் பொருளுணர்த்தும் விகுதி; மொய் வளை - நெருங்கிய வளையல்.

பாண்டிய நாட்டில் தண்டுறைப்பாக்கம் என்னும் கடற்கரைச்சேரியில் வாழும் வலைஞர் தலைவனுக்குப் பார்வதி புதல்வியாகிப் புன்னை மர நிழலிற் கிடந்தாள். அப் பரதவன் எடுத்து வளர்க்கப் பருவமடைந்தாள். நந்தி சிவபெருமான் சாபத்தால் ஒரு சுரு மீனுருவங் கொண்டு அப்பரதவனுக்கு மிகுந்த துன்பத்தை விளைத்தான். பரதவன் அச் சுருமீனைப் பிடித்தவர்களுக்குத் தன் மகளை மணஞ்செய்து கொடுப்பதென்று கூறினன். சோமசுந்தரக்கடவுள் தாம் ஒரு வலைஞன் உருக்கொண்டு அம் மீனைப் பிடித்து உமாதேவியை மணஞ்செய்து கொண்டனர் என்பது திருவிளையாடற் கதை.

ஊன்-தசை, இஃது ஆகுபெயராய் உடம்பை உணர்த்திற்று. உடம்பை வலை என்றது உயிரைப் பந்தப்படுத்தலால்.

'வானும் நீ நிலனும் நீ' எனப் பஞ்சபூதங்களில் முதலும் கடைசியுமாகிய பூதங்களை எடுத்துக் கூறியது மற்றைய பூதங் கட்கும் உபலட்சணம். தோற்ற முறையில் முன் நிற்றலால் வானையும் ஒடுக்க வகையில் இறுதியில் நிற்றலால் நிலத்தையும் எடுத்துக் கூறினர்.

பூப்பச்சூடிக், கிடப்ப உயர்த்து, எறியத்தாங்கி, முடிக வித்து ஆங்கு, குடைநிழற்கீழ்த் தவிசில் வீற்றிருந்த கடவுள்! செல்வ! ஆகக் குறுகித் தலைக்கொண்டு என்று செம்மாப்பு றூஉம் திறம் பெறற் பொருட்டு நின்மலர் பழிச்சுதும் எனக் கூட்டுக. செம்மாப்பு: தொழிற் பெயர்: செம்மா: பகுதி. பழிச்சுதும்; தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று.

இம் முதற் பாட்டு, தரவும், தாழிசையும் அராகமும் முதலில் வந்து மீண்டும் தாழிசைகளும் அம்போதரங்கங்களும், தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்று வந்ததால் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா. இதனை ஒருபோகு என்பர் (க)

நேரிசை வெண்பா

பொருணான் கொருங்கீன்ற பொன்மாடக் கூட
லிருணான் றிருண்டகண்டத் தெம்மான்—சரணன்றே
மண்டுழா யுண்டாற்குக் கண்மலரோ டொண்மவுலித்
தண்டுழாய் பூத்த தடம்.

(இ - ள்.) பொருள் நான்கு ஒருங்கு ஈன்ற பொன் மாடம் கூடல் - அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நால்வகைப் பேறுகளையும் ஒருசேர மெய்யடியார்களுக்குத் தந்தருளுகிற அழகிய நான்மாடக்கூடல் என்னும் பெயர் பெற்ற மதுரையில் எழுந்தருளிய, இருள் நான்று இருண்ட கண்டத்து எம்மான் சரண் - இருளைப் போன்ற கரிய நஞ்சு பொருந்தியதனால் கறுத்த கழுத்தையுடைய எம் சிவபெருமானின் திரு அடிகள், மண் துழாய் உண்டாற்கு - மண் உலகங்களைத் துழாவி உணவாக உண்டவனான திருமாலுக்கு, கண் மலரோடு ஒண் மவுலித் தண் துழாய் பூத்த தடம் - கண்ணாகிய செந்தாமரை மலரும் விளங்கு கின்ற முடியில் அணிந்த குளிர்ச்சியான திருத்துழாயும் வளர்தற் கான இடம் (ஆகும்); அன்று ஏ: அசை.

'பொருள் நான்கு ஒருங்கு ஈன்ற' என்ற அடைமொழியைக் கூடலுக்கும் சிவபெருமானுக்கும் கூட்டுக. பொருள் நான்கு ஆவன அறம் பொருள் இன்பம் வீடு என்பவை. இவையே மக்கள் பெறும் உறுதிப் பொருள்கள்.

ஈன்ற, இருண்ட என்பவை இறந்தகாலப் பெயரெச்சங்கள். ஈன், இருள் என்பவை முறையே பகுதியாம். நான்று - தங்கி; நால்: பகுதி. சரண் - அடிகள். துழாய்: வினையெச்சம்; துழாவி என்பதன் விகாரம். திருமால் மண் துழாய் உண்டது பிரளய காலத்தில் என்க. 'வாயில் மண்ணிட்டுக் கொண்டவர்' என்பர் சிவப்பிரகாசரும். தடம் - குளம்; மலைப்பக்கம். மலர் பூத்த குளமும் துழாய் பூத்த மலைப்புறமும். திருமால் இறைவனிடம் சக்கரப்படையை நாடி ஆயிரஞ் செந்தாமரை மலரிட்டு அருச்சித்துப் பூசித்து வருகையில் ஒருநாள் திருமாலின் அன்புறைப்பை அறிய விரும்பிய இறைவன் ஆயிரத்தில் ஒன்றை மறைத்துவிட அருச்சிக்கையில் ஒன்று குறையக்கண்டு அன்பின் மிகுதியால் தன் செந்தாமரை மலர்போன்ற கண்களில் ஒன்றைப் பறித்து அருச்சித்தான் என்பர். தண் துழாய் - குளிர்ந்த துளசி மலர்.

இது மலர் என்னும் வாய்பாட்டான் முடிந்த நேரிசை வெண்பா. (உ)

கட்டளைக்கலித்துறை

தடமுண் டகங்கண் டகத்தாள தென்றுநின் றண்மலர்த்தா
ணடமுண் டகமகங் கொண்டுய்ந்த வாவினி நங்களுக்கோர்
திடமுண் டகந்தைக் கிடமுண் டிலையெனத் தேறவிண்ணோர்
விடமுண்ட கந்தர சுந்தர சுந்தர மீனவனே.

(இ - ள்.) விண்ணோர் இனி தங்களுக்கு ஓர் திடம் உண்டு அகந்தைக்கு இடம் உண்டு இலை எனத் தேற - தேவர்கள் எல்லாம் இனிமேல் தங்களுக்கு ஓர் உறுதியுண்டு அகங்காரத்துக்கு இடம் இல்லை என்று எண்ணி அச்சந்தீர்ந்து தெளியும்படி, விடம் உண்ட கந்தர சுந்தர சுந்தர மீனவனே! - நஞ்சைப் புசித்த திருக்கழுத்தையுடையவனே! சோமசுந்தரக்கடவுளே! சுந்தர பாண்டியனாக அரசுபுரிய வந்தவனே!, அகம் தடம் முண்டகம் கண்டகம் தாளது என்று - (எனது) மனம், குளத்தில் தோன்றுகின்ற தாமரை மலர் முட்களோடு கூடிய தாளினை உடையதென்று கருதி (அதனை ஒழித்து), நின் நடம் தாள் தன் முண்டக மலர்கொண்டு உய்ந்த ஆ - உனது

திருக்கூத்தாடுகின்ற திருவடியாகிய குளிர்ச்சி பொருந்திய தாமரை மலரினை உட்கொண்டு நற்கதி பெற்ற வகை (வியப்பு ஆம்.)

தடம் - தடாகம், குளம். சிவபெருமான் திருவடிக்குச் செந்தாமரைமலர் ஒப்பு, செம்மை அழகு மென்மை ஆகிய பண்புகளால். தாளது - தாளையுடையது ; குறிப்புவினைமுற்று. கொண்டு - கருதி, நினைத்து. அகந்தை - செருக்கு, ஆ: ஆறு என்பதன் குறை. கந்தரம் - கழுத்து, தலையைத் தாங்குவது. தேற - தெளிய. விடம் - நஞ்சு. சுந்தரன் - அழகுடையவன்.

இது நிரையசை முதலாக வந்த கட்டளைக்கலித்துறை. (கூ)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மீனேறுங் கொடிமுல்லை விடுகொல்லைக் கடிமுல்லை
வெள்ளைப் பள்ளை
ஆனேறும் வலனுயர்த்த வழகியசொக் கர்க்கிதுவு
மழகி தேயோ
கானேறுங் குழல்சரியக் கர்ப்பூர வல்லிதலை
கவிழ்ந்து நிற்ப
ஊனேறு முடைத்தலையிற் கடைப்பலிகொண் டூரூர்புக்
குழலு மாறே.

(இ - ள்.) மீன் ஏறும் முல்லைக்கொடி விடு கொல்லைக் கடி முல்லை வெள்ளைப் பள்ளை ஆன்ஏறும் - ஆண் மீனையும் முல்லைக் கொடிகள் வளர்கின்ற கொல்லைப்புறங்களையுடைய புதிய முல்லைநிலத்துக்கு உரிய தெய்வமென்னும் திருமாலாகிய வெண்ணிறமுடைய பருத்த இடபத்தையும், வலன் உயர்த்த அழகிய சொக்கர்க்கு - வெற்றிக்கொடியாக மேம்படுத்திய அழகிய சொக்கலிங்கக் கடவுளுக்கு, கர்ப்பூரவல்லி கான் ஏறும் குழல் சரிய தலை கவிழ்ந்து நிற்ப-கர்ப்பூரவல்லி என்னும் திருப் பெயருடைய உமாதேவி மணம் மிகுந்த கூந்தல் தாழும்படி (தன் கணவன் பிச்சை எடுக்கப் புறப்பட்டதனால் உண்டாகிய மானக்கேட்டினால்) தலைகுனிந்து நிற்கும்படி, ஊன் ஏறும் முடைத்தலையில் கடைப்பலி கொண்டு ஊர் ஊர் புக்கு உழலும் ஆறு-தசை பொருந்திய முடைநாற்றமுடைய பிரமன் மண்டையோட்டில் இழிவாகிய பிச்சையை ஏற்றுக்கொண்டு பல ஊர்கள் தோறும் சென்று திரிந்து அலையும், இதுவும் அழகிதேயோ - இத்தொழிலும் அழகுடையதாமோ ?

மீனேறும் ஆனேறும் உயர்த்தியுமை சுந்தரபாண்டியனுண காலத்தும் தாமே இறைவனுயிருக்குங் காலத்தும் என்க. ஏறு- விலங்கின் ஆண்பாலைக்குறிப்பது. முல்லைநிலத்துக்குத் தெய்வம் திருமால். இது ''மாயோன் மேய காடுறை உலகம்'' என்பதனுல் அறியப்படும். முல்லை : முல்லைநிலக் கருப்பொருள்.

சொக்கு - பேரழகு, தூய்மை என்க. பேரழகும் தூய்மையும் உடையவர் சொக்கர். சொக்கத்தங்கம், மாற்றுயர்ந்த - மாசற்ற தங்கத்தைக் குறிக்கும்.

ஊனேறு புடைத்தலையில் கடைப்பலி கொண்டு ஊரூர் புக்குழன்றது. சிவபெருமான்போல் தனக்கும் ஐந்து முகம் அழகாயமைந்துள்ளதென்று செருக்கால் இறைவன்முன் சென்ற அயன் முகங்களில் ஒன்றை வயிரவரைக் கொண்டு வேறு படுத்தச் செய்தனர் சிவபெருமான். அக் கபாலம் வயிரவர் கையிலொற்றிக்கொள்ளவே அதனைக் களையும் வகைக்கு ஊர் தோறும் பலி ஏற்று நிரம்பியபின் அக் கபால ஒடு வயிரவர் கையை விட்டு நீங்கியது என்க. கடி: உரிச்சொல்.

இச்செய்யுள் வஞ்சப் புகழ்ச்சியுரை. அருளினுற் செய்ததாகலின் இதுவும் சொக்கர்க்கு அழகியதோ என்பது கருத்து. (௪)

கட்டளைக் கலித்துறை

இரங்கல்

மாற்றென் றிலையென் மருந்துக்கந்
    தோசொக்கர் மாலைகொடார்
கூற்றென் றலவொரு கோடிகெட்
    டேன்கொழுந் தொன்றுதென்றற்
காற்றென் றிளம்பிறைக் கீற்றென்று
    கார்க்கட லொன்றுகண்ணீ
ரூற்றென் றிவளுக் குயிரொன்
    றிலையுண் டுடம்பொன் றுமே.

(இ - ள்.) என் மருந்துக்கு மாற்று ஒன்று இலை அந்தோ சொக்கர் மாலை கொடார் - என்னுடைய தேவாமிழ்தம் போன்ற மகளுக்குப் பரிகாரம் ஒன்றும் இல்லை ஐயோ (சொக்கநாதர் தாம் அணியும்) பூமாலையைத் தந்தருளுகின்றுர் இல்லை. கூற்று ஒன்று அல ஒரு கோடி - இவளுக்கு இயமனே ஒன்று அல்ல

ஒரு கோடி இருக்கின்றன. கெட்டேன் - பாவியானேன், கொழுந்து ஒன்று தென்றற்காற்று ஒன்று இளம்பிறைக் கீற்று ஒன்று கார் கடல் ஒன்று-இளமை பொருந்திய தென்றற்காற்று ஒன்றும் இளமையான கோட்டு வடிவமான சந்திரன் ஒன்றும் கரிய கடல் ஒன்றும் (ஆம்), கண் நீர் ஊற்று ஒன்று இவளுக்கு உயிர் ஒன்று இலை - கண்ணீர் ஊற்றுப்பொருந்திய இம்மகளுக்கு உயிர் ஒன்றும் இல்லை, உடம்பு ஒன்றுமே உண்டு - மெய் ஒன்று மட்டுமே உள்ளது.

(வி - ரை.) மருந்து: உவமையாகுபெயராய்த் தலைவியை உணர்த்திற்று. மருந்து - தேவர் அமுதம். தலைமகனோடு புணர்ந்து பிரிந்து பிரிவாற்றாமையால் வருந்தும் தலைமகள் துயர் கண்டு செவிலித்தாய் இரங்கிக் கூறுகின்றாள். மாற்று - பரிகாரம். அந்தோ, கெட்டேன்: இரக்கச் சொற்கள். தலைமகனார் வாராராயினும் தாம் அணிந்துள்ள மாலையையாயினும் தந்துதவி புரியின் தலைமகள் துயர் தணியும் என்பாள். 'மாலை கொடார்' என்றாள். கொழுந்து ஒன்று தென்றல் என்ற தொடரில் 'ஒன்று தென்றல்': வினைத்தொகை. ஒன்று-பொருந்திய, தென்றல்-தெற்கிலிருந்து வருவது. வடக்கிலிருந்து வருங் காற்று வாடையாம். தென்றற் காற்று முதலியன விரகிகட்குக் காமத்தீயை வளர்ப்பனவாதலின் அவை 'கூற்றுக்கள்' எனப்பட்டன. கூற்று - உடலினின்றும் உயிரைப் பிரித்துக்கொண்டு போவது, இயமன். ஒன்று அல என்றதால் பல என்பது பெற்றாம். கீற்று-கீறப்படுவது, சிறியது. மாற்று - மாறுதலைச் செய்வது, ஒரு கோடி, இங்கு எண்ணிறந்தது என்ற பொருள்பட்டது. (௯)

விருத்தக் கலித்துறை

ஒன்றே யுடம்பங் கிரண்டே யிடும்பங் குடம்பொன் றிலார்
என்றே யறிந்தும்பி னின்றே யிரங்கென் றிரக்கின்றவா
குன்றே யிரண்டன்றி வெண்பொன் பசும்பொன் குயின்றேசெயு
மன்றே யிருக்கப் புறங்கா டரங்காட வல்லாரையே.

(இ - ள்.) உடம்பு ஒன்றே - (பரமசிவனுக்கு உள்ளது) ஓர் உடம்பே, அங்கு இடும் பங்கு இரண்டே - அவ்வோருடம்பிலும் இடுகின்ற பங்கோ இரண்டாகும், உடம்பு ஒன்று இலார் என்றே அறிந்தும் - (தமக்கு என்று சொந்தமாக) ஓர் உடம்பும் இல்லாதவர் அவர் என்று உறுதியாகத் தெரிந்திருந்தும், குன்றே இரண்டு அன்றி வெண் பொன் பசும்பொன் குயின்றே செயும்

மன்றே இருக்க - வெள்ளிமலை பொன்மலை என்னும் இரண்டு மலைகள் மாத்திரமேயல்லாமல் வெள்ளியினாலும் பொன்னாலும் அமைத்துச் செய்யப்பட்ட வெள்ளி அம்பலம் பொன் அம்பலம் என்கிற சபைகளும் இருக்க, (அவற்றை விட்டு) புறம் காடு அரங்கு ஆட வல்லாரை - ஊர்க்குப் புறத்திலுள்ள சுடுகாடாகிய அரங்கில் கூத்தாடவல்ல அச்சிவபெருமானை, பின்னின்றே இரங்கு என்று இரக்கின்ற ஆ - பின்னே சென்று நின்றுகொண்டே என் மேல் இரக்கங்கொண்டு கூடுவாயாக என்று இரந்து நிற்கும் வகை என்ன !

இது தலைமகனைக் கண்டு அளவிறந்த காதல் கொண்ட தலைமகளுக்குத் தோழி கூறியது.

'அங்கு இரண்டே இடும் பங்கு' என்றது இடப்பக்கம் ஒன்று உமாதேவிக்கும் வலப்பங்கு திருமாலுக்கும் உதவியிருப்பது.

உடம்பில்லாதவரும் விரும்பத்தக்கவற்றை விட்டுத் தகாதவற்றை விரும்பும் பித்துடையவரும் அருவருப்பான இடுகாட்டில் ஆடுபவருமாகிய இவரை விரும்புதல் பேதைமை என்றதாம். இச்செய்யுள் வஞ்சப்புகழ்ச்சியணி. வெண்பொன் பசும்பொன் என்பவற்றைக் குன்றுகளுக்கும் கூட்டுக. குயின்ற - குயில் : பகுதி. மதுரையில் வெள்ளியம்பலமும் சிதம்பரத்தில் பொன்னம்பலமும் சிவபெருமான் திருக்கூத்தாடும் மன்றங்களாம். (கூ)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சொக்கர் வளையற் செட்டியானது

வலங்கொண்ட மழுவுடையீர் வளைகொண்டு
விற்பீர்போன் மதுரை மூதூர்க்
குலங்கொண்ட பெய்வளையார் கைவளையெல்
லாங்கொள்ளை கொள்கின் றீராற்
பலங்கொண்ட செட்டுமக்குப் பலித்ததுநன்
றுனிரிப் பாவை மார்க்குப்
பொலங்கொண்ட வரிவளைகள் விற்பதற்கோ
கொள்வதற்கோ புறப்பட் டீரே.

(இ - ள்.) வலம் கொண்ட மழு உடையீர் !-வலது கையிற் கொண்டுள்ள மழு என்னும் படையை உடையவரே !, வளை

கொண்டு விற்பீர் போல் - வளையல்களை எடுத்துக்கொண்டு விலைக்கு விற்பவரைப்போல (புறப்பட்டுத் தெருவில் வந்து), மதுரை மூதூர் குலம் கொண்ட பெய்வளையார் கைவளை எல்லாம் கொள்ளை கொள்கின்றீர்-மதுரை என்ற பழைமையாகிய ஊரில் உள்ள உயர் குலத்தில் தோன்றிய மகளிரின் கையிலுள்ள வளையல்களை எல்லாம் மிகுதியாகக் கொள்கின்றீரே, ஆல் - ஆதலால், பலம் கொண்ட செட்டு உமக்குப் பலித்தது நன்று - பயனைக்கொண்ட வாணிகம் உமக்கு நன்ருகப் பயனைத் தருவது ஆயிற்று, நீர் இப்பாவைமார்க்குப் பொலம் கொண்ட வரி வளைகள் விற்பதற்கோ கொள்வதற்கோ புறப்பட்டீர்-நீர் இந்த மகளிர்க்கு அழகைக்கொண்ட கோடுகளையுடைய வளையல்களை விற்பதற்காகவோ வாங்குவதற்காகவோ புறப்பட்டீர்? (சொல்லும்.) (எ)

நேரிசை வெண்பா

பட்டிருக்கத் தோலசைஇப் பாண்டரங்கக் கூத்தாடு
மட்டிருக்கு நீப வனத்தானே—கட்ட
விரும்பரவத் தானேநின் மென்மலர்த்தா ளன்றே
தரும்பரவத் தானே தனை.

(இ - ள்.) பட்டு இருக்க தோல் அசைஇ பாண்டரங்கக் கூத்தாடும் - உயர்ந்த பட்டாடைகள் பல இருக்க அவற்றை விட்டு யானைத்தோலையும் புலித்தோலையும் அணிந்துகொண்டு பாண்டரங்கம் என்கிற திருக்கூத்தைப் புரிகின்ற, மட்டு இருக்கும் நீப வனத்தானே - மணம் பொருந்திய கடம்பவனத்தில் எழுந்தருளியிருப்பவனே !, கட்ட விரும்பு அரவத்தானே - ஆபரணங்களாகப் பூண விரும்புகின்ற அரவங்களையுடையவனே !, நின் மென்மலர்த்தாள் பரவ தானே தனை தரும்-உனது மென்மையான தாமரை மலர்போலும் திரு அடி அடியார்கள் வணங்கித் துதிக்க (ஏத்த) (அவர்கட்கு)த் தானே தன்னைக் கொடுத்தருளும்.

(வி - ரை.) பரமசிவன் தம்மை மதியாத தாருகாவன முனிவர்களது மனநிலையைச் சோதிக்க எண்ணி விடனுருவங் கொண்டு அவர்கள் வீடுதோறும் சென்று பிச்சை யெடுத்துத் தம்மை நோக்கிக் காதல் கொண்ட அவர்கள் மனைவியர்களின் கற்புநிலையைக் கெடுக்க, அதுகண்டு பொருமற் கோபங் கொண்ட முனிவர்கள் அபிசார யாகம் ஒன்று செய்து அவ் வோமத்தியினின்றும் எழுந்த நாகங்கள், பூதங்கள், மான், புலி, யானை, முயலகன், வெண்டலை முதலியவற்றைச் சிவனைக்

கொன்றுவிடும்படி ஏவினர். சிவபெருமான் தம்மேற் சீறிவந்த அரவங்களை ஆபரணங்களாகவும், பூதங்களைத் தம் கணங்களாக வும்கொண்டு, மானைக் கையிலேந்தி, புலியைக் கொன்று, தோலை யுடுத்து, யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்து, முயலகனை முதுகிற் காலால் ஊன்றி மிதித்து, வெண்டலையைக், கையிற் பற்றிச் சடைமேலணிந்து அவற்றையெல்லாம் பயனில வாகச் செய்தனர். ஆதலால் "பட்டிருக்கத் தோலசைஇ" என்றார். பாண்டரங்கம் பதினோராடல்களி லொன்று. பட் டிருக்க - இறந்துகிடக்க எனினுமாம். மட்டு - தேன். (அ)

கட்டளைக்கலிப்பா

இரங்கல்

தனியி ருப்பவ ரென்படு வார்கெட்டேன்
சற்று நீதியொன் றற்றவிவ் வூரில்யா
மினியி ருப்பவொண் ணாதும டந்தைமீ
ரிடம ருங்குஞ் சடைம ருங்கும்மிரு
கனியி ருக்குங் கடம்பவ னேசனார்
கண்பு குந்தென் கருத்து ளிருக்கவும்
பனியி ருக்கும் பிறைக் கூற்ற முற்றியென்
பாவி யாவியை வாய்மடுத் துண்பதே.

(இ - ள்.) மடந்தைமீர்! - தோழிப்பெண்களே!, இட மருங்கும் சடைமருங்கும் இரு கனி இருக்கும் கடம்பவன ஈசனார் கண் புகுந்து என் கருத்துள் இருக்கவும் - தமது இடப்பக்கத்தி லும் சடையிடத்திலும் (அம்பிகையும் கங்கையும் என்னும்) இருமகளிர் இருக்கப்பெற்ற கடம்பவனத்துக்கு நாதனாகிய சிவ பெருமான் கண் வழியாய் எனது மனத்திற் புகுந்து என் மனத் தில் நீங்காமல் இருக்கவும், பனி இருக்கும் பிறைக் கூற்றம் முற்றி என் பாவி ஆவியை வாய்மடுத்து உண்பதே - குளிர்ச்சி பொருந்திய இளஞ்சந்திரனாகிய இயமன் வளைந்து என் தீவினையை யுடைய உயிரையும் வாயினுட் கொண்டு உண்கின்றதே, தனி இருப்பவர் என் படுவார் கெட்டேன் - கணவரைப் பிரிந்து தனித் திருக்கும் மகளிர் மிகுந்த துயரத்தை அடைவார்கள், சற்றும் நீதி ஒன்று அற்ற இ ஊரில் யாம் இனி இருக்க ஒண்ணாது - சிறிதும் நீதியொன்றுமில்லாத இந்த மதுரையில் நாம் இனி மேல் இருக்கத் தகாது.

(வி - ரை.) இது தோழியரை நோக்கித் தலைவி இரங்கிக் கூறியது. கணவரைப் பிரிந்து தனித்தவரை இளம்பிறை வருத்துவது இயல்பே, தலைவனை விட்டுப் பிரியாமல் எப்பொழுதும், மனத்தினுள்ளே வைத்துக்கொண்டிருக்கும் என்னையும் இவ்வூரில் பிறை வருத்துகின்றதே! இதனால் இவ்வூர் சற்றும் நீதி ஒன்றும் அறியாத ஊர்போலும் என்றார். பிருங்கி முனிவர் பரமசிவனை மட்டும் வலஞ்செய்யக்கண்ட பார்வதி தலைவனை நோக்கி, முனிவர் என்னை வலஞ் செய்யாமைக்குக் காரணமென்னென்று கேட்க, இறைவன் 'இட்டசித்தி பெற விரும்புவோர் உன்னையும் விட்டை விரும்புபவர் என்னையும் வழிபடுவர்' என்றார். அது கேட்டுத் தேவி பெருமானோடு பிரியாதிருக்கும்படி தவம் புரிந்து இடதுபாகத்தைப் பெற்றார். மடந்தைமீர்: விளி. கனி - கன்னி, பிறையைத் தேய்த்து அவன் செருக்கை ஒழித்த கடவுள் என் மனத்திலிருக்கவும் அஃது அஞ்சாது என்னைக் கொல்கின்றதே என்று இரங்கினள். பாவம்- தலைவனைக் கூடும் நல்வினை யின்மை. ஈற்று ஏகாரம் இரக்கப் பொருளது. (க)

நேரிசை வெண்பா

இரங்கல்

உண்ணமுத நஞ்சாகி லொண்மதுரைச் சொக்கருக்கென்
பெண்ணமுது நஞ்சேயோ பேதைமீர்—தண்ணிதழி
இந்தா நிலமே வெனச்சொலா ரென்செய்வாண்
மந்தா நிலமே வரின்.

(இ - ள்.) பேதைமீர்-பேதைமைக் குணமுடைய மகளிரே!, ஒண் மதுரைச் சொக்கருக்கு உண் அமுதம் நஞ்சு ஆகில் என் பெண் அமுதும் நஞ்சேயோ? - புகழையுடைய மதுரையில் எழுந்தருளியுள்ள சொக்கலிங்கப் பெருமானுக்கு உண்ணும் அமுதும் முன் நஞ்சு ஆயிற்று என்றால் இப்போது என் பெண்ணாகிய அமுதமும் நஞ்சுதானோ?, (அவர்) தண் இதழி இந்தா நிலமேவு எனச்சொலார் - குளிர்ச்சியமைந்த கொன்றை மாலையைத் தரப் பெற்றுக்கொள்: நிலவினில் இன்புற்றிரு என்று சொல்லியருளார். மந்த அநிலமேவரின் இவள் என் செய்வாள்? - மந்த மாருதம் வந்தால் இவள் யாது செய்வாள்?

(வி - ரை.) ஓர் அமுதம் நஞ்சானால் மற்றையமுதம் நஞ்சாக வேண்டுமோ என்றிரங்கியபடி, உண் அமுதம் நஞ்சா

இல் என்றது திருப்பாற்கடலில் தோன்றிய நஞ்சைத் திரு அமுது செய்ததைக் குறித்தது. முதலிரண்டடிக்கு, சொக்கர்க்கு நஞ்சு உண்ணும் அமுதமானதினால் என் பெண்ணாகிய அமுதம் நஞ்சாயிற்றேயோ என்றும் பொருள் கொள்ள இடமுண்டு. பேதைமை - அறிந்தும் அறியாதிருப்பது. இந்தா : மரூஉ மொழி. 'நிலா' என்னும் குறியதன்கீழ் ஆ குறுகிச் செய்யுளில் நில என நின்றது. நிலம் மேவு - தரையில் இரு : என்றும் பொருள் கொள்ளலாம். (கo)

புயவகுப்பு

வரியளி பொதுளிய விதழியொ டமரர்
மடந்தையர் நீல வனம்புக் கிருந்தன
மதியக டுடைபட நெடுமுக டடைய
நிமிர்ந்தபொன் மேரு வணங்கப் பொலிந்தன
மழகதிர் வெயில்விட வொளிவிடு சுடர்வ
லயங்கொடு லோக மடங்கச் சுமந்தன
மதுகையொ டுதிறன் முறைமுறை துதிசெய்
தணங்கவ ராடு துணங்கைக் கிணங்கின

பொருசம ரிடையெதிர் பிளிறுமொர் களிறு
பிளந்தொரு போர்வை புறஞ்சுற் றிநின்றன
புகையெழ வழலுமிழ் சுழல்விழி யுழுவை
வழங்குமொ ராடை மருங்குற் கணிந்தன
புலவெயி றயிறரு குருதியொ டுலவு
மடங்கலின் வீர மொடுங்கத் துரந்தன
புகலியர் குரிசில்ப ணெடுதமி ழருமை
யறிந்தொரு தாளம் வழங்கப் புகுந்தன

உருமிடி யெனவெடி படவெதிர் கறுவி
நடந்தொரு பாண னொதுங்கத் திரிந்தன
உருகிய மனமொடு தழுவியொர் கிழவி
கருந்துணி மேலிடு வெண்பிட் டுகந்தன
உறுதியொ டவண்மனை புகும்வகை கடிது
சுமந்தொரு கூடை மணுந்திச் சொரிந்தன
உருவிய சுரிகையொ டெதிர்வரு செழியர்
பிரம்படி காண நடுங்கிக் குலைந்தன.

தருசுவை யமுதெழ மதுரம தொழுகு
பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன
தளிரியன் மலைமகள் வரிவளை முழுகு
தழும்பழ காக வழுந்தக் குழைந்தன
தளர்நடை யிடுமிள மதலையின் மழலை
ததும்பிய வூற லசும்பக் கசிந்தன
தமிழ்மது ரையிலொரு குமரியை மருவு
சவுந்தர மாறர் தடம்பொற் புயங்களே.

(இ - ள்.) *தமிழ் மதுரையில் ஒரு குமரியை மருவு சவுந்தர மாறர் தடம் பொற் புயங்களே* - செந்தமிழ் வழங்கும் மதுரையில் தடாதகைப்பிராட்டி என்னும் மகளை மணஞ்செய்து கூடிய சவுந்தர பாண்டியருடைய பெரிய அழகிய தோள்கள்.

வரி அளி பொதுளிய இதழியொடு அமரர் மடந்தையர் நீலவனம் புக்கு இருந்தன - இசைப்பாட்டையுடைய வண்டுகள் நெருங்கி மொய்த்த கொன்றைப்பூ மாலையுடன் தெய்வப்பெண்களின் (கண்களாகிய) கரு நெய்தல் மலர்க்கூட்டத்தை அடைந்திருந்தன, *மதி அகடு உடைபட நெடு முகடு அடைய நிமிர்ந்த பொன் மேரு வணங்கப் பொலிந்தன* - திங்களில் நடு இடம் உடையுமாறு நீண்ட வானத்தில் மேல் உச்சியை அடையும்படி உயர்ந்த பொன்மயமான இமயமலை வில்லாக வளையும்படி விளங்கின, *மழ கதிர் வெயில்விட ஒளிவிடு சுடர் வலயங்கொடு லோகம் அடங்கச் சுமந்தன* - இளமையான சூரியனது ஒளியைப் போன்ற ஒளியை வீசுகின்ற காந்தியையுடைய தோள் வளைகளை அணிந்து உலக முழுவதையும் தாங்கின, *மதுகையொடு அடு திறல் முறைமுறை துதி செய்து அணங்கவர் ஆடு துணங்கைக்கு இணங்கின* - (தோள்களின்) வலிமையையும் பகைவரைக் கொல்லும் திறமையையும் வரிசை வரிசையாகப் புகழ்ந்து பேய்கள் ஆடுகின்ற துணங்கை என்னும் கூத்துக்கு இசைந்திருந்தன ;

பொரு சமர் இடை எதிர் பிளிறும் ஓர் களிறு பிளந்து ஒரு போர்வை புறம் சுற்றி நின்றன - போர் செய்வதற்குக் களத்தில் முழங்கி வந்த ஒரு யானை உடம்பைப் பிளந்து அதன் தோலை ஒரு போர்வையாக மேலே அணிந்து நின்றன, *புகை எழ அழல் உமிழ் சுழல் விழி உழுவை வழங்கும் ஓர் ஆடை மருங்குற்கு அணிந்தன* - புகையெழும்படி நெருப்புப் பொறியை வீசுகின்ற சுழல்கின்ற கண்களையுடைய புலியானது தந்த ஒரு தோல் ஆகிய ஆடையை அரைக்கு உடுத்தன, *புலவு எயிறு அயில்தரு*

குருதியொடு உலவு மடங்கலின் வீரம் ஒடுங்கத் துரந்தன - கெட்ட நாற்றத்தையுடைய பற்களாற் கடித்துப் பருகுகின்ற குருதியோடும் உலாவுகின்ற நரசிங்கத்தினது வலிமை அடங்கும்படி செய்தன, புகலியர் குரிசில் பணோடு தமிழ் அருமை அறிந்து ஒரு தாளம் வழங்கப் புகுந்தன - சீர்காழியிலுள்ளார்க்குத் தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பண்ணோடு இசைந்த தேவாரத் திருப்பதிகத்தின் அருமையை அறிந்து ஒரு பொற்றாளத்தைக் கொடுக்கத் தொடங்கின.

உரும் இடி என வெடிபட எதிர்கறுவி நடந்து ஒரு பாணன் ஒதுங்கத் திரிந்தன-பேரிடி போல் முழக்க முண்டாகும்படி எதிரே சீற்றங்கொண்டு சித்தன் ஆகிய பாணன் ஒருவன் ஒழியும்படி அசைந்து திரிந்தன. உருகிய மனமொடு தழுவியொர் கிழவி கருந்துணி மேலிடு வெண் பிட்டு உகந்தன - வயது முதிர்ந்தாளொரு பெண் அன்புகொண்ட மனத்துடனே அணைத்துக் கரிய ஆடையில் இட்ட வெண்மையான பிட்டுணவை விரும்பி எடுத்துண்டன, உறுதியொடு அவள் மனை புகும் வகை கடிது ஒரு கூடை மண் சுமந்து உந்திச் சொரிந்தன - அவள் (நாம் செய்யவேண்டிய வேலையை இவன் செய்து முடிப்பான் என்ற) உறுதியுடன் வீட்டிற்குச் செல்லும்படி விரைவில் ஒரு கூடை மண் சுமந்து எடுத்துக்கொண்டுபோய் எழும்பிக் கொட்டின, உருவிய சுரிகையோடு எதிர்வரு செழியர் பிரம்படி காண நடுங்கிக் குலைந்தன - உருவின உடைவாளுடனே எதிரில் வருகிற அரிமர்த்தன பாண்டியரது பிரம்பின் அடியைப் பார்த்ததினால் மிக நடுங்கி அஞ்சின.

தருசுவை அமுது எழ மதுரம் அது ஒழுகு பசுந்தமிழ் மாலை நிரம்பப் புனைந்தன - (யாவர்க்கும்) சுவை தருகின்ற அமிர்தத்தின் தன்மை பொருந்த இனிமை மிகுந்து ஒழுகப்பெற்ற பசிய தமிழ்த்தொடைப் பாமாலையை நிறைய அணிந்தன, தளிர் இயல் மலைமகள் வரிவளை முழுகு தழும்பு அழகு ஆக அழுந்தக் குழைந்தன - தளிர் போன்ற மென்மைத்தன்மையையுடைய இமயமலை மகளாகிய உமாதேவியின் கோடுகளையுடைய வளைகள் பதிவதனால் உண்டான தழும்பானது ஓர் அழகாகப் பொருந்தும்படி நெகிழ்ந்து காட்டின, தளர் நடை இடும் இள மதலையின் மழலை ததும்பிய ஊறல் அசும்பக் கசிந்தன - தளர்ந்த நடையை இடுகின்ற இளைய குமாரனாகிய முருகக்கடவுளின் மழலைச் சொற்கள் பொருந்திய வாயில் ஊறும் நீர் மேலே துளிக்க அதனால் ஈரமாயின.

(வி - ரை.) பிரபந்தத் தலைவனின் தோள்களை வருணித்தல் புயவகுப்பாகும். ''வரியளி பொதுளிய இதழி'' என்பது

துள்ளது என்றபடி. இடைக்கு மின்னல் உவமை, தோன்றி மறையும் தன்மையால். என் நெஞ்சம் அவ்விரும் பொழில் என்றதற்கு அவள் உள்ள சோலை என் மனம்போல் அணித்தாயுள்ளதென்றும், என் மனமும் பூஞ்சோலையும் அவள் இருக்கின்ற இடம் ஆம் என்றும் கருத்துக் கொள்க.

அம்மானை

கலித் தாழிசை

இருவருக்குங் காண்பரிய வீசர்மது ரேசனுர்
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனர்கா ணம்மானை
விருதுகட்டி யங்கம்வெட்டி வென்றனரே யாமாகி
லருமையுடம் பொன்றிருகூ ருவதே னம்மானை
ஆனாலுங் காயமில்லை யையரவர்க் கம்மானை.

(இ - ள்.) இருவருக்கும் காண்பு அரிய ஈசர் மதுரை ஈசனுர் - நான்முகன் திருமால் என்னும் இரண்டு மூர்த்திகளுக்கும் காண்பதற்கு அருமையான மதுரைக்குத் தலைவராகிய சிவபெருமான், விருது கட்டி அங்கம் வெட்டி வென்றனர்காண் அம்மானை - தம் வெற்றியைப் புலப்படுத்தும் பேச்சைக் கூறி (ஒரு சித்தனின்) உடம்பில் உறுப்புக்களைத் தனித்தனி துணித்து அவனை வென்றுவிட்டார் அம்மானை, விருது கட்டி அங்கம் வெட்டி வென்றனரே ஆமாகில் - (அவ்வாறு) வெற்றிமொழி பேசிப் பகைவருடைய உடம்பைத் துணித்து வென்றவரேயாமாயின், அருமை உடம்பு ஒன்று இரு கூறு ஆவது ஏன் அம்மானை - 'காணுதற்கு அரிய அவரது உடம்பு ஒன்று இரண்டு துண்டாவது என்ன?' ஆனாலும் காயம் இல்லை ஐயர் அவர்க்கு அம்மானை - உடம்பு ஒன்று இரு கூருனாலும் தலைவராகிய அப்பெருமானுக்குத் தழும்பு இல்லை அம்மானை.

(வி - ரை.) *அம்மானையாவது மூன்று மங்கையர் விளையாடும் பொழுது பிரபந்தத் தலைவனின் தன்மையைப்பற்றி உரையாடுதல்.*

இருவருக்கும், உம் : உயர்வு சிறப்பு. இருவர் - திருமால் நான்முகன். தாம்தாம் கடவுள் என்னும் கருத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் பகைமைபூண்ட பிரமவிட்டுணுக்களின் மாறுபாட்டைத் தீர்க்க விரும்பிய பரமசிவன் அவ்விருவர்க்குமிடையே நெருப்புப் பிழம்பாய்த் தோன்றிநின்று இதன் அடியை அல்லது முடியை எவர் முதலில் அறிந்து வருவரோ அவரேமுதல்வர் என்று கூறினர். உடனே பிரமன் அன்ன வடிவெடுத்து

விண்ணில் பறந்து சென்றனன், திருமால் பன்றி வடிவெடுத்துப் பிழம்பின் அடியை அறியத்தோண்டிச் சென்றனர். திருமால் இடந்தெய்த்துக் காணுது திரும்பினர், நான்முகன் முடியைக் கண்டதாகத் தாழம்பூவைக் கரி கூறச் செய்வித்து முன்னின்றுன். பரமசிவன் பிரமனின் வஞ்சச் செயலை விளக்கி அவனுக்குக் கோயில் இல்லாது செய்தனர். இதுவே இருவருக்கும் காண் பரிய வரலாறு.

மதுரையைக் குலோத்துங்க பாண்டியன் ஆளுகையில் வட நாட்டிலிருந்து மதுரை வந்து பலர்க்கும் வாள் வித்தை பயிற்றி வந்த ஆசிரியர் சிறந்த சிவனடியாராகவும் விளங்கினுர். இவரிடம் பயின்று தேர்ந்த சித்தன் என்பவன் ஆசிரியனுக்கு மாருக வாட் பயிற்சி கொடுத்து ஆசிரியன் வருவாயைக் குறைத்து வந்ததுடன் ஆசிரியன் மனைவியையும் அவனில்லாதபொழுது கைப்பற்ற முயன்றனன். ஆசிரியன் மனைவி இறைவனிடம் முறையிட் டனள், அவளுக்கிரங்கிய சோமசுந்தரக்கடவுள் கிழட்டாசிரியன் வடிவிற் போய்ச் சித்தனை உறுப்புறுப்பாக வெட்டி அழித்துப் பேராசிரியன் பெருமையைக் காத்தனர்.

மதுரை + ஈசர்—மதுரேசர் : குணசந்தி. உடம்பொன்று இரு கூருவது சிவன் வலப்பாகத்திலும் உமை இடப்பாகத்திலும் பொருந்தியுள்ள உமையொரு பாக வடிவை. (கஅ)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இரங்கல்

அம்ம கோவெனும் விழுமழு மெழுந்துநின்
றருவிநீர் விழிசோர
விம்மு மேங்குமெய் வெயர்த்துவெய் துயிர்க்குமென்
மெல்லிய லிவட்கம்மா
வம்மின் மாதரீர் மதுரையுங் குமரியு
மணந்தவர் மலர்த்தாமந்
தம்மி னேவெனுந் தவப்பயன் பெரிதெனுந்
தந்தைதா ளெறிந்தார்க்கே.

(இ - ள்.) (இந்தப்பெண்) அம்மகோ எனும் விழும் அழும் எழுந்து நின்று அருவிநீர் விழி சோர - ஐயோ என்பாள் கீழே விழுவாள் புலம்புவாள் எழுந்திருந்து மலையருவி போலக் கண்ணீர் பெருக, விம்மும் ஏங்கும் மெய் வெயர்த்து வெய்து

உயிர்க்கும் - கலங்குவாள் இரங்குவாள் உடம்பு வியர்வை யடைந்து வெப்பமுடையவளாய்ப் பெருமூச்சு விடுவாள், (தோழிமார்களை நோக்கி) மாதரீர்! வம்மின் மதுரையும் குமரி யும் மணந்தவர் மலர்த்தாமம் தம்மின் எனும் - மங்கையரே! இங்கு வாருங்கள் மதுரை நகரியையும் கன்னியாகுமரியையும் கூடின சோமசுந்தரக் கடவுளின் பூமாலையைக் கொணர்ந்து கொடுங்கள் என்பாள், தந்தை தாள் எறிந்தார்க்கு தவப்பயன் பெரிது எனும் மெல் இயல் இவட்கு என் - தந்தையின் காலை வெட்டிய சண்டேசுரருக்குத் தவத்தின்பயன் பெரிதாம் என்பாள் மென்மையான தன்மையையுடைய இம் மகளுக்கு என்ன இவ் வாறு துன்பம் நேர்ந்தது.

(வி - ரை.) அம்மா: ஈற்றசை; இரக்கங்குறிக்கும் இடைச் சொல்லாகவும் கொள்ளலாம். அம்மகோ என்பதை ஐயகோ என்ற இடைச் சொல்போல் ஒரு சொல்லாக்கியும், அம்ம + கோ என இரண்டிசைச் சொல்லாக்கியும் கூறலாம். ''மதுரையும் குமரியும் மணந்தவர்'' என்பதற்கு மதுரைமுதல் கன்னியாகுமரி ஈருகப் பாண்டிய நாட்டை ஆண்டவர் என்பது கருத்து. இனி மதுரையை ஆண்டு தடாதகைப் பிராட்டியை மணஞ்செய்து கொண்டவர் என்றும் கூறலாம். ''தவப்பயன் பெரிது'' என்றது பெருந்தவம் செய்தார்க்கன்றி இறைவனின் பூமாலை முதலியன கிடைக்கமாட்டா என்பது கருத்து. திருச்சேய்ஞலூர் விசார சருமர் தாம் மேய்த்த பசுக்களிடமிருந்து வழிந்தொழுகிய பாலைக் குடங் குடமாகச் சேர்த்து மண்ணியாற்றில் மணலை இலிங்கமாக அமைத்துச் சிவபூசை செய்வதற்காக அபிடேகம் செய்தனர். தந்தை இதனை மறைந்திருந்து உண்மை கண்டு ஓடி வந்து மகன் செயலைத் தடுத்தவராய்க் காலாற் பாற்குடத்தை உதைத்தனர். தந்தையென்றும் பாராது பெரிய தந்தையாகிய சிவபெருமான் பூசைக்கு அபராதம் செய்த காலைப் பக்கம் கிடந்த மழுப்படையால் வெட்டினுர். இறைவன் அருளால் சண்டேசப் பதம் உதவப் பெற்றுர். இதனுல் இறைவனுக்குச் சாத்தப்பட்ட நிர்மாலியமான பூமாலை முதலியன சண்டேசர்க்கு இன்றும் அளித்துவரப் பெறுவதை யாவரும் அறிவர். இது திருப் பல்லாண்டில்,

''தாதையைத் தாளற வீசிய சண்டிக்கும் அண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும் வணங்கப்பொற்கோயிலும்போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே''

என்று வருவது காண்க. (௧௪)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மதங்கியார்

எறிவே லிரண்டுமென துயிர்சோர வுண்டுலவ
விகல்வா ளிரண்டு விசிரு
வெறிசேர் கடம்பவன மதுரேசர் முன்குலவி
விளையாடு மின்கொ டியனீர்
சிறுநூன் மருங்குலிறு மிறுமாகொ லென்றுசில
சிலநூ புரஞ்சொன் முறையீ
டறியீரென் னெஞ்சுமல மரவேசு ழன்றிடுநும்
மதிவேக நன்ற றவுமே.

(இ - ள்.) எறி வேல் இரண்டும் எனது உயிர் சோர உண்டு உலவ இகல் வாள் இரண்டு விசிறு - எறிகின்ற வேற்படைபோன்ற இரண்டு கண்களும் என்னுடைய உயிர் தளர்ச்சியுற அதனை உண்டு உலாவ வலிமையுடைய இரண்டு வாட்படைகளை விசிறிக்கொண்டு, வெறி சேர் கடம்பவன மதுரேசர் முன்குலவி விளையாடும் மின்கொடி அனீர்!-மணம் பொருந்திய கடம்பவனத்தையுடைய மதுரைக்குத் தலைவரான சிவபெருமானின் முன்னிலையில் விளங்கி விளையாடுகின்ற மின்னற்கொடி போன்றவரே!, சிறு நூல் மருங்குல் இறும் இறும் ஆகொல் என்று சில சில நூபுரம் சொல் முறையீடு - நுண்ணிய நூல் போன்ற இடை (கூந்தல் கொங்கை முதலியவற்றின் பாரத்தைத் தாங்கமாட்டாமல்) அடிக்கடி முறிவது போலும் என்று ஒலிக்கின்ற காற்சிலம்புகள் சொல்கின்ற சில சில முறையீடுகளை, அறியீர் நெஞ்சும் அலமர சுழன்றிடும் நும் அதிவேகம் அறவும் நன்று - நீங்கள் அறியாதவர்களாயுள்ளீர் (உங்கள் இடையோடு ஒப்ப) எனது உள்ளமும் கலங்கும்படி சுழலுகின்ற நுமது மிகுந்த விரைவு மிகவும் நன்றாயிருந்தது.

(வி - ரை.) இரண்டு கைகளிலும் வாளை எடுத்துச் சுழற்றிக்கொண்டு தானும் சுழன்று ஆடுவாளோர் இளமங்கையினிடத்துத் தனக்குண்டான வேட்கையை ஒரு காமுகன் வெளிப்படுத்திக் கூறுவதாகச் செய்யுள் செய்வது மதங்கியார் என்னும் உறுப்புக்கு இலக்கணமாகும்.

'வேல் இரண்டும் எனது உயிர் சோர உண்டு உலவ' என்றது, கண்கள் இரண்டும் எனக்கு மிகுந்த காமநோயை உண்டாக்கிக்கொண்டு பிறழ என்றவாறு. அனீர் - அன்னீர்

என்பதன் தொகை. சிலே நூபுரம் என்ற பாடத்திற்குப் பருக்கைக் கற்களையுடைய சிலம்பு என்று பொருள் கொள்க. சிலம்புகள் காலிற் பொருந்தி ஒலித்தலே, இடைமுறியும் முறியும் என்று காலில் விழுந்து முறையிடுவன என்றறிவித்தார். முறையீடு: முதனிலே திரிந்த தொழிற்பெயர். அலமர-அலமா: பகுதி. (௩௫)

கட்டளைக்கலித்துறை

புறம் காட்டல்

அறந்தந்த பொன்பொலி கூடற்பிரான் வெற்பி லம்பொற்படாம்
நிறந்தந்த கும்ப மதயா னையுநெடுந் தேர்ப்பரப்பும்
மறந்தந்த விற்படை வாட்படை யுங்கொண்டு மற்றொருநீ
புறந்தந்த வாவணங் கேநன்று காமவெம் போரினுக்கே.

(இ - ள்) அணங்கே - திருமகள் போன்றவளே !, அறம் தந்த பொன் பொலி கூடல் பிரான் வெற்பில் அம் பொன் படாம் நிறம் தந்த கும்ப மத யானையும் நெடும் தேர்ப் பரப்பும் - அறங்கள் யாவும் அமைந்த செல்வத்துடன் கூடி விளங்குகின்ற மதுரையில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானுடைய மலேயில் அழகிய பொன்னால் சித்திரிக்கப்பட்ட ஆடையின் ஒளியுடைய மத்தகத்தையுடைய மதம் பொருந்திய யானையையும் பரந்த தேர்த்தட்டையும், மறம் தந்த விற்படை வாட்படையும் கொண்டும் - வலிமை பொருந்திய வில்லாகிய படையையும் வாளாகிய படையையும் வைத்துக்கொண்டும், காம வெம் போரினுக்கு ஒரு நீ புறம் தந்த ஆ நன்று - வெவ்விய காமப் போரில் ஒப்பற்ற நீ புறங்கொடுத்த விதம் நன்றாயிருந்தது.

(வி - ரை.) இச்செய்யுள் 'புறங்காட்டல்' என்னும் துறை. அஃதாவது தலேமகளைப் புணர்ந்த தலேமகன் அவளை நோக்கி அவள் புணர்ச்சியில் மெலிந்ததைக் கூறியது. யானை, தேர், வில் வாள் முதலிய போர்க்குரிய படைகளைக் கொண்டு அவை ஒன்றும் இல்லாத என்னுடன் செய்யும் காமப் போரில் தோற்றல் தகுதியன்றெனக் கூறியவாறும்.

அறந்தந்த கூடல் என இயையும், அறந்தந்த பொன் என இயைத்து, முப்பத்திரண்டு அறங்களையும் செய்தருளின உமாதேவி பொருந்தப் பெற்ற கூடற்கடவுள் எனவுமாம். வெற்பிற் புறந்தந்தவர் என இயையும், வெற்பில் அணங்கே எனவும் வெற்பிலுள்ள யானை எனவும் இயைக்கலாம். பொற்படாம்-பட்டாடை, மற்று: அசை, அணங்கு: உவமையாகுபெயர்.

போரினுக்கு: உருபு மயக்கம். நன்று: பிற குறிப்பு. மத யானை - வலிய யானையுமாம். வெம் போர் - கொடிய போர்; விரும்பப்படும் போர். கும்ப மத யானை - கொங்கைகள். நெடுந்தேர்ப் பரப்பு - அல்குல். விற்படை - புருவம், நெற்றி. வாட்படை - கண்கள். (௧௫)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

போரானை முதுகுறைப்பப் பொறையாற்றுஞ் சினகரத்துப்
புழைக்கை நால்வாய்க்
காரானைப் போர்வைதழீஇ வெள்ளானைக் கருள்சுரந்த
கடவு ளேயோ
ஓரானை முனைப்போருக் கொருகணைதொட் டெய்திடுநீ
ரொருத்தி கொங்கை
ஈரானை முனைப்போர்க்கும் வல்லீரே லொருகணைதொட்
டெய்தி டீரே.

(இ - ள்.) போர் ஆனை முதுகு உறைப்ப பொறை ஆற்றும் சினகரத்து - போர் செய்யவல்ல எட்டு யானைகள் முதுகு வருந்தும்படி தாங்குதலைச் செய்கின்ற விமானத்திலே, புழைக்கை நால்வாய் கார் ஆனை போர்வை தழீஇ - துளையை யுடைய தும்பிக்கையையும் தொங்குகின்ற வாயையும் உடைய கரிய யானையினது தோலாகிய போர்வையைப் போர்த்துக் கொண்டு, வெள் ஆனைக்கு அருள் சுரந்த கடவுளேயோ - வெண்மை நிறத்தையுடைய ஐராவதம் ஆகிய யானைக்கு அருள் புரிந்த கடவுளேயோ, ஓர் ஆனை முனைப் போருக்கு ஒரு கணை தொட்டு எய்திடும் நீர் - ஒரு யானையின் கொடிய போரை முடித்தற்கு ஓர் அம்பைத் தொடுத்து எய்து விட்ட நீர், வல்லீரேல் ஒருத்தி கொங்கை ஈர் ஆனை முனைப் போர்க்கும் ஒரு கணை தொட்டு எய்திடீர் - வலியவரானால் இந்த என் ஒரு தலைவியின் கொங்கைகளாகிய இரண்டு யானைகள் முனைந்து செய்யும் போரை முடித்தற்கும் ஓர் அம்பைத் தொடுத்து எய்திடும்.

(வி - ரை.) இது பாங்கி தலைவனை வரைந்து எய்தும்படி வற்புறுத்துகின்றது. 'போரானை முதுகுறைப்பப் பொறையாற்றுஞ் சினகரம்' என்றது, எட்டு யானைகளும் முப்பத்

திரண்டு சிங்கங்களும் அறுபத்து நான்கு சிவகணங்களும் சுமக்கும்படி மயனால் சமைக்கப்பட்டு இந்திரனாற் கொணர்ந்து ஒப்படைக்கப்பட்டதொரு விண்ணிழி விமானத்தை. இதிற் சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளியிருக்கின்றார்.

சினகரம் என்பது முதலில் அருகன் கோயிற் பெயராயிருந்து பின் எல்லாக் கோயில்களுக்கும் வழங்கும் பெயராயிற்று. நால் வாய்-நாலுகின்ற வாய்: வினைத்தொகை.

வெள்ளானைக் கருள்புரிந்த வரலாறு:—காசியிற் சிவபூசை செய்து கொண்டிருந்த துருவாசமுனிவர்க்குச் சிவனருளால் அவர் முடியிலிருப்பதொரு தாமரைமலர் தம் கையில் விழப்பெற்று மகிழ்ந்து தேவலோகம் சென்று ஐராவதத்திலேறிப் பவனிவரும் தேவேந்திரனிடம் கொடுக்க அம்மலரை அவன் செருக்கால் மதியாது ஒரு கை நீட்டி வாங்கி யானைத் தலைமேல் வைத்தனன். அவ் யானை அம்மலரைத் துதிக்கையால் இழுத்துத் தள்ளிக் காலால் மிதித்துத் தேய்த்துவிட்டது. இதனாற் கோபங்கொண்ட முனிவர் அவ் யானையைக் காட்டானையாகச் சபித்தார். தேவர்கள் முறைப்பாட்டுக் கிசைந்து நூறு ஆண்டு கழிந்ததும் மீண்டும் தேவயானையாகும் என அருள் புரிந்தார். ஆண்டு கழிந்தபோது ஒரு நாள் கடம்பவனம் அடைந்தது. பொற்றாமரைக்குளத்தில் நீராடி இறைவனைப் பூசித்தது. இறைவனருளால் தன பழவடிவமடைந்து வானுலகடைந்தது. 'நற்றவத்தோர், ஈசனார் சாத்தும் எழில் மலரைக் கால்சிதைத்த, வாசவனார் வெள்ளானை மண்ணிழந்து பூசனை செய்து, அல்லற்படு சாபம் தீர்த்த அருள் போற்றி' என்ற திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பா அடிகளும் இதனை விளக்குவதாம்.

விக்கிரமபாண்டியனைச் சமணர்கள் செய்த அபிசார யாகத்தில் தோன்றிய யானையைக் கொல்லும்படி சோழமன்னன் ஏவ, அறிந்த சோமசுந்தரக்கடவுள் பாண்டியனுக்கிரங்கி வீரனாகச் சென்று அம்பெய்து வீழ்த்தினர் என்பது, ஓரானைப் போருக்கு ஒரு கணை தொட்டெய்த வரலாறு.

எய்த - எய்: பகுதி. நான்காம் அடியின் கருத்து தலைமகளையும் புரிந்து கூடிக் கலப்பீராக என்பது. 'கொங்கை யீரானை முனைப்போர்' என்றது கலவிப்போரை. மன்மதன் கணை - தாமரை மலர். (௧௭)

மேற்படி விருத்தம்

பாங்கி தலைவனுக்குக் கூறல்

எய்யாது நின்றொருவ னெய்வதுவு மிளையாட
	னிளைப்பும் புந்தி
வையாதார் வைதலுறின் மதியார்தா மதித்திடுதல்
	வழக்கே யன்றோ
மெய்யாத மெய்கடிந்து வீடாத வீடெய்தி
	வீழார் வீழச்
செய்யாள்செய் சரக்கறையாந் திருவால வாயிலுறை
	செல்வ னாரே.

(இ - ள்.) மெய்யாத மெய் கடிந்து வீடாத வீடு எய்தி வீழார் வீழ - பொய்யாகிய உடம்பை விட்டு அழியாத முத்தி உலகத்தை அடைந்து இங்கே வராத முத்தர்களும் விரும்பும் படி, செய்யாள் செய் சரக்கு அறை ஆம் திரு ஆலவாயில் உறை செல்வனாரே! - செம்மை நிறத்தை யுடையவளாகிய இலக்குமிதேவி செய்த எல்லாப்பொருள்களும் நிரம்பி இருப்பதோர் அறை போன்ற திரு ஆலவாய் ஆகிய மதுரையில் எழுந்தருளியிருக்கின்ற எல்லாச் செல்வமும் உடைய கடவுளே!, ஒருவன் எய்யாது நின்று எய்வதுவும் இளையாள் தன் இளைப்பும் - மன்மதனானவன் அறியப்படாமல் நின்று அம்பு எய்வதையும், இளம் பருவம் உடையவளான இம்மகளது வருத்தத்தையும், புந்தி வையாதார் வைதல் உறின் மதியார் மதித்திடுதல் வழக்கே அன்றோ - அறிவிற் கொள்ளாத உறவினர் முதலியோர் பழிக்கத் தொடங்கினால் முற்றறிவுடையவராகிய நீர் (இப்பெண்ணின் வருத்தத்தை) எண்ணி வந்து கூடுதல் நீதியேயாம் அன்றோ?

(வி - ரை.) இது, வந்து தலைமகளைக் கூடுமாறு பாங்கி தலைவனுக்குக் கூறியது. எய்யாமை - அறியாமை; இஃது உரிச்சொல். எய்யாது - இளையாமல்: எதிர்மறை வினையெச்சம். புந்தி வையாதவர் - அறியாதவர்: வீட்டுலகுக்கு அழிவில்லை யாதலாலும், அங்குச் சென்று பேரின்பம் நுகர்பவர் மீண்டு வருதல் இல்லாமையாலும் 'வீடாத வீடு எய்தி 'வீழார்' எனப்பட்டனர். அவர்களும் விரும்ப என்றது, மதுரையின் சிறப்பு மிகுதியைக் குறித்தது.

செய்யாள் - திருமகள். செம்மை நிறமுடையவள், செய்த சரக்கறையாவது எல்லாச் செல்வமும் நிரம்பிய தென்றவாறு. வங்கியசேகர பாண்டியன் மதுரைநகரின் பழைய எல்லையை வரையறுத்துக் கொடுக்கும்படி சோமசுந்தரக் கடவுளிடம் முறையிட, அவர் தம் கையில் அணிந்துள்ள நாகத்தை விடுத்து எல்லையை வரையறுக்க ஏவினர். அஃது அங்ஙனமே தன் வாயும் வாலும் பொருந்தும்படி வளைந்து நின்று காட்டியது. அக் காரணத்தால் 'ஆலவாய்' என்ற பெயர் மதுரைக்கு அமைந் துள்ளது. வீடு - கட்டினின்றும் விடுபடுவது: முத்தியுமாம். தாம்: அசை. (கஅ)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஆறுதலை வைத்தமுடி நீணிலவெ றிப்பவெமை
யாளுடைய பச்சை மயிலோ
டீறுமுத லற்றமது ராபுரியி லுற்றபர
மேசரொரு சற்று முணரார்
நீறுபடு துட்டமதன் வேறுருவெ டுத்தலரி
னீள்சிலைகு னித்து வழிதே
னூறுகணை தொட்டுவெளி யேசமர்வி ளைப்பதுமென்
னூழ்வினைப லித்த துவுமே.

(இ - ள்.) ஆறுதலை வைத்த முடிநீள் நிலவு எறிப்ப எமை ஆளுடைய பச்சைமயிலோடு - கங்கையைத் தம்மிடம் அடக்கி வைத்த திருமுடியில் நீண்ட மதி ஒளியை வீசும்படி எம்மை அடிமையாக உடைய பச்சை நிறமுடைய மயில் போன்ற உமா தேவியுடனே, ஈறு முதல் அற்ற மதுராபுரியில் உற்ற பரமேசர் - கேடும் தோற்றமும் இல்லாமல் எப்பொழுதும் அழியாதவரான திருமதுரை நகரில் எழுந்தருளிய சிறந்த தலைவராகிய சோமசுந்தரக் கடவுள், நீறுபடு துட்ட மதன் வேறு உரு எடுத்து அலரின் நீள் சிலை குனித்து - (தம் நெற்றிக்கண்ணின் நெருப்பினால் முன் எரிக்கப்பட்டுச்) சாம்பராய் விட்ட கொடியவனாகிய மன்மதன் வேறே வடிவு எடுத்து வந்து மலராகிய நீண்ட வில்லை வளைத்து, வழி தேன் ஊறு கணை தொட்டு வெளியே சமர் விளைப்பதும் என் ஊழ்வினை பலித்ததுவும் ஒரு சற்றும் உணரார் - பெருகித் தேன் ஊற்றுகின்ற மலர்களாகிய அம்பு களைச் செலுத்தி வெளிப்படப் போர் செய்வதையும் எனது முற்

பிறப்பிற் செய்த வினை பயன்பட்டு விட்டதையும் ஒரு சிறிதும் அறியார் போலும்.

(வி - ரை.) இது தலைவி கூற்று. அறிவராயின் என்னை வந்து கூடா திருப்பரோ என்றபடி. நீள் நிலவு - வட்ட வடிவமின்றிப் பிறைக்கோட்டின் வடிவமான சந்திரன்; நெடுந் தொலை ஒளி வீசுகின்ற சந்திரன் எனினுமாம். கங்காநதியையும் சந்திரனையும் முடிமீது கொண்டுள்ளபடியால் தாபந்தணிந்து நிற்பவரானதாலும், இறைவியுடன் உறைகின்ற படியாலும், வேறொருத்தியான எனது விரகதாபத்தை உணர்ந்திலரெனும் நயம் காண்க. பச்சை : பண்புப்பெயர். 'ஈறுமுதலற்ற' என்பதை மதுரைக்குக் கூட்டுதலும் அமையும்.

திருக்கைலையில் பரமசிவன் சனகர் முதலிய நால்வருக்கு ஞான நெறியை உணர்த்தற்பொருட்டுத் தாம் மேலான நிலையில் நிற்கும்பொழுது பிரமனது ஏவலால் மலரம்புகளை எய்து தமது தவத்தைக் கெடுக்கலுற்ற மன்மதனைச் சினந்து நெற்றிக் கண்ணை விழித்து அதன் நெருப்புக்கு இரையாய் உடம்பு எரிந்து போகும்படி செய்தனரென்னும் கதையை உட்கொண்டு, 'நீறுபடுதுட்ட மதன்' என்றார். மதன் - மதநன் அல்லது மந்மதன் என்னும் வடசொல்லின் விகாரம். 'வேறுரு வெடுத்து' என்றது உருவமில்லாமல் விற்பிடித்தலும் அம்பெய்தலும் முதலியன கூடா என்னும் கருத்தால் காம நூலென்னும் பூவிசேடம் காமனுக்கு வில்லென்று தமிழ் நூலிலும், மந்மத தந்த்ரமென்னும் பூ மன்மதனுக்கு வில்லாமென்று வடநூலிலுங் கூறுமாறு காண்க. வழிதேன் : வினைத்தொகை, 'தேனூறு கணை' எனலால் மலர்க்கணை என விளங்கும். இது, முதலைந்தும் கூவிளங்காய்ச்சீரும், ஆறாவது தேமாச்சீரும், ஏழாவது புளிமாச்சீருமாகிய எழுசீராசிரிய விருத்தம். (௧௧)

கட்டளைக்கலித்துறை

தழை

பல்லா ருயிர்க்குயி ராமது ரேசரப் பாண்டியன்முன்
கல்லானைக் கிட்ட கரும்பன்று காணின் களபக் கொங்கை
வல்லானைக் கேயிட வாய்த்தது போலுமென் வாட்கணினாய்
வில்லார் புயத்தண்ண றண்ணளி யாற்றந்த மென்றழையே.

(இ - ள்.) என் வாள் கண்ணினாய்! - எனது வாட்படை போன்ற கண்களையுடையவளே!, வில் ஆர் புயத்து அண்ணல்

தன் அளியால் தந்த மென் தழை - வில் பொருந்திய தோளை யுடைய பெருந்தன்மை யுடையவனான தலைவன் குளிர்ச்சியான அருளினால் கொடுத்த மென்மையாகிய இந்தத் தழை, பல்லார் உயிர்க்கு உயிர் ஆம் மதுரேசர் அ பாண்டியன் முன் - எல்லா ருடைய உயிர்களுக்கும் உயிராகிய மதுரை இறைவராகிய சோமசுந்தரர் அந்த அபிடேக பாண்டியனின் முன்னிலையில், கல் ஆனைக்கு இட்ட கரும்பு அன்று காண் - கல்லால் ஆகிய யானை உண்ணுமாறு அதற்குக் கொடுத்த கருப்பந்தழை போன்றது அன்றே, நின் களபக் கொங்கை வல் ஆனைக்கே இட வாய்த்தது போலும் - உன் கலவைச் சந்தனம் அணிந்த தனங்களாகிய வலிய யானைகட்கே இடுதற்பொருட்டு அமைந் ததுபோலும்.

(வி - ரை.) இது தலைவன் கொடுத்த தழையைத் தோழி தலைமகளிடம் அதனை ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்துவது. இத் தழையை வாங்கிக்கொண்டு என் குறையை முடித்தருள் வாய் என்று தலைமகன் வேண்டிக் கையுறை கொணர்ந்து கொடுக்க, அத்தழையை அருமையாக ஏற்றுக்கொண்ட தோழி தலைமகளிடம் சென்று அவள் குறிப்பையறிந்து, இத் தழை நமக்கு எளிய தொன்றன்று ; இதனை ஏற்றுக் கொள்வாயாக, எனத் தழையை வியந்துரைத்தது. இது, தழை ஏற்பித்தல் என்ற துறை. (௨௦)

வஞ்சித்துறை

தழைத்திடுங் கூடலார், குழைத்துடன் கூடலார்
பிழைத்திடுங் கூடலே, யிழைத்திடுங் கூடலே.

(இ - ள்.) தழைத்திடும் கூடலார் குழைத்து உடன் கூடலார் - செழித்திருக்கின்ற 'நான்மாடக்கூடல்' என்ற மதுரையில் எழுந்தருளியுள்ள சொக்கலிங்கப் பெருமான் (என்னை) மகிழச்செய்து விரைவில் வந்து (என்னுடன்) கூடு கின்றாரில்லை, இழைத்திடும் கூடல் கூடல் பிழைத்திடும்-இழைக் கப்பெறும் கூடற்சுழியானது கூடுதலைத் தவறிவிடும்.

(வி - ரை.) கூடல் இழைத்தல் என்னுந் துறையாவது தலைவ வனைப் பிரிந்து கடற்கரையில் தனியே இரங்குகின்றாள் ஒரு தலை மகள், 'என்னைப் பிரிந்த தலைமகன் மீண்டும் என்பால்வருவானோ வாரானோ' எனக் கூடற்சுழி இழைத்துப் பார்த்துக்கொண்டு வருந்திக் கூறுவது.

கூடலிழைத்தலாவது வட்டமாகக் கோட்டைக் கீறி அத னுள்ளே சுழி சுழியாக முற்றுஞ் சுழித்து இரண்டு இரண்டு சுழியாகக் கூட்டிக் கணக்கிட்டு இரட்டைப்பட்டால் கணவர் வந்து கூடுவர் என்றும் ஒற்றைப் பட்டால் அவர் வந்து கூடார் என்றும் கருதிக் குறி பார்ப்பதொரு மரபாம்.

இரண்டாமடியில் 'கூடலார்' : எதிர்மறைப் பலர்பால் வினை முற்று. பின்னிரண்டடிக்குக் கடற்கரையில் இழைக்கும் கூடற்சுழி பிழைத்திடும் என்று கூறுவாரும் உளர். இவ்விடத் துக் 'கூடல்' - நதியும் கடலும் கூடுமிடம் என்று பொருளாம். நான்கடியிலும் கூடல் என வந்தது மடக்கு. இச் செய்யுள் குறளடி நான்கு கொண்ட வஞ்சித்துறை. (உக)

வஞ்சி விருத்தம்

கூட லம்பதி கோயில்கொண்
டாடல் கொண்டவ ராடலே
ஊட லும்முடம் பொன்றிலே
கூட லும்மொரு கொம்பரோ.

(இ - ள்.) ஒரு கொம்பு ஊடலும் கூடலும் உடம்பு ஒன்றிலே - பூங் கொம்பு போல்வாள் ஒரு மகள் பிணங்குதலும் (அந்த ஊடல் நீங்கிப்) புணர்தலும் ஓர் உடம்பிலேயாம், (ஆதலால்) கூடல் அம்பதி கோயில் கொண்டு ஆடல் கொண்ட வர் - அழகிய மதுரைத் திருப்பதியில் திருக்கோயில் கொண் டருளித் திருவிளையாடல்களைப் புரிந்தருளிய சிவபெருமானின், ஆடலே - திருவிளையாடல் என்ன வியப்பையுடையது!

(வி - ரை.) ஊடலும் கூடலும் உடம்பு ஒன்றிலே என்றது உமை ஒரு பாகமும் மகேசுரர் ஒருபாகமுமாகிய வடிவத்தின் நிலைமையைக் கருதி. ஊடல்-கலகம், கொம்பர் : ஈற்றுப்போலி, அரோ : அசை. ஆடலே - ஏ : வியப்புப் பொருள் குறித்தது,

இனி இக் கவிக்கு, கூடற்பதியிற் கோயில் கொண்டு ஆடல் கொண்டவரது விளையாட்டுத் தன்மை யாதென்றால் ஒரு கொம்பு உடம்பு ஒன்றிலே ஊடுதலும் கூடுதலும் ஆம் எனக் கூறலுமாம். இது, சிந்தடி நான்கு கொண்ட வஞ்சி விருத்தம். (உஉ)

கலித்தாழிசை

ஊசல்

கொம்மைக் குவடசையக் கூர்விழிவேல் போராடக்
கம்மக் கலனுஞ் சிலம்புங் கலந்தார்ப்ப
மும்மைத் தமிழ்மதுரை முக்கணப்பன் சீர்பாடி
அம்மென் மருங்கொசிய வாடுகபொன் னூச
லழகெறிக்கும் பூண்முலையீ ராடுகபொன் னூசல்.

(இ - ள்.) *கொம்மை குவடு அசைய கூர் விழி வேல் போர் ஆட - பருத்த கொங்கைகளாகிய மலைகளின் குடுமிகள் அசையவும், கூர்மையையுடைய கண்களாகிய வேல் போர் செய்யவும், கம்மம் கலனும் சிலம்பும் கலந்து ஆர்ப்ப - அரிய வேலைப்பாடமைந்த கலன்களும் சிலம்பு என்ற காலணியும் கலந்து முழங்கவும், அம்மென் மருங்கு ஒசிய - அழகிய மெல்லிய இடை துவளவும், மும்மைத் தமிழ் மதுரை முக்கண் அப்பன் சீர் பாடி பொன் ஊசல் ஆடுக - மூவகைத் தமிழும் வழங்குகின்ற மதுரையில் எழுந்தருளியிருக்கின்ற மூன்று கண்களையுடைய கடவுளின் புகழைப் பாடிப் பொன்னால் ஆகிய ஊசல் ஆடுவிராக, அழகு எறிக்கும் பூண் முலையீர் பொன் ஊசல் ஆடுக - அழகிய ஒளி வீசுகின்ற ஆபரணங்களையணிந்த தனங்களையுடையவர்களே! பொன் ஊசல் ஆடியருள்க.*

(வி - ரை.) *ஊசலாவது ஆசிரிய விருத்தத்தாலாவது கலித்தாழிசையாலாவது ஆடீரூசல், ஆடுக ஊசல், ஆடாமோ ஊசல் என ஒன்றால் முடிவுறக் கூறுவது. இது, மாச்சீரும் காய்ச்சீரும் விரவிய நான்கடிகளால் தனித்துவந்து ஈற்றடி எண்சீராய் மிகுந்து ஏனையடிகள் நாற்சீராய் வந்து வெண்டளையால் வந்த கலித்தாழிசை.*

விழியை வேல் என்றது கூர்மையாலும் ஆடவரை வருத்துதலாலும் என்க. கண் போராடல் - கண் பிறழ்தல். கம்மம் - கம்மாளர் செய்யும் விசித்திர வேலைப்பாடு. மும்மை - மூன்று. ஆர்த்தல் - பேரொலி செய்தல். பொன் ஊசல் - அழகிய ஊஞ்சல் எனலுமாம். முச்சுடர் - ஞாயிறு, மதி, நெருப்பு ஆகிய மூன்றும் இறைவனுக்கு வலக்கண் இடக்கண் நெற்றிக் கண் ஆக அமைந்தவை.

(உரு

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

களி

அழகுற்றதொர் மதுரேசனை யமரேச னெனக்கொண்
டாடுங்களி யானின்றிசை பாடுங்களி யேம்யாம்
பொழுதைக்கிரு கலமூறுபைந் தேறற்பனை யினைநாம்
போற்றிக்குரு மூர்த்திக்கிணை சாற்றத்தகு மப்பா
பழுதற்றதொர் சான்றாண்மை பயின்றார்தின முயன்றாற்
பலமுண்டதி னலமுண்டவ ரறிவார்பல கலைநூ
லெழுதப்படு மேடுண்டது விடுந்தர வற்று
லெழுதாததொர் திருமந்திர மிளம்பாளையு ளுண்டே.

(இ - ள்.) *அழகு உற்றது ஓர் மதுரேசனை அமர ஈசன் எனக் கொண்டு ஆடும் களியால் நின்று இசை பாடும் களியேம் யாம் - அழகு அமைந்ததாகிய ஒப்பற்ற மதுரைத் தலைவனாகிய சோமசுந்தரக்கடவுளைத் தேவர்கட்கெல்லாந் தலைவர் என்றெண்ணிக் கொண்டாடுவதனால் ஆகிய களிப்பினால் நின்று இனிய பாடல்கள் பாடுகின்ற கட்குடியராவோம் நாம், அப்பா!-, பொழுதைக்கு இருகலம் ஊறு பைந் தேறல் பனையினை நாம் போற்றிக் குருமூர்த்திக்கு இணை சாற்றத் தகும் - வேளைக்கு இரண்டு கலங்கள் நிரம்பும்படி சுரக்கின்ற பசிய நறவையுடைய பனை மரத்தைச் சிறப்பித்துச் சிறந்த ஆசாரிய மூர்த்திக்கு ஒப்பாகச் சொல்லத்தகும், (எங்ஙனம் எனில்) பழுது அற்றது ஓர் சான்றாண்மை பயின்றார் தினம் முயன்றால் - குற்றமற்றதொரு சான்றாண்மைக் குணத்தைக் கடைப்பிடித்தவர்கள் குருமூர்த்தி பக்கல் வந்தனை வழிபாடுகளுடன் நாள்தோறும் முயற்சி செய்தால், பலம் உண்டு இதின் நலம் உண்டவர் அறிவார் - தக்க பயன் கிடைப்பதாம் அப்பயனது நன்மையை அனுபவித்தவர் அறிவார்கள், பல கலைநூல் எழுதப்படும் ஏடு உண்டு அது விடும் தர வற்று - பலகலை ஞானங்கள் எழுதப்பட்ட ஏட்டுச்சுவடி உள்ளதாம், அச்சுவடி முத்தியையும் கொடுக்கவல்லது, எழுதாதது ஓர் திருமந்திரம் இளம் பாளையுள் உண்டு - எழுதப்படாததொரு சிறந்த வேதமந்திரம் இளம் பாளையுள் அவ்வாசிரியரிடம் உள்ளதாம்.*

(வி - ரை.) *பின் இரண்டடியின் வெளிப்படைப் பொருள் வருமாறு : குற்றமற்றதொரு சான்றாண்மை யென்னும் சாதியின் தன்மையைப் பொருந்திய சான்றார் பனை மரத்தில் நாடோறும் காலந்தவறாமல் முயற்சி செய்தால் தக்க பயனாகிய மது கிடைக்-*

கும்; அதன் நன்மையை அதனைப் பருகியவர்கள் மாத்திரமே அறிவார்கள்; அன்றியும் அப்பனையிலே பல கல்வி நூல்களை எழுதத்தக்க ஓலையாகிய ஏடு உண்டு: அவ்வோலையேடு குடிசையையும் அமைக்கவல்லது. இன்னும் எழுதாததொரு திருமந்திரமாகிய மது (கள்) இளம் பாளையிலே உண்டு என்பதாம். (உச)

கலி விருத்தம்

உண்பது நஞ்சமா லுறக்க மில்லையால்
வண்பதி கூடலே வாய்த்த தென்னுமாற்
பெண்பத நின்னதே பெரும வேள்கணை
எண்பது கோடிமே லெவன்றொ டுப்பதே.

(இ - ள்.) *பெரும! - பெருமையை யுடையவனே!,* (இப்பெண்ணுக்கு) உண்பது நஞ்சம் உறக்கம் இல்லை வண் பதி கூடலே வாய்த்தது என்னும் - உண்ணும் உணவு நஞ்சாம், தூக்கம் இல்லை, கூடல் என்னும் மதுரையே தனக்குச் சிறந்த வாசஞ்செய்யும் இடமாகப் பொருந்தியது என்பாள், பெண் பத நின்னதே - (ஆதலால்) இப்பெண்ணின் நிலைமை உனது நிலைமையைப் போன்றதேயாம். (இங்ஙனம் இருக்கவும்) வேள் எண்பது கோடி மேல் கணை தொடுப்பது எவன்? - மன்மதன் (சிறிதும் அஞ்சாமல்) எண்பது கோடி என்னும் தொகையினும் அதிகமாக அம்புகளை (இவள்மேல்) செலுத்துவது என்ன காரணம்?

(வி - ரை.) இது தலைவனைப் பிரிந்த தலைவியது நிலைமையைத் தோழி தலைவனுக்குக் கூறியது. இம்மகளின் தன்மை மன்மதனை எரித்த உனது நிலையை ஒத்திருக்கவும் மன்மதன் அச்சமின்றி மலரம்புகளைத் தொடுத்து வருவது ஏனென்றாள். முதலிரண்டடி பரமசிவனுக்கும் தலைவிக்கும் சிலேடை, பரமசிவன் மேற் சொல்லும்போது நஞ்சு உண்பதாம் உறக்கம் இல்லையாம் மதுரையே தாம் எழுந்தருளியிருத்தற்குச் சிறந்த தலமாக வாய்த்ததாம் என்பது பொருள். இரண்டாம் அடி சிறந்த தலைவன்முன் கூடியதே (யான் இப்பொழுது படும் துன்பங்கட்குக் காரணமாக) வாய்த்த தென்பதாம். உறக்கம்: தொழிற்பெயர். பெண் பதம் என்பதில் நீ பாண்டிநாட்டை ஆண்ட பதவி மனைவியாகிய தடாதகைப் பிராட்டியின் பதவியே யாம் என்று பொருள் தொனிக்க நிற்கிறது. எண்பதுகோடி - அளவிறந்தது என்ற குறிப்பில் வந்தது. இச் செய்யுள் கலி விருத்தம். (உ௫)

கட்டளைக் கலிப்பா

மடக்கு

தொடுத்த ணிந்தது மம்புத ரங்கமே
சுமந்தி ருந்தது மம்புத ரங்கமே
எடுத்து நின்றது மாயவ ராகமே
யெயிறி றுத்தது மாயவ ராகமே
அடுப்ப தந்தணர் பன்னக ராசியே
யணிவ துஞ்சில பன்னக ராசியே
கொடுப்ப தையர் கடம்பவ னத்தையே
கொள்வ தையர் கடம்பவ னத்தையே.

(இ - ள்.) தொடுத்து அணிந்ததும் அம்புதர் அங்கமே (சிவபெருமான் மாலையாகத்) தொடுத்துப் பூண்டதும் அழகிய தேவர்களின் தலையாகிய உறுப்புக்களையே, சுமந்து இருந்ததும் அம்பு தரங்கமே - (அவர் திருமுடிமேல்) தாங்கியிருந்ததும் அலைகளையுடைய கங்கையாற்றின் நீரையேயாம், எடுத்து நின்றது மாயவர் ஆகமே - பூண்டு நிற்பதும் திருமாலினது உடம்பையே, எயிறு இறுத்ததும் மாய வராகமே - ஒழியும்படி கோட்டினை முறித்தது பன்றியையேயாம், அடுப்பது அந்தணர் பல் நகர் ஆசியே - பொருந்த வருவது பிராமணர்களின் பல நகரத்திலிருந்து வரும் வாழ்த்துக்களே, அணிவதும் சில பன்னக ராசியே - (ஆபரணமாகத்) தரிப்பதும் நாகங்களின் கூட்டத்தையேயாம், கொடுப்பது ஐயர்கள் தம் பவனத்தையே - (அடியார்களுக்குத்) தருவது தேவர்களின் உலகத்தையேயாம், ஐயர் கொள்வது கடம்ப வனத்தையே - அக்கடவுள் இடமாகக் கொள்வது கடம்பவனமாகிய மதுரையையேயாம்.

(வி - ரை.) 'தொடுத்து அணிந்ததும் அம்புதர் அங்கமே' என்றது எல்லாம் அழியப்பெறும் ஊழிக்காலமெல்லாம் ஒடுங்கிய பிரமனின் தலைகளையும் திருமாலின் எலும்புகளையும் மாலையாகத் தொடுத்துச் சிவபெருமான் அணிந்திருப்பது அழியாத மெய்ப்பொருள் சிவபெருமான் ஒருவரே என்பதைப் பின்வரும் பிரம விட்டுணுக்கள் முதலியவர்களும் அறிந்துகொள்ளுதற் பொருட்டே. புதர் - அறிவுடையவர். அந்தணர் - அம் + தண் + அர் = அழகிய அருளை யுடையவர். இனி அந்தத்தை அணவுபவர் என்று பொருள் படுத்திப் பார்ப்பனர்க்குக் காரண இடுகுறிப்பெயராய் அமைந்த தென்பதுமாம்.

'அடுப்பது அந்தணர் பன்னக ராசியே' என்பது, அந்தணர்கள் தங்கியிருக்கும் அக்கிரகாரத்தில் வாழ்த்து ஒலி வரும்படி இறைவன் எழுந்தருளியிருக்கிறன் என்பதைக் குறித்தது. ஐயர் - முனிவர். பன்னகம் - பாம்பு; கால்களால் நடவாதது. இச் செய்யுள் அடிதோறும் தனித்தனியே வந்த இறுதி முற்று மடக்கு என்னும் அணி நயம் கொண்டது. செய்யுள் கட்டளைக் கலிப்பா. (உகூ)

நேரிசை வெண்பா

கடங்கரைக்கும் வெற்பிற் கரைகரைக்கும் வைகைத்
தடங்கரைக்க ணின்றவர்நீர் தாமோ—நெடுந்தகைநுங்
கூட்டம் புயமே கொடாவிடில்வேள் கூன்சிலையி
னூட்டம் புயமே நமன்.

(இ - ள்.) கடம் கரைக்கும் வெற்பில் கரை கரைக்கும் வைகைத் தடம் கரைக்கண் நின்றவர் நீர் தாமோ - மதநீரைப் பெருக்குகின்ற மலை போன்ற யானையின்மேல் (ஏறி) கரையை நீர் வெள்ளத்தால் கரையச்செய்கின்ற வையை ஆற்றின் கரையில் எழுந்தருளி நின்றவர் நீர்தாமோ, நெடுந்தகை நும் கூட்டம் புயமே கொடாவிடில் - பெருமைக் குணத்தை யுடையோய்! என்னோடு கூடுவதற்காக அழகிய நின் புயத்தைக் கொடுக்காமற் போனால், வேள் கூன் சிலையில் நாட்டு அம் புயமே நமன் - மன்மதன் தனது வளைந்த கருப்பு வில்லில் வைத்துத் தொடுக்கின்ற தாமரை மலராகிய அம்பே (எனக்கு) நமனும்.

(வி - ரை.) இச்செய்யுள், சோமசுந்தரக்கடவுள் யானை ஊர்தியின்மேல் எழுந்தருளி மதுரை வீதியில் திருவிழாக்கொண்டருளும்பொழுது அத்திருக் கோலத்தின் காட்சியைக் கண்டு காதல் கொண்டாள் ஒரு மகள், அக்கடவுளை முன்னிலைப் படுத்திக் கூறியது என்க.

கடம் - மதநீர். இது முதலில் கன்னத்திற்குப் பெயராகி அதில் ஒழுகுகின்ற நீருக்கு ஆகுபெயராயிற்று. வெற்பு - யானைக்கு உவமையாகு பெயர்.

''கிளைக்கு மரவிந்த நீள்பசலை மாம்பூ
அளைத்துணவு நீக்கு மசோகு—வனத்திலுறு
முல்லை கிடைகாட்டு மாதே முழுநீலம்
கொல்லுமத னம்பின் குணம்''

என்ற பாடலிற் கூறிய மன்மதன் மலர் அம்புகளில் தாமரை மலரே தனக்கு இறுதியை விளைக்குமென்று விரக வேதனைக் கொடுமையை எடுத்துரைத்தாள் என்க. அம்புயமே - ஏ : பிரிநிலையோடு இழிவுசிறப்புமாம். அம்பு + சம் - அம்புயம் : நீரிற் பிறப்பது. (௨௭)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வண்டு

நம்பாநி னக்கோல முறையோவெ னக்கால
நஞ்சுண்டு பித்துண்டு நாந்தேவ ரென்பார்
தம்பாவை யர்க்கன்று காதோலை பாலித்த
தயவாளர் கூடற் றடங்காவில் வண்டீர்
செம்பாதி மெய்யுங் கரும்பாதி யாகத்
திருத்தோளு மார்பும் வடுப்பட்ட துங்கண்
டெம்பாவை யைப்பின்னு மம்பாவை செய்வா
ரெளியாரை நலிகிற்பி னேதா மிவர்க்கே.

(இ - ள்.) பித்து உண்டு நாம் தேவர் என்பார் அன்று நம்பா நினக்கு ஓலம் முறையோ என - மயக்கத்தைக் கொண்டு நாமே முதற்கடவுள் என்று கூறிச் செருக்கித் திரியும் தேவர்கள் (திருப்பாற்கடலைக் கடைந்த) அந்நாளில் பரமசிவனே உனக்கு அபயம் அளித்துக் காக்கப்படும் பொருள் ஆவோம் (நாம் என்றும் குறையைச் சொல்லி) முறையிட அதற்கு இரங்கி, காலநஞ்சு உண்டு தம் பாவையர்க்குக் காதோலை பாலித்த தயவாளர் கூடல் தடம் காவில் வண்டீர்! - இறக்கச் செய்யும் நமனை யொத்த நஞ்சைப் பருகி அத்தேவர்களின் மனைவிமார்க்கு ஓலை என்னும் காதணியை வாங்காதபடி (மாங்கலியப் பிச்சை) கொடுத்த திருவருளையுடைய சிவபெருமானது மதுரையிற் பெரிய சோலைகளிலுள்ள வண்டுகளே!, செம் பாதி மெய்யும் கரும் பாதி ஆகத் திருத்தோளும் மார்பும் வடுப்பட்டதும் கண்டு பின்னும் - சோமசுந்தரக் கடவுள் தமது சிவந்த பாதி உடம்பு முழுவதும் கருமையான பாகம் ஆக அழகிய தோளும் மார்பும் தழும்புபட்டதும் கண்ட பின்பும், எம் பாவையை அம்பாவை செய்வார் எளியாரை நலிகிற்பின் ஏது ஆம் இவர்க்கு - எம் கருவிழிப்பாவை போன்ற அரிய மகளை அழகிய சித்திரப்பாவை போலச் செயலற்றுக் கிடக்கும்படி செய்துள்ளார். எளிய மகளிரை வருத்துகின்றதனால் இவர்க்கு என்ன பயன் உண்

டாம்? (வருத்தாதிருக்குமாறு அவரிடத்தில் வண்டுகளே! நீங்கள் சென்று தெரிவிக்க வேண்டுமென்பது கருத்து.)

(வி - ரை.) ஒரு மகளை விரும்பி மணந்ததனால் தமது பாதியுடம்பை இழந்து மார்பும் தோளும் வடுப்பட்ட இவர் வேறொரு மகளையும் விரும்பி மணப்பதற்கு வருந்துகின்றனரே, இதனால் இவர்க்கு இன்னும் என்ன கேடு (குறைவு) தோன்றுமோ என்று கருத்துத் தோன்றுகின்றது. கால நஞ்சு - காளகூடம் என்னும் நஞ்சு எனவும், ஆலகால நஞ்சு எனவுமாம். 'செம்பாதி மெய்யும் கரும்பாதியாக' என்றது உமாமகேசுர வடிவை. சங்கரன் நிறம் செம்மையும் சங்கரி நிறம் கருமையுமாம். வலப்பாகம் செழும்பவளச் சோதி என்ன, வாணீலச் சோதி என்ன மற்றப் பாகம், என்றதும் இதனைக் குறிப்பதாம். எளியார்-மெல்லியலார். நலிகிற்பின்: எதிர்கால வினையெச்சம்; நலி: பகுதி. 'எளியாரை நலிகிற்பின் ஏதாம் இவர்க்கு' என்பதனால் வலியார்க்கு எளியாரை வருத்துதல் இழிவாம் என்னும் பொருளும் தொனிப்பதாம். (உஅ)

கோச்சகக் கலிப்பா

இரங்கல்

ஆவமே நாணே யடுகணையே யம்மதவேள்
சாவமே தூக்கிற் சமனுஞ் சமனன்றே
ஓவமே யன்ன ளுயிர்விற்றுப் பெண்பழிகொள்
பாவமே பாவம் பழியஞ்சுஞ் சொக்கருக்கே

(இ - ள்.) அம் மதவேள் ஆவமே நாணே அடு கணையே சாவமே தூக்கின் சமனும் சமன் அன்று - அந்த மன்மதன் தனது அம்பறுத்தூணியும் வில் நாணியும் கொல்லவல்ல அம்பும் வில்லும் (ஆகிய இவற்றைத் தனித்தனியே) ஆராய்ந்து பார்க்குமிடத்து இவை ஒவ்வொன்றுக்கும் இயமனும் ஒப்பாகமாட்டான், பழி அஞ்சும் சொக்கருக்கு - பழியை அஞ்சுமியல்பினராகிய சொக்கநாதருக்கு, ஓவமே அன்னாள் உயிர் விற்றுப் பெண் பழிகொள் பாவமே பாவம் - சித்திரப் பாவையைப் போன்ற இம் மகளின் உயிரை விலை செய்து பெண் கொலையாலாம் பழியைக் கொள்ளுகின்ற தீவினையே கொடிய தீவினையாம்.

(வி - ரை.) இது செவிலி கூற்று, தோழி கூற்றுமாம். ஆவமே முதலிய ஏகாரங்கள் நான்கும் எண்ணுப்பொருளன.

குமரவேள் முருகனாதலின் இவரை விலக்குதற்கு மதவேள் என்றார். மதனைக் கருவேள் என்றும் முருகனைச் செவ்வேள் என்றும் கூறுப. சாவம் - சாபம். மன்மதனுக்குப் பூங்கொத்து தூணி என்றும், வண்டொழுக்கு நாண் என்றும், கரும்பு வில் என்றும் அறிக. மன்மதன் ஆவம் முதலியவற்றை எடுத்து வரின் அவனுக்கு எமனும் உவமையாகான். பார்ப்பனப்பெண் கொலை காரணமாக வேடனுக்கும் பாண்டியனுக்கும் வரும் பழியை அஞ்சி அதனைத் தீர்த்தவர் இப்பெண் கொலை காரணமாகத் தமக்கு வரும் பழியை அஞ்சித் தீர்த்துக்கொள்ள வேண்டாவோ என்றார்.

'உயிர் விற்று' என்றது மன்மத பாணம் முதலியவற்றால் இவள் இறந்து படுவதற்குத் தாம் காரணமாவர் என்றபடி. உயிரை விலையாகக் கொடுத்துப் பழியை வாங்கிக்கொள்கிற பாவம் என்பது மாற்றுநிலை யுவமைப்பாற்படும். இது மாச் சீரும் காய்ச்சீருமாய் நாற்சீரும் விரவி வெண்டளையான் வந்த நான்கடித்தரவு கொச்சகக் கலிப்பா. (உக)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

பறவைவிடு தூது

கரைபொரு திரங்கு கழிதொறு மிருந்து
    கயல்வர வுறங்கு புள்ளீரே
பருவமு மிழந்தென் மகடுய ருழந்து
    படுவிர கமொன்று முள்ளீரே
அருமையொ டுமெங்கள் பெருமையை யறிந்து
    மருள்புரி யவிங்கு வல்லீரே
மருவிய கடம்ப வனமது புகுந்து
    மதுரையரன் முன்பு சொல்லீரே.

(இ - ள்.) கரை பொருது இரங்கு கழிதொறும் இருந்து கயல் வர உறங்கு புள்ளீரே - கரைகளை மோதி ஒலிக்கின்ற உப்பங்கழிகள் தோறும் இருந்து (தமக்குத் தக்க இரையாகிய) கெண்டை மீன் வருமளவும் உறங்குவதுபோல வாடியிருக்கின்ற நீரில் வாழ் பறவைகளே!, (நீங்கள்) என் மகள் பருவமும் இழந்து துயர் உழந்து படு விரகம் ஒன்றும் உள்ளீரே - என் மகளாகிய இவள் (தலைவனுடன் கூடுதற்கு ஏற்ற) இளம் பருவத்தையும் வீணாக இழந்து துன்பம் அனுபவித்துப் படு

இன்ற காமநோயை ஒருசிறிதும் நினையாதிருக்கின்றீர், எங்கள் அருமையொடு பெருமையையும் அறிந்து இங்கு அருள்புரிய வல்லீரே - எங்களுடைய அருமையையும் பெருமையையும் தெரிந்து இப்பொழுது அருள்புரிய வல்லவர்கள் (நீங்களே), மருவிய கடம்ப வனம் அது புகுந்து மதுரை அரன் முன்பு சொல்வீர் - சிவன் உள்ளமுவந்து எழுந்தருளியிருக்கும் இடமாகிய கடம்பங்காட்டை அடைந்து அவனிடத்தில் (எங்கள் துயரத்தைச்) சொல்லுங்கள்.

(வி - ரை.) விரகம் - காதலர் பிரிவால் உண்டாகும் துன்பம். கழிதொறும் என்றதனால், இரங்குதற்குரியது நெய்தல் நிலம் என்பது பெறப்பட்டது. பாங்கியர்களையும் தலைவியையும் உளப்படுத்தி 'எங்கள்' என்றாள்.

உள்ளீரே - ஏகாரம் தேற்றப்பொருளது. வல்லீரே - ஏ : வினா. இச்செய்யுளில் அடிதோறும் ஈற்றெழுத்துக்களிற் சில ஒற்றுமைப்பட்டு வந்தமையால் இயைபுத் தொடையாம். இச்செய்யுள் எழுசீர் ஆசிரிய விருத்தம். இது தலைமகனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் நிலைமையை நோக்கிச் செவிலித்தாய் பறவைகளை விளித்துத் தூது கூறி வரும்படி சொல்லியது. புள்ளீரே : விளி. 'ஓடுமீ னோட உறுமீன் வருமளவும், வாடியிருக்குமாங் கொக்கு' என்பதற்கும் 'கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன், குத்தொக்க சீர்த்த இடத்து' என்ற வள்ளுவர் வாக்கிற்கும் இயைய, 'கயல்வர உறங்கு புள்ளீரே' என்றார். (௩௦)

கோச்சகக் கலிப்பா

பாங்கி இரங்கல்

ஈரித்த தென்ற லிளவாடை திங்களென்றோர்
பேரிட்ட மும்மைப் பிணியோ தணியாவாற்
பாருக்கு ணீரே பழியஞ்சி யாரெனின்மற்
றூருக் குரைக்கே மடிகே ளடிகேளோ.

(இ - ள்.) ஈரித்த தென்றல் இளவாடை திங்கள் என்று ஓர் பேர் இட்ட மும்மைப் பிணியோ தணியா - குளிர்ச்சியான தென்றற் காற்றும் குளிர்ந்த வாடைக் காற்றும் சந்திரனும் என்று ஒவ்வொரு பேரிட்டு வழங்கப்படுகின்ற மூன்று நோய்களோ குறைகின்றன இல்லை, அடிகேள் அடிகேளோ - கடவுளே கடவுளே! பாருக்குள் நீரே பழி அஞ்சி யார் எனில் - பூமியில்

நீர்தாம் பெண் பழியை அஞ்சியவர் என்றால், மற்று ஆருக்கு உரைக்கேம் - (உம்மிடத்திற் கூறாமல் இத்துன்பத்தை) வேறே யாவரிடம் சொல்லுவோம்?

(வி-ரை) தென்றல் - தெற்கிலிருந்து வருங் காற்று வாடை - வடக்கிலிருந்து வருவது. பிரிந்தார்க்குத் தென்றல் முதலிய மிக்க வருத்தத்தை விளைத்தலால் 'பிணி' எனப்பட்டன. பிணியோ-ஓ: தெரிநிலை. அஞ்சியார்: வினையாலணையும் பெயர். அடிகேள் - அடிகள் என்றதன் விளி, ஈற்றயல் திரிந்தது. 'ஆருக்குரைக்கேம்' என்றதனால் நீரே வந்து அணைந்து பிணியைத் தணிக்கவேண்டும் என்பதாம். (௨௯)

கட்டளைக்கலிப்பா

பிச்சியார்

அடுத்த தோர்தவ வேடமும் புண்டர
மணிந்த முண்டமு மாய்வெள்ளி யம்பலத்
தெடுத்த தாள்பதித் தாடிக் கடைப்பிச்சைக்
கிச்சை பேசுமப் பிச்சனெ னச்செல்வீர்
கடைக்க ணோக்கமும் புன்மூர லும்முயிர்
கவர்ந்து கொள்ள விடுத்த கபாலிபோற்
பிடித்த சூலமுங் கைவிட்டி லீரென்றோ
பிச்சியாரெனும் பேருமக் கிட்டதே.

(இ - ள்.) அடுத்தது ஓர் தவ வேடமும் புண்டரம் அணிந்த முண்டமும் ஆய் - பொருந்தியதொரு தவ ஒழுக்கத்துக்குரிய கோலமும், திருநீற்றைப் பூசிய மூன்று கீற்றும் உடையவராய, வெள்ளி அம்பலத்து எடுத்த தாள் பதித்து ஆடிக் கடைப் பிச்சைக்கு இச்சை பேசும் அப்பிச்சன் எனச் செல்வீர்- வெள்ளியம்பலத்தில் தூக்கிய திருவடியைக் கீழே பதியவைத்துக் கால் மாறி நடித்து வாயில்தோறும் சென்று கொள்ளும் பிச்சைக்கு உரிய மொழிகள் சொல்லிக் கொண்டு செல்கின்ற அந்தப் பித்தனாகிய சிவபெருமான் போலச் செல்லும் பிச்சியாரே கடைக்கண் நோக்கமும் புன் மூரலும் உயிர் கவர்ந்து கொள்ள விடுத்த கபாலிபோல் - கடைக்கண் பார்வையையும் குறுஞ் சிரிப்பையும் உயிரைக் கவரும்படி வெளியில் விடுத்த சிவபெருமானைப்போல, பிடித்த சூலமும் கைவிட்டிலீர் என்றோ பிச்சியார் எனும் பேர் உமக்கு இட்டது - கையிற் பற்றிய சூலப்

படையையும் விடாதிருக்கின்றீர் என்பதனுலோ பிச்சியார் என்ற பெயர் உமக்கு வைத்தது.

(வி - ரை.) சிவசின்னம் பூண்டு தெருவில் பிச்சைக்கு வருகிற ஒரு மகளை நோக்கி ஒரு காமுகன் தன் வேட்கையைப் புலப்படுத்திக் கூறுவதாகச் செய்யுள் செய்வது பிச்சியார் என்னும் உறுப்பிற்கு இலக்கணம்.

வேடம் - பிச்சைக்கோலம். அடுத்த : பெயரெச்சம் ; அடு : பகுதி. சிவபிரான் தவ வேடத்தையும் திரிபுண்டரம் அணிந்த தலையையும் உடையவராயிருத்தல் போல நீங்களும் இருக்கின்றீர்; அவர் வெள்ளியம்பலத்தில் எடுத்த தாளைப் பதித்து வைத்துக் கால்மாறி யாடுவது போல நீங்களும் தூக்கின காலைப் பெயர்த்து வைத்து ஆடுகின்றீர் ; அவர் பிச்சைக்குச் சென்றதுபோல் நீவிரும் செல்கின்றீர் ; அவர் கடைக்கண் நோக்கத்தையும் புன்மூரலையும் உயிர் கொள்ள விடுத்தது போல் நீவிரும் அவற்றைக் கைக் கொண்டுளீர்; இதனுல் உங்கட்கும் பிச்சியார் என்ற பெயர் இடப்பட்டதோ என்று கேட்டனன் என்பதாம். இச்செய்யுள் கட்டளைக் கலிப்பா. (௬௨)

கட்டளைக்கலித்துறை

மடல்

இடங்கொண்ட மானும் வலங்கொண்ட
 வொண்மழு வும்மெழுதும்
படங்கொண்டு வந்தனை யானெஞ்ச
 மேயினிப் பங்கயப்பூந்
தடங்கொண்ட கூடற் சவுந்தர
 மாறர்பொற் ருள்பெயர்த்து
நடங்கொண்ட தோர்வெள்ளி மன்றே
 றுதுமின்று நாளையிலே.

(இ - ள்.) நெஞ்சமே - மனமே !, இடம் கொண்ட மானும் வலம் கொண்ட ஒள் மழுவும் எழுதும் படம் கொண்டு வந்தனை - இடக் கையிற் கொண்ட மானையும் வலக்கையிற் கொண்ட ஒள்ளிய மழுப்படையையும் எழுதிய (சிவபெருமானின்) படத்தைக் கொண்டு வந்தாய், இனி பங்கயப் பூ தடம் கொண்ட

கூடல் சவுந்தர மாறர் பொன்தாள் பெயர்த்து - இனி மேல் பொற்றாமரைக் குளத்தையுடைய மதுரையில் எழுந்தருளிய சுந்தரபாண்டியராகிய சோமசுந்தரக் கடவுள் பொன்போன்ற அழகிய திருவடிகளை மாற்றி வைத்து, நடம்கொண்டது ஓர் வெள்ளி மன்று இன்று நாளையில் ஏறுதும் - திருக்கூத்தாடும் இடமாகிய வெள்ளியம்பலத்தில் இன்றேனும் நாளையேனும் மடல் ஏறுவோம்.

(வி - ரை.) இது மடல்மா ஏறுதல் என்னும் துறை. ஆடவர், பெண்டிர் இருவருள் ஒருவர் மற்றொருவரது வடிவத்தையும் பெயரையும் தமது பெயரையும் ஒரு படத்திற் சித்திரம் எழுதிக் கையிற் கொண்டு பனைமடலினால் ஒரு குதிரையுருவம் செய்வித்து அதன்மேல் தாம் ஏறி அதனைப் பிறரால் இழுப்பித்து வீதிவழியே பலரும் கூடும் பொதுஇடங்களில் செல்லுதல். இதனால், இவரது கடுந்தொழிலையும் வேட்கையையும் கண்டு உறவினராயினும் அரசராயினும் கூட்டுவிப்பர். இஃது இலக்கிய மரபு. இஃது ஆடவர்க்கே பெரும்பாலும் உரியது. இது ஒரு பெண் மடலேறக் கருதியதாகக் கூறப்பட்டது பெருந்திணையாம். செய்யுள் கட்டளைக் கலித்துறை. (கக)

சந்த விருத்தம்

இரங்கல்

இருநில னகழ்ந்ததொரு களிறுவெளி றும்படியொ
    ரிருளியி னணைந்த ணையுமக்
குருளையை மணந்தருளி னிளமுலை சுரந்துதவு
    குழகரி துணர்ந்திலர் கொலாங்
கருகியது கங்குலற வெளிறியது கொங்கைசில
    கணைமதன் வழங்க வவைபோ
யுருவியபசும்புணில்வெண் ணிலவனல் கொளுந்தியதெம்
    முயிர்சிறி திருந்த தரிதே.

(இ - ள்.) இரு நிலன் அகழ்ந்தது ஒரு களிறு வெளிறும்படி ஓர் இருளியின் அணைந்து அணையும் அ குருளையை மணந்து - பெரிய பூமியை (ஒரு கோட்டினால்) குத்தி எடுத்து வந்த ஒப்பற்றதொரு பன்றியானது வெண்ணிறம் அடையும்படி ஒரு பன்றி வடிவிற் கூடி (தம்மைத் தழுவுகின்ற) அப்பன்றிக் குட்டிகளைச் சேர்ந்து, அருளின் இளமுலை சுரந்து உதவு

குழகர் - இரக்கத்துடன் இளமையான கொங்கைகளிற் பால் சுரந்து அளித்த அழகையுடைய சோமசுந்தரக்கடவுள், கங்குல் கருகியது கொங்கை அற வெளிறியது மதன் சில கணை வழங்க அவை போய் உருவிய பசும் புணில் - இராத்திரி இருளாயிற்று, தமது கொங்கையும் (பசலையால்) மிக வெளுத்தது, மன்மதன் சில அம்புகளைச் செலுத்த அந்த அம்புகள் சென்று தைத்ததனால் உண்டான இளம் புண்ணில், வெள் நிலவு அனல் கொளுந்தியது எம் உயிர் அரிது சிறிது இருந்தது அது உணர்ந்திலர் கொல் ஆம் - வெண்மையான சந்திரனது நிலவாகிய நெருப்புப் பற்றிய தும் எமது உயிர் அருமையாகச் சிறிது இருந்ததும் ஆகிய இந்த நிகழ்ச்சிகளை அறிந்திலர் போலும்.

(வி - ரை.) இது தலைவனைப் பிரிந்த தலைவியின் கூற்று. இருளியின் - இன்: ஒப்புமைப்பொருட்டு. திருமாலின் மூன்ரு வது பிறப்பாகிய வராகத்தைக் குறிக்கும். அவ்வராகம் இப் பன்றிக்கு ஒப்பாகாமையால் உண்டாகிய வருத்தத்தால் வேறுபட என்க. களிறு - பன்றியின் ஆண்பாற்பெயர். அது "கேழற் கண்ணும் கடிவரை யின்றே" என்ற நூற்பாப்படி கொள்ளப் படும். தேவகுருவின் சாபப்படி இளமையிலேயே பெற்ருேரை இழந்த பன்னிரண்டு பன்றிக்குட்டிகட்கு இரங்கிய சோமசுந்தரக் கடவுள் உடனே தாய்ப் பன்றியின் வடிவம் எடுத்து முலை கொடுத்துப் பாலூட்டி அவற்றைக் காத்தருளினர் என்பது திரு விளையாடற் கதை. இது, "மாயாமல் வெஞ்சுரத்து வல்ஏனக் குட்டிகட்குத், தாயாய் முலைகொடுத்த தாய் போற்றி" என்ற திருவிளையாடற் போற்றக் கலிவெண்பா அடியாலும் விளங்கும். (௩௪)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கொற்றியார்

அருநாம மரசிவசங் கரநாம மெனக்கொண்
டவற்றெருருநா மம்பகர்ந்தோர்க் கரியயனிந் திரனும்
பெருநாமங் கொடுத்தவர்தங் கருநாமந் துடைக்கும்
பெற்றியார் தமிழ் மதுரைக் கொற்றியார் கேளீர்
ஒருநாமம் பயந்தவர்முன் றருநாமம் வியந்திங்
குலகரிடு நாமமதொன் றுள்ளநீர் வெள்ளைத்
திருநாம மிட்டவன்றே கெட்டவன்ருே விமையோர்
தெரித்திடுநா மமுமுனிவோர் தரித்திடுநா மமுமே.

(இ - ள்.) அரு நாமம் அரசிவ சங்கர நாமம் எனக் கொண்டு அவற்று ஒரு நாமம் பகர்ந்தோர்க்கு - ஓதுதற்கரிய திருப்பெயர்கள் எவை எனில் அரசிவசங்கர என்னும் திருப் பெயர்களே எனக் கொண்டு அத்திருப்பெயர்களில் ஒரு திருப் பெயரை ஒருக்கால் உச்சரித்தவர்கட்கு, அரி அயன் இந்திரன் ஆம் பெருநாமம் கொடுத்து அவர் தம் கரு நாமம் துடைக்கும் பெற்றியார் - திருமால் பிரமன் இந்திரன் என்னும் பெரிய பட்டப் பெயர்களைக் கொடுத்து அவர்கள் மறுபிறப்பு என்னும் பெயரையும் ஒழித்து முத்தியைத் தருகின்ற தன்மையையுடையவரான சொக்கநாதரது, தமிழ் மதுரைக் கொற்றியார் கேளீர் - செந்தமிழ் தழைக்கும் மதுரையிலுள்ள கொற்றியாரே! கேட்பீர், ஒரு நாமம் பயந்தவர் முன் தருநாமம் - பெண் என்னும் ஒப்பற்றதொரு பெயரையும் பெற்ற தாய் தந்தையார் இளமையில் இட்ட பெயரையும், உலகர் இங்கு வியந்து இடு நாமம் அது ஒன்றும் உள்ள நீர் - உலகத்தவர் (அழகு முதலியவற்றைப்) பாராட்டி இப்பொழுது அழைக்கும் சிறப்புப் பெயரொன்றையும் உடைய நீர், வெள்ளைத் திருநாமம் இட்ட அன்றே - வெண்மையான திரு நாமத்தை நெற்றியில் இட்ட அப்போதே, இமையோர் தெரித்திடு நாமமும் முனிவோர் தரித்திடு நாமமும் கெட்ட அன்றோ - தேவர்கள் என்று தெரிவிக்கும் பெரும் பெயரும் முனிவர்கள் என்று தெரிவிக்கும் பெரும் பெயரும் அழிந்தன அன்றோ?

(வி - ரை.) வைணவச் சின்னம் பூண்டு வீதியிற் பிச்சைக்கு வருகின்ற ஒரு பெண்ணை முன்னிலைப்படுத்திக் காமுகன் ஒருவன் தன் காதலைப் புலப்படுத்திப் பேசுவது கொற்றியார் என்ற உறுப்பின் இலக்கணமாம். உடம்பிற் பல இடங்களில் நாமம் தரித்தலின் அவர்களைக் குறித்துப் பேசும் பேச்சாகிய இச் செய்யுளில் 'நாமம்' என்ற சொல்லைப் பல இடங்களில் அமைத்தது ஒரு பேராற்றல். சிவன் - அடியார்க்கு மங்கலத்தைச் செய்பவன். சங்கரன் - இன்பத்தைச் செய்பவன். அரி - அழிப்பவன். அயன் - திருமாலிடமிருந்து தோன்றியவன். 'இமையோர் தரித்திடு நாமம்' என்பதற்குத், தேவமாதர்கள் கொண்டுள்ள திலோத்தமை முதலிய பெயர்களும் என்க. அன்றோ - ஓ: தேற்றம். இமையாக் கண்ணராதலின் இமையோர் எனப்பட்டனர். தெரித்திடும் என்பது பிறவினை; தெரிவிக்கும் என்பது பொருள். கருநாமம் - பிறப்புத் துன்பத்தால் உண்டாம் அச்சம். தேவர் நாமமும் முனிவோர் நாமமும் கெட்டது என்றது: உம்மைக் கண்டு காதல் கொண்டு பெயரும் பெருமையும் அழிந்தனர் என்ற கருத்து. (கூஇ)

நேரிசை வெண்பா

மும்மைத் தமிழ்க்கூடன் மூலலிங்கத் தங்கயற்க
ணம்மைக் ,கமுதா மருமருந்தை—வெம்மைவினைக்
கள்ளத் திருக்கோயிற் காணலாங் கண்டீர்நம்
முள்ளத் திருக்கோயி லுள்.

(இ - ள்.) மும்மைத் தமிழ்க் கூடல் மூலலிங்கத்து அம் கயல் கண் அம்மைக்கு அமுது ஆம் அரு மருந்தை - (இயல் இசை நாடகம்) என்ற மூவகைத் தமிழும் வழங்கும் மதுரையில் எழுந்தருளிய முதன்மையான திருவடிவமாகிய அழகிய மீனாட்சி யம்மைக்கு அமுதம் போன்ற அருமையான மருந்தாம் பரம சிவனை, நம் உள்ளத் திருக்கோயிலுள் - நமது உள்ளமாகிய அழகிய ஆலயத்தில், வெம்மை வினைக் கள்ளத் திருக்கு ஒயில் காணலாம் - கொடிய தீவினைக்குக் காரணமான வஞ்சனையாகிய மாறுபாடு ஒழிந்தால் பார்க்கலாம்.

(வி - ரை.) மேரு வெள்ளிமலை முதலிய இடங்கள் தோறும் உள்ள எல்லாத் திருவுருவங்களுக்கும் முன்னே தோன்றியதனாலும், அவ் வுருவங்கட்கு எல்லாம் மூலகாரணமாதலாலும் 'மூலலிங்கம்' எனப்பட்டது. ''முளைத்தானை எல்லார்க்கு முன்னே தோன்றி'' என்ற திருநாவுக்கரசு வாக்காலும்,

'' அப்பதி லிங்கம் எல்லாம் அருட்குறி இதனிற் பின்பு
கப்புவிட் டெழுந்த இந்தக் காரண மிரண்டி னாலும்
ஒப்பரி தான ஞான ஒளிதிரண் டான இந்தத்
திப்பிய லிங்கம் மூல லிங்கமாய்ச் சிறக்கு மன்னோ''

என்ற திருவிளையாடற் புராணப் பாடலாலும் மதுரை லிங்கம் மூலலிங்கம் என்பது வலியுறும். திருக்கு - மாறுபாடு. கண்டீர்: தேற்றம்; முன்னிலை அசையுமாம். (௩௬)

கட்டளைக்கலித்துறை

உள்ளும் புறம்புங் கசிந்தூற் றெழநெக் குடைந்துகுதி
கொள்ளுஞ்செந் தேறல் குனிக்கின்ற வாபத்திக் கொத்தரும்ப
விள்ளுங் கமலத்தும் வேத சிரத்தும்விண் மீனமுகந்
தள்ளுங் கொடிமதிற் பொற்கூடல் வெள்ளி யரங்கத்துமே.

(இ - ள்.) உள்ளும் புறம்பும் கசிந்து நெக்கு ஊற்று எழக் குடைந்து குடி கொள்ளும் செந்தேறல் - அடியார்களுடைய மனத்துள்ளும் புறமாகிய உடம்பிலும் கனிந்து நெகிழ்ந்து உடைந்து ஊற்று நீர் போலக் கரைந்து உருகும்படி விளங்குதலைக் கொண்ட சிவந்த தேன் போல் இனிய பரமசிவன், பத்திக் கொத்து அரும்ப விள்ளும் கமலத்தும் வேத சிரத்தும் விண் மீனை முகந்து அள்ளும் கொடி மதில் பொன்கூடல் வெள்ளி அரங்கத்தும் குனிக்கின்றவா - பத்தியாகிய பூங்கொத்துத் தோன்ற மலர்கின்ற தொண்டர்களின் உள்ளத் தாமரையிலும் வேத முடியிலும் ஆகாயத்தில் இலங்குகின்ற நாண் மீன்களை மொண்டு அள்ளிக் கொள்வதுபோல உயர்ந்து தோன்றும் கொடி கட்டிய மதில்களையுடைய அழகிய மதுரையில் உள்ள வெள்ளியம்பலத்திலும் திருக்கூத்தாடும் விதம் என்ன வியப்பு !

(வி - ரை.) உள்ளும் புறம்பும் - அகமும் புறமும். ஊற்று - ஊறுவது. நெக்கு : இறந்தகால வினையெச்சம். நெகு: பகுதி; இங்கு பகுதி இரட்டித்து இறந்தகாலங் காட்டியது. தேறல் - தேன் ; இனிமையான சிவத்துக்கு உவமை : இஃது உவமையாகு பெயர். 'விண்மீனை முகந்து அள்ளுங் கொடி' என்றது மதிலின் உயர்வை விளக்கிற்று. சிவன் அடியார் சிந்தைக் கமலத்தும் மறை முடியிலும் கூடல் வெள்ளி மன்றிலும் குனிக்கின்றனன் என்றபடி. (௩௭)

கட்டளைக்கலிப்பா

மடக்கு

அரங்கு மையற்கு வெள்ளிய ரங்கமே
யால யம்பிற வெள்ளிய ரங்கமே
உரங்கொள் பல்கல னென்பர வாமையே
யுணர்வு ருமையு மென்பர வாமையே
விரும்பு பாடலு மாகவி மானமே
மேவு மானமு மாகவி மானமே
திருந்து தானந் தடமதிற் கூடலே
செயற்கை வெள்ளித் தடமதிற் கூடலே.

(இ - ள்.) ஐபற்கு அரங்கும் வெள்ளி அரங்கமே - சோமசுந்தரப்பெருமானுக்கு நடிக்கும் இடமும் வெள்ளியம்பலமே, ஆலயம் பிற எள்ளியர் அங்கமே - திருக்கோயிலும் கடவுளை

யொழியப் பிறபொருளை இகழ்ந்த அடியார்களது திருவுள்ளமே, உரம் கொள் பல் கலன் என்பு அரவு ஆமையே - திருமார்பில் அணிந்துள்ள பல அணிகளும் எலும்பும் பாம்பும் ஆமையோடுமே யாம், உணர்வு உருமையும் என் பரவாமையே - மெய்யுணர்வை அடையாமைக்குக் காரணம் அக்கடவுளை வழிபடாதிருத்தலே யாம், விரும்பு பாடலும் மானம் மாகவியே - (அக்கடவுள்) விரும்புகின்ற பாட்டும் பெருமையையுடைய சிறந்த கவிகளே, மேவு மானமும் மாகம் விமானமே-விரும்பி வீற்றிருக்கும் விமான மும் வானத்தினின்றும் (இறங்கிய) இந்திர விமானமே, திருந்து தானம் தடம் மதில் கூடலே - திருத்தமாயுள்ள இயற்கை இடம் பெரிய மதிலையுடைய மதுரையே, வெள்ளித் தடமதில் கூடல் செயற்கையே - வெள்ளிமலையில் எழுந்தருளியிருத்தல் செயற் கையேயாம்.

(வி - ரை.) எள்ளியர் : இறந்தகாலப் பலர்பால் வினையா லணையும் பெயர். எள் : பகுதி. பிற - வேறு தேவதைகளின் வணக்கமும் ஐம்புல ஆசைகளும். 'ஆலயம் பிற எள்ளியரங்கமே, என்பதனை இவ்வாசிரியர் காசிக்கலம்பகத்திலும் 'நண்ணும் ஆலயம் மாதவரங்மே' என்று பாடுவதாலும் கருத்து இதுவே. உரம்-உறுதி. திருமால் எடுத்த ஆமைப் பிறப்பின் செருக்கைச் சிவன் விநாயகரைக்கொண்டு அடக்கி அவ்வாமையின் ஓட்டைப் பறித்து மார்பில் அணிந்துகொண்டனர் என்பது வரலாறு. 'உணர்வுருமையும் என்பரவாமையே' என்பதற்கு அக்கடவுள் அறியாததும் எனது வழிபாடின்மையே என்றும் பொருள் கொள்ளலாம். மான மாகவி - திருஞானசம்பந்தர் முதலியவர் அருளிய தேவாரப்பதிகம் போன்றவை. மானம் : விமானம் என்பதன் தலைக்குறை. அங்கம் என்பதை அம்+கம் என்று பிரித்து அழகிய தலை எனக் கொண்டு, பிரமரந்திரம் என் ருயினும் துவாதசாந்தம் என்ருயினும் பொருள் கொள்ளலாம். இது மடக்கு கட்டளைக்கலிப்பா. (௩அ)

விருத்தக் கலித்துறை

கூடார் புரந்தீ மடுக்கின்ற துஞ்சென்று கும்பிட்டவோ
ரேடார் குழற்கோதை யுயிருண்ப தும்மைய ரிளமூரலே
வாடாத செங்கோல் வளர்ப்பீ ரெனக்கன்னி வளநாடெனு
நாடாள மைத்தாளு நகையா தினிப்போடு நகையாடவே.

(இ - ள்.) கூடார் புரம் தீ மடுக்கின்றதும் சென்று கும் பிட்ட ஓர் ஏடு ஆர் குழல் கோதை உயிருண்பதும் ஐயர் இள

மூரலே - தம்மொடு கூடாத பகைவர்களின் திரிபுரத்தைத் தீப் பற்றி எரிய வைத்ததும் தம்மை வந்து வணங்கிய பூ இதழ் நிறைந்த கூந்தலையுடைய ஒரு பெண்ணின் உயிரை உண்பதும் தலைவரான உமது புன்சிரிப்பேயாம், வாடாத செங்கோல் வளர்ப்பீர் என வளம் கன்னி நாடு எனும் நாடு ஆள வைத்தாளும் - குறைதலில்லாத அரசாட்சி முறைமையை நீதி தவறாமல் செவ்வையாக (நீர்) வளரச்செய்வீர் என்று எண்ணி எல்லா வளங்களையும் உடைய பாண்டி நாடென்னும் இந் நாட்டை அரசாளும்படி வைத்த தடாதகைப் பிராட்டியும், நகையாது இனிப்போடு நகை ஆட - சிரிக்காமல் இனிதாயிருக்கும்படி சிரிப்பீராக.

(வி - ரை.) இது செவிலி கூற்று. பாங்கி கூற்றாகவும் கொள்ளலாம். பகைமை கொண்ட திரிபுராசுரரையும் வேட்கை கொண்ட மகளையும் ஒருபடியாகப் புன்சிரிப்பால் உயிர் மாய்ப்பது முறைமையற்றது என்றாள். புரம் - உடம்புமாம். கோதை - பெண்; இடுகுறியாய்ப் பெண்ணிற்குக் கொள்க. இனிப்போடு - இனிமையுடன். நகு : பகுதி. ஆட : அகர ஈற்று வியங்கோள் வினைமுற்று. நகையாட என்பது நகையாடுக என்று பொருள் தந்தது. நாடாள வைத்தாளும் நகையாது இனிப்போடு நகையாட என வினை முடிவு செய்க. (நக)

கோச்சகக்கலிப்பா

நகையே யமையுமிந்த நாகரிக நோக்கு
மிகையே யனங்கன் வினைகொளல்வீ ணன்றே
தகையே மதுரேசன் றண்டமிழ்நா டன்னீர்
பகையே துமக்கு நமக்கும் பகர்வீரே.

(இ - ள்.) மதுரேசன் தண் தமிழ் நாடு அன்னீர் - மதுரைக்குத் தலைவனாகிய சிவபெருமானது குளிர்ச்சியான தமிழ் வழங்கும் பாண்டியநாட்டை ஒத்து இன்பம் தரும் பெண்ணே !, நகையே அமையும் இந்த நாகரிக நோக்கு மிகையே - புன்சிரிப்பு ஒன்றே (என் உயிரைக் கவர்வதற்குப்) போதும் ; புதுமையான உமது பார்வை அதிகமேயாம். அனங்கன் வினை கொளல் வீண் அன்றே - (இவ்விரண்டுங் காணுதென்று) மன்மதனும் போர்த் தொழிலைக் கைக்கொள்வது வீணேயாம். தகையே - (இங்ஙனம் என்னை வருத்துதல் உமக்குத்) தகுதியோ?, உமக்கும் எமக்கும் பகை ஏது பகர் வீர் - உமக்கும் எமக்கும் பகைமை யாது உளது, சொல்வீராக.

(வி - ரை.) நோக்கு: முதனிலைத் தொழிற்பெயர். மிகையே-ஏ: தேற்றம். அனங்கன் - அங்கமில்லாதவன், மன்மதன்; சிவபெருமான் நெற்றிக்கண் நெருப்பால் எரிக்கப்பட்டதால் உடம்பில்லாதவனானன். தகையே - ஏ: வினு; தகுதியன்று என்று எதிர்மறைப் பொருள் தந்தது. இது கொச்சகக் கலிப்பா. (௬0)

கலிவிருத்தம்

வீரம் வைத்தவில் வேள்கணை மெய்த்தன
பாரம் வைத்த பசும்புண் பசும்புணே
ஈரம் வைத்த விளமதி வெண்ணிலாக்
காரம் வைத்த கடம்பவ னேசனே.

(இ - ள்.) ஈரம் வைத்த இளமதி வெண் நிலா காரம் வைத்த கடம்ப வனேசனே! - குளிர்ச்சி பொருந்திய இளஞ்சந்திரனின் வெண்மையான நிலவாகிய காரத்தை (என்மேல்) வைத்த கடம்பங்காட்டிலே எழுந்தருளியுள்ள கடவுளே!, வீரம் வைத்த வில் வேள் கணை மெய்த்தன பாரம் வைத்த பசும்புண் பசும்புணே-வீரம் பொருந்திய விற்போரில் வல்ல மன்மதன் கணைகள் உடம்பிலுள்ள பருத்த கொங்கைகளின்மேல் தைத்ததினலாகிய பச்சைப் புண் பச்சைப் புண்ணுகவேயுள்ளது.

(வி - ரை.) காரம் வைத்தால் புண் குறுகுதல் உலகத்தின் இயல்பன்றே? நீ நிலவாகிய காரத்தை வைத்தும் எனது புண் ஆருமல் மென்மேலும் மிகுவது என்னை என்றுள். இது தலைவி கூற்று. 'வைத்தென்' என்றும் பாடம். இதற்கு வைத்ததனுலென்ன பயன் என்று பொருள் கொள்க. வீரம் வைத்த - என்மேற் கறு வைத்த எனவுமாம். உறைப்பும் கடுமையும் உடையதாதலால் நிலவு புண்ணுக்கு இடும் காரமாகக் குறிக்கப்பட்டது. இளமதி வெண்ணிலாக் காரம் வைத்த எனக் கடவுளின் தொழிலாகக் கூறியது, சிவபெருமான் அருளாலே சந்திரன் குறை தீர்ந்து வளர்தல் பற்றி. (௬௧)

எழுசீர்ச் சந்த விருத்தம்

கடங்கால் பொருப்பொன் றிடும்போர் வைசுற்றுங்
கடம்பா டவிச்சுந் தரரேநுந்
தடந்தோள் குறித்திங் கணைந்தே மெனிற்பின்
றரும்பே றுன்மத்தின் பெருவாழ்வோ

தொடர்ந்தே யுடற்றிந் திரன்சா பமுற்றுந்
துரந்தா லுமிப்பெண் பழிபோமோ
அடைந்தேம் விடக்கொன் றையந்தா ரெவர்க்கென்
றமைந்தே கிடக்கின் றதுதானே.

(இ - ள்.) கடம் கால் பொருப்பு ஒன்று இடும் போர்வை சுற்றும் கடம்பாடவிச் சுந்தரரே - மதநீரைப் பொழிகின்ற மலையாகிய யானை ஒன்று கொடுத்த தோலாகிய போர்வையை உடம்பிலே போர்த்துள்ள கடம்பவனத்தில் எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரக் கடவுளே !, நும் தடம் தோள் குறித்து இங்கு அணைந்தேம் எனில் - உம்முடைய பெரிய திருத்தோள்களைத் தழுவுதலைக் கருதி இங்கே (உம்மிடம்) நாம் வந்து சேர்ந்தோமானல், பின் தரும் பேறு உன்மத்தின் பெரு வாழ்வே - வந்து சேர்ந்த பின்பு எங்களுக்கு நீர் கொடுக்கும் பேறு பயித்தியமாகிய பெரிய வாழ்க்கைதானே ?, தொடர்ந்தே உடற்று - தொடர்ந்து வந்தே வருத்துகின்ற, இந்திரன் சாபம் முற்றும் துரந்தாலும் இப் பெண் பழி போமோ - இந்திரனின் குற்றத்தை நீர் ஒழித்தவரானலும் பெண் கொலையினல் ஆகிய இந்தப் பழி உம்மை விட்டு ஒழியுமோ ?, கொன்றை அம் தார் அடைந்தேம் விட எவர்க்கு என்று தான் அமைந்தே கிடக்கின்றது - உமது அழகிய கொன்றைப் பூமாலை உம்மை அடைந்த எங்களுக்குத் தவிர (பின்னை) யார்க்கென்றுதான் பொருந்தி இருக்கின்றதோ ?

(வி - ரை.) இது தலைவி தலைவனை நோக்கிக் கூறியது. உன்மத்து என்பது உன்மத்தம் என்பதன் விகாரம். இது மன்மத அவத்தைகளுள் ஒன்று. 'பின்தரும் பேறு உன்மத்தின் பெரு வாழ்வோ' என்பதற்கு, நீ எங்கட்கு இறந்த பின்பு தரும் பாக்கியம் உனது பித்தை யாங்களும் அடையச் செய்கின்ற சாருபப் பதவியாகிய பெரு வாழ்க்கையோ என்னும் பொருளாம். விருத்திராசுரனைக் கொன்ற பழி இந்திரனைச் சேர அவன் கடம்பவனம் அடைந்து சோமசுந்தரக் கடவுளை வழிபட அவர் அவன் கொலைக் குற்றத்தைப் போக்கி வாழ்வளித்தனர் என்பது இந்திரன் பழி தீர்த்த படலக் கதை. இந்திரன் பழி போயினும் பெண்ணுகிய தனக்கு விரக வேதனையாலாகும் கொலைப் பழி போகாது என்றபடி. (௬௨)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஊர்

தான வெங்களி ரேடு மிந்திரன் சாப முந்தொலையா
மேனி தந்தகல் யாண சுந்தரர் மேவு வண்பதியாம்
வானி மிர்ந்திட வாடு மொண்கொடி வால சந்திரனுங்
கூனி மிர்ந்திட வேநி மிர்ந்திடு கூடலம்பதியே.

(இ - ள்.) தான வெங்களிரேடும் இந்திரன் சாபமும் தொலையா - மதநீரையுடைய கொடிய ஐராவத யானையின் சாபத்துடனே தேவேந்திரனின் சாபத்தையும் தீர்த்து, மேனி தந்த கல்யாண சுந்தரர் மேவு வண்பதி - நல்ல வடிவத்தைத் தந்த கல்யாண சுந்தரர் என்னும் திருப்பெயர் வாய்ந்த சோம சுந்தரக்கடவுள் திரு உள்ளம் உவந்து எழுந்தருளியிருக்கின்ற வளம் பொருந்திய இடம், வான் நிமிர்ந்திட ஆடும் ஒண் கொடி - மேலுலகத்தை நெருங்கி ஆடும் ஒளிபொருந்திய கொடிகள், வால சந்திரனும் கூன் நிமிர்ந்திடவே நிமிர்ந்திடு கூடல் அம்பதி ஆம் - இளமதியுந் தேய்ந்து தன் வடிவத்தின் வளைவு மாறும்படியாகவே உயர்ந்துள்ள அழகிய மதுரைத் திருநகரம்.

(வி - ரை.) 'மேனி தந்து' என்பது இந்திரனுக்குக் கொலைக் குற்றம் நீங்கத் தெய்வ ஒளி மிக்கு விளங்குவதான உருவத்தையும், ஐராவதத்துக்குக் காட்டானை வடிவத்தை நீக்கி முன்னைய வடிவத்தையும் அளித்ததைக் குறிக்கும். 'வானிமிர்ந்திட' என்பதை வான் இமிர்ந்திட எனப் பிரித்து, மேகங்கள் கொடியைக் கண்டு அஞ்சி அலறிச் செல்ல என்றும் பொருள் கூறலாம். கொடிக்கும் சந்திரனுக்கும் தொடர் பில்லாதிருக்கவும் தொடர் பினைக் கற்பித்தலால், இது தொடர்பு உயர்வு நவிற்சி யணியாம். கூடலம் பதியே சுந்தரர் மேவு வண் பதியாம் என்று இயைக்க. (௬௩)

மருட்பா

கைக்கிளை

அஞ்சேன் மடநெஞ் சபிடேகச் சொக்கரருட்
செஞ்சே வடிக்கடிமை செய்யார்போற்—றுஞ்சா
தெறிதிரைக் கருங்கட லேய்க்கு
மறலியற் கூந்தற் காடமர்க் கண்ணே.

(இ - ள்.) மடநெஞ்சு! அபிடேகச்சொக்கர் அருள் செம் சேவடிக்கு அடிமை செய்யார் போல் - அறியாமையையுடைய மனமே! அபிடேகச் சொக்கநாதரின் (அடியார்கட்கு வீட்டின் பத்தைக் கொடுத்தருள்கின்ற) அழகிய சிவந்த அடிகட்குத் தொண்டு பூண்டு ஒழுகாதவர் போல, துஞ்சாது அஞ்சேல் - ஒரு நிலை கொள்ளாமல் பயப்படாதே, அறல் இயல் கூந்தற்கு ஆடு அமர்க்கண் - கருமணல் போலும் கூந்தலை உடைய இப் பெண்ணுக்கு அசைகின்ற போர் செய்தலையுடைய கண்கள், எறி திரை கருங்கடல் ஏய்க்கும் - மோதுகின்ற அலைகளையுடைய கரிய கடலை ஒக்கும்.

(வி - ரை.) கண்களால் பொதுநோக்கு ஆகிய மருட்பார்வை யையும் காதல் நோக்கு ஆகிய அருட்பார்வையையும் தருதலால் நஞ்சையும் அமுதத்தையும் தந்த கடலை ஒக்கும் என்றதால், தலைவன் தலைவியது குறிப்பை அறிந்து நெஞ்சிற்கு உணர்த்தியது. இஃது உட்கோள் என்னும் துறை. அவள் உடன்பாட்டுக் குறிப்பை அவள் பார்வையால் அறிந்து மகிழ்தல் பயனும். இமைத்தல் செய்கின்ற கண்கள் அலைவீசுகின்ற கடலை ஒக்கும் என்ற கருத்துக் கொண்டால் தலைவன் தலைவியைத் தனியே கண்டவுடனே 'இவள் மானிட மகளோ தெய்வமகளோ' என்று உண்டான ஐயத்தை அவள் கண்ணின் இமையாடுதலை நோக்கித் தெய்வமகள் அல்லள் என்று தலைவன் தெளிந்ததாம். அப்போது துணிவு என்னும் துறையாம். அஞ்சேல்: எதிர் மறை யேவல் வினைமுற்று. நெஞ்சு: அண்மை விளி. துஞ்சாது எறிதிரை என்று எடுத்து, ஓய்வின்றி வீசுகின்ற அலைகளையுடைய என்றலும் ஒன்று. அறலியற் கூந்தல்: அன்மொழித்தொகை. இது, முதல் இரண்டு அடிகளும் வெண்பா அடிகளாய் மற்றைய இரண்டும் ஆசிரிய அடிகளாய் அவற்றுள்ளும் ஈற்றயலடி முச் சீராய் வந்து ஒருதலைக்காமம் உணர்த்தினமையால் கைக்கிளை மருட்பா.

இது நாயக நாயகிகளுள் ஒருவர் உள்ளக் கருத்தை ஒருவர் அறியாத ஒருதலைக் காமமாதலால், கைக்கிளை ஆயிற்று. (௪௯)

கட்டளைக் கலித்துறை

கண்முத் தரும்பின கொங்கைபொன் பூத்த கனிபவளத்
தொண்முத் தரும்புமென் பெண்முத்துக் கேமுத்த முண்டிமயத்
தண்முத் தமைந்த தமனிய மேதலைச் சங்கம்பொங்கும்
பண்முத் தமிழ்க்கொர் பயனே சவுந்தர பாண்டியனே.

(இ - ள்.) இமயம் தண் முத்து அமைந்த தமனியமே!- இமயமலையிற் பிறந்த குளிர்ந்த முத்துப்போன்ற உமாதேவி யார் ஒருபால் பொருந்தப்பெற்ற பொன் போன்றவனே !, தலைச் சங்கம் பொங்கும் பண் முத்தமிழ்க்கு ஓர் பயனே !- முதற் சங்கத்திற் சிறந்த பண் அமைந்த மூவகைத் தமிழ்க்கும் பொருளாக உள்ளவனே!, சவுந்தர பாண்டியனே !, - கண் முத்து அரும்பின கொங்கை பொன் பூத்த - கண்கள் கண்ணீர் துளிக்கப் பெற்றன, நகில்கள் பசலை நிறம் தோன்றப்பெற்றன, கனிபவ ளத்து ஒண் முத்து அரும்பும் என் பெண் முத்துக்கு - கனிந்த பவளம் போன்ற வாயில் ஒள்ளிய முத்துப் போன்ற பற்கள் விளங்கப்பெற்ற சிறந்த என் மகளுக்கு, முத்தமே உண்டு- (உன்னை) விட்டுப் பிரிந்திருத்தலே உளது.

(வி - ரை.) நீ விரைவில் வந்து அணைந்து இவளது பிரிவு நோயைத் தீர்த்தருள வேண்டும் எனச் செவிலி கூறுகின்றாள். முத்தும் பொன்னும் உவமையாகுபெயர். இமயம் - பனிமலை. இமம் - பனி. சிவத்தையும் சக்தியையும் பொன்னும் முத்து மாகச் சொன்னது அவற்றின் சேர்க்கை யமைப்பின் சிறப்பை நோக்கி. தமனியம்-நெருப்பிற் சுடப்படடு விளங்குவது, பொன் 'தமிழ்க்கு ஓர் பயன்' என்றது, சிவபெருமானைப் போற்றிப் புகழ்தலே தமிழுக்குச் சிறப்பு உண்டாயிற்றென்பது. இச்செய்யு ளில் 'முத்து' என்ற சொல் பன்முறை வருவது ஒருவகைச் சமத் காரம். இது நேரசை முதலாக வந்த கட்டளைக் கலித்துறை.

(சுகு)

பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

பாணரு மழலைச் சீறியாழ் மதுரப்
பாடற்குத் தோடுவார் காதும்
பனிமதிக் கொழுந்துக் கவிர்சடைப் பொதும்பும்
பாலித்தாய் பாட்டளி குழைக்குங்
கோணரு வுளைப்பூங் கொத்தலர் குடுமிக்
குறுங்கணெட் டிலைச்சிலை குனித்த
கூற்றுயிர் குடித்தாய்க் காற்றலா மலதென்
கொடியிடைக் காற்றுமா றுளதோ

சேணருப் பசும்பொற் றசும்பசும் பிருக்குஞ்
சிகரியிற் றகரநா றைம்பாற்
சேயரிக் கருங்கட் பசுங்கொடி நுடங்குஞ்
செவ்வியிற் சிறைமயி லகவத்
தூணரு முழவுத் தோண்மடித் தும்பர்
சுவல்பிடித் தணந்துபார்த் துணங்குந்
தோரண மாடக் கூடலிற் சோம
சுந்தரா சந்த்ரசே கரனே.

(இ - ள்.) சேண் அரு பசும் பொன் தசும்பு அசும்பிருக்கும் சிகரியில் சிறை மயில் - உயர்ச்சி நீங்காத பசிய பொன்னால் ஆகிய கலசம் நெகிழ்ந்திருக்கப்பெற்ற மலைபோன்ற மேன்மாளிகையின் மீது தோகையை விரித்த மயில்கள், தகரம் நாறு ஐம்பால் அரி கரும் கண் பசும் கொடி நுடங்கும் செவ்வியின் அகவ - தகரமாகிய மயிர்ச்சாந்து மணம் வீசுகின்ற கூந்தலையுடைய சிவந்த வரிகளையுடைய கரிய கண்களையுடைய பசுமையான பூங்கொடி போன்றவளான ஒரு மங்கை அசைந்தாடுகின்ற தன்மை போலக் கூத்தாட, உம்பர் தூண் அரு முழவு தோள் மடித்து சுவல் பிடித்து அணந்து பார்த்து உணங்கும் தோரணம் மாடக்கூடலிற் சோமசுந்தரா! சந்த்ரசேகரனே! - (அந்நடனத்தைத்) தேவர்கள் தூணின் தன்மை நீங்காத மத்தளம் போலத் திரண்டு உருண்ட தோளை மடித்து வைத்துப் பிடரியைக் கையால் தாங்கிக்கொண்டு அண்ணாந்து நோக்கி வருந்துதற்குக் காரணமான தோரணங்களமைந்த மாளிகைகளையுடைய மதுரையில் எழுந்தருளிய சோமசுந்தரக் கடவுளே? சந்த்ரசேகரனே!. பாண் அரு மழலை சிறு யாழ் மதுரம் பாடற்கு தோடுவார் காதும் பனி மதிக் கொழுந்துக்கு அவிர் சடைப் பொதும்பும் பாலித்தாய் - இசை நீங்காத குதலைமொழி போன்ற சிறிய வீணையின் இசையோடு கூடிய பாடலுக்குத் தோடு அணிந்த நீண்ட காதும் குளிர்ச்சியான இளம்பிறைக்கு விளங்குகின்ற சடையின் பொந்தையும் கொடுத்தருளியவனும், பாட்டு அளி குழைக்கும் சோண் அரு உளைப் பூங்கொத்து அலர் குடுமி குறும் கண் நெடு இலை சிலை குனித்த கூற்று உயிர் குடித்தாய்க்கு ஆற்றலாற் அலது - பாடுகின்ற வண்டுகளால் வளைக்கப்படுகின்ற வளைவு நீங்காத மேலே தூய்மையுடைய பூங்கொத்து மலர்ந்த உச்சியையும் சிறிய கணுக்களையும் நீண்ட இலைகளையும் உடைய கரும்பாகிய வில்லை வளைத்த எமன் போன்ற மன்மதனது

உயிரை உண்டவனும் ஆகிய உனக்குப் பொறுத்திருக்கக் கூடுமே அல்லாமல், என் கொடி இடைக்கு ஆற்றுமாறு உளதோ?- என் மகளாகிய பூங்கொடி போலும் இடையையுடைய இவளுக்குப் பொறுத்தல் கூடுமோ?

(வி - ரை.) வீணையிசைக்குக் காதைக் கொடுத்து இளம் பிறைக்கு முடியைக் கொடுத்துக் காலனுயிரைக் கொள்ளை கொண்ட உனக்கு அவ் வீணையிசை முதலியவற்றான் உண்டாகும் துன்பத்தைப் பொறுத்தல் கூடும். என் மகளுக்குப் பொறுத்தல் கூடுமோ என்று செவிலி தலைவனை நோக்கிக் கூறி விரைந்து வந்து அணைய வேண்டுகின்றாள். இவரே தம் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில், 'பகரும் இசை திசை பரவ இருவர்கள் பயிலும் இயல் தெரி வெள்ளைத் தோட்டினர்' என்றும், காசிக்கலம்பகத்தில், 'பருகும் இன் அமிர்தென உருகிரு கவிஞர்கள் பனுவலின் மதுர இசைக்குக் குழைந்தன' என்றும் கூறுதல் காண்க. கொடியிடை: உவமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழி. சிகரி-சிகரத்தையுடையது என மலைக்குக் காரணக் குறி. தகரம் - சாந்துக்கு ஆகுபெயர். ஐம்பால்: பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; ஐந்து பகுப்புடைய தென்க. (௪௬)

நேரிசை யாசிரியப்பா

கரும்பொறிச் சுரும்பர் செவ்வழி பாடச்
சேயிதழ் விரிக்கும் பொற்பொகுட் டம்புயம்
பாண்மகற் கலர்பொற் பலகை நீட்டுங்
கடவுள்செங் கைக்குப் படியெடுப் பேய்க்குந்
தடமலர்ப் பொய்கைத் தண்டமிழ்க் கூட
லொண்ணுத றழீய கண்ணுதற் கடவு
ளெண்மர் புறந்தரூஉ மொண்பெருந் திசைக்குந்
தூய்மைசெய் தாங்குப் பானிலா விரிந்த
விரசதங் குயின்ற திருமா மன்றகம்
பொன்மலை கிடப்ப வெள்ளிவெற் புகந்தாய்க்குச்
செம்பொன் மன்றினுஞ் சிறந்தன் றாயினுங்
கருந்தாது குயின்றவென் கன்னெஞ் சகத்தும்
வருந்தியும் வழங்கல் வேண்டு
மிருவே றமைந்தநின் னொருபெருங் கூத்தே.

(இ - ள்.) கரும் பொறிச் சுரும்பர் செவ்வழி பாட-கரிய புள்ளிகளையுடைய வண்டுகள் செவ்வழி என்னும் பண்ணைப் பாடாநிற்க, சே இதழ் விரிக்கும் பொன் பொருட்டு அம்புயம் பாண்மகற்கு அலர் பொன் பலகை நீட்டும் கடவுள் செங்கைக்குப் படிஎடுப்பு ஏய்க்கும்-சிவந்த இதழை மலர்த்துகிற கொட்டையை யுடைய பொற்றாமரை மலரானது ஒரு பாணனுக்கு விளங்கு கின்ற பொற்பலகையை நீட்டித்தந்த சோமசுந்தரக் கடவுளின் சிவந்த ஒரு கைக்கு உவமை எடுத்துக்காட்டுதலை ஒத்திருக் கின்ற, தடமலர்ப் பொய்கைத் தண் தமிழ்க்கூடல் ஒண் நுதல் தழீஇய கண் நுதல் கடவுள் - பெரிய மலர்களையுடைய பொற் றாமரைக்குளத்தையுடைய குளிர்ந்த தமிழ் வழங்கும் மதுரை யில் எழுந்தருளியுள்ள மீனாட்சியம்மையைத் தழுவிய நெற்றி யிற் கண்ணையுடைய கடவுளே!, எண்மர் புறந்தரூஉம் ஒண் பெருந் திசைக்கு தூய்மை செய்தாங்கு பால் நிலா விரிந்த இரசதம் குயின்ற திருமா மன்று அகம் - எட்டுத்திக்குப் பாலகர்க ளால் பாதுகாக்கப்படுகின்ற ஒள்ளிய பெரிய எட்டுத் திசை களுக்கும் தூய்மை செய்தாற்போலப் பால்போன்ற வெள்ளிய நிலாப்போன்றருளி வெள்ளியினாலாகிய அழகிய பெரிய அம் பலத்தின் இடம், பொன் மலை கிடப்ப வெள்ளி வெற்பு உகந் தாய்க்கு - பொன் மலையாகிய மேரு சொந்தமாயிருக்கவும் வெள்ளிமலையாகிய கைலாயத்தை விரும்பி நல்லுறையுளாகக் கொண்ட உனக்கு, செம்பொன் மன்றினும் சிறந்தன்று ஆயினும் சிவந்த பொன்னம்பலத்தினும் சிறந்தது அல்ல என்றாலும், கருந்தாது குயின்ற என் நெஞ்சு அகத்தும் - எனது இரும்பு போன்ற வலிய மனத்திடத்தும், இரு வேறு அமைந்த நின் ஒரு பெருங்கூத்து வருந்தியும் வழங்கல் வேண்டும் - வெவ்வேறு வகைப்பட்ட ஆண் உருவமும் பெண் உருவமும் ஆகிய இரண்டு வடிவமும் அமைந்த உன்னுடைய ஒப்பற்ற திருக்கூத்தினை வருத்தப்பட்டாயினும் செய்தருளல் வேண்டும்.

(வி - ரை.) சிறந்த பொன் மலையும் பொன்னம்பலமும் இருக் கையில் அவற்றைச் சிறப்பாகக் கொள்ளாது, வெள்ளிமலையையும் வெள்ளியம்பலத்தையும் சிறப்பாகக்கொண் டெழுந்தருளியிருப் பதுபோல, எல்லாவற்றிலும் இழிவான என்னுடைய இரும்பு போன்ற மனத்திலும் நீ எழுந்தருளி நடம்புரிய வேண்டும் என்றார். சுரும்பு பாடுதல் பாணனது பாட்டுக்கும், சிவந்த பூவிதழ் பொற்பலகைக்கும், தாமரை திருக்கைக்கும் உவமை.

சோமசுந்தரக் கடவுள் தம்மை நாடோறும் அன்புடன் வந்து வழிபாடியற்றிய பாணபத்திரன் பொருட்டு அளித் தனர் பொற்பலகை. இதுவே திருவிளையாடற் போற்றிக் கலிவெண்பாவில், 'பாணனுக்குப் பொற்பலகை தந்த புகழ்

போற்றி' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனைப் பெரியபுராண ஆசிரியரும் திருநீலகண்ட யாழ்ப்பாணனுக்குச் சொக்கநாத சுவாமி பொற்பலகை யிட்டனர் என்று கூறுவர். (சஎ)

நேரிசை வெண்பா

தேத்தந்த கொன்றையான் றெய்வத் தமிழ்க்கூடல்
மாத்தந்த வேழ மதமடங்க—மீத்தந்த
மாகவி மானம் வணங்கினமாற் கூற்றெமைவிட்
டேகவி மானமுனக் கேன்.

(இ - ள்.) *தேன் தந்த கொன்றையான் தெய்வத் தமிழ்க் கூடல் - தேனைச் சொரிகின்ற கொன்றைமலர் மாலையையுடையவனாகிய சிவபெருமானின் தெய்வத்தன்மையையுடைய தமிழ் வழங்கும் மதுரையிலுள்ள, மா தந்தம் வேழம் மதம் அடங்க மீதந்த - பெரிய தந்தங்களையுடைய எட்டு யானைகள் தங்கள் மதம் ஒடுங்கும்படி மேற்கொண்டு சுமந்த, மாகம் விமானம் வணங்கினம் ஆல் - பெரிய வானுலகத்தினின்றும் வந்த இந்திர விமானத்தை யாம் வணங்கினோம் ஆதலால், கூற்று எமை விட்டு ஏகு அவிமானம் உனக்கு ஏன்? - இயமனே! எங்களை விட்டுச் செல்வாயாக, உனக்குச் செருக்கு எதற்காக,* (விட்டுவிடு *என்பதாம்.)*

(வி - ரை.) *தேத்தந்த-தேன் தந்த, ஈறுபோய் வலிமிகுந்தது. தெய்வத் தமிழ் என்றது, பரமசிவனே தானே அகத்தியனார்க்கு அருளியதாதலாலும், தொண்டர்கள் நாயன்மார்கள் கடவுளைத் துதித்ததெல்லாம் இம்மொழியிலேயே யாதலாலும் வடமொழியோ டொப்புமையுடையது இத்தமிழ் மொழி யொன்றே யாதலாலும் என்க. 'வேழ மதமடங்க மீத்தந்த மாக விமானம்' என்றது, 'போரானை முதுகுறைப்பப் பொறையாற்றுஞ் சினகரம்' என்ற அடியோ டொத்தது. 'எவன்' என்ற வினாவினைக் குறிப்பு என் என்று திரிந்தது.* (சஅ)

கட்டளைக் கலித்துறை

ஏனின் றிரங்குதி யேழைநெஞ் சேவண் டிமிர்கடப்பங்
கானின் றதுமொர் கற்பக மேயந்தக் கற்பகத்தின்
பானின்ற பச்சைப் பசுங்கொடி யேமுற்றும் பாலிக்குமாற்
றேனின்ற வைந்தருச் சிந்தா மணியொடத் தேனுவுமே.

(இ - ள்.) *ஏழை நெஞ்சே! ஏன் நின்று இரங்குதி - அறியாமையையுடைய மனமே! என்ன காரணங்கொண்டு*

கவலைப்படுகின்றாய், வண்டு இமிர் கடப்பங்கான் நின்றதுவும் ஓர் கற்பகம் - வண்டுகள் இரைகின்ற கடம்பவனத்தில் நிற்பதும் ஒரு கற்பகமரமே, அந்தக் கற்பத்தின்பால் நின்ற பச்சைப் பசுங் கொடியே - அந்தக் கற்பகதருவின் ஒரு பக்கத்திற் பொருந்திய இளைய பசுமை நிறம் வாய்ந்த கொடிபோன்ற உமாதேவியே, தேன் நின்ற ஐந்தரு சிந்தாமணி ஒடு அத் தேனுவும் முற்றும் பாலிக்கும் - தேன் பொருந்திய ஐந்து தருக்களையும் சிந்தா மணியையும் காமதேனுவையும் எல்லாவற்றையும் (அடியார் கட்குக்) கொடுத்தருள்வள்.

(வி - ரை.) அக் கற்பகத்தையும் காமவல்லியையும் அடைந்து நற்பேறு பெற்ற நீ கொண்டு நிற்கும் இரக்கத்தை நீக்கிக்கொள்வாய் என நெஞ்சிற்கு அறிவுறுத்தியதாம். கடம்பு + கான் - கடப்பங்கான்: மென்றொடர் வன்றொடராயிற்று. இடையில் அம் சாரியை பெற்றது. (சுசு)

தாழிசை

தேன ருதசி லைக்க ரும்புகொ
  லைக்க ரும்பொரு வேம்பெனுந்
தேம்பு யத்தணி வேம்பி னைக்கனி
  தீங்க ரும்பெனு மிவ்வணம்
மான ருதம ழைக்க ணங்கையு
  மாறி யாடத் தொடங்குமான்
மாறி யாடுநின் வல்ல பந்தொழ
  வந்த பேர்க்கும்வ ருங்கொலோ
கான ருதசு ருப்பு நாண்கொள்
  கருப்பு வில்லியைக் காய்ந்தநாட்
கைப்ப தாகைக வர்ந்து கொண்டதொர்
  காட்சி யென்னவெ டுப்பதோர்
மீன ருதவ டற்ப தாகைவி
  டைப்ப தாகை யுடன்கொளும்
வீர சுந்தர மாற மாறடும்
  வெள்ளி யம்பல வாணனே.

(இ - ள்.) கான் அருத சுருப்பு நாண் கொள் கருப்பு வில் லியைக் காய்ந்த நாள் - நன்மணம் விட்டு நீங்காத வண்டுகளின் ஒழுங்காகிய வில் நாணியைக் கொண்ட கரும்பாகிய வில்லை யுடைய மன்மதனை வெகுண்டு எரித்த காலத்தில், கைப்பதாகை

கவர்ந்து கொண்டது ஓர் காட்சி என்ன எடுப்பது ஓர் மீன் அருத அடல் பதாகை - அவன் கையிலுள்ள மீனக்கொடியைப் பறித்துத் தான் கொண்டது ஒரு தன்மைபோல உயரத் தூக்கப் படுவதாகிய ஒரு மீன் நீங்காத வலிமையையுடைய கொடியை, விடைப் பதாகையுடன் கொளும் வீரசுந்தர மாற-ஏற்றுக்கொடியுடனே கொண்டிருக்கின்ற வீரம் அமைந்த சுந்தரபாண்டியனாகிய சோமசுந்தரக்கடவுளே!, மாறு அடும் அம்பலவாணனே-பகைவர்களை அழிக்கின்ற வெள்ளி அம்பலவாணனே!, தேன் அருத சிலைக்கு அரும்பு கொலை கரும்பு ஒரு வேம்பு எனும் - இனிமை நீங்காத மன்மதன் வில்லாகப் பயன்படும் கொல்லையில் தோன்றிய கரும்பை (மிகக் கைப்புடைய) வேம்பு என்று கூறுவாள், தேம்புயத்து அணி வேம்பினை கனி தீங் கரும்பு எனும்!- நின் அழகிய தோளில் அணிந்திருக்கின்ற வேப்பம்பூமாலையை (மிக இனிமை தருதலால்) முதிர்ந்த தித்திப்புள்ள கரும்பு என்பாள், இ வணம் மான் அருத மழைக்கண் நங்கையும் மாறி ஆடத் தொடங்கும் ஆல் - இவ்வாறு மான் பார்வையின் தன்மை நீங்காது மழைபோற் குளிர்ந்த கண்களையுடைய இம்மகளும் மாறி உரையாடத் தொடங்குவாள் ஆதலால், மாறி ஆடும் நின் வல்லபம் தொழ வந்த பேர்க்கும் வருங்கொலோ - மாறி ஆடுகின்ற உனது வல்லமை, உன்னை வணங்குதற்கு வந்தவர்களுக்கும் வருமோ ?

(வி - ரை.) கொலை - கொல்லை என்பது இடை குறைந்து நின்றது. தலைவனைப் பிரிந்து வருந்துவோர்க்கு இனிய பொருள்கள் வெறுப்பாகத் தோன்றுமாதலால், கரும்பை 'வேம்பெனும்' என்றார். வேப்பமாலை விரும்பப் படுவதால் அதனைத், 'தீங்கரும்பெனும்' என்றார். ஆடல் உரையாடலைக் குறித்தது. வாணன் என்பது வாழ்நன் என்பதன் மரூஉ. (௰)

பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வாணிலாப் பரப்பு மகுடகோ டீர
மறிபுனற் கங்கைநங் கைக்கும்
வையமீன் றளித்த மரகதக் கொடிக்குன்
வாமபா கமும்வழங் கினையாற்
பூணுலாங் களபப் புணர்முலை யிவட்குன்
பொற்புயம் வழங்கலை யெமர்போற்
பொதுவினின் றுய்க்கு நடுவின்மை யிடையே
புகுந்தவா றென்கொலோ புகலாய்

தூணுலாம் பசும்பொற் றோரண முகப்பிற்
சூளிகை நெற்றிநின் றிறங்குஞ்
சுரிமுகக் குடக்கூன் வலம்புரிச் சங்கம்
தோன்றலு மூன்றுநா ணிரம்பா
நீணிலா வெனக்கொண் டணங்கனார் வளைக்கை
நெட்டிதழ்க் கமலங்கண் முகிழ்க்கு
நீடுநான் மாடக் கூடலிற் பொலியு
நிமலனே மதுரைநா யகனே.

(இ - ள்.) தூண் உலாம் பசும் பொன் தோரண முகப்பின் சூளிகை நெற்றி நின்று இறங்கும் சுரிமுகம் குடம் கூன் வலம் புரிச் சங்கம் - தூண்கள் பொருந்தி விளங்குகின்ற பசிய பொன்னினால் ஆகிய தோரணங்கட்டிய தலைவாயிலினது முன் இடத்தில் மேல் மாடத்தின் நுனியினின்றும் இறங்கி வருகின்ற சுரிந்த முகத்தையுடைய குடம் போலப் பருத்த பின்புறம் வளைந்துள்ள வலம்புரியாகிய சங்கம், தோன்றலும் மூன்று நாள் நிரம்பா நீள் நிலா எனக்கொண்டு அணங்கு அனார் நெடு இதழ்க் கமலங்கள் முகிழ்க்கும் - காணப்பட்ட அளவில் அச்சங்கினை மூன்று நாள் நிரம்பாத இனி நீண்டு வளரும் தன்மையையுடைய மூன்றாம் பிறை மதி என்று மாறுபட எண்ணித் தெய்வப்பெண் போன்ற இளமகளிரின் வளையணிந்த கைகளாகிய நீண்ட இதழ்களையுடைய தாமரை மலர்கள் குவிகின்ற, நீடு நான்மாடக் கூடலின் பொலியும் நிமலனே மதுரை நாயகனே ! - நீண்ட நான்மாடக் கூடல் என்னும் மதுரையில் எழுந்தருளியுள்ளவனே ! மதுரைக்குத் தலைவனே !, வாள் நிலா பரப்பும் மகுட கோடீரம் மறிபுனல் கங்கை நங்கைக்கும் - ஒளியையுடைய சந்திரகாந்தியைப் பரவச் செய்கின்ற திருமுடியின் சடையை அலை மடங்குகின்ற நீரை உடைய கங்காதேவிக்கும், வையம் ஈன்று அளித்த மரகதக் கொடிக்கு உன் வாமபாகமும் வழங்கினை - உலகங்களை எல்லாம் பெற்றுக் காத்த மரகதமணி மயமாகிய கொடிபோன்ற உமா தேவிக்கு உனது இடது பக்கத்தையும் கொடுத்தருளினாய், பூண் உலாம் களபம் புணர் முலை இவட்கு உன் பொன் புயம் வழங்கலை - ஆபரணங்கள் அசையப் பெற்ற கலவைச்சந்தனம் அணிந்த ஒன்றோடொன்று நெருங்கிய கொங்கைகளையுடைய இவளுக்கு உனது அழகிய தோளைக் கொடுத்தருள்கின்றாயில்லை, எமர் போல் பொதுவில் நின்றாய்க்கு இடையே நடு இன்மை புகுந்த ஆறு என்கொலோ புகலாய் - எம்மவர் போல யாவர்க்கும்

பொதுவாக நின்ற உனக்கு நடுவிலே நடுவு நிலைமை அல்லாத தன்மை வந்து சேர்ந்த விதம் யாதோ சொல்வாயாக!

(வி - ரை.) உன்னை யடைந்த பெண்ணுக்குத் தலையையும், மற்றொரு பெண்ணுக்கு இடப்பாகத்தையும் கொடுத்து இவளுக்குத் தோளைக் கொடாதிருப்பது நடுநிலைமையாகாது. பொதுவில் நின்றவன் ஆகிய உனக்கு இது தகாது என்றாள். பொதுவில் நின்றாய் என்பது, அம்பலத்தில் ஆடுவோன் என்றும், நடுநிலைமையாய் நிற்பவன் என்றும் இருபொருள் தந்து நின்றது. சத்தியின் உதவி கொண்டு சிவன் படைத்தல் முதலிய தொழில்களை ஆற்றலால் "வையமீன் றளித்த" என உமைக்குச் சிறப்புக் கூறினார். உலாவும் என்பது உயிர் மெய் கெட்டு உலாம் என நின்றது. "'செய்யும்' என் னெச்ச வீற்றுயிர்மெய் சேறலும்" என்பது விதி. வலம்புரி - வலப்புறமாகச் சுரிந்தது: வலப்புறமாக முறுக்குடையது. சூளிகை நெற்றியின் நின்று இறங்கி வரும் வெண் சங்கம். மேற்கே தோன்றி இறங்கி வரும் பிறை மதி போலத் தோன்றும் என்றது மயக்கவணியாம். வையை யாற்று வெள்ளத்து அலைகளால் வீசப்பட்ட சங்கம் என அவற்றைக் குறிப்பால் உணர்க. கன்னியர் தமக்குத் தகுதியான கணவன் கிடைப்பது கருதிப் பிறையை வணங்குதல் மரபு. சங்கத்தைப் பிறையென்று கருதிக் கைகுவித்து வணங்குவர் கன்னியர் என்றார். சந்திரனைக் கண்டபோது தாமரை குவிதல் இயல்பு ஆதலின் "கைக் கமலங்கள் முகிழ்க்கும்" என்றார். (௫க)

கட்டளைக் கலிப்பா

மது மலர்க்குழ லாய்பிச்சை யென்றுநம்
  மனைதொ றுந்திரி வார்பிச்சை யிட்டபோ
ததிலொர் பிச்சையுங் கொள்ளார்கொள் கின்றதிங்
  கறிவு நாணுநம் மாவியு மேகொலாம்
பதும நாறும் பலிக்கலத் தூற்றிய
  பச்சி ரத்தம் பழஞ்சோ றெனிற்பினைப்
புதிய துங்நம் முயிர்ப்பலி யேயன்றோ
  பூவை பால்கொள் புழுகுநெய்ச் சொக்கர்க்கே.

(இ - ள்.) மது மலர்க் குழலாய்! பிச்சை என்று நம் மனை தோறும் திரிவார் - தேன் பொருந்திய மலர்களைச் சூடிய கூந்தலை யுடையவளே! எனக்குப் பிச்சை இடுவாயாக என்று சொல்லிக்

கொண்டு நம் வீடுகள்தோறும் அலேகின்றவராகிய சிவபெருமான், பிச்சையிட்டபோது அதில் ஓர் பிச்சையும் கொள்ளார் இங்கு கொள்கின்றது நம் அறிவும் நாணும் ஆவியுமேகொல்ஆம்- பிச்சை போட்டபொழுது அப்பிச்சை ஓட்டில் ஒரு பிச்சையையும் ஏற்றுக்கொள்கின்றாரில்லை; இப்பொழுது அவர் வாங்கிக் கொள்கின்றது நமது அறிவையும் நாணத்தையும் உயிரையுமே போலும், பூவை பால் கொள் புழுகு நெய்ச் சொக்கர்க்குப் பதுமம் நாறும் பலி கலத்து ஊற்றிய பசு இரத்தம் - உமாதேவியைத் தமது இடப்பாகத்திற் கொண்ட புழுகு நெய்ச் சொக்கர் என்னும் திருப்பெயரையுடைய சோமசுந்தரக் கடவுளுக்குத் தாமரை மலரில் தோன்றிய பிரமனது தலையாகிய பிச்சைப் பாத்திரத்தில் முன்னே சொரிந்த (திருமாலின்) பச்சை இரத்தம், பழஞ்சோறு எனின் பின் புதியதும் நம் உயிர்ப்பலியே அன்றோ?- பழைய உணவென்றால் பின்பு புதிய உணவும் நம்முடைய உயிராகிய பிச்சையே அன்றோ?

(வி - ரை.) இது சொக்கரது பிச்சாடனத் திருவிழா நடக்கும்பொழுது அத்திருக்கோலத்தின் காட்சியைக் கண்டு காதல் கொண்டாள் ஒருத்தி தன் தோழியோடு கூறியதாகச் சொல்லப்பட்டது. பூவை - நாகணவாய்ப் பறவை: இஃது உமையைக் குறித்தலால் உவமையாகு பெயர். குழலாய் - குழலாள் என்பதன் விளி. அவரைக் கண்டமாத்திரத்தே காமம் தலைக் கொள்ளுதலால் அறிவு சோர்ந்து நாணம் இழந்து உயிரும் இறக்குங்காலத்தை அடைதலால் இவ்வாறு கூறியது. பசு இரத்தம் - புதிய குருதி. வயிரவர் பிரம கபாலத்துடன் திருமாலிடம் பிச்சைக்கு வந்தபொழுது அவர் தமது தலையை அரிந்து இரத்தம் உதவியும் அப்பாத்திரம் பாதியாயினும் நிரம்பவில்லை என்பது கதை. இது கட்டளைக் கலிப்பா. (கூஉ)

கட்டளைக் கலித்துறை

கிள்ளைவிடு தூது

புழுகுநெய்ச் சொக்க ரபிடேகச் சொக்கர்கர்ப் பூரச்சொக்க
ரழகிய சொக்கர் கடம்ப வனச்சொக்க ரங்கயற்கண்
டழுவிய சங்கத் தமிழ்ச்சொக்க ரென்றென்று சந்ததம்நீ
பழகிய சொற்குப் பயன்றேர்ந்து வாவிங்கென் பைங்கிளியே.

(இ - ள்.) என் பைங்கிளியே! - எனது பச்சைக்கிளியே!, புழுகு நெய்ச் சொக்கர்.........தமிழ்ச் சொக்கர் - புழுகு நெய்ச்

சொக்கர் அபிடேகச் சொக்கர் கர்ப்பூரச் சொக்கர் அழகிய சொக்கர் கடம்பவனச் சொக்கர் அங்கயற்கண்ணம்மையைத் தழுவிய சங்கத்தமிழ்ச் சொக்கர்; என்று என்று சந்ததம் நீ பழகிய சொற்கு பயன் தேர்ந்து இங்கே வா - என்று நான் சொல்லச் சொல்ல எப்பொழுதும் நீ பயின்று வந்த சொல்லுக்குப் பயனைத் தெரிந்து இவ்விடத்தில் மீண்டு வா.

(வி - ரை.) நீ பழகிய சொல்லுக்குப் பயனாகச் சென்று சொக்கநாதரிடம் பேசி எனது வருத்தத்தை அவருக்கு எடுத்துரைத்து வா எனத் தலைவி தலைவனிடம் கிளியைத் தூது விடுத்தனள் எனக் கொள்க. கயற்கண்: உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இங்கு-இவ்விடம். (௫௩)

நேரிசை வெண்பா

பைந்தமிழ்தேர் கூடற் பழியஞ்சி யார்க்கவமே
வந்ததொரு பெண்பழியென் வாழ்த்துகேன்—அந்தோ
அடியிடுமுன் னையர்க் கடுத்தவா கெட்டேன்
கொடியிடமாப் போந்த குறை.

(இ - ள்.) பைந்தமிழ் தேர் கூடல் பழி அஞ்சினார்க்கு அவமே ஒரு பெண் பழி வந்தது என் - புதிய தமிழ் ஆராய்ச்சிக்கு இடமான மதுரையில் எழுந்தருளிய பழிக்கு அஞ்சினவரான சொக்கநாதருக்கு வீணாக இப் பெண் கொலையாலான பழிப்பு வந்துவிட்டது இஃது என்ன!, வாழ்த்துகேன் - (அவர்க்குப் பழி தீருமாறு) வாழ்த்துவேன், அந்தோ ஐயர்க்கு அடி இடு முன் கொடி இடம் ஆ போந்த குறை அடுத்தது - ஐயோ! தலைவர்க்கு (இவ்வூர்க்கு வரப்) புறப்படு முன்னே காக்கை இடப்புறமாக வந்ததனாலான குற்றமே இதற்குக் காரணமாம் (முன்னே) கெட்டேன்.

(வி - ரை.) காக்கை இடம் ஆதல் அபசகுனம். "அடியிடு முன் ஐயர்க்கு அடுத்தவா கொடி யிடமாப் போந்த குறை" என்பதில் தொன்று தொட்டுப் பூங்கொடி போன்ற உமை இடப் பக்கத்திற் பொருந்திய குறையே இஃது என்று மற்றும் ஒரு பொருள் தோன்றுவது காண்க. பாண்டியனுக்கு வந்த பழிக்கு அஞ்சி அதனை நீக்கியவராதலின் அவரை, 'பழியஞ்சினார்' என்றார். திருவிளையாடல் பழியஞ்சிய படலம் காண்க. (௫௪)

தாழிசை

காலம், மடக்கு

குறுமுகைவெண் டளவளவின் மணந்துவக்குங் காலங்
கொழுநரொடு மிளமகளிர் மணந்து வக்குங்கால
மறுகுதொறு நின்றெமர்க ளுருத்திகழுங் காலம்
வரிசிலைகொண் டுருவிலியு முருத்திகழுங் காலஞ்
சிறுமதிநம் பெருமதியி னுகப்படருங் காலந்
தென்றலிளங் கன்றுமுயி ருகப்படருங்காலம்
நிறையினொடு நாணினொடு மகன்றிரியுங் காலம்
நேசர்மது ரேசர்வரை யகன்றிரியுங் காலம்.

(இ - ள்.) வெண் தளவு குறு முகை அளவு இல் மணம் துவக்கும் காலம் - வெண்மையான முல்லைக்கொடிகளின் சிறிய அரும்புகள் அளவில்லாத மணத்தை வீசத் தொடங்குகின்ற காலமும், இளமகளிர் கொழுநரொடும் மணந்து உவக்கும் காலம்- இளம்பருவமுடைய பெண்கள் தங்கள் தலைவர்களுடனே கூடி மகிழுங் காலமும், எமர்கள் மறுகுதொறும் நின்று உருத்து இகழும் காலம்- சுற்றத்தார் தெருக்கள் தோறும் பொருந்தி என்மேற் கோபங்கொண்டு, எம்மை இகழ்ந்து அலர் தூற்றுங் காலமும், உருவிலியும் வரி சிலை கொண்டு உரு திகழுங் காலம் - மன்மதனும் கட்டமைந்த கரும்பு வில்லைக் கையில் எடுத்துக் கொண்டு வடிவுடன் வெளிப்பட்டு விளக்குங் காலமும், சிறு மதி நம் பெருமதியின் உகப்பு அடரும் காலம் - இளம்பிறை நமது பெரிய அறிவின் விருப்பத்தை அழிக்குங் காலமும், தென்றல் இளம் கன்றும் உயிர் உகப் படருங் காலம் - இளந் தென்றற் காற்றும் உயிர் நீங்கும்படி இயங்குங் காலமும், அகன் நிறையினொடும் நாணினொடும் திரியும் காலம் - (எமது) மனம் கற்பொடும் நாணொடும் மாறுபடுங் காலமும், நேசர் மதுரேசர் வரை அகன்று இரியும் காலம் - (நம்) அன்பராகிய மதுரைச் சொக்கநாதர் இம்மலையை விட்டு நீங்கி என்னைப் பிரிந்த காலமே.

(வி - ரை.) கார் காலமும் மாலைக் காலமும் கண்ட தலைவி நான் எங்ஙனம் தலைவனைப் பிரிந்து உயிர் வாழ்வேன் எனக் கூறியது.

எமர்கள் - சுற்றத்தார்கள். உகப்பு: புகர விகுதி பெற்ற தொழிற்பெயர். ''பிள்ளை குழவி கன்றே போத்தெனக் கொள்

ளவு மனையு மோரறி வுயிர்க்கே'' என்னும் சூத்திரத்து 'கொள்ளவும்' என்னும் உம்மையால் 'தென்ற லிளங் கன்று' என்றார். 'நிறையினொடும் நாணினொடும் அகன் திரிதல்' - நிறையையும் நாணையும் மனம் இழத்தல். (௫௫)

நேரிசை வெண்பா

அம்மாநம் மேலன்று பட்ட தருட்கூடற்
பெம்மான்மேற் பட்ட பிரம்படியே—யிம்முறையு
மெம்மேனி காமநோய்க் கீடழிந்த வாவடிகள்
செம்மேனிக் குண்டாங்கொ றீங்கு.

(இ - ள்.) அருள் கூடல் பெம்மான் மேல் பட்ட பிரம்பு அடி - அருளையுடைய மதுரைச் சிவபெருமான்மேலே (அரிமர்த்தன பாண்டியனடித்த) பிரம்பின் அடி, அன்று நம்மேல் பட்டது - அந்நாளில் நம்மேல் பட்டது, எ மேனி காம நோய்க்கு ஈடு அழிந்த ஆ-எனது உடம்பு காமநோய்க்கு வலிமை கெட்டவிதத்தால், இ முறையும் அடிகள் செம்மேனிக்கு தீங்கு உண்டாம் கொல் - இப்பொழுதும் அக்கடவுளின் சிறந்த திருமேனிக்குத் தீமை உண்டாயிருக்குமோ ? (அறிகிலேன்).

(வி - ரை.) அம்மா : விளி. இச்சொல்லை வியப்பிடைச் சொல்லாகவும் கூறலாம். பெம்மான் - பெருமான் என்பதன் மரூஉ. நம்மேல் அன்று பட்டது என்றது, நாம் எடுத்திருந்த உடம்பின்மேற் பட்டது என்றவாறு. அன்று - அரிமர்த்தன பாண்டியனின் கூலியாளாகப் பிட்டுக்கு மண் சுமக்கின்ற காலம், 'உண்டாங்கொல்' என்றதனால் அவரது மேனிக்கும் காமநோய் வருத்தம் உண்டாயிருக்குமானால் அவர் உடனே வந்து அணைந்திருப்பரே என்பது கருத்து. இது தலைவிகூற்று. (௫௬)

கட்டளைக்கலிப்பா

சித்து

குரும்பை வெம்முலை சேர்மது ரேசர்பொற்
கோபு ரத்திற் கொடிகட்டு சித்தர்யாங்
கரும்பை முன்புகல் லானைக் கிடுஞ்சித்தர்
கையிற் செங்கல் பசும்பொன்ன தாக்கினே

மிருந்த வீடும் வறும்பாழ தாமவர்க்
கெடுத்துக் கொட்டிலும் பொன்வேய்ந் திடச்செய்தே
மருந்த னந்நமக் கோதன மேயப்பா
ஆட கத்துமற் றுசையவ் வையர்க்கே.

(இ - ள்.) குரும்பை வெம்முலை சேர் மதுரேசர் பொற்கோபுரத்தில் கொடி கட்டு சித்தர் யாம் - தெங்கின் இளங்காய் போன்ற விரும்பப்படுகின்ற நகில்களையுடைய உமையை ஒருபாற் கொண்ட மதுரைச் சொக்கநாதரின் பொன்னாற் செய்த கோபுரத்தின் மேலே கொடி கட்டவல்ல சித்தி பெற்ற சித்தர் ஆவோம் யாம், கரும்பை முன்பு கல் ஆனைக்கு இடும் சித்தர் கையில் செங்கல் பசும் பொன்னது ஆக்கினேம் - கரும்பை முன்னே கல்லானைக்கு உண்ணும்படி தந்தருளிய சித்தராகிய சோமசுந்தரரது கையிலுள்ள சிவந்த கல்லைப் பசும் பொன்னாகச் செய்தோம், (சிவபெருமானது கையில் வில்லாகவுள்ள சிவந்த மலையாகிய மேருவைப் பொன்னாகச் செய்தோம்), இருந்த வீடும் வறும் பாழது ஆம் அவர்க்கு எருது கொட்டிலும் பொன் வேய்ந்திடச் செய்தோம் - தாம் இருந்த வீடும் நுகரப்படும் பொருள் ஒன்றும் இல்லாத பாழிடமாக்கொண்ட அவர்க்கு எருது கட்டும் கொட்டகையையும் பொன்னால் மேலே கூரை போடச் செய்தோம், (வான் வெளியிடத்தில் இருக்கும் அவர்க்கு எருது ஆகிய திருமால் தங்கும் இடமாகிய திருவரங்கக் கோயிலைப் பொன்னால் வேயும்படி செய்தோம், திருமாலுக்குப் பொருந்திய மனைவியும் இலக்குமியாகப் பொருந்திடச் செய்தோம்), நமக்கு அருந்தனம் ஓதனமே - நமக்கு அரிய பொருளோ சோறேயாம் (உண்ணும் உணவு சோறேயாம்) அப்பா—, அ ஐயர்க்கே ஆடகத்து ஆசை - அந்தத் தலைவர்க்கே பொன்னில் ஆசை உள்ளது (ஆடும் இடமாகிய அம்பலத்தில் ஆசை உள்ளது).

(வி - ரை.) ஒரு சித்தர் தமது திறமையை ஒருவனுக்கு எடுத்துச் சொல்வதாகச் செய்யுள் செய்வது சித்தின் இலக்கணமாம். குரும்பை வெம்முலை : அன்மொழித்தொகை. கல்லானைக்குக் கரும்பு தந்த ஒரு பெருஞ் சித்தர் கையில் இருந்த கல்லைப் பொன் ஆக்கினேம் என்றும் இருக்க வீடில்லாதவர்க்கு அவருடைய எருதுக் கொட்டிலையும் பொன்வேயும்படி செய்தோம் என்றும் தம் சிறப்பைத் தெரிவித்தார். சித்தர் - எண்ணமுடையவர் எனவுமாம். அப்பா - சித்தர்கள் சொல்லும் சொல்முறை. மற்று : அசை. இது கட்டளைக் கலிப்பா. (௭எ)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மடக்கு

ஐய மணிக்கல மென்பணியே
யன்பணி யக்கொள்வ தென்பணியே
மெய்யணி சாந்தமும் வெண்பலியே
வேண்டுவ துங்கொள வெண்பலியே
எய்ய வெடுப்பதோர் செம்மலையே
யேந்தி யெடுப்பதோர் செம்மலையே
வையகம் வாய்த்த வளம்பதியே
வாழ்வது கூடல் வளம்பதியே.

(இ - ள்.) (சோமசுந்தரக் கடவுளர்க்கு) ஐய மணிக்கலம் என்பு அணியே - அழகையுடைய மணிகள் பதிக்கப்பட்ட நகைகள் எலும்பு மாலையேயாம். (அவர்) அன்பு அணியகொள்வது என் பணியே - அன்பு பொருந்த ஏற்றுக்கொள்வது எனது அடிமைத் தொழிலையேயாம், மெய் அணி சாந்தமும் வெண் பலியே- (அவர்) உடலில் அணிந்து கொள்ளும் சந்தனமும் வெள்ளிய திருநீறேயாம், கொள வேண்டுவதும் என் பலியே - (அவர்) வாங்கிக் கொள்ள விரும்புவதும் நினைக்கத் தக்க பிச்சையேயாம், எய்ய எடுப்பது ஓர் செம்மலையே - (அவர் திரிபுர சங்கார காலத்தில்) அம்பை எய்தற்பொருட்டு வில்லாக எடுத்தது சிவந்த மலையே (ஒரு மேருமலை), ஏந்தி எடுப்பது ஓர் செம்மலையே - (அவர் விருப்பத்தோடு) தூக்கி எடுப்பது ஒப்பற்ற முருகக்கடவுள் என்னும் புதல்வரையே, வையகம் வாய்த்தவள் அம் பதியே - (அவர்) உலகங்களையெல்லாம் பெற்ற உமையின் அழகிய கொழுநரேயாவர், வாழ்வது கூடல் வளம் பதியே - (அவர்) எழுந்தருளியிருப்பது எல்லா வளங்களையும் உடைய மதுரை என்னும் திருப்பதியேயாம்.

(வி - ரை.) ஐய - ஐ என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்தது. செம்மல் - உக்கிரகுமார பாண்டியனுமாம். என் பலி - என்னுகிற பிச்சை : வினைத்தொகை. (௩௮)

எண் சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

ஏடார் புண்டரிகத் திளமான் முதுபாட
லெழுதா மறையோடு மிசைமுத் தமிழ்பாடப்
பீடார் கூடல்வளம் பாடா வாடல்செயும்
பெருமான் முன்சென்றுள் சிறுமா னென்சொல்கேன்

பாடா ளம்மனையு நாடா ளெம்மனையும்
பயிலா டண்டலையு முயலாள் வண்டலையு
மாடாண் மஞ்சனமுந் தேடா ளஞ்சனமு
மயிலா ளன்னமுமே துயிலா ளின்னமுமே.

(இ - ள்.) ஏடு ஆர் புண்டரிகத்து இளமான் முதுபாடல் எழுதா மறையோடும் இசை முத்தமிழ் பாட - இதழ்கள் பொருந்திய வெண்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற இளைய மான் போன்ற பார்வையையுடைய கலைமகளின் பழைமையான பாட்டுக்களாகவுள்ள எழுதப்படாத வேதங்களுடனே இசையோடு கூடிய மூவகைத் தமிழ்ப் பாடல்களையும் பாடாநிற்க, பீடு ஆர் கூடல் வளம் பாடா ஆடல் செயும் பெருமான் முன் - பெருமை பொருந்திய மதுரையின் சிறப்பைத் தாம் பாடிக்கொண்டு திருக்கூத்தாடுகின்ற சிவபெருமான் எதிரில், சிறுமான் சென்றுள் என் சொல்கேன் - சிறிய பெண் மான் போன்ற இம்மகள் முன்னொரு காற் போனுள் அதனுல் விளைந்ததை என்ன என்று எடுத்துரைப்பேன்; (அது முதல் இதுவரை) அம்மனையும் பாடாள் எம் மனையும் நாடாள் - அம்மனைப் பாடலையும் பாடமாட்டாள் எந்த வீட்டையும் (விரும்பிச் செல்லுதற்குத்) தேட மாட்டாள், தண்டலையும் பயிலாள் வண்டலையும் முயலாள் - பூஞ்சோலையிலும் போய்ப் பழகமாட்டாள் விளையாட்டுக் களையும் முயன்று செய்யமாட்டாள், மஞ்சனமும் ஆடாள் அஞ்சனமும் நாடாள் - நீராடுதலையும் செய்யமாட்டாள் மையையும் (கண்ணில் இடுவதற்குத்) தேடமாட்டாள், அன்னமும் அயிலாள் துயிலாள் இன்னமும் - சோற்றையும் உண்ணமாட்டாள் இன்னும் உறங்காமல் இருக்கின்ருள்.

(வி - ரை.) இது செவிலி தலைமகளின் வருத்தத்தைக் கூறியது. மான் இரண்டிடத்தும் உவமையாகுபெயர். ஆர்: வினைத்தொகை. ''எம்மனையும்'' என்றது, உயிர்த் தோழிகளின் வீடும் உள்பட என்றவாறு. தண் தலை - குளிர்ந்த சோலை; குளிர்ந்த இடத்தையுடையது எனக் காரணக்குறியாம். (௬௬)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இன்னியந் துவைப்பச் சங்க மேங்கிடச் செழிய ரீன்ற
கன்னியை மணந்தே யன்ருே கன்னிநா டெய்தப் பெற்ருர்
மின்னிவண் முயக்கும் பெற்ருல் வெறுக்கைமற் றிதன்மே
[லுண்டோ
கொன்னியல் குமரி மாடக் கூடலம் பதியு ளார்க்கே.

(இ - ள்.) (சோமசுந்தரக்கடவுள்) இன் இயம் துவைப்ப சங்கம் ஏங்கிட செழியர் ஈன்ற கன்னியை மணந்தே அன்றோ கன்னிநாடு எய்தப் பெற்றார் - இனிய வாத்தியங்கள் முழங்கவும் சங்கங்கள் ஊதவும் மலயத்துவசபாண்டியன் பெற்ற பெண்ணாகிய தடாதகையைத் திருமணஞ் செய்துகொண்டதாலல்லவோ அழிவில்லாத பாண்டிநாட்டை அரசாளும் பேறுபெற்றார், கொன் இயல் குமரி மாடம் கூடல் அம்பதி உளார்க்கு-பெருமை பொருந்திய அழியாத வீடுகளையுடைய அழகிய மதுரைத் திருப்பதியிலுள்ள அச்சுந்தரர்க்கு, மின் இவள் மயக்கும் பெற்றால் இதன்மேல் வெறுக்கை மற்று உண்டோ - மின்னற்கொடி போலும் இவளது சேர்க்கையையும் அடைந்தால் இதனினும் மேற்பட்ட செல்வம் வேறு உளதோ ! (இல்லை என்றபடி.)

(வி - ரை.) இது செவிலி கூற்று. தோழி கூற்றும் ஆம். உத்தம இலக்கணமுடைய சிறந்த பெண்ணை மணஞ்செய்து கொண்டால் வரம்பில்லாத செல்வம் பெருகும் என்பது நூற்றுணிபு. முயக்கு - முயங்கு என்ற தொழிற்பெயரின் திரிபு, வெறுக்கை - செல்வம் : பலராலும் விரும்பப்படும் பொருளுக்கு எதிர்மறை இலக்கணையால் வந்த பெயர். கன்னி - நாடு கன்னியா குமரியையுடைய பாண்டிநாடு எனலும் ஆம். (சுO)

விருத்தக் கலித்துறை

கார்

கேளார் புரஞ்செற்ற வின்ஞரிதோயக் கிளர்ந்துற்றதோர்
தோளாளர் கூடற் பதிக்கேகு முகில்காள் சொலக்கேண்மினோ
வாளாவொர் மின்னுங்கண் மழைசிந்த வென்சொன் மறுத்
[தேகன்மின்
ருளாண்மை யன்றே தளைப்பட்ட வூரிற் றனித்தேகலே.

(இ - ள்.) கேளார் புரம் செற்ற வில் நாரி தோயக் கிளர்ந்துற்றது ஓர் தோளாளர் கூடற் பதிக்கு ஏகு முகில்காள் சொலக் கேண்மினோ-தேவர்கட்குப் பகைவராகிய அசுரர்களின் திரிபுரத்தை அழித்தற்குக் கருவியான மேருமலையாகிய வில்லினது நாணி (ஆதிசேடன்) தன்மேற் பொருந்த எழுந்து உயர்ந்ததாகிய தோள்களையுடைய சோமசுந்தரரின் மதுரைத் திருப்பதிக்குச் செல்கின்ற மேகங்களே நான் சொல்வதைத் கேண்மின்கள், ஓர் மின் வாளா மழை சிந்த என் சொல் மறுத்து ஏகல்மின் - ஒரு மின்னற்கொடிபோன்ற தலைவியும் வீணாகக் கண்ணீர் மழையைப் பொழியும்படி என் சொல்லையும் விலக்கி

(நீங்கள் அங்கே) செல்லாதேயுங்கள், தளைப்பட்ட ஊரில் தனித்து ஏகல் தாளாண்மை அன்றே - (முன்பு ஒரு காலம்) சிறைப்பட்ட ஊரில் (மீண்டும்) தனியே செல்லுதல் நன்முயற்சி யன்று.

(வி - ரை.) கார் காலத்தில் வருவதாகக் காலங்குறித்துப் பிரிந்து சென்ற தலைவன் மீளுகையில் மேகங்களைச் சிறிது தாழ்த்துப்போக வேண்டுவது கார்விடுதூது ஆகும். கேளார் - பகைவர். உக்கிரகுமார பாண்டியன் பொதியமலையில் மேய்ந்த சில மேகங்களை விலங்கிட்டுச் சிறைப்படுத்தினன் என்பது திருவிளையாடற் கதை. (சுக)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இடைச்சியார்

கண்டமுங் காமர் மெய்யுங் கறுத்தவர் வெளுத்த நீற்ற
ரெண்டரு மதுரை யிற்சிற் றிடைச்சிபே ரிடைச்சி யென்பீர்
தொண்டைவா யமுதிட் டென்றன் பாலிங்குத் தோயீர் வாளா
மண்டுமென் னகத்தி லென்னீர் மத்திட்டு மதிக்கின் றீரே.

(இ - ள்.) கண்டமும் காமர் மெய்யும் கறுத்தவர் - கழுத்தும் விரும்பப்படுகின்ற (பாதி யுடம்பும்) கருமை நிறமாயுள்ளவரும், வெளுத்த நீற்றர் எண் தரு மதுரையில் - வெண்ணிறமான திருநீற்றை யுடையவருமான சொக்கநாதரின் (யாவராலும்) எண்ணப்படுகின்ற மதுரையிலுள்ள, சிறு இடைச்சி பேரிடைச்சி என்பீர் - சிறிய இடையையுடையவரே இடைச்சி யென்று சொல்லப்படும் பேர் உடையீரே!, தொண்டை வாய் அமுது இட்டு என் தன்பால் இங்குத் தோயீர் - உமது கொவ்வைப் பழம்போன்ற உதட்டில் அமுதம்போன்ற இனிய இரசத்தைத் தந்து என்னிடம் இங்குக் கூடுவீராக (இப்பொழுது பாலை அமுதிட்டுத் தோய்ப்பீராக), வாளா மண்டும் என் அகத்தில் என் நீர் மத்து இட்டு மதிக்கின்றீர் - சும்மா பொருந்தியுள்ள எனது மனத்தில் நீர் ஏன் மயக்கத்தைச் செய்து கலக்குகின்றீர் (தயிரில்லாமல் வறுமையாகவுள்ள எனது வீட்டில் நீர் ஏன் மத்தை இட்டுக் கடைகின்றீர்,)

(வி - ரை.) தெருவில் தயிர்கொண்டு விற்கும் இடைச்சியை நோக்கிக் காதல் கொண்ட ஒருவிடன் தனது வேட்கையை வெளிப்படுத்தி அவளை முன்னிலைப்படுத்திக் கூறுவது இடைச்சி

யார் என்ற உறுப்பின் இலக்கணம். 'காமர் மெய்யுங் கறுத்தவர்' என்பது, மன்மதன் மெய்யைக் கோபித்து எரித்தவர் என்ற பொருளையும் தரும். கண்டம் கறுத்தது விடமுண்டதனல் என்க. இடைச்சி - பெண்பால். (௬௨)

கட்டளைக்கலித்துறை

ஈர மதிக்கு மிளந்தென் றலுக்குமின் றெய்யுமதன்
கோர மதிக்குங் கொடுங்கோலு மேகொடுங் கோன்மைமுற் றுந்
தீரம திக்குஞ்செங் கோன்மையென் னுஞ்சில தேவர்மதி
சோர மதிக்குங் கடற்றீ விடங்கொண்ட சொக்கருக்கே.

(இ - ள்.) ஈரம் மதிக்கும் இளந்தென்றலுக்கும் இன்று எய்யும் மதன் இக்கும் கொடுங்கோலுமே கோரம் அது - குளிர்ந்த சந்திரனுக்கும் இளமையான தென்றற்காற்றுக்கும் இப்பொழுது மலரரும்புகளை எய்கின்ற மன்மதனது பயங்கர மான கரும்பு வில்லும் கொடிய அம்புமே கொடுந்தன்மையுடை யன, கொடுங்கோன்மை முற்றும் திர மதிக்கும் செங்கோன்மை- கொடுந்தன்மை முழுவதும் நீங்கும்படி மதிக்கும் செங்கோன்மை, சில தேவர் மதி சோர - சில தேவர்கள் (நஞ்சின் கொடுமைக்கு ஆற்ருமல் அறிவு தளர, மதிக்கும் கடல் தீ விடம் கொண்ட சொக்கருக்கு என் ஆம் - (அத்தளர்ச்சியை ஒழிக்கும்படி) கடையப்பட்ட திருப்பாற்கடலினின்றும் தோன்றிய கொடிய நஞ்சை அமுது செய்த சொக்கநாதருக்கு என்ன சிறப்பாகும்?

(வி - ரை.) மன்மதனது குடையும் தேருமாய் என்னை வருத்து கின்ற சந்திரனையும் தென்றலையும் அடைக்காத இவர்க்கு அம் மன்மதனின் வில்லம்புகளின் கொடுமையை வென்ருர் என்னும் புகழ் என்ன சிறப்பை விளைக்கும் என்று தலைவி இரங்கிக் கூறியது. இன்று - இப்பொழுது. கோலுமே : பிரிநிலை. சொக் கருக்குக்கொடுங்கோன்மை முற்றுந்திரமதிக்கும் செங்கோன்மை என்னும் எனக் கூட்டுக. இக்கும் கொடுங்கோலுமே மதிக்கும் தென்றலுக்கும் கோரமது எனப் பொருள் கொள்க. (௬௩)

வஞ்சி விருத்தம்

கரிய கண்டங் கரந்தவோர்
நிருபர் கூடலி னெஞ்சிரே
உருவ மும்பெண் ணுருக்கொலாம்
அருவ மென்பதென் னுவியே.

(இ - ள்.) கரிய கண்டம் கரந்த ஓர் நிருபர் - (நஞ்சுண்டதனால்) கருத்த காளகண்டத்தை மறைத்து வந்த ஒப்பற்ற அரசராகிய சுந்தரபாண்டியரின், கூடலில் பற்று வைத்த நெஞ்சீரே - மதுரையில் பற்றுவைத்த மனமே!, ஆவி உருவமும் பெண் உருகொல் ஆம் - (எனது) உயிரினது வடிவமும் பெண்ணின் வடிவம் போலும், அருவம் என்பது என் - அவ்வுயிரை வடிவமில்லாதது என்று சொல்வது என்ன ?

(வி - ரை.) இது தலைமகளைக் கூடிய தலைமகன் அவளது நலத்தைப் பாராட்டி நெஞ்சிற்கு எடுத்துரைத்தது. பெண்ணின் உருவமே என்னுயிர் எனக் கூறினன், நெஞ்சீர் - நெஞ்சார் என்பதன் விளி. கூடற் பதி போன்ற இன்பமனம் உடையவரே என்று பொருள் கொள்ளின் தலைவன் தலைவியை நோக்கி முன்னிலைப்படுத்துக் கூறியதாம். தலைவன் தான் சேர்ந்த பெண்ணைத் தனது உயிராகக் கூறினன் என்க. இச் செய்யுள் வஞ்சி விருத்தம். (கச)

விருத்தக் கலித்துறை

ஆவா வென்னே தென்னவர் கோற்கன் றணிசாந்தம்
நீவா நின்றாய் நின்றில காமா னலமென்னே
கோவாம் வில்லி கொடுந்தனு வுங்கூ னிமிராதான்
மூவா முதலார் மதுரையி தன்றோ மொழிவாயே.

(இ - ள்.) ஆ ஆ என்னே தென்னவர் கோற்கு அன்று அணி சாந்தம் நீவா நின்றாய் நின்றில காம அனலம் என்னே - அந்தோ! அந்தோ! என்ன தென்னடராகிய பாண்டிய மன்னருக்கு அந்நாளில் (திருஞானசம்பந்த சுவாமிகள்) மேலே அணிந்த திருநீற்றை (நீ இப்பொழுது என் உடம்பின்மேல்) தடவுகின்றாய், தடவியும் (பாண்டியனுடம்பில் ஏற்பட்ட வெப்பு நோய் நீங்கியது போல) காம வெப்பம் நின்றதில்லை, என்னே - இஃது என்ன!, கோ ஆம் வில்லி கொடும் தனுவும் கூன் நிமிராது - தலைவனாகிய வில் வல்லவனான மன்மதனது கொடிய வில்லும் வளைவு நிமிர்ந்ததில்லை (விற்போரில் வல்ல பாண்டிய மன்னனின் வளைந்த முதுகு நிமிர்ந்தது போல), மூவா முதலார் மதுரை இது அன்றோ ? - முடிவில்லாத முதன்மையான பரமசிவனது மதுரை இதுவல்லவா ?. மொழியாய் - காரணம் சொல்வாய்.

(வி - ரை.) இது தலைமகனைப் பிரிந்த தலைவி தோழியை நோக்கிக் கூறியது. காமவிகாரத்துடன் இருந்த தலைவிக்குத்

தோழி திருநீறு பூசினுள், அப்போது கூறியது இது. ஆ ஆ என்னே : வியப்பும் இரக்கமும் காட்டும் இடைச்சொற்கள். மூவா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். காமத்தை அனல் என்றது தான் சேர்ந்த இடத்தை எரித்து அழித்தலால், கூன்பாண்டியனுன நின்றசீர் நெடுமாறனுக்குச் சமணர்கள் இச் செயலால் ஏற்பட்ட வெப்பு நோயைத் திருஞான சம்பந்தர் திரு நீறு தடவிப் போக்கியபின் அவன் புறக்கூனையும் நிமிர்த்தினுர் என்பது திருவிளையாடற் கதை. இச்செய்யுள் விருத்தக் கலித் துறை. (கூரு)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வலைச்சியார்

மொழிக்கய லாகி வேத முடிவினின் முடிந்து நின்ற
வழிக்கய லாகார் கூடல் வலைவாணர் பெருவாழ் வன்னீர்
கழிக்கயல் விற்பீர் மற்றிக் காசினி யேழு முங்கள்
விழிக்கய லுக்கே முற்றும் விலையென்ப விளக்கிட் டீரே.

(இ - ள்.) மொழிக்கு அயல் ஆகி வேதமுடிவினில் முடிந்து நின்ற - சொல்லுக்கு வேருகி மேம்பட்டவராய் மறை முடிவில் முடிந்துள்ள, வழிக்கு அயல் ஆகார் கூடல் வலைவாணர் பெரு வாழ்வு அன்னீர் - வழிக்கு அப்பாற்படாதவராகிய சிவபெருமா னுறையும் மதுரையில் வலைஞர் பெருவாழ்வுபோலப் பிறந்த பெண்ணே !, கழிக்கயல் விற்பீர் இக்காசினி ஏழும் முற்றும் உம் விழிக் கயலுக்கே விலைஎன்ப விளக்கிட்டீர் - உப்பங்கழியிலுள்ள கெண்டைமீனை விற்கின்ற நீர் ஏழு தீவுகளாகிய இப்பூமி முழு வதையும் உம் கண்களாகிய கெண்டை மீனுக்கே விலையாம் என்பதை நன்கு தெரிவித்தீர் போலும். (எல்லாரையும் கண்க ளால் மயக்குகின்றீர் என்றுன்.)

(வி-ரை.) மீன் விற்கும் வலையர் மகளைக் கண்டு காமுற்றுன் ஒருவன் முன்னிலைப்படுத்தி இன்ப வார்த்தை பேசியதாகச் செய்யுள் செய்வது வலைச்சியார் என்னும் உறுப்பின் இலக் கணமாம்.

மொழிக்கு அயலாகி - சொல்லுக்கு எட்டாததாகி என்றபடி. காசினி - பூமி ; பரசுராமனுற் காசிப முனிவர்க்குத் தானஞ் செய்யப்பட்டது. மற்று : அசை, காசினி ஏழ் நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு என்பன. (கூசு)

நேரிசை வெண்பா

விற்கரும்பே யொன்றிதுகேண் மென்கரும்பே யன்னார்தஞ்
சொற்கரும்பே முற்றுமலர் தூற்றுமால்—நற்கரும்பை
ஆளார் கடம்பவனத் தையருமற் றென்னீயும்
வாளா வலர்தூற்று வாய்.

(இ - ள்.) வில் கரும்பே ஒன்று இதுகேள் - மன்மதனது வில்லாகிய கரும்பே! யான்சொல்லும் இவ்வொரு சொல்லைக் கேட்பாயாக, மென் கரும்பே அன்னார் தம் சொற்கரும்பே முற்றும் அலர் தூற்றும்-மென்மையான கரும்பை ஒத்த மகளிரது சொல்லாகிய கரும்பே ஊர் முழுதும் அறியும்படி இவளைப் பழி தூற்றும், கடம்பவனத்து ஐயரும் நல் கரும்பை ஆளார் - கடம்ப வனத்தில் எழுந்தருளியுள்ள தலைவரும் நல்ல கரும்பு போன்ற இத்தலைவியை வந்து கூடுகின்றாரில்லை, என் நீயும் வாளா அலர் தூற்றுவாய் - என்னே நீயும் வீணாக (மலரம்புகளை) இவள் மேற் பொழிகின்றாய்.

(வி - ரை.) இது தோழி கூற்று. மற்று: வினைமாற்று. கரும்பு - இனிமைக்கு உவமை. மென் கரும்பேய் அன்னார் என்று பிரித்து மெல்லிய கரிய பேயை ஒத்தவர் என்றும் பொருள் கூறலாம். சுற்றத்தாருடைய சொற்கரும்பே அலர் தூற்றும் விற்கரும்பே நீ என் அலர் தூற்றுவாய் - எனச் சிலேடைப் பொருளாகக் கூறப்பட்டது. தூற்றும்+ஆல்= தூற்றுமால். ஆல்: அசை. (சுஎ)

கட்டளைக்கலிப்பா

வால விர்த்த குமார னெனச்சில
வடிவு கொண்டுநின் றயென்று வம்பிலே
ஞால நின்னை வியக்கு நயக்குமென்
னடனங் கண்டும் வியவாமை யென்சொல்கேன்
பால லோசன பாநுவி லோசன
பரம லோசன பக்த சகாயமா
கால காலத்ரி சூல கபாலவே
கம்ப சாம்ப கடம்ப வனேசனே.

(இ - ள்.) பால லோசன பாநு விலோசன பரமலோசன பக்த சகாயமா கால கால - நெற்றியில் நெருப்புக் கண்ணுடையவனே! சூரியனாகிய வலக்கண்ணுடையவனே! சந்திரனாகிய இடக்கண்ணுடையவனே! அடியார்கட்குத் துணையாயுள்ளவனே! பெரிய யமனுக்கும் யமனானவனே!, திரிசூல கபால ஏகம்ப சாம்ப கடம்பவனேசனே - மூத்தலைச் சூலப்படையுடையவனே! பிரமகபாலமுடையவனே! ஏகாம்பரநாதனே! உமாதேவியோடு கூடியவனே! கடம்பவனத் தலைவனே!, வால விர்த்த குமாரன் எனச் சில வடிவு கொண்டு நின்றாய் என்று - குழந்தையாகவும் கிழவனாகவும் இளமைப் பருவமுடையவனாகவும் வடிவம் எடுத்து நின்றாய் என்று, ஞாலம் நின்னை வம்பிலே வியக்கும் - உலகத்தவரெல்லாம் உன்னை வீணாக வியந்து போற்றுவார்கள், நயக்கும் என் நடனம் கண்டும் வியவாமை என் சொல்கேன் - சிறந்த எனது நாடகத்தைப் பார்த்தும் வியப்படையாமைக்குக் காரணம் என்ன என்று சொல்லுவேன்?

(வி - ரை.) இங்கே நடனம் என்றது பல நாளாகப் பல பிறப்பெடுத்து அப்பிறப்புக்கள்தோறும் பாலனும் குமாரனும் விருத்தனுமாக நின்று நடித்ததை. என்னை ஆட்கொண்டு பிறப்பொழித்து முத்தியளிக்க வேண்டும் என்பது குறிப்பு. மதுரையில் விக்கிரமபாண்டியன் ஆளுகையில் விருபாக்கன் என்ற அந்தணனுக்குச் சுபவிரதை என்ற மனைவியிருந்தாள். அவள் வயிற்றில் கௌரி என்பவள் பிறந்தாள். அவளைப் பெற்ற தந்தை வைணவப் பிரமசாரிக்கு மணம் முடித்து வைத்தான்: அவள் மாமன் மாமியார் மிகவும் கொடுமையாக அவளை நடத்தலானார்கள். சிவனடியாரைக் கண்டு உபசரிக்க வழி இல்லையே என்று கவலை கொண்டிருந்தாள் கௌரி. அவள் மாமன் மாமியார் வேற்றூருக்குப் போயிருக்கையில் சோமசுந்தரக்கடவுள் விருத்த வேதியனாக வந்தார். பின் இளங்குமரனாகி, மாமன் மாமியார் வரும்போது குழந்தையாகித் தோன்றினார். கௌரியைத் தமது உலகத்திற்கு அழைத்தருளினர் என்பது திருவிளையாடற் புராண வரலாறு. 'பாலன்' என்னும் சொற்குச் சிறந்தவன் என்பதும் பொருள். இறைவன் இடக்கண் உமாதேவியின் கண்ணாதலால் அதனைச் சிறந்த கண் என்றும் கொள்க. பரமசிவன் மார்க்கண்டன் பொருட்டுக் காலனைக் காலால் உதைத்துக் கொன்றனனாதலால் 'கால காலன்' என்ற பெயர் சிவபெருமானுக்கு ஏற்பட்டது. இது கட்டளைக் கலிப்பா. (௬௮)

கலி விருத்தம்

கட்டு வார்குழ லீர்கயற் கண்ணினாட்
கிட்ட மாஞ்சொக்க ரைக்கரை யேற்றினீர்
மட்டில் காம மடுப்படிந் தேற்கென்னே
கொட்டு வீர்பின்னுங் குங்குமச் சேற்றையே.

(இ - ள்.) கட்டு வார் குழலீர் ! - நன்றாக முடித்த நீண்ட கூந்தலையுடைய மகளிரே !, கயல் கண்ணினாட்கு இட்டம் ஆம் சொக்கரைக் கரை ஏற்றினீர் - மீனாட்சியம்மைக்குப் பிரியமாகிய சொக்கநாதரை (நீங்கள் நீர்நிலையினின்று) கரையை அடைவித்தீர்கள், மட்டு இல் காமம் மடு படிந்தேற்கு - அளவில்லாத காமமாகிய மடுவிலே விழுந்து கிடக்கின்ற என்னை (கரை ஏற்றாமல்), பின்னும் குங்குமச் சேற்றைக் கொட்டுவீர் என்னே - மீண்டும் குங்குமச் சாந்தின் குழம்பையே மேலே சொரிகின்றீர்கள், இஃது என்ன நீதி ?

(வி - ரை.) இச்செய்யுள், தெப்பத் திருவிழா முடிந்த பொழுது சோமசுந்தரக் கடவுளது அழகைக் கண்டு காதல் கொண்டாள் ஒரு தலைமகள் தன் தோழியை நோக்கிச் சொல்லியதாகச் செய்யப்பட்டது. சந்தனம் குங்குமம் முதலியவற்றை உடல்மேல் கொட்டினால் அது காமநோய் மிகுவித்து வருத்துமாதலால் காமமடுவிற் படிந்து கரையேற வழியறியாத என்மேல் இன்னும் அழுந்துமாறு சேற்றைக் கொட்டுவது என்ன என்றாள். (௬௧)

நேரிசை வெண்பா

குங்குமச்சே றாடுங் கொடிமாட வீதியில்வெண்
சங்குமொய்க்குஞ் சங்கத் தமிழ்க்கூட—லங்கயற்க
ணம்மையிடங் கொண்டாரை யஞ்சலித்தே மஞ்சலமற்
றிம்மையிடங் கொண்டார்க் கினி.

(இ - ள்.) குங்குமச் சேறு ஆடும் கொடி மாட வீதியில் வெண் சங்கு மொய்க்கும் சங்கத் தமிழ்க் கூடல் - குங்குமக் குழம்பின் சேறு நிரம்பிய கொடிகள் கட்டிய மேல் வீடுகளையுடைய திருவீதியில் வெண்ணிறமான சங்கங்கள் வந்து தவழும் படியான சங்கத்திற் பயின்ற தமிழ் வழங்கும் மதுரையில், அங்கயற்கண் அம்மை இடம் கொண்டாரை அஞ்சலித்தேம் -

அழகிய கயல்மீன் போன்ற கண்களையுடைய மீனாட்சிதேவியை இடதுபாகத்திற் கொண்டிருக்கின்ற சோமசுந்தரக் கடவுளைக் கைகூப்பித் தொழுதோம், இனி இ மையிடம் கொண்டார்க்கு அஞ்சலம் - இனிமேல் எருமைக்கடாவை ஊர்தியாகக்கொண்ட இயமனார்க்குப் பயப்படமாட்டோம்.

(வி - ரை.) குங்குமச் சேறு ஆடும் வீதி - ஒருவர்க்கொருவர் குங்குமக் குழம்பை வீசி விளையாடுதற்கு இடமான வீதி. சங்குகள் சேறுள்ளவிடத்தே பயிலும் தன்மையால் 'சங்கு மொய்க்கும்' என்றார். மதுரையின் செல்வச்சிறப்புக் குறிக்கப் படுகிறது. இது விறுகோளணி. அஞ்சலம் : எதிர்மறைத் தன்மைப் பன்மை வினைமுற்று. மகிஷம் என்னும் வடமொழியின் திரிபாகிய மயிடம் என்பது எதுகை நோக்கி 'மையிட'ம் என நின்றது ; அகர ஐகாரப் போலி இது. (எ0)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மடல்

இன்னீ ரமுதுக் கிடமுங் கடுவுக்
கெழிலார் களனுங் களனு வருளா
நன்னீ ரமுதக் கடலா கியுளார்
நரியைப் பரியாக் கிநடத் தினரா
லந்நீர் மையின்மிக் கென்னீர் மையெனு
வடன்மா வடன்மா வரமா றுசெயா
மைந்நீ ரளகத் திளமா னையன்னீர்
வருவேன் மதுரைத் திருவீ தியிலே.

(இ - ள்.) மைநீர் அளகத்து இள மானை அன்னீர் - அஞ்சனம் போலும் கரிய தன்மையுடைய கூந்தல் பொருந்திய இளைய மானைப்போன்ற மகளிரே !, இன் நீர் அமுதுக்கு இடமும் கடுவுக்கு எழிலார் களனும் களனு அருளா - இனிய தன்மையையுடைய உமாதேவியாகிய அமிருதத்துக்கு இடது பாகத்தையும் நஞ்சுக்கு அழகு அமைந்த கண்டத்தையும் இடமாகக் கொடுத்தருளி, நல் நீர் அமுதம் கடல் ஆகி உளார் நரியைப் பரி ஆக்கி நடத்தினர் - நல்ல தன்மையையுடைய அமிருதமயமான கடல் போல இன்பமயமாயுள்ளவரான சோமசுந்தரக்கடவுள் நரிகளைக் குதிரைகளாக்கிச் செலுத்தினர், அ நீர்மையின் மிக்க என் நீர்மை எனு மடல் மா அடல் மா வர மாறு செயா மதுரைத் திரு

வீதியில் வருவேன் - அத்தெய்வத் தன்மையினும் எனது தன்மை சிறந்தது என்று பனை மடல்கள் பெரிய வலிமையுடைய குதிரையாய் வரும்படி மாற்றி மதுரையின் அழகிய வீதியில் (நாளைக்கு நான் புறப்பட்டு) வருவேன்.

(வி - ரை.) இது தோழிக்குத் தலைமகன் தான் நாணிழந்தமை வெளிப்படையாகத் தோன்றி "யான் நாளை நின் ஊர்த் தெருவில் மடலூர்ந்து வருவேன்" எனக் கூறியது; **மடலேறும் வகை யுரைத்தல்** என்னும் துறை.

களன் - களம் என்பதன் போலி. நரியைப் பரியாக்கியது வாதவூரடிகள் பொருட்டுச் சோமசுந்தரக்கடவுள் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கி அரிமர்த்தன பாண்டியனிடம் கொண்டு வந்து கொடுத்துப் போனபின் நள்ளிரவில் பரிகளாக வந்தவை நரிகளாகி முன் அங்கிருந்த பரிகளையும் கொன்று சென்றன. அரசன் திருவாதவூரரைத் தண்டிக்க மீண்டும் வையையைப் பெருக்கி அரசனுக்கு வாதவூரர் பெருமையையும் ஞானச் சிறப்பையும் விளக்கியருளினர்.

ஒரு விலங்கை மற்றொரு விலங்காக்குவதனினும் ஒரு மரத்தைக் குதிரையாக்குதல் அரியதென்னும் கருத்தினனாய், 'அந் நீர்மையின் மிக்க என்னீர்மை என' என்றான். (எக)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்

திருவைப் புணர்பொற் புயமைப் புயல்கைத்
திகிரிப் படையுய்த் தவர்கூடற்
றருமொய்த் தருமைச் சிறைபெற் றனமுத்
தழிழ்வெற் பமர்பொற் கொடிபோல்வீர்
புருவச் சிலையிற் குழைபட் டுருவப்
பொருகட் கணைதொட் டமராடுஞ்
செருவிற் றொலைவுற் றவரைக் கொலுநற்
சிலைசித் தசர்கைச் சிலைதானே.

(இ - ள்.) *திருவை புணர் பொன் புயம் மைபுயல் கை திகிரி உய்த்தவர் கூடல்* - இலக்குமியைத் தழுவுகின்ற அழகிய தோள்களையுடைய காளமேகம் போன்ற திருமாலின் கையில் சக்கரப் படையைக் கொடுத்தருளியவரான சிவபெருமானது மதுரையிலுள்ள, *தரு மொய்த்து அருமை சிறை பெற்று என முத்தமிழ் வெற்பு அமர் பொற்கொடி போல்வீர்!* - மரங்கள் மேலே

தொடர்ந்திருத்தலால் (பெறுதற்கு) அருமையான இறகுகளை (மீண்டும்) பெற்றாற் போன்ற மூவகைத் தமிழும் வழங்கும் மலையிலே பொருந்தியுள்ள அழகிய பூங்கொடியைப் போன்ற மகளிரே! புருவச்சிலையில் குழைபட்டு உருவ பொரு கண் கணை தொட்டு அமர் ஆடும் செருவில் - புருவமாகிய வில்லிலே காதிலே பட்டு உருவுமாறு பிறழ்கின்ற கண்ணாகிய அம்பைத் தொடுத்து மகளிர் செய்கின்ற போரில் நின்று, தொலைவு அற்றவரைக் கொல்லும் நல் சிலை தானே சித்தசர் கைச்சிலை - நீங்குதல் இல்லாத என்போலியரைக் கொல்லுகின்ற சிறந்த வில்லே மன்மதன் கையில் வைத்திருக்கும் வில்லாம்.

(வி - ரை.) இது தலைவன் கூற்று. தலைமகளை நோக்கியாயினும் தோழியை நோக்கியாயினும் கூறியதாகும். இரண்டாம் அடியில் மரங்கள் மேலே அடர்ந்து நிற்றலால் சிறைக் காவலைப் பெற்றாற்போன்ற மலை என்றுமாம். "குழைபட்டுருவப் பொரு கண்" என்றது காதளவும் நீண்ட கண் என்றவாறு. அம்பை விரைவாக எய்யும்பொழுது அஃது எய்கின்றவனது காது அளவும் சென்று திரும்பும். குழை - காதணி; இது தானியாகு பெயராய்க் காதை உணர்த்தியது. "தொலைவுற்றவர்" என்றும் பாடமுண்டு. சித்தசர் - மனத்தில் நினைத்தமாத்திரத்தில் தோன்றுபவர். வெற்பு - பொதிய மலை. (எஉ)

கட்டளைக்கலித்துறை

சிலைசிலை யாக்கொண்ட தென்மது ரேசர் சிலம்பில்வில்வேண்
மலைசிலை யாக்கொண்ட வாணுத லாய்நின் மருங்குல்சுற்று
மிலைசிலை யாக்கொண் டிளமானை யெய்திடு மிங்கிவர்பூங்
குலைசிலை யாக்கொண் டவர்போலு மாற்செம்மல் கொள்கை
[நன்றே.

(இ - ள்.) சிலை சிலையாக்கொண்ட தென் மதுரேசர் சிலம்பில் வில் வேள் மலை சிலையாக் கொண்ட வாள் நுதலாய்! - மேரு மலையை வில்லாகக் கைக்கொண்ட தென்மதுரைநாதரின் மலையில் மன்மதன் போர் செய்யும் வில்லைக் கொண்டாற் போன்ற ஒளியையுடைய புருவத்தையுடையவளே!, நின் மருங்குல் சுற்றும் இலை சிலை ஆக் கொண்டு - உனது இடையில் உடுக்கப் படுவதாகிய தழையை வில்லாகக் கொண்டு, இளமானை எய்திடும் இங்கு இவர் பூ குலை சிலையாக் கொண்டவர் போலும் - இளைய மானை எய்கின்ற இங்கேயுள்ள இத்தலைவர் பூங்கொத்தை வில்லாகக்கொண்ட மன்மதனுவர் போலும், செம்மல் கொள்கை நன்று - இத்தலைவரின் கொள்கை நன்றாயிருந்தது.

(வி - ரை.) இது பாங்கி தலைவனை நகையாடித் தலைவிக்கு உரைத்தது. தென்மதுரை என்றது, வடமதுரையை விலக்குதற்கு. தென் - அழகுமாம். 'வில் வேள் மலை சிலையாக் கொண்ட வாள் நுதல்' என்பது, தலைமகளது புருவம் மன்மதனது வில்லையொக்கும் என்றும், மன்மதனது விற்போல மிக்க வேட்கையை விளைக்கும் என்றும் கருத்துத் தரும். "நின் மருங்குல் சுற்றும் இலை" என்றது, குறிஞ்சி நிலத்து மகளிர் தழையை ஆடையாக உடுப்பவர் என்பதை உணர்த்தும். குறிஞ்சி நிலத்து மாதரைக் கூடக் கருதிய தலைமகன் கையுறையாகக் கையில் தழையைக் கொண்டு மானைத் துரத்திச் செல்லுதல் மரபு. பூங்குலை சிலையாக் கொண்டவர் என்பது, கல்லைப் பூவாய்க் கொண்டு பூசித்த சாக்கியநாயனாரையும் உணர்த்தும். சாக்கியநாயனார் போல்வர் எனத் தலைவனைக் கூறியதாம். (எக)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பாண்

கொங்குரை யாற்றி லிட்டுக் குளத்தினிற் றேட நீடு
மங்குரேய் முதுகுன் றையர் மதுரையோ மதியில் பாணா
வெங்கையர் மனைக்கண் வைத்தாங் கெம்மிடைத் தேர்தி மற்றம்
மங்கையர் மனம்போ லன்றே மகிழ்நர்தம் வாழ்க்கை தானே.

(இ - ள்.) மதி இல் பாண! - அறிவில்லாத பாணனே!, கொங்கு உரை ஆற்றில் இட்டு குளத்தினில் தேட நீடும் மங்குல் தோய் முது குன்று - மாற்றுயர்ந்த பொன்னை மணிமுத்தா நதியிற் போட்டு (த்திருவாரூர்க் கமலாலயம் என்ற) குளத்தினில் தேடிப்பார்க்க (அங்கே அது) பொருந்தியிருத்தற்குக் காரணமான மேகங்கள் தவழப்பெற்ற முதுகுன்றமே, ஐயர் மதுரையோ-சிவபெருமானது மதுரையோ (அல்ல) (என் கணவனை) ஆங்கு எங்கையர் மனைக்கண் வைத்து எம் இடை தேர்தி - அவ்விடத்தே எம் தங்கையராகிய பரத்தையரது வீட்டில் வைத்து விட்டு எம் இடத்தில் வந்து தேடுகின்றாய், மற்று மகிழ்நர் தம் வாழ்க்கை அ மங்கையர் மனம்போல் அன்றே - மேலும் என் கொழுநரது வாழ்வு அம்மகளிரின் விருப்பம் போல உள்ளதன்றோ?

(வி - ரை.) தலைமகளது கருத்தை அறிந்து வரும்படி தலைவனிடமிருந்து வந்த பாணனைத் தலைவி வெகுண்டு கூறுவது.

தான்: அசை. கொங்குரை - மாற்றுயர்ந்த பொன். உரை - பொன். கொங்கு நாட்டில் வழங்கிய பொன் எனலுமாம். சுந்தரர் மணிமுத்தாற்றிலிட்ட பொன் திருவாரூர்க் கமலாலயத்தில் எடுக்கப்பட்ட வரலாறு பெரிய புராணத்திலுள்ளது. மகிழ்நர் - மகிழ்ந்திருப்பவர்; கணவர், ஆங்கு: சேய்மைச் சுட்டு. (எசு)

நேரிசை வெண்பா

கிள்ளைவிடு தூது

வாழிமடக் கிள்ளாய் மதுரா புரிவாழு
மூழி முதல்வர்க் குருவழிந்தேன்—ஆழியான்
சேய்தொடுத்த வம்போ திரண்முலையுங் கண்மலருந்
தாய்தொடுத்த வம்போ தலை.

(இ - ள்.) *வாழி மடக்கிள்ளாய்!, - இளங்கிளியே வாழ்வாயாக, மதுராபுரி வாழும் ஊழி முதல்வர்க்கு உரு அழிந்தேன் - மதுரையம்பதியில் எழுந்தருளியிருக்கும் ஊழிக்காலத்து முதல்வரான சிவபெருமானைக் கண்டு என் வடிவு மாறிக் காமநோய் கொண்டேன், ஆழியான் சேய் - சக்கரபாணியான திருமாலின் குமரனான மன்மதன், தொடுத்த அம்போ திரள் முலையும் கள் மலரும் - செலுத்திய அம்புகளோ திரண்ட முல்லை மலரும் தேனையுடைய மற்றை மலர்களும் ஆம், தாய் தொடுத்த வம்போ தலை - (என்) தாயானவள் தொடுத்துச் சொல்லும் பழிச் சொல்லோ அவற்றினும் கொடியது.*

(வி - ரை.) *தலைமகள் கிளியை நோக்கிக் கூறியது. பின் இரண்டடியில் மன்மதன் தொடுத்த அம்போ திரண்ட முலையளவும் மலர்போன்ற கண்ணின் அளவுமே; தாய் தொடுத்த வம்போ தலையளவாய் நின்றது என்றொரு பொருளும் தோன்றும். இனி, முலையும் மலருமாகிய மன்மதன் தொடுத்த அம்பையும், தாய் தொடுத்த வம்பையும் நீ தலைமகனிடம் சென்று கூறுகின்றாயில்லை என்பது குறிப்புப் பொருள். திருமாலுக்குத் திருமகளிடம் மன்மதன் தோன்றினன் ஆதலால் ''ஆழியான் சேய்'' என்றார்.* (எரு)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மறம்

தருமுகத்து நிமிர்குடுமி மாடக் கூடற்
சவுந்தரபாண் டியர்குடியாஞ் சமரி லாற்ரு
தொருமுகத்தி லொருகோடி மன்னர்மடிந் தொழிந்தா
ருனைவிடுத்த மன்னவன்யா ருரைத்திடுவாய் தூதா
மருமுகத்த நெறிக்குழலெம் மடக்கொடியை வேட்பான்
மணம்பேசி வரவிடுத்த வார்த்தை சொன்ருய்
திருமுகத்தி லெழுத்திதுவேற் றிருமுடியி லெழுத்துந்
தேர்ந்தறியக் கொண்டுவா சிகையினெடுஞ் சென்றே.

(இ - ள்.) தருமுகத்து நிமிர் குடுமி மாடம் கூடல் சவுந்தர பாண்டியர் குடியாம் - தேவலோகத்திலுள்ள கற்பகத் தருவின் நுனியை அளாவி உயர்ந்த உச்சியையுடைய மாளிகைகள் பொருந்திய மதுரையிலுள்ள சுந்தரபாண்டிய மன்னரின் குலத்திற் பிறந்தவர்கள் நாங்கள், சமரில் ஆற்ருது ஒரு முகத்தில் ஒரு கோடி மன்னர் மடிந்து ஒழிந்தார் - போர்க்களத்தில் எங்களுக்குமுன் நிற்கமாட்டாமல் ஒரே முகமாகப் பல நூற்றுக் கணக்கான மன்னர்கள் இறந்து போனூர்கள்; தூதா உனை விடுத்த மன்னவன் யார் உரைத்திடுவாய் - தூதனே ! (எம்மிடம்) உன்னைத் தூதாக அனுப்புவித்த அரசன் யாவன்; சொல்வாயாக, மரு முகத்த நெறிக்குழல் எம் மடக்கொடியை வேட்பான் மணம் பேசி வர விடுத்த வார்த்தை சொன்ருய் - மணத்தைத் தன்னிடத்தேயுடைய நெறித்தலமைந்த கூந்தலையுடைய எம் இளைய பூங்கொடி போன்றவளை மணஞ்செய்துகொள்ளும் பொருட்டு மணம்பேசி வரும்படி அனுப்பின செய்தியைச் சொன்ருய், திருமுகத்தில் எழுத்து இது ஏல் திருமுடியின் எழுத்தும் தேர்ந்து அறிய சென்று சிகையினொடும் கொண்டுவா - திருமுகத்தில் (ஓலையில்) எழுதியுள்ள எழுத்து இதுவானூல் அழகிய தலையிலுள்ள விதியெழுத்தையும் நாம் ஆராய்ந்தறியும்படி நீ போய்க் குடுமியோடு (பிடித்துத் தள்ளிக்) கொண்டு வருவாயாக.

(வி - ரை.) தம்முடைய மகளை மணம் பேசும்படி ஓர் அரசனூல் அனுப்பப்பட்ட தூதனை நோக்கி மறவர்கள் மணம் மறுத்து அவ்வரசனை இகழ்ந்து பேசியதாகச் செய்யுள் செய்வது மறம் என்னும் உறுப்பின் இலக்கணமாம். சவுந்தரபாண்டியர் குடியாம் என்பதில் சவுந்தரபாண்டியரின் ஆளுகையில் வாழும்

குடிகள் யாம் என்னும் பொருளும் தோன்றும். திருமுகம் - ஓலை : மங்கலமொழி. வேட்பான் : பான் ஈற்று எதிர்கால வினை யெச்சம் ; வேட்பதற்கு எனப் பொருள் தரும். (எசு)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

குறம்

செல்லிட்ட பொழின்மதுரைத் தேவர்மணந் தடாதகா
தேவிக் கன்று
சொல்லிட்ட குறமகள்யான் றும்மலுநல் வரத்தேகாண்
சுளகி லம்மை
நெல்லிட்ட குறிக்குநீ நினைந்ததொரு பொருளதுநித்
திலக்கச் சார்க்கும்
வல்லிட்ட குறியினொடும் வளையிட்ட குறியுளதோர்
வடிவு தானே.

(இ - ள்.) செல் இட்ட பொழில் மதுரை தேவர் மணம் தடாதகாதேவிக்கு அன்று சொல்லிட்ட குறமகள் யான் - மேகங்கள் தங்குகின்ற சோலையையுடைய மதுரைப் பதியிலுள்ள சுந்தரபாண்டியருடைய திருமணத்தைத் தடாதகைப் பிராட்டிக்கு முன்னே அறிந்து குறி சொன்ன குறச்சாதிப்பெண் ஆவேன் நான், தும்மலும் நல்வரத்தே காண் - தும்மலும் நல் வரவாக இருக்கிறது, சுளகில் அம்மை நெல் இட்ட குறிக்கு நீ நினைந்தது ஒரு பொருள் அது - முறத்தில் உன்னுடைய தாய் நெல்லைக் கொணர்ந்து போட்ட குறியை ஆராய்ந்து சொல்லுமிடத்து நீ மனத்தில் பெறக்கருதியது ஒரு பொருள் உள்ளது, நித்திலக் கச்சு ஆர்க்கும் வல் இட்ட குறியினொடும் வளை இட்ட குறி உளது ஓர் வடிவுதான் - முத்துக்களாற் செய்த கச்சினால் இறுக்கிக் கட்டப்பட்ட சூதாடு கருவி போன்ற கொங்கைகள் பட்ட தழும்பாகிய குறியுடன் கைவளையல் பட்டதனாலாகிய தழும்புகளையும் உடைய ஒரு வடிவுதான் அது.

(வி - ரை.) தலைமகனைக்கண்டு காமுற்ற தலைவிக்கு அத்தலைமகனுடைய வடிவைக் குறத்தி குறிதேர்ந்து கூறுவதாகச் செய்யுள் செய்வது குறம் என்னும் உறுப்பின் இலக்கணம். தடாதகைப் பிராட்டிக்குச் சுந்தரபாண்டியர் உன்னை மணஞ் செய்து கொள்வார் என்று முன்னமே குறி சொன்ன குறத்தி யான் என்று தனது சிறப்பை வெளியிட்டனள்.

வரத்து : தொழிற்பெயர், காண் : முன்னிலையசை; தேற்றமு மாம். அம்மே - தாயே எனத் தலைவியை நோக்கிய விளி. வல் உவமையாகுபெயர் ; கொங்கையை உணர்த்தியது. நீ நினைத்த பொருள் பரமசிவம். அஃது அம்பிகையின் முலைத்தழும்பையும் வளைத்தழும்பையும் கொண்ட வடிவம் உடையது என்பது கருத்து. குறச்செய்யுளின் சிறப்பு விரியை இவ்வாசிரியர் பாடியுள்ள 'மீனாட்சியம்மை குறம்' என்ற நூலிற் காணலாம். (எஎ)

விருத்தக்கலித்துறை

வடகலை யலபல கலையொடு தமிழ்வள ருங்கூடல்
விடவர வரையினர் திருமுனி தொருவர்வி ளம்பாரோ
குடதிசை புகையெழ வழலுமிழ் நிலவுகொ ழுந்தோடப்
படவர வெனவெரு வருமொரு தமியள்ப டும்பாடே.

(இ - ள்.) குடதிசை புகை எழ அழல் உமிழ் நிலவு கொழுந்து ஓட - மேற்குத் திசையில் புகைமேல் எழுமாறு நெருப்பைச் சொரிகின்ற இளஞ்சந்திரன் ஒளியை வீச (அதனைக் கண்டு), பட அரவு என வெருவரும் ஒரு தமியள் படும்பாடு - படத்தையுடைய பாம்பு என்று அஞ்சுகின்ற ஒரு தனியளாகிய இத்தலைவி படுகின்ற துன்பத்தை, வடகலை அல பலகலை ஒடு தமிழ் வளரும் கூடல் - வடமொழியும் அல்லாத பல மொழி களும் தமிழ்மொழியும் வளர்தற்கிடமான மதுரையில் எழுந் தருளியுள்ள, விட அரவு அரையினர் முன் இது ஒருவர் விளம் பாரோ - நஞ்சையுடைய பாம்பை அரைநாணாகக் கட்டியுள்ள சிவபெருமான் திருமுன் இதனை எடுத்துரைப்பார் ஒருவரும் இலரோ ?

(வி - ரை.) எவராயினும் சென்று சொல்வராயின், அருட் கடலாகிய அவர் உடனே வந்து அணைந்து துயர் தீர்ப்பர் என் பது கருத்து. மாலைக் காலத்திற் குடதிசையிற் காணப்படு கின்ற இளம் பிறையாகிய அரவுக்கு அஞ்சி இவள் படும் பாட்டை அரவை அடக்கி அணியாக அணிந்தவர் முன் சொன்னால் விரை வில் இவ்வரவையும் அடக்குவர் என்னுங் கருத்தை "விட அர வரையினர்" என்பது உட்கொண்டது. புகை - இருள், அழல் - காந்தி. பலநாட்டுக் குடிகளும் மதுரையில் வாழ்தலால் பல வேறுமொழிக் கலைகளும் தமிழும் வளருங் கூடல் என்றார். வெருவரும் என்பதற்கு, வெருவா: முதனிலை. (எஅ)

தான் : அசை. கொங்குரை - மாற்றுயர்ந்த பொன். உரை - பொன். கொங்கு நாட்டில் வழங்கிய பொன் எனலுமாம். சுந்தரர் மணிமுத்தாற்றிலிட்ட பொன் திருவாரூர்க் கமலாலயத்தில் எடுக்கப்பட்ட வரலாறு பெரிய புராணத்திலுள்ளது. மகிழ்நர் - மகிழ்ந்திருப்பவர் ; கணவர், ஆங்கு : சேய்மைச் சுட்டு. (எ௬)

நேரிசை வெண்பா

கிள்ளைவிடு தூது

வாழிமடக் கிள்ளாய் மதுரா புரிவாழு
மூழி முதல்வர்க் குருவழிந்தேன்—ஆழியான்
சேய்தொடுத்த வம்போ திரண்முலையுங் கண்மலருந்
தாய்தொடுத்த வம்போ தலை.

(இ - ள்.) வாழி மடக்கிள்ளாய் !, - இளங்கிளியே வாழ்வாயாக, மதுராபுரி வாழும் ஊழி முதல்வர்க்கு உரு அழிந்தேன் - மதுரையம்பதியில் எழுந்தருளியிருக்கும் ஊழிக்காலத்து முதல்வரான சிவபெருமானைக் கண்டு என் வடிவு மாறிக் காமநோய் கொண்டேன், ஆழியான் சேய் - சக்கரபாணியான திருமாலின் குமரனான மன்மதன், தொடுத்த அம்போ திரள் முலையும் கள் மலரும் - செலுத்திய அம்புகளோ திரண்ட முலை மலரும் தேனையுடைய மற்றை மலர்களும் ஆம், தாய் தொடுத்த வம்போ தலை - (என்) தாயானவள் தொடுத்துச் சொல்லும் பழிச் சொல்லோ அவற்றினும் கொடியது.

(வி - ரை.) தலைமகள் கிளியை நோக்கிக் கூறியது. பின் இரண்டடியில் மன்மதன் தொடுத்த அம்போ திரண்ட முலையளவும் மலர்போன்ற கண்ணின் அளவுமே ; தாய் தொடுத்த வம்போ தலையளவாய் நின்றது என்றொரு பொருளும் தோன்றும். இனி, முலையும் மலருமாகிய மன்மதன் தொடுத்த அம்பையும், தாய் தொடுத்த வம்பையும் நீ தலைமகனிடம் சென்று கூறுகின்றாயில்லை என்பது குறிப்புப் பொருள். திருமாலுக்குத் திருமகளிடம் மன்மதன் தோன்றினன் ஆதலால் ''ஆழியான் சேய்'' என்றார். (எ௭)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மறம்

தருமுகத்து நிமிர்குடுமி மாடக் கூடற்
 சவுந்தரபாண் டியர்குடியாஞ் சமரி லாற்று
தொருமுகத்தி லொருகோடி மன்னர்மடிந் தொழிந்தா
 ருனைவிடுத்த மன்னவன்யா ருரைத்திடுவாய் தூதா
மருமுகத்த நெறிக்குழலெம் மடக்கொடியை வேட்பான்
 மணம்பேசி வரவிடுத்த வார்த்தை சொன்னாய்
திருமுகத்தி லெழுத்திதுவேற் றிருமுடியி லெழுத்துந்
 தேர்ந்தறியக் கொண்டுவா சிகையினொடுஞ் சென்றே.

(இ - ள்.) தருமுகத்து நிமிர் குடுமி மாடம் கூடல் சவுந்தர பாண்டியர் குடியாம் - தேவலோகத்திலுள்ள கற்பகத் தருவின் நுனியை அளாவி உயர்ந்த உச்சியையுடைய மாளிகைகள் பொருந்திய மதுரையிலுள்ள சுந்தரபாண்டிய மன்னரின் குலத் திற் பிறந்தவர்கள் நாங்கள், சமரில் ஆற்றுது ஒரு முகத்தில் ஒரு கோடி மன்னர் மடிந்து ஒழிந்தார் - போர்க்களத்தில் எங்க ளுக்குமுன் நிற்கமாட்டாமல் ஒரே முகமாகப் பல நூற்றுக் கணக்கான மன்னர்கள் இறந்து போனார்கள்; தூதா உனை விடுத்த மன்னவன் யார் உரைத்திடுவாய் - தூதனே ! (எம்மிடம்) உன்னைத் தூதாக அனுப்புவித்த அரசன் யாவன்; சொல்வாயாக, மரு முகத்த நெறிக்குழல் எம் மடக்கொடியை வேட்பான் மணம் பேசி வர விடுத்த வார்த்தை சொன்னாய் - மணத்தைத் தன் னிடத்தேயுடைய நெறித்தலமைந்த கூந்தலையுடைய எம் இளைய பூங்கொடி போன்றவளை மணஞ்செய்துகொள்ளும் பொருட்டு மணம்பேசி வரும்படி அனுப்பின செய்தியைச் சொன்னாய், திரு முகத்தில் எழுத்து இது ஏல் திருமுடியின் எழுத்தும் தேர்ந்து அறிய சென்று சிகையினொடும் கொண்டுவா - திருமுகத்தில் (ஓலையில்) எழுதியுள்ள எழுத்து இதுவானால் அழகிய தலையி லுள்ள விதியெழுத்தையும் நாம் ஆராய்ந்தறியும்படி நீ போய்க் குடுமியோடு (பிடித்துத் தள்ளிக்) கொண்டு வருவாயாக.

(வி - ரை.) தம்முடைய மகளை மணம் பேசும்படி ஓர் அரசனால் அனுப்பப்பட்ட தூதனை நோக்கி மறவர்கள் மணம் மறுத்து அவ்வரசனை இகழ்ந்து பேசியதாகச் செய்யுள் செய்வது மறம் என்னும் உறுப்பின் இலக்கணமாம். சவுந்தரபாண்டியர் குடியாம் என்பதில் சவுந்தரபாண்டியரின் ஆளுகையில் வாழும்

கட்டளைக்கலித்துறை

பாட்டுக் குருகுந் தமிழ்ச்சொக்க நாதர் பணைப்புயமே
வேட்டுக் குருகுமெய்ந் நாணும்விட் டாள்வண்டு மென் [கிளியும்
பேட்டுக் குருகும்விட் டாளென்செய் வாளனல் பெய்யுமிரு
கோட்டுக் குருகு மதிக்கொழுந் துக்கென் குலக்கொழுந்தே.

(இ - ள்.) என் குலக் கொழுந்து - என்னுடைய நற்குடியிற் பிறந்த கொழுந்து போன்ற என் மகள், பாட்டுக்கு உருகும் தமிழ்ச் சொக்கநாதர் பணை புயமே வேட்டு - தமிழ்ப்பாட்டுக்குத் திருவுளம் கனிகின்ற சொக்கநாத சுவாமியின் பருத்த தோள்களையே விரும்பி, குருகும் மெய் நாணும் விட்டாள் - கைவளையலையும் தனக்கு இயல்பாயுள்ள நாணத்தையும் இழந்தாள், வண்டும் மென் கிளியும் பேடு குருகும் விட்டாள் - வண்டையும் மென்மையான கிளியையும் நாரைப் பெடையையும் (அவர் பால்) தூது விடுத்தனள், அனல் பெய்யும் இரு கோடு குருகு மதிக் கொழுந்துக்கு என் செய்வாள்-நெருப்பைச் சொரிகின்ற இரண்டு நுனிகளையுடைய வெண்மையான இளஞ்சந்திரன் பொழியும் நிலவுக்கு என்ன செய்வாள் ? (மிகவும் வருந்துவாள் என்றபடி.)

(வி - ரை.) பேடு என்பதை வண்டு கிளி என்பவற்றோடும் கூட்டுக. குருகு - நாரை, வேட்டு: வேள் என்னும் பகுதியடியாகப் பிறந்த இறந்தகால வினையெச்சம். (எகூ)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரியச் சந்தவிருத்தம்

மேகவிடு தூது

ஏமவெற் பென்று கயி லாயவெற்பென் றுமல
யாசலத் தென்று முறைவார்
கோமகட் கன்பர்மது ரேசர்முச் சங்கம்வளர்
கூடலிற் சென்றுபுகலீர்
தாமரைக் கண்டுயிலு மாலெனச் சந்தமலி
சாரலிற் றுஞ்சு முகில்காண்
மாமதிப் பிஞ்சுமிரை தேர்குயிற் குஞ்சுமுயிர்
வாய்மடுத் துண்டொழிவதே.

(இ - ள்.) *தாமரை கண் துயிலும் மால் என சந்தம் மலி சாரலில் துஞ்சும் முகில்காள் !,* செந்தாமரை மலர்போன்ற திருக்கண் வளர்கின்ற திருமால் போலச் சந்தன மரங்கள்

நிறைந்த (பொதிய மலையின்) பக்கங்களிலே தங்கியிருக்கின்ற மேகங்களே!, மாமதி பிஞ்சும் இரை தேர் குயில் குஞ்சும் உயிர் வாய் மடுத்து உண்டு ஒழிவது - அழகிய இளமதியும் இரையைத் தேடுகின்ற குயிற்குஞ்சும் (எனது) உயிரை வாயினுட்கொண்டு புசிக்க நான் ஒழிவதை, ஏம வெற்பு என்றும் கைலாய வெற்பு என்றும் மலையாசலத்து என்றும் உறைவார் - பொன் மயமான மேரு மலையிலும் வெள்ளி மயமான கைலாய மலையிலும் பொதிய மலையிலும் எழுந்தருளியிருப்பவரும், கோமகட்கு அன்பர் மதுரேசர் - மலையத்துவச பாண்டியன் மகளான தடாதகைப்பிராட்டியின் கணவரும் மதுரையில் (எழுந்தருளியிருக்கும்) சிவபெருமானுக்கு முச்சங்கம் வளர் கூடலில் சென்று புகலிர் - தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என்ற மூன்று தமிழ்ச்சங்கங்களும் வளர்ந்த மதுரையிற் போய்ச் சொல்வீர்களாக.

(வி - ரை.) தலைவனைப் பிரிந்த தலைவி அத்தலைவனிடம் மேகங்களைத் தூது விடுத்தது. என்று என்பன மூன்றும் எண் இடைச்சொற்கள். முன் உள்ள "என்று' என்பது உம்மை தொக்குநின்றது. உறைவார்: பரமசிவன். இவர் கைலையில் தமக்கு நடைபெற்ற திருமணக்கோலத்தைக் காணக்கூடிய கணங்களின் கூட்டப்பெருக்கால் வடதிசை தாழ்ந்து தென் திசை உயர்ந்தபொழுது அதனைச் சமப்படுத்தத் தம்போன்ற அகத்திய முனிவரைப் பொதியமலையிற் சென்று இருக்கக் கட்டளையிட்டார். அப்பொழுது காட்சி காணுக் குறைபற்றி வருந்திய முனிவர்க்குப் பொதியமலையில் வந்து மணக்கோலக் காட்சி கொடுத்தருளினர் ஆதலின் "மலயா சலத்தென்றுமுறைவார்" எனப்பட்டது. அசலம் - மலை; அசைவற்றது. முச்சங்கம் என்பதை - வெற்றிச்சங்கு, மன்றற்சங்கு, கொடைச்சங்கு என்ற மூன்று சங்குகள் என்றும் பொருள் கொள்ளலாம். புகலீர்: ஏவற்பன்மை வினைமுற்று. மால் - மேகத்துக்குக் கருநிறத்தால் உவமை. முகில்காள்: முகில்கள் என்பதன் விளி. சந்திர காந்தியும் குயில் கூவும் குரலும் காமத்தை மிகுவித்து வருத்தத்தை விளைக்கும் எனக் காண்க. (அ0)

மேற்படி வேறு

சம்பிரதம்

மட்டறுக டற்புவிய னைத்துமொரி மைப்பினின்ம
றைத்துடன்வி டுத்தி டுவன்மற்
றெட்டுவரை யைக்கடலை முட்டியுள டக்கிடுவ
னித்தனையும் வித்தை யலவாற்

றுட்டமத னைப்பொடிப டுத்திமது ரைக்குளுறை
சொக்கர்குண மெட்டி னெடுமா
சிட்டர்கடு தித்திடும கத்துவம னைத்துமொரு
செப்பினு ளடக்கி டுவனே.

(இ - ள்.) மட்டு அறு கடல் புவி அனைத்தும் ஓர் இமைப்பினில் மறைத்து உடன் விடுத்திடுவன் - அளவில்லாத கடலாற் சூழப்பட்ட உலக முழுவதையும் ஒரு நொடிப்பொழுதினுள்ளே மறையச் செய்து மீண்டும் காட்டிவிடுவேன், மற்று எட்டு வரையை கடலை முட்டியுள் அடக்கிடுவன் - இன்னும் எட்டாகிய குலமலைகளையும் கடல்களையும் ஒரு கை மடிப்பினுள்ளே அடக்கி விடுவேன், இத்தனையும் ஒரு வித்தை அல-இவ்வளவும் (எங்கள் திறமைக்கு ஒரு பெரிய) வித்தை அல்ல, துட்ட மதனைப் பொடி படுத்தி மதுரைக்குள் உறை சொக்கர் குணம் எட்டினெடு மா சிட்டர்கள் துதித்திடும் மகத்துவம் அனைத்தும் ஒரு செப்பினுள் அடக்கிடுவன்-கொடிய மன்மதனைச் சாம்பலாக எரித்து மதுரையில் எழுந்தருளியுள்ள சொக்கநாதருடைய எட்டுத் திருக்குணங்களுடன் பெரிய அடியார்கள் துதிசெய்கின்ற மகிமை அனைத்தையும் ஒரு சிமிழினுள்ளே அடக்கிவிடுவேன்.

(வி - ரை.) இச்செய்யுளில் முதலடியில் கடல் சூழ்ந்த பூமி முழுவதையும் கண் இமைக்கும்போது மறையச்செய்து கண் விழிக்கும்போது தெரியச்செய்வேன் என்றும், இரண்டாம் அடியில் (எள் + துவரையை + கடலை) எள்ளையும் துவரையையும் கடலையும் சிறு கலசத்தில் அடக்கி விடுவேன் என்றும், மூன்று நான்காம் அடிகளில் சொக்கநாதருடைய எட்டுக்குணங்களோடுங் கூடிய சிறப்பு முழுவதையும் ஒரு சொல்லிலே அடக்கி விடுவேன் என்றும் பொருள் தோன்றும்.

சொல்-ஐந்தெழுத்தாகிய "சிவயநம" எனக் கொள்ளலாம். துட்டன் - கொடிய குணமுள்ளவன். சிட்டர் - நற்பண்புடையோர். குணம் எட்டு - தன்வயத்தனுதல் முதலியன. ஆல்: ஈற்றசை. ஈற்றேகாரம் - தேற்றம். (அக)

நேரிசை வெண்பா

அடுத்த பதஞ்சலியா ரஞ்சலியா நிற்ப
எடுத்த பதஞ்சலியா ரேனுந்—தடுத்தவற்கா
மாறிக் குனித்தார் மலைகுனித்தென் மாமதனுர்
சீறிக் குனித்தார் சிலை.

(இ - ள்.) அடுத்த பதஞ்சலியார் அஞ்சலியா நிற்ப — (தம்மைச் சரணமாக) அடைந்த பதஞ்சாலி முனிவர் கைகூப்பித் தொழுது நிற்க, எடுத்த பதம் சலியார் ஏனும் - தூக்கிய திரு அடி மாறி அசையாமல் திருக்கூத்தாடியருளினாராயினும், தடுத்தவற்கு ஆ - தடுத்த ராசசேகரபாண்டியனுக்காக, மாறிக் குனித்தார் - கால் மாறி நடித்தார் ஆகிய சோமசுந்தரக்கடவுள். மலை குனித்து என் - மேருமலையை வில்லாக வளைத்ததனால் பயன் என்னவோ? மாமதனார் சிறி சிலை குனித்தார்-வலிய மன்மதனார் சினந்து தம் (கரும்பு வில்லை வளைத்து) அம்பு தொடுத்தார்.

(வி - ரை.) "தடுத்தவற்கா மாறிக் குனித்தார்" என்பது இராசசேகர பாண்டியன் வேண்டுகோட்கிசைந்து இடக்கா லூன்றி வலக்கால் உயர்த்துக் கூத்தாடி மகிழ்வித்தார் என்பதை விளக்கும். திருவிளையாடல் கால் மாறி யாடிய படலம் காண்க. சிவபெருமான்மேற் காதல் கொண்ட தலைவி மலையைச் சிலையாக வளைத்தவர் மன்மதனைச் சிலை வளைக்காமற் செய்ய முடியாதா? அவ்வாறு செய்தால் என் துயர் நீங்குமே என்று குறிப்பாக நினைந்து தோழியிடம் கூறினள் எனக் கொள்க. (அஉ)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

சிலையோ கரும்புபொரு கணையோ வரும்புசிவ
சிவவாவி யொன்று முளதோ
விலையோ வறிந்திலமிம் மதனுண்மை யென்புகல்வ
திதுவே தவம்பி றிதெனு
முலையே யணிந்தமுகிழ் நகையீரோர் பெண்கொடியின்
முலையோடு முன்கை வளையான்
மலையே குழைந்திடுதம் மிருதோள் குழைந்துறைநம்
மதுரேசர் தந்த வரமே.

(இ - ள்.) முலையே அணிந்த முகிழ் நகையீர்!-முல்லை அரும்பு களையே ஒத்துத் தோன்றுகின்ற பற்களையுடைய மகளிரே!, சிலையோ கரும்பு ஆம் - மன்மதனுடைய வில்லோ கரும்பாம், பொரு கணையோ அரும்பு-போர் செய்கின்ற அம்புகளோ அரும்பாம், சிவ சிவ ஆவி ஒன்றும் உளதோ - ஆ ஆ மன்மதனுக்கு உயிரொன்றும் உள்ளதோ?, இலையோ - இல்லையோ, அறிந்திலம் - தெரிந்தோமில்லை, இம் மதன் ஆண்மை என் புகல்வது — இந்த மன்மதனுடைய வலிமையை என்ன என்று சொல்வது,

இதுவே தவம் பிறிது என் ஆம் - இவ்வாண்மையே அவனுக்குச் சிறந்த தவமாம் வேறே ஆண்மையாற் பயனென்ன ?, ஓர் பெண் கொடியின் முலையோடு முன் கை வளையால் - ஒரு பூங்கொடி போன்ற பெண்ணினுடைய முலைகளாலும் முன்னங்கை வளையல்களாலும், மலையே குழைந்திடு தம் இரு தோள் குழைந்து உறை நம் மதுரேசர் தந்த வரமே - மேருமலை வில்லாக வளைதற்குக் காரணமான தம்முடைய இரண்டு தோள்களும் நெகிழ்ந்த நம் மதுரைச் சொக்கநாதர் அவனுக்குக் கொடுத்தருளிய வரமேயாகும்.

(வி - ரை.) இச்செய்யுள் காதல் கொண்ட தலைவி இரங்கி யுரைப்பது, சிலையோ கணையோ - ஓகாரம் : தெரிநிலை. சிவசிவ என்றது, இரக்கக் குறிப்பு. உளதோ இலையோ என்பதில் ஓகாரம் : ஐயப்பொருள். முல்லை என்பது முலை என இடைக் குறையாயிற்று. அணிந்த : உவம உருபு, ''முலையே அணிந்த முகிழ்'' என்பதற்கு முல்லையின் நிரையாகிய அரும்புகள் எனவும் பொருள் கூறலாம். (அகூ)

கட்டளைக் கலித்துறை

உருவெளிப்பாடு

வரும்புண்ட ரீக மிரண்டாலொர் கல்லுமென் வன்னெஞ்சமா
மிரும்புங் குழைத்த மதுரைப் பிரான்வெற்பி லேழ்பரியோன்
விரும்புந் தடமணித் தேர்வல வாவெஞ் சுரமிதன்றே
கரும்புங் கனியு மிளநீரும் பாரெங்குங் கண்களினே.

(இ - ள்.) வரும் புண்டரீகம் இரண்டால் ஓர் கல்லும் என் வல் நெஞ்சம் ஆம் இரும்பும் குழைத்த மதுரைப்பிரான் வெற்பில் - பொருந்திய (திருக்கை: திருவடி என்னும்) இரண்டு செந்தாமரை மலர்களாலும் (மேருவாகிய) ஒரு மலையையும் என்னுடைய வலிய மனமாகிய இரும்பையும் வளையச்செய்த மதுரையில் சொக்கநாதரது மலையில், ஏழ்பரியோன் விரும்பும் தட மணி தேர் வலவா - ஏழு குதிரைகளையுடையவனை சூரியனும் விரும்பும்படியான பெரிய அழகிய தேரைச் செலுத்த வல்ல பாகனே !, இது வெம் சுரம் அன்றே - இந்த இடம் வெப்பத்தையுடைய கொடிய பாலை நிலம் அன்றோ, எங்கும் கரும்பும் கனியும் இளநீரும் கண்களில் பார் - எல்லாவிடத்தும் கரும்பையும் பழத்தையும் தெங்கின் இளங்காயையும் கண்களினாற் பார்ப்பாயாக.

(வி - ரை.) இது தலைவியைப் பிரிந்து சென்று மீண்டு வருகிற தலைமகன் இடை வழியில் அவளது உருவெளிப் பாட்டைப் பாலைநிலத்தே கண்டு வியந்து பாகனோடு கூறியது.

கரத் தாமரையால் கல்லையும் அடித் தாமரையால் என் நெஞ்சையும் குழைத்த என இயைத்துப் பொருள் கொள்க. நெஞ்சத்தை இரும்பு என்றது வலிமைபற்றி. சூரியன் தேர்க் குதிரையைச் 'சப்தமா' என்று கூறுவர். ஏழ்பரி என்றும் வழங்கப்படும். மணித்தேர் - மணிகள் அழுத்திய தேர் எனவுமாம். கரும்பு - தலைவியின் இன்சொல். கனி - கொவ்வைக் கனி போன்ற உதடு. இளநீர் - கொங்கைகள் என அறிக. மயக்கத்தால் தனக்குத் தெரியும் தலைவியின் உருவைப் பாகனுக்கும் காட்டினன் தலைவன் எனக் கொள்க. (அ௬)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கருவிட்ட காடெறிந்து கடம்பவனத் திருப்பீர் நுங்
கடுக்கைக் காட்டின்
மருவிட்ட கொள்ளைவெள்ள மடுப்படிந்து மூண்டெழுமான்
மதித்தீ கெட்டேன்
செருவிட்ட விழிமடவார் வாயிட்டுச் சுடுவதல்லாற்
செங்கை யிட்டு
மெருவிட்டு மூட்டிடநீர் விறகிட்டு மூட்டியவா
வென்சொல் கேனே.

(இ - ள்.) கரு இட்ட காடு எறிந்து கடம்பவனத்து இருப்பீர்! - (தம் அடியார்களுடைய) கருப்பமாகிய பொருந்திய காட்டை வெட்டிக் கடம்பவனத்தில் இருப்பவரே!, மதித்தீ நும் கடுக்கை காட்டின் மரு இட்ட கொள்ளை வெள்ள மடுப் படிந்து - சந்திரனாகிய நெருப்பு நும் கொன்றை மலர்த் தொகுதியின் மணம் பொருந்திய மிக்க கங்கா நதியின் நீர் வெள்ளமாகிய மடுவிலே முழுகி, மூண்டு எழும் - மேலே பொங்கி எழுகின்றது; கெட்டேன்—, செரு இட்ட விழி மடவார் வாய் இட்டு சுடுவது அல்லால் செங்கை ஈட்டும் எரு இட்டு மூட்டிட நீர் விறகு இட்டு மூட்டிய ஆ - போர் செய்தலையுடைய கண்களையுடைய மகளிர் (தமது) வாயினாற்சொல்லும் பழிமொழியால் (என்னை) வருத்துவதல்லாமல் சிவந்த தம் கைகளினாற் சேர்த்தப்படுகிற எருக்களை மேலே போகட்டு (அம் மதித்தீயை) மேலே மூளச்செய்ய நீர் விறகைப் போகட்டு வளர்த்த விதத்தை, என் சொல்கேன் - என்ன வென்று சொல்வேன்?

(வி - ரை.) இது விறகு விற்ற திருவிழா நடக்கும்பொழுது சோமசுந்தரரின் வடிவழகைக் கண்டு காமுற்ருள் ஒரு தலைவி கூறியதாகச் செய்யுள் செய்யப்பட்டது.

கரு - பிறப்பு, ஒரு காட்டை வெட்டி மற்ருெரு காட்டில் இருப்பீர் என்று சாதுரியம் தோன்றக் கூறியபடி. விறகு இடுதற் கேற்பக் காடெறிதல் கூறிஞர் என்க. கருவிட்ட காடெறிந்து'' என்பது அடியார்களின் பிறப்பை யொழிப்பதற் காகக் கடம்பவனத்திருந்தார் எனக் கூட்டுக. 'எறிந்து' என்ற செய்து என் எச்சத்தைச் செயவென்னெச்சமாக்குக. ''செங்கை யிட்டும் எருவிட்டு மூட்டிட'' என்றது இளங்கன்னிகள் தத்தமக் குத் தக்க கொழுநர் வாய்க்கும் பொருட்டுப் பிறைதோன்றுங் காலத்து எருவை எடுத்து, அதன்மேலிட்டுக் கைகூப்பித் தொழுவதொரு மரபைக் குறித்தது. அதனைக் ''கீற்றுமதி யெனநிலவு தோற்றுபரு வத்திலொளி கிளர்நுதற் செவ்வி வவ்விக், கெண்டைத் தடங்கணு ரெருவிட் டிறைஞ்சக் கிடந் ததும்'' என மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழிலும் காண்க. 'விறகு மூட்டியவா' என்றது, சொக்கநாதர் விறகு விற்ற திரு விளையாடலில் பிறையுடனே விறகு முடியிற் சுமந்து வந்த தன்மை பற்றியது. (அ௫)

விருத்தக் கலித்துறை

என்போ டுள்ளமு நெக்குரு கப்புக் கென்போல்வார்க்
கன்போ டின்பு மளித்தருள் கூடலெம் மடிகேளோ
தன்போல் காமன் சாப முடித்தாற் ருழ்வுண்டே
முன்போர் காமன் சாப மனைத்து முடித்தாய்க்கே.

(இ - ள்.) என்போடு உள்ளமும் நெக்கு உருகப் புக்கு என் போல்வார்க்கு - எலும்பும் மனமும் நெகிழ்ந்து கரையும் படி எழுந்தருளி என்னைப்போன்ற இளமகளிர்க்கு, அன்போடு இன்பும் அளித்தருள் கூடல் எம் அடிகேளோ! - அன்பையும் இன்பத்தையும் தந்தருள்கின்ற மதுரையில் உள்ள எம்முடைய தெய்வமே!, முன்பு ஓர் காமன் சாபம் அனைத்தும் முடித்தாய்க்கு- முன்னர் ஒப்பற்ற கற்பகக்காவுக்கு இறைவனுகிய தேவேந்திர னுடைய குருவைக் கொன்ற குற்றம் முற்றும் ஒழித்தருளிய உனக்கு, தன்போல் காமன் சாபம் முடித்தால் தாழ்வு உண்டே - (வேறுருப்பில்லாமையால்) தன்னைத்தானே ஒத்திருக்கும் மன்மத னுடைய வில்லை (முறித்தால்) அழித்தருளினுல் குறை உளதோ?

(வி - ரை.) இது தலைவி கூற்று. கா - கற்பகமரம். மன் - அரசன் ; எனவே இந்திரனை யுணர்த்திற்று. காமன்-மன்மதன் ; விருப்பத்தை யுண்டாக்குவோன். பின் இரண்டடிகளில் முன் ஒரு காமனது சாபத்தை முடித்த உனக்கு அதுபோல் இப்பொழுதும் இக்காமனுடைய சாபத்தையும் முடித்தால் தாழ்வுண்டோ? என்னும் பொருள் தோன்றும். ''காமன் சாபம்'' என்றது இந்திரன் பழியை யுணர்த்தும். அனைத்தும் என்றதனால் கற்பகக்காவின் நிழலிலிருந்து அரசுபுரியும் இந்திரனுக்குத் துருவாச முனிவர் பாண்டியனால் முடி சிதறும்படி இட்ட சாபம் (கொடுமொழி) முழுவதையும் என்று பொருள் கூறலுமாம். உண்டே - ஏ: வினா. அடிகேளோ - அடிகள் என்பதன் விளி ; அடிகள், அடிகேள் - ஈற்றயல் திரிந்து மேலும் ஓகாரம் பெற்று நின்றது. இது மூன்றாஞ்சீர் விளச்சீரும் ஈற்றுச்சீர் காய்ச்சீரும் மற்ற மூன்றும் மாச்சீர்களுமாக வந்த விருத்தக் கலித்துறை. (௮௬)

நேரிசை யாசிரியப்பா

முட்டாட் பாசடை நெட்டிதழ்க் கமலத்
திரைவர வுறங்குங் குருகு விரிசிறைச்
செங்கா னுரைக்குச் சிவபதங் கிடைத்தெனப்
பைம்புனன் மூழ்கிப் பதும பீடத்
தூற்றமி ருமு முலப்பில் பஃறவம்
வீற்றுவீற் றிருந்து நோற்பன கடுக்குங்
குண்டுநீர்ப் பட்டத் தொண்டுறைச் சங்கமும்
வண்டமிழ்க் கடலின் றண்டுறைச் சங்கமு
முத்தகம் பயின்று காவியங் கற்றுச்
சித்திரப் பாட்டிய றேர்ந்தன செல்லுந்
தடம்பணை யுடுத்த தண்டமிழ்க் கூட
லிடங்கொண் டிருந்த விமையா முக்கட்
கருமிடற் றொருவநின் றிருவடி வழுத்துதுந்
தாய்நலங் கவருபு தந்தையுயிர் செகுத்தாங்
கிருபெருங் குரவரி னொருபழி சுமந்த
புன்றொழி லொருவற்குப் புகலின்மை தெரீஇ
அன்றருள் சுரந்த தொன்றோ சென்றதோர்
வலியாற் கருள்வதூஉ நோக்கி
எளியார்க் கெளியைமற் றென்பது குறித்தே.

(இ - ள்.) முள் தாள் பாசடை நெடு இதழ்க் கமலத்து - முள்ளையுடைய நாளத்தையும் பசிய இலையையும் நெடிய இதழையும் உடைய தாமரையின் மலரிலே, இரை வர உறங்கும் குருகு விரி சிறைச் செம் கால் நாரைக்கு சிவபதம் கிடைத்து என - தனக்குத் தக்க உணவாகிய பெருமீன் வரும் அளவும் தூங்குவனபோலிருக்கின்ற நாரைகள் பரந்த இறகுகளையும் சிவந்த கால்களையும் உடைய நாரைக்குச் சிவபதம் கிடைத்த இடம் இஃது என்று எண்ணி, ஊற்றம் இல் தாமும் பைம் புனல் மூழ்கி பதும பீடத்து இருந்து உலப்பு இல் பல் தவம் வீற்று வீற்று இருந்து நோற்பன கடுக்கும் - பற்றுக்கோடில்லாத தாமும் குளிர்ந்த தண்ணீரிலே நீராடிப் பதுமாசனத்திருந்து ஒழிதலில்லாத பல தவங்களைத் தனித்தனியே செய்பவற்றைப் போலத் தோன்றுகின்ற, குண்டு நீர்ப் பட்டத்து ஒண் துறைச் சங்கமும் வண் தமிழ்க் கடலின் தண் துறைச் சங்கமும் - ஆழமாகிய நீரையுடைய பொற்றாமரைக் குளத்தின் ஒளிபொருந்திய நீர்த்துறையிலுள்ள சங்குகளும் வளப்பத்தையுடைய தமிழ் மொழியாகிய கடலினது இனிய துறைகளிலே பயின்ற (தலை இடை கடை என்னும்) புலவர் சங்கங்களும், முத்தகம் பயின்று - முத்துக்கள் அவ்விடத்தே பயிலப்பெற்று (முத்தகச் செய்யுட்களிற் பழகி), கா வியங் கற்று - (நீரை விட்டு வெளியேறி) சோலைகட்கு நடத்தலில்லாமல் (காப்பியங்களைப் பயிற்சி செய்து), சித்திரம் பாட்டு இயல் தேர்ந்தன - அழகிய இசையின் கூறுபாடுகளை ஆராய்ந்து ஒலித்து (சித்திரக் கவிகளையும் பாட்டிலக்கண நூல்களையும் ஆராய்ந்து அறிந்தனவாகி), செல்லும் தடம் பணை உடுத்த தண் தமிழ்க் கூடல் இடம் கொண்டு இருந்த - ஊர்ந்து செல்கின்ற (ஒழுகுகின்ற) பெரிய வயல்களாற் சூழப்பட்ட இனிய தமிழ் வழங்கும் மதுரையைத் தாம் (விரும்பும்) இடமாகக் கொண்டு எழுந்தருளியிருந்த, இமையா முக்கண் கருமிடற்று ஒருவ !—இமைத்தலில்லாத மூன்று கண்களையும் கரிய கண்டத்தையுமுடைய ஒப்பற்ற கடவுளே !, தாய் நலம் கவருபு தந்தை உயிர் செகுத்தாங்கு இரு பெருங் குரவரின் ஒரு பழி சுமந்த - தாயினது இன்பத்தை நுகர்ந்து தந்தையின் உயிரைக் கொன்று இரண்டு பெரியோர்கட்கும் செய்த (தாயைப் புணர்தல், தந்தையைக் கொல்லல் என்ற) ஒப்பற்ற பழியையும் பாவத்தையும் மேற்கொண்ட, புன் தொழில் ஒருவற்குப் புகல் இன்மை தெரீஇ அன்று அருள் சுரந்தது ஒன்றோ - இழிவான செய்கையுடைய ஒருவனுக்கு உன்னையன்றி வேறே காவல் இல்லாமையைத் தெரிந்து அந்நாளில் அவனுக்கு அருள் புரிந்தது ஒன்று மாத்திரமோ, சென்றது ஓர் வலியாற்கு அருள்வதூஉம் நோக்கி எளியார்க்கு

எளியை என்பது குறித்து - வந்து அடைக்கலம் புகுந்த ஒரு கரிக்குருவிக்கு நீ திருவருள் செய்ததையும் பார்த்து எளியவர்க்கு எளிதில் அருள்புரியுந் தன்மையை என்று எண்ணி, நின் திரு அடி வழுத்துதும் - உன்னுடைய திருவடிகளை வணங்கிப் போற்றுவோம். (யாம்.)

(வி - ரை.) முள் + தாள். பசுமை + அடை. இவை முதலுக்கேற்றவை. நெட்டிதழ் சினைக்கேற்ற அடை. ஒரு நாரையானது, சொக்கநாதர் திருவருட்சிறப்பை முனிவர்கள் கூறக் கேட்டு மதுரையை யடைந்து பொற்றாமரையில் நீராடிக் கோயிலை வலம் வந்து கடவுளை வணங்க அதற்கு முத்தி கொடுத்தனர் சிவபெருமான் என்பது திருவிளையாடற் கதை. செய்தது என என்பது செய்தெனத் தொகுத்தலாயிற்று. பதுமாசனம் என்பது யோகப் பயிற்சியுள் ஒன்று. பல் + தவம் = பஃறவம் எனத் தகரம் ஆய்தமாய்த் திரிந்தது; லகரமெய் றகரமாகத் திரிந்தது. இயல்பாயுறங்கும் நாரைகளைத் தவஞ்செய்வனவாகக் குறித்தது தற்குறிப்பேற்றம். துறை - அகம் புறமாகிய கூறுபாடுகள். சங்கம் என்பது, சங்குகளையும், புலவர் கூட்டங்களையும் உணர்த்தியது. முத்தகம் என்பது தனித்தனி நின்று முடிவுபெறும் செய்யுள். சித்திரப்பாட்டியல் - சித்திரக்கவியின் இலக்கணங்களை வரைந்த நூல் எனவும், அழகிய பாட்டுக்களின் இலக்கணம் வகுத்த நூல் எனவும் பொருள் தரும். தாயைக் கலந்து தந்தையைக் கொன்ற மறையோனுக்கு வந்த பெரும் பாதகத்தை நீக்கிய வரலாற்றை மாபாதகந் தீர்த்த படலத்தில் (திருவிளையாடலில்) காண்க. மதுரையை அடைந்து வணங்கிய கரிக்குருவிக்கு "வலியன்" என்னும் பெயர் தந்து மறை உபதேசித்ததையும் திருவிளையாடலிற் காண்க. அருள்வதூஉம்: இன்னிசையளபெடை. பட்டம்-குளம். எம்முடைய பாவத்தையும் நீக்கிக் காக்கவேண்டும் என்பது குறிப்பு. (௮௭)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

குறுமுயலுஞ் சிலகலையு மிழந்தொருமா னுயிரைக்
கொள்ளைகொள்ள வெழுந்தமதிக் கூற்றே யாற்றுக்
சிறுதுயிலும் பெருமூச்சுங் கண்டுமிரங் கலையாற்
றெறுமறலி நீயேயித் தெண்ணி லாவு
மெறியுநெடும் பாசமே யுடலுமறக் கூனி
யிருணிறமு முதிர்நரையா லிழந்தாய் போலு
நறுநுதலா ரென்கொலுனை மதுரேசர் மிலேச்சு
நாகிளவெண் டிங்களென நவில்கின் றரே.

(இ - ள்.) குறு முயலும் சில கலையும் இழந்து ஒரு மான் உயிரைக் கொள்ளை கொள்ள எழுந்த மதிக் கூற்றே-சிறிய முயற் களங்கத்தையும் சில ஒளிக் கூறுகளையும் நீங்கி ஒரு மான் போலும் இத்தலைவியின் உயிரைக் கவர்ந்து போவதற்கு வந்த இளஞ்சந்திரனாகிய எமனே !, ஆற்றாச் சிறு துயிலும் பெரு மூச்சும் கண்டும் இரங்கலையால் - (இவளுடைய) பொறுக்க முடியாத சிறிய உறக்கத்தையும் பெருமூச்சையும் பார்த்தும் இரங்குகின்றாயில்லை, ஆதலால், தெறு மறலி நீயே இத் தெள் நிலாவும் எறியும் நெடும் பாசமே - உயிர்களைக் கொல்கின்ற எமன் நீயே ஆவாய், தெளிவாய் விளங்குகின்ற உன் ஒளியும் யமனாகிய நீ உயிர்களின்மேல் வீசுகின்ற பெரிய காலபாசமுமே யாம், உடலும் அறகூனி இருள் நிறமும் முதிர் நரையால் இழந்தாய்போலும் - உடலும் மிக வளையப்பெற்றுக் கரிய நிறமும் முதிர்ந்த நரையாகிய வெண்ணிறத்தால் இழந்தனை போலும், (இவ்வாறிருக்க) நறு நுதலார் உனை என்கொல் மதுரேசர் மிலைச்சும் நாகு இள வெண் திங்கள் என நவில்கின்றார் - அழகிய நெற்றியையுடையவரான இளம் பெண்கள் உன்னை என்ன காரணத்தால் மதுரேசர் முடியிற் சூடுகின்ற மிகவும் இளமையான வெண்ணிறமுள்ள சந்திரன் என்று சொல்லுகின்றார்கள் ; (அதற்குக் காரணம் விளங்கவில்லை.)

(வி - ரை.) இது தோழி கூற்று. செவிலி கூற்றுமாம். இளஞ்சந்திரனுக்குச் சில கலைகளும் களங்கமும் இல்லையாதலால் "குறுமுயலும் சில கலையும் இழந்து" எனப்பட்டது. களங்கத்தை முயல் என்பது கவி மரபு. மான் - உவமையாகு பெயராய்ப் பெண்ணையுணர்த்தியது. தலைவனைப் பிரிந்ததனிமித்தம் தூக்கங் கொள்ளாததால் "சிறுதுயில்" என்றார். பாசம் - கயிற்று வடிவமான ஓர் ஆயுதம். இயமனுக்கு இயல்பாகவுள்ள உடல் நெறிப்பும் கருநிறமும் மூப்பினால் ஒழிந்தனவாகக் கூறினாள். நாகு-இளமை: ஒருபொருட் பன்மொழி. கூனி: வினையெச்சம். முயலையும் சில கலைகளையும் தான் வைத்திருந்து பின் அவற்றை யிழந்து மானைப் பிடிக்க வந்தது மதி என மற்றுமொரு பொருள் தோன்றிற்று. அப்பொருளுக்குக் கலை ஆண் மான் எனப் பொருள் தரும். பெண் மானைப் பிடிக்க வந்தது முறையன்று என்பது குறிப்பு. முறையல்லாச் செயல் புரிந்ததால் உருவமாறிய உன்னை நன்னிலையில் உள்ளனை என எல்லாம் கூறுவது அறியாமையே என்ற குறிப்பும் அடங்கியுள்ளது. (அஅ)

தாழிசை

நவ்வியங்கண் மானுமானு மினிதுகந்தி டங்கொள்வார்
நஞ்சமார்ந்தென் னெஞ்சமார்ந்து நனிகளங் கறுத்துளார்
கைவ்விளங்கு குன்றுமன்றுங் கோவிலாக்கு னித்துளார்
கன்னிநாடர் மதுரைவாணர் கயிலைவெற்பர் வெற்பனீர்
கொவ்வைவாய்வி ளர்ப்பமைக்க ருங்கணுஞ்சி வப்பவே
குளிர்தரங்க வைகை நீர்கு டைந்துடன்றி ளைத்திராற்
பைவ்விரிந்த வல்குலீர்நும் மன்னை மார்கள் சங்கையிற்
படிலவர்க்கு வீணினீவிர் பரிகரித்தல் பாவமே.

(இ - ள்.) நவ்வி அம் கண் மானும் மானும் இனிது உகந்து இடம் கொள்வார் - மான் பார்வைபோலும் அழகிய பார்வையை யுடைய பெண்ணாகிய உமாதேவியையும் மானையும் தனித்தனி இனியதாக விரும்பி முறையே இடப்பக்கத்திலும் இடக்கையி லும் கொண்டிருப்பவரும், நஞ்சம் ஆர்ந்து நனி களம் கறுத்து உளார் - ஆலகால நஞ்சினை உண்டு நல்ல கழுத்துக் கறுத்துள்ள வரும், என் நெஞ்சம் ஆர்ந்து நனி களங்கு அறுத்து உளார் - என்னுடைய மனத்தில் நிறைந்து மனத்தின் குற்றத்தை நன்கு கத் தீர்த்தருளியுள்ளவரும், கை விளங்கு குன்றும் கோவில் ஆ குனித்தார் - கையின் விளங்குகின்ற இமயமலையையும் பெரிய வில்லாக வளைத்துள்ளவரும், மன்றும் கோயில் ஆ குனித்துளார் - பொன்னம்பலத்தையும் வெள்ளியம்பலத்தையும் முறையே ஆலயமாகக்கொண்டு அவற்றில் திருக்கூத்தாடியவரும், கன்னி நாடர் மதுரை வாணர் கைலை வெற்பர் வெற்பனீர் ! - பாண்டி நாட்டை யுடையவரும் மதுரையில் வாழ்பவரும் கைலமலையை உடையவருமாகிய சிவபெருமானுடைய மலையை ஒத்துச் சிறந்த மகளிரே !, கொவ்வை வாய் விளர்ப்ப மைக் கருங்கண் சிவப்ப - கொவ்வைப்பழம்போற் சிவந்துள்ள (உம்முடைய) உதடு வெளுக்கவும் மையிட்ட கரிய கண்கள் சிவக்கும்படியும், குளிர் தரங்கம் வைகை நீர் குடைந்து உடன் திளைத்தீர் - குளிர்ச்சியான அலைகளையுடைய வையை ஆற்றின் நீரிலே மூழ்கி அந்நீருடன் விளையாட்டுச் செய்கிறீர்கள், பை விரிந்த அல்குலீர் நும் அன்னை மார்கள் சங்கையிற் படில் - பாம்பின் படம்போலும் பரந்த அல்குலை (நிதம்பத்தை) உடையவர்களே, உம் தாய்மார்கள் ஐயப்பட்டால், அவர்க்கு வீணின் நீவிர் பரிகரித்தல் பாவமே - அவர்களுக்கு வீணாக நீங்கள் அவ்வையப் பாட்டைப் போக்குதல் கொடுமையேயாம். ஆல் : ஈற்றசை.

(வி - ரை.) நீரில் திளைத்தாடும் மகளிரை நோக்கித் தோழி கூறியது. கோ + இல் = கோவில். முதலிலுள்ள மான் பெண்ணைக் குறித்தது. கைத்தாய், முலைத்தாய், செவிலித்தாய், பாலூட்டுந் தாய், நற்றாய் எனத் தாயர் ஐவர் ஆதலின் ''அன்னைமார்கள்'' என்றார் வாய் வெளுத்தலும், கண் சிவத்தலும் புணர்ச்சிக்குரிய குறியாதலால் ''சங்கையிற் படின்'' என்றார். ''பைவிரிந்த அல்குலீர்'' என்றது மணப்பருவம் அடைந்தவர் என்பதை யுணர்த்தியது. இளங்கன்னியராயின் இவ்வையம் தோன்றாது எனக் காண்க. (அக)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பாமிக்குப் பயின்மதுரைப் பரஞ்சுடரே யொருத்திகயற்
பார்வை மட்டோ
காமிக்கு மடந்தையர்கட் கயலெலா முமையடைதல்
கணக்கே யன்றே
மாமிக்குக் கடலேழும் வழங்கினீ ரொருவேலை
மகனுக் கீந்து
பூமிக்குட் கடலைவறி தாக்கினீர் பவக்கடலும்
போக்கி னீரே.

(இ - ள்.) பா மிக்குப் பயில் மதுரைப் பரம் சுடரே - செந்தமிழ்ப் பாடல்கள் மிகுந்து வழங்குகின்ற மதுரையில் எழுந்தருளிய முதன்மையான ஒளிவடிவமாயுள்ள கடவுளே!, மாமிக்குக் கடல் ஏழும் வழங்கினீர் - நீர் உம்முடைய மாமியார்க்கு ஏழு கடல்களையும் கொடுத்தருளினீர், ஒரு வேலை மகனுக்கு ஈந்து பூமிக்குள் கடலை வறிது ஆக்கினீர் - ஒரு வேலாயுதத்தை உம்முடைய மகனுக்கு (உக்கிரகுமார பாண்டியனுக்கு)க் கொடுத்து அவ்வேற் படையால் பூமியில் உள்ள கடலை வற்றும்படி செய்தீர், பவக் கடலும் போக்கினீர் - (அடியார்களின்) பிறப்பாகிய கடல்களையும் ஒழித்தருளினீர், ஒருத்திகயற் பார்வை மட்டோ காமிக்கு மடந்தையர் கண் கயல் எல்லாம் உமை அடைதல் கணக்கே அன்றோ - (ஆதலால்) மீனாட்சியம்மை கண் ஒன்று மாத்திரமோ? விரும்புகின்ற மகளிருடைய கண்களாகிய கயல் மீன்கள் எல்லாம் உம்மிடம் வந்து சேர்தல் முறையே ஆம் அல்லவா?

(வி - ரை.) மீன்களெல்லாம் வருந்தும்படி அவற்றிற்கு ஆதாரமாயுள்ள கடல்களையெல்லாம் நீர் வற்றும்படி செய்து

விட்டீராதலால், அவைகள் வந்து அடைதல் முறைதான் என்று தலைவி சாதுரியமாகக் கூறியது இது, காம மயக்கத்தால் நம்மைப்போலவே மகளிர் எல்லாரும் சிவபெருமானைக் கண்ணாகிய கயலாற் கண்டு களிப்பர் எனக் கருதினள். சிவபெருமான் உருவத்தைக் கண்ட மகளிர் எல்லாரும் காமுறுவர் என்பது அவள் கருத்து.

கௌதம முனிவரின் உரைப்படி கடல் நீராட விரும்பிய மலயத்துவச பாண்டியன் மனைவியும் தம் மாமியாருமான காஞ்சனமாலையின் பொருட்டுச் சோமசுந்தரக்கடவுள் கீழ்ப் பக்கமுள்ள குளம் ஒன்றில் ஏழு கடல்களையும் வரவழைத்து நீராடச் செய்தனர் என்பது வரலாறு.

காமிக்கும் - விரும்பும்; காமம் என்னும் பெயரினடியாகப் பிறந்த எதிர்காலப் பெயரெச்சம். (௬O)

மேற்படி விருத்தம்

நீரோடு குறுவெயர்ப்பு நெருப்போடு நெட்டுயிர்ப்பு
நெடுங்கண் ணீரிற்
பீரோடு வனமுலையுங் குறையோடு நிறையுயிரும்
பெற்றா ளன்றே
காரோடு மணிகண்டர் கடம்பவனச் சொக்கர் நறை
கமழ்பூங் கொன்றைத்
தாரோடு மனஞ்செல்லத் தனையோடுந் தான் செல்லாத்
தமிய ளாளே.

(இ - ள்.) கார் ஓடும் மணி கண்டர் கடம்பவனச் சொக்கர் நறை கமழ் பூங் கொன்றைத் தாரோடு - கருமை நிறம் பொருந்திய நீலமணி போன்ற கழுத்தையுடையவராய்க் கடம்பவனத்தில் எழுந்தருளிய சொக்கநாதரின் மணம் வீசுகிற அழகிய கொன்றையோடு சேர்ந்து, மனம் செல்லத் தனையோடும் தான் செல்லாத் தமியள் - தனது மனம் போய்விடத் தன் தாயுடனிருப்பதால் தான் போகமாட்டாத (அச்சொக்கரையன்றி வேறு கதியில்லாத) தனியளாகிய இத்தலைமகள், நீர் ஓடு குறு வெயர்ப்பும் நெருப்பு ஓடும் நெடு உயிர்ப்பும் நெடும் கண் நீரில் பீர் ஓடு வனம் முலையும் குறையோடு நிறை உயிரும் பெற்றாள் - நீராக ஓடுகின்ற சிறிய வேர்வைத் துளிகளையும் நெருப்புப் போல மேல் எழும் வெப்பம் பொருந்திய பெருமூச்சையும்

பெரிய கண்ணீருடனே பசலைநிறம் பரவிய அழகிய கொங்கைகளையும் குறைவுடன் நிறைந்த உயிரையும் பெற்றுள்ளாள்.

(வி - ரை.) இது சிவபெருமானைக் கண்டு காதல் கொண்ட தலைவியை நோக்கித் தோழி கூறியது. செவிலி கூறியதுமாம். வெயர்ப்பு முதலியன தலைவனைப் பிரிந்த தலைவிபால் நிகழும் மெய்ப்பாடுகளாம், குறையோடு - ஒடு உருபு ஆல் உருபின் பொருளில் வந்தது. மனம் பரவசமாய் விட்டதனால் தன் தாயுடனே செல்லமாட்டாதவளாயினள், தளை - தள்ளை என்பதன் இடைக்குறை, குட்டநாட்டார் சொல். "தளையோடுந் தான் செல்லா" என்பதற்கு, காலில் விலங்கு பூட்டப்பெற்றாற் போல் இருந்த இடம் விட்டுப் பெயர்ந்து நடக்கமாட்டாத என்றும் பொருள் கூறலாம். அன்றே : ஈற்றசை. தேற்றமுமாம். ஒன்று இரண்டு நான்காம் அடிகளில் தொடை முரண் காண்க. (௬௧)

பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

தமர நீர்ப் புவன முழுதொருங் கீன்று
டடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவுந் தனிமுத லொருநீ
சவுந்தர மாறனா னதுவுங்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப்பேர்
கொண்டதுந் தண்டமிழ் மதுரங்
கூட்டுணு வெழுந்த வேட்கையா லெனிலிக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்
பமரம்யாழ் மிழற்ற நறவுகொப் பளிக்கும்
பனிமலர்க் குழலியர் பளிக்குப்
பானிலா முன் றிற்றூநிலா முத்தின்
பந்தரிற் கண்ணிமை யாடா
தமரர்நா டியரோ டம்மனை யாட
வையநுண் ணுசுப்பள வலவென்
றமரரு மருளுந் தெளி தமிழ்க் கூட
லடலரா வலங்கல்வே ணியனே.

(இ - ள்.) பமரம் யாழ்மிழற்ற நறவு கொப்பளிக்கும் பனிமலர்க் குழலியர் - வண்டுகள் வீணைப்பாடல் போல ஒலிசெய்யத் தேனைச்சொரிகின்ற குளிர்ச்சியுள்ள மலர்களை அணிந்த கூந்தலை

யுடையவரான மானிடமகளிர், பளிக்கு பால் நிலா முன்றில் தூநிலா முத்தின் பந்தரில் கண் இமை ஆடாது அமரர் நாடிய ரோடு அம்மனை ஆட - பளிங்குக் கற்களினு லாகிய வெண்மை யான நிலாமுற்றத்திலே தூய்மையான நிலவுபோல ஒளிவீசும் வெள்ளிய முத்துக்களினுல் ஆகிய பந்தலிலே கண் இமைத்தல் செய்யாமல் தெய்வப் பெண்களுடனே அம்மானை ஆடாநிற்க. ஐயம் நுண் நுசுப்பு அளவு அல என்று அமரரும் மருளும் தெளி தமிழ்க்கூடல் அடல் அரா அலங்கல் வேணியனே! - அயிர்ப்பு நுட்பமான இடையின் அளவில் மட்டும் அல்ல வென்று கருதி (கண்டு நின்ற மனிதர் மாத்திரமே யன்றி) தேவர்களும் திகைக்கும்படியான தெளிவான தமிழ் வழங்கும் மதுரையில் எழுந்தருளிய வலிமையுடைய பாம்புகளை மாலையாகச் சூடிய சடையை உடைய சோமசுந்தரக் கடவுளே!, தமரம் நீர் புவனம் முழுது ஒருங்கு ஈன்ருள் தடாதகாதேவி என்று ஒரு பேர் தரிக்க வந்ததுவும் - முழக்கத்தையுடைய கடல் நீராற் சூழப்பட்டுள்ள உலக முழுவதையும் ஒருசேரப் பெற்றவளாகிய உமாதேவி தடாதகைப் பிராட்டி என்று திருப்பெயரைப் பெற்று (மதுரை யில்) வந்து தோன்றியதுவும், தனி முதல் ஒரு நீ சவுந்தர மாறன் ஆனதுவும் - ஒப்பற்ற முதற் கடவுளாகிய நீ சுந்தரபாண்டியன் ஆகி மதுரையை ஆள வந்ததும், குமரவேள் வழுதி உக்கிரன் எனப் பேர்கொண்டதும் - முருகக்கடவுள் உக்கிரகுமார பாண்டியன் என்று பெயர் கொண்டுவந்து மதுரையிற் பிறந்ததும், தண் தமிழ் மதுரம் கூட்டு உண எழுந்த வேட்கை யால் எனில் இ கொழி தமிழ்ப் பெருமை யார் அறிவார் - குளிர்ந்த தமிழ்மொழியின் சுவையைக் கொள்ளை கொண்டு நுகர்தற்கு உண்டான விருப்பத்தால் என்ருல் தெளிவுபடுத்தப் பட்ட இத்தமிழினது பெருமையை எவர் அறிந்து சொல்ல வல்லவர்?

(வி - ரை.) 'தனி முதல்' என்றது, மும்மூர்த்திகட்கும் தலைமையான பரம்பொருள் என்பதை உணர்த்துதற்கு. காம வேளை விலக்குதற்குக் ''குமரவேள்'' என்ருர். உக்கிரன் - பகை வர்க்குக் கொடுமையானவன். நிலா முற்றம்-நிலாவில் விளையாடு தற்குரிய மேல்மாடத்தின் வெளியிடம். பந்தல் - பந்தர்: போலி. நிலா முற்றத்தில் மானிட மகளிரும் தேவமகளிரும் விரவிக் கண் இமையாமல் அம்மானை ஆடக் கண்டு மானிடரும் தேவரும் வேறுபாடறியமாட்டாமல், உண்டோ இல்லையோ என்னும் ஐயம் இவர்களுடைய இடை அளவில் மாத்திரம் முன்பு நமக்குள்ளது. இப்பொழு மானிடமாதோ தேவமாதோ என்னும் ஐயம் இவர்களின் வடிவு முழுவதிலும் உளதாயிற்று

என்று வியப்படைவாராயினர் என்பது கருத்து. வண்டுகள் கூந்தலில் வந்து மொய்த்து இசைபாடும்பொழுது மானிட மகளிர் இன்னரென்று அறிந்து கொள்ளலாகாதோ எனின் அம்மானை ஆட்டத்தின் அதிர்ச்சியினல் வண்டுகளும் அகன்றன எனக் கொள்க. (௯௨)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

அடுத்தங் குலவாக் கோட்டைசுமந்
தளித்தீ ரொருவற் கதுநிற்கத்
தொடுக்குங் கணைவே டனக்குலவாத்
தூணி கொடுத்தீர் போலுமா
லெடுக்குங் கணையைந் தெய்தகணை
யெண்ணத் தொலையா தென்செய்கேன்
திடுக்கங் கொளமால் சிலைமதனைச்
சினத்தீர் கடம்ப வனத்தீரே.

(இ - ள்.) மால் திடுக்கம் கொள சிலை மதனைச் சினத்தீர் கடம்ப வனத்தீர் - திருமால் நடுக்கத்தை அடையுமாறு அவன் மகனாகிய கருப்பு வில்லையுடைய-மதனைக் கோபித்து எரித்தவ ராகிய கடம்பவனத்திலுள்ள கடவுளே, (நீர்) ஒருவற்கு அங்கு உலவாக்கோட்டை சுமந்து அளித்தீர் - ஓர் அடியவர்க்கு அக் காலத்தில் மனம் பொருந்திக் குறைதல் இல்லாத நெற் கோட்டையைச் சுமந்துகொண்டு போய்க் கொடுத்தீர், அது நிற்க - அஃது இருக்க தொடுக்கும் கணைவேள் தனக்கு உலவாத் தூணி கொடுத்தீர் போலும் - (உயிர்களின்மேல்) தொடுக்கின்ற அம்புகளையுடைய மன்மதனுக்கும் எடுக்க எடுக்கக் குறைதல் இல்லாத அம்பறாத் தூணியைத் தந்தருளினீர் போலும், எடுக்கும் கணை ஐந்து எய்த கணை எண்ணத் தொலையாது என் செய்கேன் - ஆதலால், மன்மதன் எடுக்கும் அம்புகள் ஐந்தாம், என்மேல் எய்த அம்பு எண்ணிக் கணக்கிட அளவுபடாவாம். என்செய்கேன்.

(வி - ரை.) இது தலைவனைப் பிரிந்த தலைவியின் கூற்று. மதுரையில் வேளாளன் தன் மனைவியுடனே சிவனடியார் பூசனையை நாடோறும் இடைவிடாமல் செய்துவர, ஒரு காலத் தில் பரமசிவன் அவனுடைய நற்குணத்தின் அருமை பெருமை களை அனைவருக்கும் அறிவிக்கக் கருதி அவனிடம் வறுமை யுண்டாக்கினர். அவன் அதனல் மிக வருந்தியும் விடாமல்

தான் முன் கொண்ட விரதத்தை நடத்தி மிகக் கடன் பட்டு ஒரு நாள் தானும் தன் மனைவியும் பட்டினியாய்க் கிடந்து பின் சோம சுந்தரக்கடவுளை அடைந்து முறையிட்டான்- அவர் எடுக்க எடுக்கக் குறையாதிருக்கும்படியான ஒரு நெற்கோட்டையை அவன் வீட்டிற் சென்றிருக்கும்படி அருள்புரிந்தனர், அவனும் குறைதீர்ந்து பெருவாழ்வுடன் மகிழ்ந்தனன் என்பது, திருவிளையாடற் புராணத்தில் உலவாக்கோட்டை அருளிய படலக் கதையாகும்.

சினத்தீர் - சினந்தீர் என்பதன் விகாரம். தூணி - இது வடமொழியில் தூணீரம் எனப்படும். கோட்டை என்பது நெல்லைப் போட்டுவைத்திருக்கும் ஒரு குதிர். உலவாக்கோட்டை என்பதற்கு, நெல் குறையாத ஒரு குதிர் எனப் பொருள் கொள்க. (கக)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

கடமுடையு நறுநெய்க்குண் முழுகியெழு வதையொத்த
  கரடமத கரிபெற்றௌர் பிடியேபோன்
மடவநடை பயில்பச்சை மயிலையொரு புறம்வைத்த
  மதுரையழ கியசொக்கர் வரைவேலோய்
நடையுமெழு துவைநிற்கு நிலையுமெழு துவைசொற்கு
  ணலமுமெழு துவைசித்ர ரதிபோல்வா
ளிடையுமெழு துவைமுற்று மிலதொர்பொரு ளையுமொக்க
  வெழுதிலெவ ருனையொத்த பெயர்தாமே.

(இ - ள்.) கடம் உடையும் நறுநெய்க்குள் முழுகி எழுவதை ஒத்த கரடமதகரி பெற்று ஓர் பிடியேபோல் - குடம் உடைந்து வழிகின்ற நல்ல நெய்யிலே முழுகி எழுந்திருப்பதைப் போன்று கன்னங்களில் இருந்து ஒழுகுகின்ற மதநீரையுடைய யானை முகக்கடவுளாகிய விநாயகரைப்பெற்ற ஒரு பெண் யானையைப் போல், மடவ நடை பயில் பச்சை மயிலை ஒரு புறம் வைத்த மதுரை அழகிய சொக்கர் வரை வேலோய் - இளமையான நடை பழகுகின்ற பச்சை நிறமுடைய மயிலைப்போன்ற உமாதேவியை இடது பக்கத்திலே வைத்த மதுரையில் எழுந்தருளிய, அழகிய சொக்கநாதரின் மலையிலுள்ள கையில் வேலையுடைய, தலைவனே !, சித்திர ரதிபோல்வாள் நடையும் எழுதுவை - அழகிய இரதிதேவி போல்பவளாகிய தலைமகளின் நடையையும் எழுதவல்லாய், நிற்கும் நிலையும் எழுதுவை சொற்குள் நலமும்

எழுதுவை இடையும் எழுதுவை - நிற்கும் பலவகை நிலையையும் எழுதவல்லாய் சொல்லினுள்ளே இனிமையையும் எழுத வல்லாய் (அவளுடைய) இடையையும் எழுதவல்லாய், முற்றும் இலது ஓர் பொருளையும் ஒக்க எழுதில் உனை ஒத்த பெயர் எவர் - முழுவதும் (வடிவம்) இலாததொரு பொருளையும் தலைவியுடன் எழுதினால் உன்னைப்போன்ற சிறந்த மனிதர் வேறு யாவர்?

(வி - ரை.) இது, தலைமகளின் வடிவத்தைப் படத்தில் எழுதிக் கையிற் கொண்டுவந்து மடலேறக் கருதிய தலைவனுக்குத் தோழி அவளது நடையும் மொழியும் முதலாயின எழுதலாகாவாம். ஆதலால், அது வேண்டா என்று கூறி விலக்கியது- அவயவம் எழுதலரிதென விலக்கல் என்னும் துறை. கடம் - மதம். யானையின் கன்னத்தினின்று மதநீர் ஒழுகுவது செய்யுள் முழுகி எழுவதுபோலத் தோன்றும் என்பது கருத்து. எழுதுவை முதலியன பிறகுறிப்பு வகையால் எழுதவல்லாயல்லை என்ற கருத்தைத் தந்தன. நடை முதலியன வடிவம் இல்லாதவையாதலின் "முற்றுமிலதொரு பொருளையும் ஒக்க எழுதில்" எனப்பட்டது, இரதி-மன்மதனின் மனைவி தாம், ஏ ; ஈற்றசை. (கூ௪)

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மேதகைய பலகலைபோர்த் தறம்வளருந் தமிழ்க்கூடல்
விகிர்த கேண்மோ
வேதமினின் றிருவுருவொன் றீருருவாய் நின்றதினு
மிறும்பூ தந்தோ
போதலர்பைந் துழாய்ப்படலைப் புயல்வண்ணத் தொருவனிரு
பூவை மார்க்குக்
காதலனாய் மற்றுனக்கோர் காதலியாய் நிற்பதொரு
காட்சி தானே.

(இ - ள்.) மேதகைய பல கலை போர்த்து அறம் வளரும் தமிழ்க் கூடல் விகிர்த! - மேன்மையையுடைய பலகல்விகளை மேற்பரப்பித் தருமத்தையும் வளர்க்கின்ற மதுரையில் எழுந்தருளிய மேம்பாடு உடையவனே! கேண்மோ - (யான் சொல்லும் அதனைக்) கேட்பாயாக, போது அலர் பைந்துழாய்ப் படலைப் புயல் வண்ணத்து ஒருவன் இரு பூவைமார்க்குக் காதலனாய் - மலர்கள் விரிந்த பசிய திருத்துழாயினாலாகிய மாலையை

அணிந்த மேகம்போன்ற நிறத்தையுடைய ஒருவனை திருமால் திருமகள் நிலமகள் என்னும் இரண்டு மகளிர்க்குத் தான் கணவனாகி, உனக்கு ஓர் காதலியாய் நிற்பது ஒரு காட்சி தானே? - உனக்கு ஒரு மனைவியாகி நிற்பதாகிய ஒரு தோற்றமானது, ஏதம்இல் நின் திரு உரு ஒன்று ஈர் உரு ஆய் நின்றதினும் இறும்பூது அந்தோ! - குற்றமில்லாத உன்னுடைய அழகிய வடிவம் ஒன்றுதானே (பாதி பெண்ணும் பாதி ஆணுமாய்) இரண்டு வடிவுந் தாங்கியிருப்பதினும் மருட்சி விளைப்பதாம்.

(வி - ரை.) சிவபெருமான் மிக அழகியதோர் ஆண் வடிவு கொண்டு தாருகாவனத்தில் பிச்சையேற்கத் தொடங்கிய பொழுது திருமால் மோகினி உருக்கொண்டு அவர்க்கு மனைவியாகி நின்றனர் என்பது வரலாறு.

''மேதகைய பலகலை போர்த்து அறம் வளரும்'' என்பதில் சிறந்த பல ஆடைகளை மேலே போர்த்துக்கொண்டு தருமங்கள் வளர்கிற என்னும் பொருளும் தோன்றும். ஒவ்வோர் அறமும் செய்யப்படும் இடம் என்பதைப் பலவகையான கொடியாடையாற் குறிப்பது மரபு என்பதைக் காட்டும். பின்னே கூறும் வேறுபாடுபற்றி 'விகிர்த' என்றார். கேண்மோ - மோ : முன்னிலையசை. மற்று: வினைமாற்று. (கஓ)

நேரிசை வெண்பா

காண்டகைய செல்வக் கடம்பவனத் தானந்தத்
தாண்டவஞ்செய் தாண்டவர்நீர் தாமன்றே—பூண்டடிய
ருள்ளத் திருப்பீரெம் முள்ளத்தை யும்முமதா
மெள்ளத் திருப்பீர் மிக.

(இ - ள்.) அடியர் பூண்டு உள்ளத்து இருப்பீர்! - அடியவர்களின் திருவுள்ளத்திலே பொருந்தியிருப்பவரே!, காண்தகைய செல்வம் கடம்பவனத்து ஆனந்தத்தாண்டவம் செய்து ஆண்டவர் நீர் தாம் அன்றோ? - யாவராலும் விரும்பிக் காணத் தக்க தன்மையையுடைய எல்லாச் செல்வங்களையும் உடைய கடம்பவனத்தில் ஆனந்தத் திருக்கூத்தாடி எல்லா உயிர்களையும் அடிமை கொண்டவர் நீரேயன்றோ, எம் உள்ளத்தையும் உமது ஆ மெள்ள மிக திருப்பீர் - எம்முடைய உள்ளத்தையும் உம்முடையதாகும்படி மெதுவாக மிகவும் திருப்புவீராக.

(வி - ரை.) பூண்ட அடியர் எனக்கொண்டு அன்பு பூண்ட அடியார்கள் எனலும் ஆம். அன்றே: தேற்றம். ஆனந்தத் தாண்டவம் - இன்பக்கூத்து. இஃது ஒன்பது வகைக் கூத்துக் களில் ஒன்றாகும். அடியர்: வினையாலணையும் பெயர். திருப்பீர் - திருப்புவீராக: முன்னிலையேவற்பன்மை வினைமுற்று. திரும்பு என்ற தன்வினை திருப்பு என மெல்லினம் வல்லினமாகத் திரிந்து பிறவினைப் பகுதியாயிற்று. திருப்பீர் என்பதை, திருப்பாமலிருக் கின்றீர் என எதிர்மறையாகவும் கொள்ளலாம். காண் + தகைய = காணத்தக்க அழகினையுடைய எனலும் பொருந்தும். (௯௯)

கட்டளைக்கலித்துறை

கார் காலங் கண்டு வருந்திய தலைவன் பாகனொடு கூறியது

மிக்கார் முகத்தருள் கூடற்பி ரான்விட நாண்டுவக்காக்
கைக்கார் முகத்தன்ன தேர்வல வாகை பரந்துசெலு
மிக்கார் முகக்க வெழுந்தகொல் லாமெம தாவியென்னத்
தக்கார் முகத்தடங் கண்ணீ ருகாந்த சலதியையே.

(இ - ள்.) *மிக்கார் முகத்து அருள் கூடற்பிரான் கைவிடம் நாண் துவக்கா கை கார்முகத்து அன்ன தேர் வலவா!-* பெரியோர்கட்கு அருள்புரிகின்ற மதுரைச் சொக்கநாதரின் கையி லுள்ள நஞ்சு பொருந்திய பாம்பாகிய நாணினால் கட்டப் படாத வில்லாகிய பொன்மலையை ஒத்த தேரைச் செலுத்துவதில் வல்ல பாகனே!, *கை பரந்து செல்லும் இக்கார் எமது ஆவி என்ன தக்கார் முகத் தடம் கண் நீர் உகாந்த சலதியை முகக்க எழுந்த கொல் ஆம் -* வானத்திற் பரவிச் செல்கின்ற இந்த மேகங்கள் என் உயிரென்று சொல்லத்தக்க தலைவியது முகத்தி லுள்ள பெரிய கண்களினின்றும் வடிகின்ற கண்ணீராகிய யுக முடிவில் எழுங்கடலை மொண்டு கொள்ள எழுந்தன போலும்.

(வி - ரை.) இது கார்காலத்து மீண்டு வருவேன் என்று காலங்குறித்துத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வருகையில் தனக்கு முன்னே மேகங்கள் செல்வதனை நோக்கி, இவை சென்றால் தலைவி வருந்துவளே என்று கருதிப் பாகனுடன் சொல்லியது.

மிக்கார் - அருட்சத்திநிபாதம் உடையவர். "விடநாண் துவக்காக் கைக்கார் முகம்" என்றது மேருமலை வளைதலில்லாத

பொழுதுள்ள இயற்கை யுயர்ச்சியைக் குறித்தது. சலதி - நீர் தங்குமிடம். உகாந்தம் - உகமுடிவுக் காலம். கை - இடம். கண்ணீர் வெள்ளத்தை உகமுடிவுக் காலத்தில் வருங் கடலெனக் குறித்தார். (கஎ)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இரங்கல்

சலராசி தங்கு கணையேவு மொய்ம்பர் சரணார விந்தமிசையே
மலராகி டந்த நயனார விந்தர் மதுரேசர் முன்பு புகலார்
சிலராவி யின்றி யுடலே சுமந்து திரிவார்கள் வெந்து விழவே
புலராத கங்கு லிடையேயொ ரங்கி புகையாது நின்றெ ரிவதே.

(இ - ள்.) *ஆவி இன்றி உடலே சுமந்து திரிவார்கள் சிலர் -* உயிரில்லாமல் வெற்றுடம்பையே சுமந்து திரிபவர்களாகிய சிலர், (ஆருயிர்க் காதலரைப் பிரிந்த காரிகையார்) வெந்து விழ *புலராத கங்குல் இடையே ஓர் அங்கி புகையாது நின்று எரிவது-* உடல் எரிந்து அழியும்படி விடிதல் இல்லாத இராத்திரியிலே ஒரு நெருப்பாகிய சந்திரன் புகையாமல் நிலைநின்று எரி கின்றதை, *சலராசி தங்கு கணை ஏவு மொய்ம்பர் சரண அரவிந்த மிசையே மலர் ஆகிடு அந்த நயன அரவிந்தர் -* பாற்கடலிலே தங்குகின்ற (திருமாலாகிய) அம்பை(த் திரிபுரத்தின்மேல்) ஏவிய திருத்தோள்களுடையவரும் தம்முடைய திருவடித் தாமரைமலர்களின்மேல் அருச்சித்த மலராகிய அத்திருமாலின் கண்மலரை உடையவருமாகிய, *மதுரேசர் முன்பு புகலார்-* மதுரைச் சொக்கநாதர் திருமுன் எவரும் சென்று சொல்கின்று ரில்லை; (சொன்னால் என்னை வந்து அணைவார்.)

(வி - ரை.) இது தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறியது. "மலராகிடந்த நாயனார விந்தர்" இதனை "மலர் ஆக இடந்த" எனப் பிரித்து, மலராகப் பறித்திடப்பட்ட விழித் தாமரையை யுடையவர் எனவும், மலராமற் கிடந்த கண்ணாகிய தாமரையையுடையவர் எனவும் கொள்ளலாம். பிடுங்கப்பட்ட கண் மலராது; அப்படியே கிடக்கும். ஆதலால் பின்னது பொருந்தும். ஓர் இராப்பொழுது பிரிந்தார்க்குப் பலயுககாலம் போலத் தோன்றுமாதலால், "புலராத கங்குல்" எனப்பட்டது. அங்கி - தன்னைச் சுடுகின்ற சந்திரன். புகையாது என்றது இருள் கவியாமல் என்றவாறு. அக்கினி எரிதலைத் தணிக்குங் கருவியையுடைமை தோன்ற, சலராசியும் மலரும் கூறினார்

(வி - ரை.) பூண்ட அடியர் எனக்கொண்டு அன்பு பூண்ட அடியார்கள் எனலும் ஆம். அன்றே: தேற்றம். ஆனந்தத் தாண்டவம் - இன்பக்கூத்து. இஃது ஒன்பது வகைக் கூத்துக் களில் ஒன்றாகும். அடியர்: வினையாலணையும் பெயர். திருப்பீர் - திருப்புவீராக: முன்னிலையேவற்பன்மை வினைமுற்று. திரும்பு என்ற தன்வினை திருப்பு என மெல்லினம் வல்லினமாகத் திரிந்து பிறவினைப் பகுதியாயிற்று. திருப்பீர் என்பதை, திருப்பாமலிருக் கின்றீர் என எதிர்மறையாகவும் கொள்ளலாம். காண் + தகைய = காணத்தக்க அழகினையுடைய எனலும் பொருந்தும். (கக)

கட்டளைக்கலித்துறை

கார் காலங் கண்டு வருந்திய தலைவன்
பாகனொடு கூறியது

மிக்கார் முகத்தருள் கூடற்பி ரான்விட நாண்டுவக்காக்
கைக்கார் முகத்தன்ன தேர்வல வாகை பரந்துசெலு
மிக்கார் முகக்க வெழுந்தகொல் லாமெம தாவியென்னத்
தக்கார் முகத்தடங் கண்ணீ ருகாந்த சலதியையே.

(இ - ள்.) மிக்கார் முகத்து அருள் கூடற்பிரான் கைவிடம் நாண் துவக்கா கை கார்முகத்து அன்ன தேர் வலவா!- பெரியோர்கட்கு அருள்புரிகின்ற மதுரைச் சொக்கநாதரின் கையி லுள்ள நஞ்சு பொருந்திய பாம்பாகிய நாணினால் கட்டப் படாத வில்லாகிய பொன்மலையை ஒத்த தேரைச் செலுத்துவதில் வல்ல பாகனே!, கை பரந்து செல்லும் இக்கார் எமது ஆவி என்ன தக்கார் முகத் தடம் கண் நீர் உகாந்த சலதியை முகக்க எழுந்த கொல் ஆம் - வானத்திற் பரவிச் செல்கின்ற இந்த மேகங்கள் என் உயிரென்று சொல்லத்தக்க தலைவியது முகத்தி லுள்ள பெரிய கண்களினின்றும் வடிகின்ற கண்ணீராகிய யுக முடிவில் எழுங்கடலை மொண்டு கொள்ள எழுந்தன போலும்.

(வி - ரை.) இது கார்காலத்து மீண்டு வருவேன் என்று காலங்குறித்துத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வருகையில் தனக்கு முன்னே மேகங்கள் செல்வதனை நோக்கி, இவை சென்றால் தலைவி வருந்துவளே என்று கருதிப் பாகனுடன் சொல்லியது.

மிக்கார் - அருட்சத்திநிபாதம் உடையவர். "விடநாண் துவக்காக் கைக்கார் முகம்" என்றது மேருமலை வளைதலில்லாத

பொழுதுள்ள இயற்கை யுயர்ச்சியைக் குறித்தது. சலதி - நீர் தங்குமிடம். உகாந்தம் - உகமுடிவுக் காலம். கை - இடம். கண்ணீர் வெள்ளத்தை உகமுடிவுக் காலத்தில் வருங் கடலெனக் குறித்தார். (கூஎ)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இரங்கல்

சலராசி தங்கு கணையேவு மொய்ம்பர் சரணார விந்தமிசையே
மலராகி டந்த நயனார விந்தர் மதுரேசர் முன்பு புகலார்
சிலராவி யின்றி யுடலே சுமந்து திரிவார்கள் வெந்து விழவே
புலராத கங்கு லிடையேயொ ரங்கி புகையாது நின்றெ ரிவதே.

(இ - ள்.) ஆவி இன்றி உடலே சுமந்து திரிவார்கள் சிலர் - உயிரில்லாமல் வெற்றுடம்பையே சுமந்து திரிபவர்களாகிய சிலர், (ஆருயிர்க் காதலரைப் பிரிந்த காரிகையார்) வெந்து விழ புலராத கங்குல் இடையே ஓர் அங்கி புகையாது நின்று எரிவது- உடல் எரிந்து அழியும்படி விடிதல் இல்லாத இராத்திரியிலே ஒரு நெருப்பாகிய சந்திரன் புகையாமல் நிலைநின்று எரிகின்றதை, சலராசி தங்கு கணை ஏவு மொய்ம்பர் சரண அரவிந்த மிசையே மலர் ஆகிடு அந்த நயன அரவிந்தர் - பாற்கடலிலே தங்குகின்ற (திருமாலாகிய) அம்பை(த் திரிபுரத்தின்மேல்) ஏவிய திருத்தோள்களுடையவரும் தம்முடைய திருவடித் தாமரைமலர்களின்மேல் அருச்சித்த மலராகிய அத்திருமாலின் கண்மலரை உடையவருமாகிய, மதுரேசர் முன்பு புகலார்- மதுரைச் சொக்கநாதர் திருமுன் எவரும் சென்று சொல்கின்றாரில்லை; (சொன்னால் என்னை வந்து அணைவார்.)

(வி - ரை.) இது தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறியது. "மலராகிடந்த நாயனார விந்தர்" இதனை "மலர் ஆக இடந்த" எனப் பிரித்து, மலராகப் பறித்திடப்பட்ட விழித் தாமரையை யுடையவர் எனவும், மலராமற் கிடந்த கண்ணாகிய தாமரையையுடையவர் எனவும் கொள்ளலாம். பிடுங்கப்பட்ட கண் மலராது; அப்படியே கிடக்கும். ஆதலால் பின்னது பொருந்தும். ஓர் இராப்பொழுது பிரிந்தார்க்குப் பலயுககாலம் போலத் தோன்றுமாதலால், "புலராத கங்குல்" எனப்பட்டது. அங்கி - தன்னைச் சுடுகின்ற சந்திரன். புகையாது என்றது இருள் கவியாமல் என்றவாறு. அக்கினி எரிதலைத் தணிக்குங் கருவியையுடைமை தோன்ற, சலராசியும் மலரும் கூறினார்

(வி - ரை.) பூண்ட அடியர் எனக்கொண்டு அன்பு பூண்ட அடியார்கள் எனலும் ஆம். அன்றே: தேற்றம். ஆனந்தத் தாண்டவம் - இன்பக்கூத்து. இஃது ஒன்பது வகைக் கூத்துக் களில் ஒன்ருகும். அடியர்: வினையாலணையும் பெயர். திருப்பீர் - திருப்புவீராக: முன்னிலையேவற்பன்மை வினைமுற்று. திரும்பு என்ற தன்வினை திருப்பு என மெல்லினம் வல்லினமாகத் திரிந்து பிறவினைப் பகுதியாயிற்று. திருப்பீர் என்பதை, திருப்பாமலிருக் கின்றீர் என எதிர்மறையாகவும் கொள்ளலாம். காண் + தகைய = காணத்தக்க அழகினையுடைய எனலும் பொருந்தும். (௬௬)

கட்டளைக்கலித்துறை

கார் காலங் கண்டு வருந்திய தலைவன் பாகனொடு கூறியது

மிக்கார் முகத்தருள் கூடற்பி ரான்விட நாண்டுவக்காக்
கைக்கார் முகத்தன்ன தேர்வல வாகை பரந்துசெலு
மிக்கார் முகக்க வெழுந்தகொல் லாமெம தாவியென்னத்
தக்கார் முகத்தடங் கண்ணீ ருகாந்த சலதியையே.

(இ - ள்.) மிக்கார் முகத்து அருள் கூடற்பிரான் கைவிடம் நாண் துவக்கா கை கார்முகத்து அன்ன தேர் வலவா!- பெரியோர்கட்கு அருள்புரிகின்ற மதுரைச் சொக்கநாதரின் கையி லுள்ள நஞ்சு பொருந்திய பாம்பாகிய நாணினால் கட்டப் படாத வில்லாகிய பொன்மலையை ஒத்த தேரைச்செலுத்துவதில் வல்ல பாகனே!, கை பரந்து செல்லும் இக்கார் எமது ஆவி என்ன தக்கார் முகத் தடம் கண் நீர் உகாந்த சலதியை முகக்க எழுந்த கொல் ஆம் - வானத்திற் பரவிச் செல்கின்ற இந்த மேகங்கள் என் உயிரென்று சொல்லத்தக்க தலைவியது முகத்தி லுள்ள பெரிய கண்களினின்றும் வடிகின்ற கண்ணீராகிய யுக முடிவில் எழுங்கடலை மொண்டு கொள்ள எழுந்தன போலும்.

(வி - ரை.) இது கார்காலத்து மீண்டு வருவேன் என்று காலங்குறித்துத் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் மீண்டு வருகையில் தனக்கு முன்னே மேகங்கள் செல்வதனை நோக்கி, இவை சென்ருல் தலைவி வருந்துவளே என்று கருதிப் பாகனுடன் சொல்லியது.

மிக்கார் - அருட்சத்திநிபாதம் உடையவர். "விடநாண் துவக்காக் கைக்கார் முகம்" என்றது மேருமலை வளைதலில்லாத

பொழுதுள்ள இயற்கை யுயர்ச்சியைக் குறித்தது. சலதி - நீர் தங்குமிடம். உகாந்தம் - உகமுடிவுக் காலம். கை - இடம். கண்ணீர் வெள்ளத்தை உகமுடிவுக் காலத்தில் வருங் கடலெனக் குறித்தார். (கஎ)

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இரங்கல்

சலராசி தங்கு கணையேவு மொய்ம்பர் சரணார விந்தமிசையே
மலராகி டந்த நயனார விந்தர் மதுரேசர் முன்பு புகலார்
சிலராவி யின்றி யுடலே சுமந்து திரிவார்கள் வெந்து விழவே
புலராத கங்கு லிடையேயொ ரங்கி புகையாது நின்றெ ரிவதே.

(இ - ள்.) ஆவி இன்றி உடலே சுமந்து திரிவார்கள் சிலர் - உயிரில்லாமல் வெற்றுடம்பையே சுமந்து திரிபவர்களாகிய சிலர், (ஆருயிர்க் காதலரைப் பிரிந்த காரிகையார்) வெந்து விழ புலராத கங்குல் இடையே ஓர் அங்கி புகையாது நின்று எரிவது- உடல் எரிந்து அழியும்படி விடிதல் இல்லாத இராத்திரியிலே ஒரு நெருப்பாகிய சந்திரன் புகையாமல் நிலைநின்று எரிகின்றதை, சலராசி தங்கு கணை ஏவு மொய்ம்பர் சரண அரவிந்த மிசையே மலர் ஆகிடு அந்த நயன அரவிந்தர் - பாற்கடலிலே தங்குகின்ற (திருமாலாகிய) அம்பை(த் திரிபுரத்தின்மேல்) ஏவிய திருத்தோள்களுடையவரும் தம்முடைய திருவடித் தாமரைமலர்களின்மேல் அருச்சித்த மலராகிய அத்திருமாலின் கண்மலரை உடையவருமாகிய, மதுரேசர் முன்பு புகலார்- மதுரைச் சொக்கநாதர் திருமுன் எவரும் சென்று சொல்கின்றாரில்லை; (சொன்னால் என்னை வந்து அணைவார்.)

(வி - ரை.) இது தலைவனைப் பிரிந்த தலைவி இரங்கிக் கூறியது. "மலராகிடந்த நாயனார விந்தர்" இதனை "மலர் ஆக இடந்த" எனப் பிரித்து, மலராகப் பறித்திடப்பட்ட விழித் தாமரையை யுடையவர் எனவும், மலராமற் கிடந்த கண்ணாகிய தாமரையையுடையவர் எனவும் கொள்ளலாம். பிடுங்கப்பட்ட கண் மலராது; அப்படியே கிடக்கும். ஆதலால் பின்னது பொருந்தும். ஓர் இராப்பொழுது பிரிந்தார்க்குப் பலயுககாலம் போலத் தோன்றுமாதலால், "புலராத கங்குல்" எனப்பட்டது. அங்கி - தன்னைச் சுடுகின்ற சந்திரன். புகையாது என்றது இருள் கவியாமல் என்றவாறு. அக்கினி எரிதலைத் தணிக்குங் கருவியையுடைமை தோன்ற, சலராசியும் மலரும் கூறினார்

போலும். ஆவியின்றி உடலே சுமந்து திரிவார் சிலர் என்றது, உயிர் போன்ற காதலரைப் பிரிந்து வாழும் மங்கையரை யுணர்த்தும். (௬அ)

தாழிசை

இரங்கல்

தேன்வழங்கு கடுக்கையார்கரு மான் வழங்கு முடுக்கையார்
திருவிருந்த விடத்தினரருள் கருவி ருந்தந டத்தினர்
மானடங்கிய வங்கையார்சடைக் கானடங்கிய கங்கையார்
வைகையொன்றிய கூடலா ரிவள் செய்கையொன்றையு
[நாடலார்
கானவேயிசை கொல்லுமாலுற வானவாய்வசை சொல்லுமாற்
கன்றியன்றி லிரங்குமாலுயிர் தின்றுதென் றனெருங்குமாற்
றீநிலாவனல் சிந்துமாற்கொல வேனிலான்மெல முந்துமாற்
றினமிடைந்திடை நொந்தபோன்மகண் மனமிடைந்த
[துணர்ந்துமே.

(இ - ள்.) கானம் வேய் இசை கொல்லும் - காட்டிலுள்ள மூங்கிலினாலாகிய புல்லாங்குழலின் இசைப்பாட்டு (இத்தலைமகளை) மிக வருத்தும், உறவு ஆன வாய் வசை சொல்லும் - உறவினராயிருக்கும் மக்கள் (இவள்மேல்) வாயாற் பழிச் சொற்களைக் கூறுவார்கள், அன்றில் கன்றி இரங்கும் - அன்றிற் பறவை மனம் வருந்திக் கத்துகிறது, தென்றல் உயிர் தின்று நெருங்கும் - தென்றற்காற்று உயிரை உண்ண அருகில் வரும், தீநிலா அனல் சிந்தும் - கொடிய சந்திரன் நிலவாகிய நெருப்புப் பொறியைச் சிதறும், வேனிலான் கொல மெல முந்தும்-வசந்த காலத்திற்குரியவனான மன்மதன் இவளைக் கொல்லும்பொருட்டு மெல்ல முற்பட்டு வருவான், மகள் இடை தினம் இடைந்து நொந்த போல் மனம் உடைந்தது உணர்ந்தும் - இத்தலைவி இடை நாள்தோறும் சிறிது சிறிதாக இளைத்து வாடுதல் போல மனம் மெலிந்ததை அறிந்தும், தேன் வழங்கு கடுக்கையார் கரு மான் வழங்கும் உடுக்கையார் - தேனைச் சொரிகின்ற கொன்றைப் பூமாலையை யுடையவரும் கரிய யானை தந்த தோலாகிய உடையை (போர்வையை) அணிந்தவரும், திரு இருந்த இடத்தினர் அருள் கரு இருந்த நடத்தினர் - உமாதேவி தங்கிய இடது பாகத்தை யுடையவரும் கருணை குடிகொண்ட திருக்கூத்தை யுடையவரும், மான் அடங்கிய அம் கையார் சடை கான் அடங்கிய கங்கையார் - மான் அடங்கியுள்ள அழகிய இடக் கையை யுடையவரும் சடாடவியில் தங்கிய கங்காநதியை

யுடையவரும், வைகை ஒன்றிய கூடலார் இவள் செய்கை ஒன்றையும் நாடலார் - வையை நதி பொருந்திய மதுரையை யுடையவரும் ஆகிய சோமசுந்தரர் இவளுடைய தொழி லொன்றையும் ஆய்ந்து வந்தணைகின்றாரில்லை.

(வி - ரை.) தலைவியின் நிலை கண்டு செவிலி இரங்குதல் என்றுவது பாங்கி இரங்குதல் என்றுவது கொள்க. மான், ன் : சாரியை. திரு - அழகு : பண்பாகுபெயராய் அழகினையுடைய உமாதேவியைக் குறித்தது. வாய் வசை : வினைத்தொகை. வேய் - மூடுகின்ற. அங்கை - அகம்+கை=அங்கையுமாம். தீ நிலா - தீய நிலா. அன்றில் - கிரவுஞ்சப் புள். வேனிலான் - இளவேனிற் காலத்துக்குரிய மன்மதன். மாலைக்காலத்தில் அன்றில் பெடையைக் கூவும் ஒலியும் வேய்ங்குழலோசை முதலி யனவும் பிரிந்தார்க்கு வருத்தம் செய்யும். (கசு)

அறுசீர்ச் சந்த விருத்தம்

ஊர்

உடையதொர் பெண்கொடி திருமுக மண்டல
 மொழுகு பெருங்கருணைக்
கடலுத வுஞ்சில கயல்பொரு மொய்ம்புள
 கடவுணெ டும்பதியாம்
புடைகொள் கருங்கலை புனைபவள் வெண்கலை
 புனையுமொர் பெண்கொடியா
வடகலை தென்கலை பலகலையும்பொலி
 மதுரைவ ளம்பதியே.

(இ - ள்.) புடைகொள் கரும் கலை புனைபவள் ஓர் பெண் கொடி வெண் கலை புனையும் ஓர் பெண் கொடி ஆ - எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டுள்ள கரிய கடலாகிய ஆடையை அணிந்தவளாகிய பூமி என்ற பெண் வெள்ளாடையை உடுத் துள்ள பெண் கொடியாகிய நாமகளாம்படி, வட கலை தென் கலை பல கலையும் பொலி மதுரை வளம் பதி - வடமொழி தென் மொழி மற்றும் பல மொழிகளும் விளங்குகின்ற பல வளங்களை யுடைய மதுரை என்னும் திருப்பதியானது, உடையது ஓர் பெண் கொடி - தமக்கு உரிமையுடைய பெண் கொடியான அம்பிகையினுடைய, திருமுக மண்டலம் ஒழுகு பெருங்கருணைக் கடல் உதவும் சில கயல் பொரு மொய்ம்புள கடவுள் நெடும்

பதி ஆம் - அழகிய முகவட்டத்தில் வழிகின்ற பெரிய திரு அருளாகிய கடலை உலகிற்கு உதவுகின்ற இரண்டு கயல் மீன்கள் போர் புரிகின்ற திருத்தோள்களையுடைய சோமசுந்தரக் கடவுளின் இருப்பிடமாம்.

(வி - ரை.) ''கருணைக் கடல் உதவும் சில கயல்'' என்பது குறிப்பால் உமையின் கண்களை யுணர்த்தியது. கடலால் உதவப் படும் கயல் அன்றிக் கடலை உதவும் கயல் என இக் கயல்களுக்கு விசேடம் கூறினர். பூமி முழுவதும் கல்வி மயமாம்படி என்பது மூன்றும் அடியின் கருத்து. இனி நிலமகள் புகழால் வெள்ளைப் போர்வை போர்த்த பெண் கொடியாகத் தோன்றும்படி என்றும் பொருள் கூறலாம். (கOO)

பதினன்குசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வள்ளைவாய் கிழித்துக் குமிழ்மறிந் தமர்த்த
மதரரிக் கண்ணியு நீயு
மழலைநா றமுதக் குமுதவாய்க் குழவி
மடித்தலத் திருத்திமுத் தாடி
உள்ளநெக் குருக வுவந்துமோந் தணைத்தாங்
குகந்தனி ரிருத்திரா லுலக
மொருங்குவாய்த் தீருக் கொருதலைக் காம
முற்றவா வென்கொலோ வுரையாய்
வெள்ளிவெண் ணிலவு விரிந்தகோ டீரம்
வெஞ்சுடர்க் கடவுளுங் கிடைத்து
வீற்றிருந் தனைய விடுசுடர் மகுட
மீக்கொளுஉத் தாக்கணங் கனையார்
கள்ளவாட் கருங்கண் ணேறுகாத் திட்ட
காப்பென வேப்பலர் மிலைச்சுங்
கைதவக் களிறே செய்தவக் கூடற்
கண்ணுதற் கடவுண்மா மணியே.

(இ - ள்.) வெள்ளி வெண் நிலவு விரிந்த கோடீரம் வெம் சுடர்க் கடவுளும் கிடைத்து வீற்றிருந்தனைய விடுசுடர் மகுடம் மீக்கொளுஉ - வெள்ளி போல் வெண்மையான சந்திரகாந்தி விரியப் பெற்றுள்ள சடைமுடியை வெப்பமான கதிர்களையுடைய ஞாயிறும் (தனக்குக் கிடைக்கப்) பெற்று அம் முடியின்மேல்

றப்பாகப் பொருந்தி இருந்தாற்போன்ற ஒளி விடுகின்ற ரீடத்தை முடியின் மேற்கொண்டு, தாக்கு அணங்கு அனையார் ள்ள வாள் கரும் கண் ஏறு காத்திட்ட காப்பு என வேப்பு லர் மிலைச்சும் கைதவக் களிறே! - இலக்குமியைப் போன்ற களிர் வஞ்சனையையுடைய வாள்போன்ற கரிய பார்வைக் ற்றத்தைக் (கண்ணேறு படுதல்) காப்பதற்கு வைத்த காப்புப் பால வேப்பம் பூமாலையைச் சூடியுள்ள சுந்தரபாண்டியனாகிய ஆண் யானையே!, செய் தவம் கூடல் கண் நுதல் கடவுள் மா ணியே! - (நீ வந்து அரசு புரிவதற்கு)த் தவத்தைச் செய்த துரையில் எழுந்தருளியுள்ள நெற்றியிற் கண்ணையுடைய தெய் பங்களிற் சிறந்த மணிபோன்றவனே!, வள்ளை வாய் கிழித்து குமிழ் மறிந்து அமர்த்த மதர் அரிக் கண்ணியும் நீயும் - வள்ளை லை போலும் காதினது வாயைக் கிழித்து (காதோடளாவி) குமிழம்பூப் போன்ற மூக்கின் மேற்பாகத்தை அடுத்துப் போர் செய்கின்ற களித்த செவ்வரி படர்ந்த கண்களையுடையவளான மாதேவியும் நீயும், மழலை நாறு அமுதம் குமுத வாய்க் குழவி மடித்தலத்து இருத்தி முத்து ஆடி உள்ளம் நெக்கு உருக உவந்து மோந்து அணைத்து ஆங்கு உகந்தனிர் இருத்திர் - மழலைச் சொல் தோன்றுகின்ற அமுதத்தையுடைய செவ்வாம்பல் மலர் போன்ற சிவந்த வாயையுடைய குழந்தையாகிய முருகக்கடவுளை மடி யிடத்தே வைத்துக்கொண்டு முத்தமிட்டு மனம் நெகிழ்ந்து கரையும்படி மகிழ்ந்து உச்சி மோந்து தழுவிக்கொண்டு அவ் விடத்துக் களிப்புடனிருக்கின்றீர்கள், உலகம் ஒருங்கு வாய்த் தீருக்கு ஒருதலைக் காமம் உற்ற ஆ என் உரையாய் - உலகம் முழு வதையும் பெற்ற உங்களுக்கு ஒரு குழந்தையினிடத்தில் ஆசை பொருந்திய விதம் யாதோ சொல்வீராக.

(வி - ரை.) வள்ளை - குமிழ்: ஆகுபெயர். அமர்த்த: அமர் என்ற பெயரினடியாகப் பிறந்த பெயரெச்சம். கண்ணி - இ: பெண்பால் விகுதி, "கண்ணியும் நீயும் உகந்தனிர் இருத்திர்": முன்னிலையோடு கூடிய படர்க்கையும் முன்னிலையாயிற்று. குழவி: இகர விகுதி பெற்றது, இளமையுடையது. இரண்டாம் அடியில் உலகம் முழுவதையும் பெற்ற உங்களுக்குத் தலைவனும் தலைவியும் தனித்தனி ஒருவரை யொருவர் அறியாது காமுற்று வருந்தும் காமம் உண்டானது என்னே என்ற பொருளும் தோன்றும். தாக்கணங்கு - தீண்டி வருத்தும் தேவி மோகினி. வேம்பு - கண்ணெச்சிற் படாது காக்கு மியல்புடையது. உமை முருகன் சிவன் ஆகிய மூவரும் சேர்ந்த வடிவம் சோமாஸ்கந்தர் எனப்படும். (௧0௧)

நேரிசை யாசிரியப்பா

கட்புலங் கதுவாது செவிப்புலம் புக்கு
மனனிடைத் துஞ்சி வாயிடைப் போந்து
செந்நா முற்றத்து நன்னடம் புரியும்
பலவேறு வன்னத் தொருபரி யுகைத்தோய்
புட்கொடி யெடுத்தொரு பூங்கொடி தன்னெடு
மட்கொடி தாழ்ந்த வான்கொடி யுயர்த்தோ
யோரே ழாழி சீர்பெறப் பூண்டு
முடவுப் படத்த சுடிகையுட் கிடந்து
நெடுநிலை பெயரா நிலைத்தே குர்ந்தோய்
மீனவர் பெருமான் மானவேல் பிழைத்தாங்
கெழுபெருங் கடலு மொருவழிக் கிடந்தென
விண்ணின் றிறங்குபு விரிதிரை மேய்ந்த
கொண்மூக் குழுமலைக் கொலைமதக் களிற்றெடும்
வேற்றுமை தெரியாது மின்னுக்கொடி வளைத்தாங்
காற்றல்கொ டுற்றபா கலைத்தனர் பற்றத்
திரியுமற் றெம்மைத் தீச்சிறை படுக்கெனப்
பரிதிவே லுழவன் பணித்தனன் கொல்லென
மெய்விதிர்த் தலறுபு வெரீஇப்பெயர்ந் தம்ம
பெய்முறை வாரி பெயும்பெய லல்ல
தெய்பா றயிர்முதற் பல்பெய றலைஇப்
பெருவளஞ் சுரந்த விரிதமிழ்க் கூட
லிருநில மடந்தைக் கொருமுடி கவித்தாங்
கிந்திர னமைத்த சுந்தர விமானத்
தருள்சூற் கொண்ட வரியிளங் கயற்கண்
மின்னுமை மருங்குற் பொன்னெடும் பொலிந்தோய்
துரியங் கடந்த துவாத சாந்தப்
பெருவெளி வளாகத் தொருபெருங் கோயிலுண்

முனையின்று முளைத்த மூல லிங்கத்
தளவையி னளவா வானந்த மாக்கட
லின்பெருந் தன்மையை நிகழ்த்துதும் யாமென
மன்பெருஞ் சிறப்பின் மதிநலங் கொளினே
பேதைமைப் பாலரே பெரிது மாதோ
வேத புருடனும் விராட்புரு டனுமே
இனையநின் றன்மைமற் றெம்ம னேரு
நினையவுஞ் சிலசொற் புனையவும் புரிதலின்
வாழியெம் பெருமநின் றகவே
வாழியெம் மனனு மணிநா வும்மே.

(இ - ள்.) கண் புலம் கதுவாது செவிப் புலம் புக்கு மனன் இடைத் துஞ்சி வாய் இடை போந்து செந்நா முற்றத்து நல் நடம் புரியும் பல் வேறு வன்னத்து ஒரு பரி உகைத்தோய் - கண் அறிவுக்கு எட்டாமல் காதாகிய உறுப்பில் புகுந்து மனத்தி னுள்ளே தங்கி வாய் வழி வந்து சிவந்த நாக்கு ஆகிய முன்னி டத்தே நல்ல ஆட்டத்தைச் செய்கின்ற பலவகைப்பட்ட வெவ் வேறு சந்தங்களையுடைய ஒப்பற்ற வேதமாகிய குதிரையைச் செலுத்தியவனே !, புள் கொடி எடுத்து ஒருபூங்கொடி தன்னொடு மண் கொடி தாழ்ந்த வான் கொடி உயர்த்தோய் !-கருடப்பறவை யாகிய கொடியை உயர்த்திப் பூங்கொடி போல்வாள் ஒரு திரு மகளும் நிலமகளும் மார்பிலும் துடையிலும் தங்கிய திருமா லாகிய பெரிய விடைக்கொடியை எடுத்தவனே !, ஓர் ஏழ் ஆழி சீர்பெறப் பூண்டு முடவுப்படத்த சுடிகையுள் கிடந்து நெடு நிலை பெயரா நிலைத்தேர் ஊர்ந்தோய் ! - ஒப்பற்ற ஏழு கடல் களால் சிறப்புப்பொருந்தச் சூழப்பட்டு வளைந்த படத்தை யுடைய ஆதிசேடன் உச்சியிற் பொருந்தி நீண்ட தன்னிலையி னின்று பெயராத தன்மையையுடைய பூமியாகிய தேரைச்செலுத் தியவனே !, மீனவர் பெருமான் மானம் வேல் பிழைத்து ஆங்கு எழு பெரும் கடலும் ஒரு வழி கிடந்த என - பாண்டியர்களிற் சிறந்தவனான உக்கிரபாண்டியனுடைய பெருமையையுடைய வேற்படைக்கு (இலக்காகாதபடி அஞ்சி) உய்ந்து அம் மதுரை யில் ஏழு பெரிய கடல்களும் ஓரிடத்தே வந்து சேர்ந்தன என்று கருதி, விண் நின்று இறங்குபு விரிதிரை மேய்ந்த கொண்மூ குழுமலை கொலை மதக் களிற்றொடும் வேற்றுமை தெரியாது உற்ற பாகு மின்னுக்கொடி வளைத்து ஆங்கு ஆற்றல் கொடு அலைத்தனர் பற்ற - ஆகாயத்தினின்று இழிந்து (எழு கடல் என்னும் குளத்தில்) பரவிய அலைகளை யுடைய நீரைப் பருகிய

மேகங்களைத் திரளாகக்கூடிய கொல்லுந் தன்மையுடைய மத யானைகளுடனே வேறுபாடுணராமல் வந்த பாகர்கள் மின்னற் கொடிகளாகிய கொடிகளினாற் சுற்றிக் கட்டி அவ்விடத்தில் தம் வலிமையினால் வருத்திப் பிடிக்க, திரியும் தம்மை தீ சிறை படுக்க என பரிதி வேல் உழவன் பணித்தனன் கொல் என-(மேகங்கள்) இங்குத் திரிகின்ற நம்மைக் கொடிய சிறையில் வைக்கக் கருதிச் சூரியன் போன்ற வேலையுடைய பாண்டியன் ஆணையிட்டனன் போலும் என்று, மெய் விதிர்த்து அலறுபு வெரீஇ பெயர்ந்து அம்ம பெய் முறை வாரி பெயும் பெயல் அல்ல - நடுக்க முற்று அலறி யொலித்து அஞ்சி விலகிச் சென்று ஆச்சரியப்படும் படி பெய்யவேண்டிய முறைப்படியே நீர்மழை மட்டும் பெய்யா மல். நெய், பால், தயிர் முதல் பல் பெயல் தலைஇப் பெருவளம் சுரந்த விரிதமிழ் கூடல் இரு நில மடந்தைக்கு ஒரு முடி கவித்து ஆங்கு இந்திரன் அமைத்த சுந்தர விமானத்து - நெய்யும் பாலும் தயிரும் முதலான பலவகை மழைகளைப் பெய்து விடுதலால் மிக்க வளப்பம் மேன்மேலும் செழித்துப் பரவிய தமிழ் வழங் கும் மதுரையிலே பெரிய பூமிதேவிக்கு ஒரு கிரீடத்தைக் கவித் தாற் போலத் தேவேந்திரன் அமையச் செய்த அழகிய விமானத் திலே, அருள் சூல் கொண்ட அரி இளகயல் கண் மின் நுழை மருங்குல் பொன்னெடும் பொலிந்தோய்! - அருளைக் கருக் கொண்ட சிவந்த வரிகளையுடைய இளமையான கயல்மீன் போலும் கண்களையும் மின்னல்போல் நுட்பமான இடையையும் உடைய பொன்போன்ற மீனாட்சியம்மையுடனே எழுந்தருளி யிருக்கின்ற சோமசுந்தரக்கடவுளே!, துரியம் கடந்த துவாத சாந்தப் பெருவெளி வளாகத்து ஒருபெருங் கோயிலுள் முளை இன்று முளைத்த மூலலிங்கத்து அளவையின் அளவா ஆனந்த மாக் கடல்! - துரிய நிலைக்கு அப்பாற் பட்ட துவாத சாந்தம் என்னும் வெளியிடத்திலே ஒரு பெருங் கோயிலுள் முளை யில்லாமல் முளைத்த மூலலிங்க வடிவமாயுள்ள அளவுக் கருவி யால் அளக்கப்படாத இன்பம் நிரம்பிய பெரிய கடல் போன்ற வனே!, நின் பெருந்தன்மையை நிகழ்த்துதும் யாம் என வேத புருடனும் விராட் புருடனுமே மன் பெருஞ் சிறப்பின் மதி நலம் கொளின் பெரிதும் பேதைமைப் பாலரே - உன்னுடைய பெரு மையை எடுத்துச் சொல்வோம் நாம் என்று வேதபுருடனும் விராட்புருடனும் ஆகிய இவர்களே மிகவும் அதிகமான சிறப் புடைய தம் நல் அறிவில் எண்ணினாலும் மிகுதியும் அறியாமைத் தன்மை உடையதே, அது இனைய நின் தன்மை எம் அன்னோரும் நினையவும் சில சொல்புனையவும் புரிதலின் வாழி எம் பெரும!, நின் தகவு வாழி என் மனனும் மணி நாவும் - இப்படிப்பட்ட நின் பெருந்தன்மையை எம்மைப் போன்ற எளியவர்களும் நினைக்

வும் சில சொற்களைத் தொகுத்துப் போற்றவும் நீ செய்தலினால் ம் தலைவனே! உன் அருட்குணம் வாழி! உன்னை எண்ணுதலும் போற்றுதலும் செய்கின்ற என் மனமும் அழகிய நாவும் வாழ்வனவாக.

(வி - ரை.) மற்று, மாதோ: அசைகள். வர்ணம் என்பது வன்னம் எனத் திரிந்தது. கிடந்த + என = கிடந்தவென என்பது- கிடந்தெனத் தொகுத்தல் விகாரமாயிற்று. கிடந்த: வினைமுற்று, தலைஇ-பெய்து: வினையெச்சம். எழுகடலில் மேகங்கள் இறங்கி நீர் பருகும்பொழுது யானைகளும் இறங்கி நீர் பருகலாயின. யானைப்பாகர் மேகங்களையும் யானைகளென்று கொண்டுபோக அவைகள் முன் நம்மைச் சிறைப்படுத்திய பாண்டியன் மீண்டும் சிறைப்படுத்தப் பணித்தனனோ என்று அஞ்சி நடுங்கி அலறி இடித்து அங்கே நீர் முதலிய அனைத்தையும் மழை பொழிய அதனாற் பல வளமும் சுரந்த கூடல் என்க. துவாத சாந்தம் - துவா + தச + அந்தம் = பன்னிரண்டின் முடிவு; பிரமரந்திரத்துக்குப் பன்னிரண்டு அங்குல அளவின் மேலுள்ள இடம். மதுரை விராட்புருடனுக்குத் துவாதசாந்தத் தானம் என்று நூல்கள் கூறுகின்றன. (க0௨)

மதுரைக் கலம்பகம் மூலமும் விளக்க உரையும்

முற்றும்.

பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : பக்கம்]

அஞ்சேன் மடநெஞ்	௬௦	கடங்கால் பொருப்பொன்	௫௮
அடுத்தங் குலவாக்	௧௧௦	கடமுடையு நறுநெய்க்	௧௧௧
அடுத்த தோர்வ	௪௯	கட்டு வார்குழ	௮
அடுத்த பதஞ்சலியா	௯௬	கட்புலங் கதுவாது	௧௨௦
அம்ம கோவெனும்	௨௬	கண்டமுங் காமர்	௭௯
அம்மாநம் மேலன்று	௭௪	கண்முத் தரும்பின	௬௧
அரங்கு மையற்கு	௫௫	கரிய கண்டங்	௮௦
அருநாம மரசிவசங்	௫௨	கரும்பொறிச் சுரும்பர்	௬௪
அழகுற்றதொர் மது	௪௧	கருவிட்ட காடெறிந்து	௯௯
அறந்தந்த பொன்பொலி	௩௨	கரைபொரு திரங்கு	௪௭
ஆவமே நாணே	௪௬	காண்டகைய செல்வக்	௧௧௩
ஆவா வென்னே	௮௧	குங்குமச்சே றுடுங்	௮௫
ஆறுதலை வைத்த முடி	௩௬	குரும்பை வெம்முலை	௭௪
இடங்கொண்ட மானும்	௫௦	குறுமுகைவெண் டளவள	௭௩
இருநில னகழ்ந்தவொரு	௫௧	குறுமுயலுஞ் சிலைகலையு	௧௦௩
இருவருக்குங் காண்பரிய	௨௮	கூட லம்பதி	௩௧
இன்னியங் துவைப்பச்	௭௭	கூடார் புரந்தீ	௫௬
இன்னி ரமுதுக்	௮௬	கேளார் புரஞ்செற்ற	௭௮
ஈர மதிக்கு	௮௦	கொங்குரை யாற்றி	௮௯
ஈரித்த தென்ற	௪௮	கொம்மைக் குவடசையக்	௪௦
உடையதொர் பெண்	௧௧௭	சலராசி தங்கு	௧௧௫
உண்ணமுத நஞ்சாகி	௨௨	சிலைசிலை யாக்கொண்ட	௮௮
உண்பது நஞ்சமா	௪௨	சிலையோ கரும்புபொரு	௯௭
உள்ளும் புறம்புங்	௫௪	செல்விட்ட பொழின்	௯௨
எய்யாது நின்றுருவ	௩௫	தடமுண் டகங்கண்	௧௫
எறிவே லிரண்டுமென	௩௧	தமரநீர்ப் புவன	௧௦௮
என்போ டுள்ளமு	௧௦௦	தருமுகத்து நிமிர்குடுமி	௯௧
ஏடார் புண்டரிகத்	௭௬	தழைத்திடுங் கூடலார்	௩௮
ஏமவெற் பென்றுகயி	௯௪	தனியி ருப்பவ	௨௧
ஏனின் றிரங்குதி	௯௬	தான வெங்களி	௬௦
ஐய மணிக்கல	௭௬	திருவைப் புணர்பொற்	௮௭
ஒன்றே யுடம்பங்	௧௮	தேத்தந்தகொன்றையான்	௯௬
கடங்கரைக்கும் வெற்பிற்	௪௪	தேன ருதசி லைக்க	௪௭

தேன் வழங்கு கடுக்கை	௧௧௬
தொடுத்த ணிந்தது	௪௫
நகையே யமையுமிந்த	௩௭
நம்பாலி னக்கோல	௪௩
நவ்வியங்கண் மானு	௧௦௩
நீரோடு குறுவெயர்ப்பு	௧௦௭
பட்டிருக்கத் தோலசைஇ	௨௦
பல்லா ருயிர்க்குயி	௫௭
பாட்டுக் குருகுந்	௯௪
பாணரு மழலைச்	௬௨
பாமிக்குப் பயின்மதுரை	௧௦௬
புந்தித் தடத்து (காப்பு)	௨
புயல்வண்ண மொய்குழல்	௨௭
புழுகுநெய்ச் சொக்க	௭௧
பைந்தமிழ்தேர் கூடற்	௭௨
பொருனன் கொருங்கின்ற	௧௪
போரானை முதுகுறைப்பப்	௫௫
மட்டறுக டற்புவிய	௯௩
மணிகொண்ட திரையாழி	௪
மதும லர்க்குழ	௭௭
மாற்றுருன் றிலையென்	௧௦
மிக்கார் முகத்தருள்	௧௧௪
மீனேறுங் கொடிமுல்லை	௧௯
முட்டாட் பாசடை	௧௦௧
மும்மைத் தமிழ்க்கூடன்	௩௪
மேதகைய பலகலை	௧௧௨
மொழிக்கய லாகி	௮௨
வடகலை யலபல	௯௫
வரியளி பொதுளிய	௨௫
வரும்புண்ட ரீக	௯௮
வலங்கொண்ட மழுவுடை	௧௬
வள்ளைவாய் கிழித்துக்	௧௧௮
வாணிலாப் பரப்பு	௬௮
வால விர்த்த	௮௫
வாழிமடக் கிள்ளாய்	௯௦
விற்கரும்பே யொன்றிது	௮௫
வீரம் வைத்தவில்	௩௮

...AL MOHAMED COLLEGE LIBRAR...
19 AUG 1971
Maduraik Kalambakam
JMCLib
25884
8T16 KUM.1